பிஸ்மில்லாஹி.

# வேதபுராணம் ஞானப்பொழிப்புரை.

## முதல் பாகம்.

காயற்பட்டணம் அவதரித்து.
மலையாளம் பூவாற்றில் அடங்கி விளங்கா நின்ற.
காமில் ஒலி.


அல் ஆரிபு பில்லாஃ;
பெரிய நாஹ்ற ஒலியுல்லா அவர்கள்
அருளிச் செய்த.


மூலபாடமும்.

அதற்கு.


பாண்டிமண்டலம், செவ்வல்மாநகரம் மதறா வித்துவானும்
ஞான உரையாசிரியரும் தமிழ்சாஸ்திர நிபுணருமாகிய
ஸ்ரீலஸ்ரீ,
எம். எ, நெயினு முகம்மது பாவலர்,
அவர்களால் செய்தருளிய.


ஞானப்பொழிப்புரையும்.

அடங்கியிருக்கின்றன.


இதனை
சென்னை; திருவல்லிக்கேணி,
யூனனி மதாரிய்யா மேடிக்கல் ஸ்டோரின்
சொந்தக்காரராகிய மகாகனம் ஸ்ரீமான்
டாக்டர், எம். ஏ, ஷேக்மதார் சாகிபு,
அண் ஸன்ஸ், அவர்களால்.

தமது.

மதாரிய்யா யெந்திர சாலையிற். பதித்து
வெளியிடப் பெற்றது.



*Copy Right Registered.*



1922


இதன் விலை] [ரூ 2—0—0


2 9 NOV 1923

29 NOV 192

# முகவுரை.

வேதபுராணம் ஞானப்பொழிப்புரை:—என்பது. தெய்வக்தி
ருவசனுமிர்தரஞ்சிதமாகிய குர்ஆன்ஷரீபில் ஆண்டவன் ஆங்கா
ங்கு தோறும்மானிடவர்க்கத்தார்க்கென்று.சயிக்கினைசெய்துதிரு
வுதயஞ்செய்தருளிய. அம்ஸ சூஸ்திராதிகளுக்குள்ள அகப்பொ
ருள். புறப்பொருள் இரண்டினுள். நல்லடியார்களுக்கு இன்றிய
மையாத அரும்பெரும் பாக்கியமான அகப்பொருளை அப்படி
யே ரூபமாக எடுத்து. ஜலத்தில்வார்த்திட்ட பத்திய பாலாமிர்தத்
தை மாத்திரம் உறிந்துகிரஹிக்கும் அன்னம்போல் நம்தமிழ் நாட்
டிற் சிறந்தகாயற்பட்டனத்தின் கண் சில நூற்றாண்டுகளுக்கு முன்
ஜீவித்திருந்த மகாகனதி வாய்ந்தமஹானும் அல்லாமத்துமாகிய
ஷெய்குல் இஸ்லாம். அல்ஆரிபு. காமில் சற்குரு. ஹலரத் பெரிய
நூஹு நெயினு லெப்பை. ஆலிம் ஒலியவர்கள் ஞானமிர்தமழை
மாரிபொழிந்தவண்ணமாக படலம் படலமாக. தமிழ்ச்சுவை யூறி
வழியும்படியான செய்யுட்டொடர்ச்சி தோரணையாகப்பாடி வேத
புராணம்! என்று நம் செந்தமிழுலகமெல்லாம் நிகரற்று வழங்கி
வந்தது நம் நாட்டுடைய கனவான்கள் யாரும் தெற்றென அறி
வார்கள்

அங்ஙனம் தலீல் சம்பந்தப்பட்ட வரையில் இஸ்லாமிய கைவ
ல்யமாக இருந்து விளங்கிவருகின்ற இந்தப் பெரியகாரியமான
ஞானகாவியத்தின் உள்ளுறை பொருளையள்ளி நம்சகோதர ஜனங்
களுக்கு ஊட்டவேண்டுமென்று நீண்டநாள் என்மனஸுக்குள்
ஒருஉணர்ச்சி யிருந்துவந்தபோதிலும். அவ்விதஎன்முன் நோக்கங்
களுக்கிடை யூறாக. இடைஇடையே எனக்கேற்படும் சந்தர்ப்ப
குறைவுகளான அவகாசஇருட்டை உபகாரமென்னும தைரியசூரி
யகிரணவெளிச்சத்தால் விரட்டிவிட்டு மேற்படி நோக்கத்தைவெளி
யாகச்செய்து. இதற்குமுன் ஞானமணிமாலை தாற்பரியவுரை. பிஸ்
மில்குறம் ஞானவிளக்கவுரை. மஅரிபத்துமாலை பொழிப்புரை.
ஞானரத்னக் குறவஞ்சி திரவியவுரை. ஞானசரநூல்திருமணிபுரை
ஒசியத்துவாளகாவியம். முதலியபெரும் பொருட்களையெல்லாம்
என்னாற்செய்து முடிக்கச்செய்து, பெரும்வாரியான பணச்செலவு
டன் அச்சிட்டு உலகப்பிரசித்தப்படுத்திய. கனவானும், தனவானு

மாகிய. ம-௱-௱-ஸ்ரீ டாக்டர் எம். ஏ. சேக்மதார் சாகிபவர்களே. இந்த வேதபுராண ஞானவுரை. விஷயத்திலும் முழுமைக்குந்தலையிட்டு. இதற்காகுமான பொருளாதார சாதனங்களும் தினேதினே நான்வேண்டும் போதெல்லாம் மறுத்திலா உதவிதானம்புரிந்து இதற்கிடையில் எனக்கேற்பட்டுள்ள அசந்தர்ப்ப காலதாமதங்களும் பொறுத்திருந்து அரும்பெரும் பிரயாசையுடன் அச்சிட்டு ஸம்பூரணஞ்செய்தார்கள், எந்தவிஷயத்திலும் தன்னலத்தைக்கருதாமல் உலகத்தின் பொது நலத்தை வேண்டிமகத்தான. மஹான்களின் அருட்பிரசன்னங்களை யெல்லாம் பெருமுயற்சி யெடுத்து. வெளியாக்கித்தருகின்ற. தனவானுகிய. நமதுடாக்டர் ஸ்ரீ-மத் எம் ஏ. ஷேக்மதார்சாகிபவர்களுக்கு ஆண்டவன் இருலோகத்திலும் அளவற்ற இருதயாநந்த சுகானுபவங்களை அருள்புரியும்படியாக என்னேடுமற்ற உலகஜன சமஸ்தான்களும் பிரார்த்திக்கும்படியாக. நான் ஒவ்வொரு சகோதரர்களுக்கும் விண்ணப்பஞ்செய்து. இத்தமட்டிலும். முகவுரை. சாராம்ஸ ஸங்கிரகத்தைப் பூரணிக்கின்றேன்.

ஞானவுரை யாசிரியன்
செவ்வல்மா நகரம்.

எம். ஏ. நெயினு முகம்மதுப்பாவலன்,

பிஸ்மில்லாஹி.

# வேதபுராணம்.

## ஞானப் பொழிப்புரை.

### காப்பு-வெண்பா.

ஆதியே யுன்சுருதி யாயத்தினிற் சிலதை
யோதலா லந்நாமமுட்கொண்டே—வேத
புராணமெனப் பேர்கொடுத்துப் போற்றுங் கவிகள்
திராணியுற வேயருணீ செய்.

இதன் அர்த்தம்; சகல உலகங்களுக்கும் ஆதியில் எழுந்துநின்றவனே! உனதுகுர்ஆன் வேதத்தின் ஆயத்து களானசுவர்ன சூஸ்திரங்களிற் சிலவற்றை மாத்திரம் மாகிட்கோடிகள் ஓதிவரும்படி அந்தஉன்பெரிய திருநாமமாகிய பிஸ்மில்லாஹவை நான் இருதயத்தின் மீது பதிய வைத்து அத்துடன் இதற்கும் உன் வேதபுராணமென்றே திருநாம கரணமுஞ் சூட்டி நான்பாடி முடித்து விட்டகவிகள் பூலோகத்தின்கண்ணே மானிடர்களுக்கு நேர்வழி யைக்காட்டி அவர்களை மனுஷீகத்திராணி யென்னும் ஈடேற்றம் பெறுப்படியாக நீயே உன்தனது கிருபை செய்ய வேண்டியது. எ-று.

### கருத்துகள்.

ஆயத்துகளில் சிலதை என்று மஹாத்மா அவர்கள் குறிப்பிட்டதன் காரணமாவது அல்லா-குர்ஆனில் தன்சிர்றுல் மஃஜூதுகளைப்பற்றி சிற்சில இடங்களில்தான் தன் அந்தரங்கங்களைப் பற்றி விஸ்தரித்தான். அதைப்பற்றி தன்ஹபீபான நமது நாயகமவர்களுக்கும் சகிக்கினை செய்தான் எப்படியானல் முகம்மதே இந்தரகசியங்களை மாத்திரம் நீர் எல்லாருக்குஞ் சொல்ல வேண்டாம் என்கிலும் உமக்கு ஸமீபவீட்டார்களுக்கு மாத்திரம் சொல்லிவையு மென்று திருவுளம் பற்றி இருக்கின்றன். ஆனதால்

மஅரிபாவைத்தெளிந்து கடைத்தேறப்பட்ட நல்மதியாளர்கள் உலகத்தில் ஆயிரம் பதினாயிரம் பேர்களில் ஒருவராக இருப்பார்கள். இவ்வித சுத்தார்த்தங்களினால் கண்டு தெரியவேண்டியது தான் மெஞ்ஞானமென்பது.

---

## கடவுளர் வாழ்த்து

## தொங்கலென்று வழங்குகின்ற

அறுசீர்க் கழிநெடி யாசிரிய விருத்தம்.

எல்லாம்படைத்தழித்தெழுப்பவல்லாய், எங்கணுயகாகிருபையுள்ளாய்- வல்லாய் றஹ்மத்தும் நிஃமத்துள்ளாய், வரிசைக்குத்றத்தாபியத்துமுள்ளாய்-நல்லார் நபியிறசூலெல்லாவை, நபிகட்கரசாக வாக்கிவைத்தாய். அல்லாஹ- றப்பில் ஆலமீனே, ஆதி றஹ்மானே காப்புநீயே! (I)

### ஞானப் பொழிப்புரை.

வஸ்த்துகள் எல்லாவற்றையும் உண்டாக்கி அப்பால் அழியச் செய்து அப்பால் மீட்சி செய்யும் படியான வல்லமையாளனே! எங்களுக் கெல்லாம் ஆண்டவனே தனித்தனி கிருபையுள்ளவனே வல்லபத்திற்குச் சொந்தக்காரனே! றகுமத்தென்னும் கடவுக்கும் நிஉமத்தென்னும் ஆகராதிகளுக்கும் திறவுகோலான வனே! இவ்வமும் வரிசை வரிசை யான அல்லது விதம் விதமான *குதறத்துகளும் அடுக்கடுக்கான ஆபியத்தும் உடையவனே! மனித ஜனனங்களில் நல்லவர்களான எங்கள் நபியவர்களை மற்ற எல்லா றசூல் மார்களுக்கும் ராஜாதி பதியாக அனுப்பி சகல சீர்திருத்தங்களுஞ் செய்து கொண்டவனே! இன்னும் அல்லா-ஹ- றப்பில் ஆலமீன்! என்னும் சூட்சியமான திருநாமத்திற்குரியவனே! ஆதியில் வந்தறகுமானே! இதற்கு காவல் நீயாக இருக்கும். எ-று.

---

*குதுறத்து ஆபியத்து என்ற மகாம்களின்மறுத்தபாக்களைப்பற்றி நான்தெளிவாகஉரையெழுதியுள்ளமஅரிபத்துமாலைபிஸ்மில்குறம்என்னும் நூல்களில் பகுத்துக்காட்டியிருக்கிறதுகாண்க.

வானமேழ்புவி மலைகடலும், வரிசைக்கல மறுஷீங் குருசும்
பானும் பதுறுமீன் மலக்குகளும், பகரு மனுஜின்னு மிருகமிவை
தானுநால்யோனி யெழுதோற்றமுஞ், சகலபடைப்பினையுமவைக்கு
மூலமான லாயிலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுர் றசூலுல்லாஹி
காப்பே. (2)

(ஞா-பொ-ரை) ஆகாய அடுக்குகளான ஏழுவானங்களையும், ஏழுபூலோகதீபகல்பங்களையும், மலைகளையும், கடல் களையும், வரிசை தங்கிய கலம்-அறுசுக்குருசு ஆகியவைகளையும், சூரியன்-சந்திரன் நட்சத்திரம் இன்னும், மலக்குகளையும், இன்னும் சொல்லுகின்ற மானுடஜாதிளானவை முதல் ஜின் என்னும் அரக்கர் ராக்ஷஸர்களையும் மிருகஜாதிகளையும், இன்னும் நான்குவித யோனிவாசல் அதாவது நான்கு பூதங்களின் கிருத்திய குணா குணங்கள் அல்லது. ஒன்றை விட்டு ஒன்றில் இருந்து பாய்கிறது உதாரணமாவது. தின்னக்கூடிய ஆகாரங்களில் நின்றுஜீரணிக்கப் பட்டு ரத்தமாகின்றது ஒருயோனி அவ்விரத்தயானது.

நுத்பா. என்னும் இந்திரியத் துளியாக திரள்கிறது ஒரு யோனி ஷெ திரண்ட நுத்பாவானது. காமப்பால் என்ற. மீறிய ஆசையில் கொழிவிக்கொள்கிறது ஒருயோனி அவ்வாறுகொழுவிய ஆசையுடன் ஷெ இந்திரிய திரட்சியானது தகப்பனுடைய மூளையில் வந்து கூடி முதுகந் தண்டுக்களின் துவாரங்களின் வழியாக. ஓடி வந்து. மாதாவின் ரகசியவாசல் வழியாக கற்ப உலகத்தளவில் பவனிபோயிற்றே அது ஒரு யோனி ஆக நான்குயோனியுடையசாஸ்வதமும். எழுதோற்றம் அதாவது. 1-வது. விதையினால் எழுந்து நிற்கும்படியான விருட்சம் புல் பூண்டு செடி. கொடி முதலானவைகளையும் 2-வது. சினை, யினால் நீரில் வாழக் கூடிய அநேகமான மீன்முதலான கூட்டங்களையும், 3-வது, பிறவியினால் மனுக்களையும் ஜின் அரக்கர்களையும், 4-வது முட்டையினால் பட்சி பக்கிசாரங்கள் கெவ்ளி பல்லி பாம்பு முதலை முதலிய அனைத்தையும், 5-வது வேர்வையினால் ஈறு, பேன், புளு, மூட்டை முதலியசமஸ்த்தமும் 6-வது 7-வது ஒளிவு நெருப்பு. இவைகளினாலேசுவர்க்க நரக வில்தான் ஸபானியா முதலிய மலக்குகளை

யும் உற்பத்தி செய்திருக்கின்ற சகல மானபடைப்பு சரா சரங் களுக்கு ஆதிமூலா மூலமாகிய லாயிலாஹ இல்லல்லாஹு முகம் மதுர் றசூலுல்லாஹி என்னும் மூலகாரண மந்திரமே. இந்த வேதபுராணத்திற்கு காப்பாக இருந்து வேமாக. எ-று.

ஆதி யபூபக்க ருமறினுக்கு, மன்பார் மருமக ரானவராம்-நீதி புதுமானு ரலியாருக்கும்,நேசமாகியமாமனுராம்-சோதி யசனுசை னுர்க்குமிகு,துய்யபேரனுரானவிராம்-சாதியப்துல்லா திருமகனும் சாஹிபு நபி காப்புத்தானே. (3)

(ஞா-பொ-ரை) இஸ்லாமிலும் சுவர்க்க உட்பிரவேசித்திலும் நபிநாயகத்தின் ஸ்நேகத்திலும் ஆதியில் முந்தியவரான ஹஜரத்அபூ பக்கர் ஸித்தீக்கு அவர்களுக்கும்-நீதத்தின் தலை வர்சிலானஹஜரத் உமறிபுனுகத்தாபு; அவர்களுக்கும் மருமகராயும், ஹஜரத் உது மானிபுனு அப்பான் அவர்களுக்கும் தெய்லோகத்தின் சிம்ஹராசி யாகிய ஹஜறத் அலிபினு அபீதாலீபு அவர்களுக்கு மருமனு ராயும் சுவர்க்கலோகத்து ஒளிவுள்ள நட்சத்திர ராசிகளான இமாம் ஹசன் இமாம் ஹுஸைன் ஆகிய இருசிகாமணிகளுக்கும் பாட்டனுராயும் அறபிகளில் உயர்சாதித்தலைவராகிய அப்துல்லா அவர்களின் திவ்யகுமார ரான நபிகளுக்கு ராஜாவாகிய எங்கள் நாயகமவர்களும். இதற்குக்காப்புத்தான் எ-று.

கடவுளர் வாழ்த்து.

முற்றிற்று.

---

## உ-வது கலிமாமுதலியகாரணப் படலம்.

---

எல்லாப் படைப்புக்கு முன்பாகவே, யேக னறுஷுக்குங் குறுசுக்குமுன்-நல்லார் பலகைக்குங் கலத்துக்குமுன், ஞாலு மிரு ளுக்கு முன்னமேதான்-சொல்லா லொருசத் முண்டாகியே, நலங்குங் கலித்திறகன் றுகையமதாய்-வல்லோன் கலாமுல்லா வரிப்படுத்த, வழங்கினனல்லா முழக்கமாக, (1)

(ஞா-பொ-ரை):—எல்லா உலகங் களையும் உற்பத்திசெய்வதற்கு முன்னதாக அறுஷு குர்சுகளையும் உற்பத்தி செய்வதற்கும் முன்னே லௌஹுல் மகுபூல் பலகைக்கும் கலத்துக்கு முன்னே. நாலு அறு சிறுகளின் சிர்றுசளான கஞ்சுல்மக்பி. என்னும் இருட்டுக்கு முன்னமே. ஒரு அசரீரியானசப்தமுண்டாகி கலத்தைப்பார்த்து ஐ:கல்மேகீ உற்பத்யாகு.என்றது. அந்த உதிப்பாகுறது வல்லபத்தையுடைய ஆண்டவனின் திவ்ய கிலாமுல்லா என்கின்ற குர் ஆனை வரிபடுத்தும். படியாக. அல்லாகுத்த ஆலாதன் உஜூ தென்னும் உதிப்பில் நின்றும் முழக்க முண்டு பட்டது. எ-று.

முழக்கம் வரக்கேட்ட கலத்திற்கன்று, முனையிற் சக்கஃ தில்லாமையாற்-பழக்கமுடன் ஹறுபெழு தாதுறப், பார்த்து மறுத்துமே கோபங்கொண்டு-தழற்கணெடு கும்மென்றுறுக்கவதுந், தானேமுனையிரு பிளவாகியே-யிளக்க முடனுதி வசனமெல்லா, மேவல் போற்கல மெழுதியதே. (2)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் முழக்கத்தைக் கேட்டதும் கலம் எழுத உன்னிற்று. உன்னியும் கலத்துக்கு நடுவே உறுக்படியான வரிபிளக்காததினுலே எழுதமுடியாமல் நின்றது, அது மறுபடியும் ஹம்மென்று ஒரு சப்தம் தஜல்லியில் நின்று கோபமுண்டாகி உறுக்கியது அந்த உடனே கலத்தின் நுனியில் ஒருபிளப்புண்டாகி ஷெ தஜல்லியின் கலாம் அனைத்தையும் ஷெ தஜல்லியின் ஏவல் பிரகாரம் விதிகற்பனைகலாக்களைப் பற்றி விடாமல் எழுதிமுடித்தது தஜல்லி என்றது ஒளிவு, கலம் என்றது தன் நாட்டம் தன்னுட்டம் என்றகருமங்கள் எல்லாம்குறிப்பிடப்படுகின்றது.இதனால்அறிவுடையஜனங்கள் படித்துக்கொள்ளவேண்டியது.

எழுதுங் கலத்திற்குப் பேர்கொடுத்தான், யாகூ என்குத்புல் லகுலமென்று- பழுதில்லா நூறு முஹம்மதுக்குப், பதித்தா னுக்தாவைப் பார்வையிலே-தொழுதுசுஜூதிலே வெளியானது,துலங்கும்பாத்திமா றாஹதிலே-பொழுது கிலவிராப் பகலானதும்,புகழுமசனுசை ஞமங்கொண்டே. (3)

(ஞா-பொ-ரை):—அவ்வாறு எழுதின கலத்திற்கு அல்லாகுத்த ஆலா பாஹு, என்னுடைய மகுபூபாகிய குத்புல் அஃலம்

என்றுதிருநாமஞ் சூட்டினன் அப்பால் யாதொருகலப்பறு தலற்ற தன்னுடைய முகம்மதிய்யத்தான ஒளிவுக்கு நுக்தா என்னும் ஊமையெழுத்தை சொந்தமாக்கி விடும் படி ஷை கலத்தைப் பார்த்தான். அப்படியே உண்டுபட்டுவிட்டது, அப்போது ஹூ என்னும் பசிய ஒளிவுக்கு நூறுல்முகம்மதுஎன்னும்நுக்தாவானது வணக்கஞ்செய்தது. அதில் நின்றும் பாத்திமத்துஸ்ஸஹறாவுடைய றூஹானது பிரகாசத்துடன் வெளியாயிற்று அதில்நின்றும் சூரிய சந்திரர்களிருவரும் உதயமாய் விட்டார்கள் அவர்களாகிறது ஒன்று இமாம் ஹஸன் மற்றொன்று இமாம் ஹுஸைனுகை இருக்கும். (பாத்திமா) என்ற ஒளிவில்நின்றும் வெளியான சூறத்தில் இடகலை பின்கலை இரண்டும் உதயமாய்விட்டது என்றது கருத்து. இதில்நின்றும் பலவிதமான ஞானக்கருத்துவைத்துத் தவத்தை ஏற்படுத்துகிறதுதான் ஒர்மையாக இருக்கும். அஹதியத்தில் முகம்மது சமைந்திருந்த ஸ்ரூபத்திலேதான் பாத்திமா அதில் நின்றும் வெளியாயிற்றென்று இன்ஸான் காமில்க்காரர் வற்புறுத்தி எழுதியிருக்கிறார். ஹக்காக இருக்கும் ஞானவிஷயத்தை நோட்டமிடுகிற மேதாவிகள் தங்களுக்குள்ளே தெளிந்த உணர்ச்சியைத் தங்களுக்குள்ளேதான் வைத்துபாரட்ட வேண்டியது ஷறுத்தாக இருக்கும். எ-று.

நாமங்கொண் டறுஷ-ஒங் குறுசும், நரகும் சொர்க்கமும்
வான்புவியுங் கோமா னமரருங் கூறுல்ஹீனும், குதறத் தெனுங்
கடல் மனுவுஞ்ஜின்னும்-ஆம மனுவாதமுயிரெவையு, மஃதுக் கஃ
தாகப் படைப்புண்டான-தேம மெழுவகைத் தோற்றமெல்லா,மிற
சூல் நபியைக் கொண்டானதுவே. (4)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் மேற்கூறிய வண்ணம் பெயர் கொண்டவுடன் அறுஷு குருசு லௌகு-கலம் நரகம் சொர்க்கம், வானம் பூமி, அண்டர் கணங்கள் ஹூறுல் ஈன்கள். இன்னும் குதறத்தென்னுங் கடலும். மானுட கூட்டங்கள். ஜின் அரக்கர் கணங்கள் இன்னும் இந்த மூன்றும் யுஹத்தில் வெளிப்பட்ட மனுவாதத்தின் பலபலவித சிருஷ்டிப்படைப்புகளும். அதுவக்கதுவாக படைப்புண்டாகும்படியான மேலே சொல்லிவிட்ட எழு

வகையான தோற்ற ஜீவஜந்துக்களும் ஷெய்நுக்தாவின் அசலியத்தான முகம்மதியாவில் நின்றும் வெளிதோன்றிற்று. முகம்மதில் நின்றும் ஜீவகோடிகள் எல்லாம் முகம்மதிய்யா வில் நின்றும் வெளியான தன் கருத்து என்ன வென்றால் கலிமா இருபத்தொன்பது அட்சரத்தால் வெளியிற்றென்பது தான் கலிமா. என்பது முகம்மதாக இருக்கின்றது. அதனால் தான் அவ்விதம் ஆயிற்றென்று மேலோர்களின் துணிபு. எ-று.

ஆன முஹம்மது நபி தமக்கிங், கடியுந் தோயாதுநிழலுமில்லைத்
தானமண்பூச்சுத் தொடாத வங்கஞ், சங்கையாய் மேகக் குடை
மணமும்-பானற் பார்வைமுன் கண்டதூரம்,பார்வை யதுபோலே
பின்னுங்காணுங்-கோனின் அஷ்ஷுக்கு மேற்சிரசுங்,குறித்த தகுத்
ததருக் கீழ்பாதம். (5)

(ஏ-பொ-ரை):—அப்படி யானதினாலேதான் முகம்மதுக்குத் தமது பாதாரவிந்தங்கள் இரண்டும் பூலோகத்தின்கண் படாதபடியாயிற்று சரீரத்தில் உண்டான நிழலுஞ்சாயவில்லை, இன்னும் அதனாலேதான் சரீரத்தில் நாலு வஸ்த்துகளுக்குரிய வழக்கம் போல ஒருபூச்சு. புழு, ஈ, எறும்பு, முதலான வைகளும் ஒட்டுகிறது மில்லைவியர்வை அழுக்கு முதலான எந்ததுர்விநியோகமுங் கிடையாது அங்கத்தில் ஒருவிதபுதினமான கஸ்தூரி வாசனையும் கமழ்ந்து கொண்டிருந்தது. தலைக்கு மேலாலே கருமேகப்படலம் ஒன்று கூடி குடை பிடித்துக்கொண்டு நின்றது, ஆனதினாலேதான் தமது முகத்தின் கண்ணுக்கு எவ்வளவுதூரம் பாவையை வைத்துச் சொல்கிறார்களோ அவ்வளவு தூரம் தங்கள் பிறடிக்குப் பின்னாலும் உள்ள சங்கதிகளைப் பார்வையிட்டுச் சொல்லுவார்கள் (இன்னும் சிரசானது அல்லாவுடைய அறுஷாகிய ஏழு வானத்திற்குமேலும் பாதமானது (தஹ்தத்தரு) என்னும் பாதாளத்திற்குக்கீழும் பதியப்பட்டிருக்கின்றன. எ-று.

பாதம் ரண்டையுங் கண்டதில்லைப், பார்வை மேற்சிரங் கண்டதில்லைக்-கோதில் மேனியைக் கண்டதில்லைக்,கூறு மலஜலங் கண்டதில்லை-நீதத் தபிலாடைகளை நதில்லை'நிசமாம்நகம்ரோமம்வளர்ந்

நதில்லைப்-போத மொருநாளு மறந்ததில்லைப், புகழ் முஹம்மதா மிண்ணுக்கே. (6)

(ஞா-பொ-ரை);—அவர்களுடைய பர்தங்கள் இரண்டையும் ஜனங்களில் *ஒரு சிலர் தவிர மற்றயாரும் கண்டதேகிடையாது, இன்னும்அவர்களது மலஜலாதிகளையாருங் கண்டதெயில்லை இன்னும் அவர்களது குற்ற மில்லாதபரிசுத்தமான மேனியையும் யாரும் கண்டதேயில்லை நாயகமவர்கள் தங்கள் துயிலாடை யையும் ஒரு நாளாவது களைந்து மாற்றினது மில்லை உண்மையாக நாயகமவர்களுக்கு. நகங்களாவது உரோ மங்களாவது பிறக்கும் போதுள்ள அளவுக்கு மேல் புதிதாக வளர்ந்ததேஇல்லைஇன்னும் அவர்களுக்கு தன்நினைவானது எந்த நாளையிலும் மறந்ததே இல்லை யாருக்கு நமது முகம்மதாகிய றசூல் நாயகமர்களுக்கு ஆக இருக்கும். ஏ-று.

அண்ண லாகிய நபியிறசூ. லறிந்தெய் போதினு ,மிருக்குந் தல-மெண்ணுங் கலிமாவி னடுவெழுத்தி, லேறி விறங்கிடுந் தலமதிலே-கண்ணைத் திறந்தங்கே தானிருப்பார், கருணைப் பேரொளியாகவே தான்-பண்ணுமதுதொழிலாயிருப்பார், பாரு மாயத்துக் குரிசியிலே. (7)

(ஞா-பொ-ரை):— நமதுவள்ளலாகிய நபியவர்கள் தங்களைத் தெளிந்து கொண்டமகாமில் இருந்து எப்போதுந்தரிபட்டிருக்கிற ஸ்தலமாவது கலிமாவில் நடுத்தலமாகிய இல்லல்லாஹு என்னும் உறாஜ் நுஜூலில் அதாவது ஏற்றம் இறக்கமாகிய ஸ்தலமாக இருக்கும் மக்ஸதானது எப்போது மறக்காதநினைவில் தரிபடுவார்கள் என்பது கருத்து. தங்களுடைய இருகண்களையும் இல்ஹாமுடைய வாசலுக்கு நேரேதிறந்து சுழிமுனையை எதிர் நோக்கினவண்ணமாக இருப்பார்கள். அங்கே அல்லாவின் பேரொளிவைத் தெரிசனை செய்ததோற்றமாகவே இருப்பார்கள் றசூல்நாயகமவர்களுக்கு எந்த ஹாலும் இதுவே தொழிலாகத்

*ஒருசிலர் என்றது. கௌதுல்அஉலம் சுல்தானுல்ஆரிபீன்.உவைசுல் கறுனேன். போலொத்த அரியபெரியமஹான்களைச்சுட்டியது, காண்க.

தான் இருப்பார்கள் இந்தரகசியங்களைப்பற்றி மனிதர்கள் தெளிவறிய வேண்டியதாக இருந்தால் ஆயத்துக்குரிசியை நோட்டமிட்டால் நல்லசக்கரத் தெரிந்துகொள்ளலாம். எ-று.

கருத்து.

இல்லல்லாஹு என்னும் தஜல்லியாத்தில் நினைப்பைவைத்து ஒருநிலையாகத் தரிப்படுகிறதினால் கலிமாவில் நடுவெழுத்தில் தரிபட்டார்கள் என்று சொல்லப்பட்டது என்றுணர்ந்து கொள்க.

குரிசில் முஹம்மது நபிஜுப்பாவிற், கூறுமொரு வண்டையனுப்பிவைத்தான்-பரிச முடனதின் கொடுக்கின்விஷம், பாராந்துனியாவிற் சிந்திவிட்டாற்-றுரிச முடனெங்குஞ் ஜலமாய்விடுஞ், சோதி முஹம்மதங் கெனைமறந்தா-லரிசமுட னீதான் கொட்டுகென, வந்த வண்டினுக் கல்லாசொன்னான்- (8)

ஞா-பொ-ரை:— அந்தமுஷாஹிதாவில் தரிபடுகிறதற்காக வேண்டித்தான்நபியவர்களின் திருஜுப்பாவில் அல்லாகுத்தஆலா ஒருவண்டை யனுப்பிவைத்தான் அந்தவண்டின் கொடுக்கின்விஷமானது இந்தபெரிஉலகத்தின்கண்ணே சிந்திவிடும் பட்சத்தில் எல்லாஉலகமும் ஒரேஜலமாகிப் போகும் அப்படியான கொடிய விஷவண்டைப்பார்த்து அல்லாசொன்னதாவது ஏ! வண்டே நீ என்ஹபீபு என்னை ஒரு அணுப்பொழுதாவது மறந்திருந்தாராகில் உடனே நீ அவரைக் கொட்டிவிடு என்று கட்டளை செய்திருந்தான். எ-று.

சொன்ன படிவண்டு கொட்டவில்லைத், தூதர் முஹம்மது மறக்கவில்லைப்-பொன்னூராகிறம்புகுந்தபின்னர், புகழ்சேர்பகானுன்வைசுலக்கறனென்-மன்னுஞ் ஜுப்பாவி லிருந்தவண்டை, மகிழ்வின லீகையிற் கொடுக்கவாங்கித்-தன்னோர் சரீரத்திற் றேய்த்துவிட்டார், தானுய்த் தேகத்தோ டானதுவே. (9)

(ஞா-பொ-ரை):—அந்தப்பிரகாரம் அந்தவண்டானது நாயகமவர்களைக் கொட்டவுமில்லை நாயக மவர்களும் ஒருநாளும் அல்லாவை மறக்கவு மில்லை நாயகமவர்கள்சுவர்க்கப்பிரயாணம்போனதின் பிறகு கட்டளை போல் அலியின்கர்றமல்லாகு அன்கு ஷெ

ஐ—ப்பாவை: வண்டுடன் கொண்டு வந்து உவைசுல் கறுனீன், வீசம் கொடுக்க அதை அந்த மஹான் அவர்கள் வாங்கி ஷெ வண்டை எடுத்து அதில் இருந்த விஷக்கொடுக்கைப் பிடுங்கி விட்டு. வண்டை தங்கள் சரீரத்தில் வைத்துத் தேய்த்தார்கள். அது. அவர்கள் சரீருத்துடன் ரஹித்துக்கொண்டது எ - று.

தேகந் தனிலான புதுமைகண்டு, திரும்ப வவரோடுந்தாலிபா ணர்-ஆகமுடனேயே அகிதா வெல்லா,மவருக் கறிவித்தாரழ காகவே போகமிலாவுவைசுல்க்கறுனீன், போரில்நபிபல்லுஷஹீது கண்டு-வேகமுடனவர்பல்லதனை, விரைந்து தகத்தனர் மேவாமலே

(ஞா-பொ-ரை):—அவ்விதம் வண்டுஉவைசுல்கறுனீன்உடை திரேகத்தில் சமமாக விரவிக் கொண்ட புதுமையைப் பார்த்து அலியவர்கள். ஹஸ்ரத்தவர்களிடம் உபதேசம் பெற்றார்கள் அதன் பிறகு உவை சுல்கறுனீன் அலியவர்களுக்கு நபியவர் களின் ரகசியங்களை யெல்லாம் எடுத்துப் போதித்து அகிதாக் களையும், தவநிலையும் காண்பித்தார்கள். உகுதுயுத்தகளத்தில் நபியவர்களின்பல்ஒன்று ஷஹீதானதையும். உவைசுல்கறுனீனே எடுத்துவைத்தார்கள். இந்த அநேகபறகத்து களெல்லாம் உவை சுல்கறுனீன் அவர்களுக்கு அகப்பட்டுக் கொண்டது. இனிகீழ் வரும்படி முரீதுவிஷம் அறியவும். எ - று.

மேவும் பேருக்கு முரீதினர்க்கு, விதித்த பறுலேழ்ஸுன்னத் தீராறு-காவும் ஷறுத்தெட்டு திக்றதைந்து, கருது மிருநான்குமொ ழியொன்பது-பாவும் பகுத்தோர்ந்தபீரிடக்கிற்'பரிவாய் முரீதாக வெணுமென்று-கோவு தன்குருன்குதுசியிலே, குறித்த நபிசொன் னருமத்துக்கே. (11)

(ஞா-பொ-ரை-):—இந்தரகசியங் களைக்கண்டு பிடிக்கும் முரீ தானநிலையைத் தெரிவிக்கும் அகீதாவையுடைய குருமார்களுக்கு ஒருசங்கதி. முரீதுகளுக்கு பறுலு, ஏழு, சுன்னத்து பன்னிரண்டு ஷறுத்து எட்டு. திக்று. ஐந்து. தியானம் எட்டு உச்சரிப்பான உள்மொழி ஒன்பது, இவ்வகையான ஞானபீடங்களைத் தெரிந்து

பழகினவர்கள் தான்காமிலாக இருக்கும் இந்தப்பீர் மார்களிடத்தில்தான் முரீது என்னும் ஞான உபதேசம் பெற வேண்டுமென்று அல்லாவும் தன் குர்ஆன் குதுஸியில் அறிவித்தான். நமது நாயகமும் அதன்படி தமது உம்மத்துகளுக்கு ஆக்கியாபித்திருக்கிறார்கள். இந்த நல்பாதைகளைத் தவிர விட்டு விட்டு மௌடீக ஜனங்கள் தங்கள் அறிவீனத்தினால் பகல் வேஷம் போட்டு தலைப்பாகையும் தடியும் பிடித்துக் கொண்டு வரக்கூடிய பரமதடியர்களை யெல்லாம் சற்குரு வென்று கைபிடித்துக் கொண்டதனால் யாதொருபிரயோசனமுங்காணமாட்டார்கள். எ - று.

ஒண்ணுனுலூச்செய்து றக்குஅத்திரண், டோதித் தொழுது பின்றுஆவிரந்து-கண்ணுன ஷெய்கு முன்னிருந்து, கருதி குருணையத் தோதக்கேட்டு-நண்ணுக் கைப்பற்றி நஸீஹத்தாகி, நாட்டமுடன் திக்கீர் காதில்வாங்கி-யெண்ணுர் முருதிலே ஷெய்கைக் கண்டா, லெனைக் கண்டாரென் றசூல்சொன்னுர். (12)

(ஞான-பொ-வுரை):—தன்மன அழுக்குவிலகும்படியத்தால் உலுச்செய்து. இரண்டு றக்அத்து நபில்தொழுது அதன் பிறகு மஅரிபா உடைய புரத்தால் நேர்நேரான துஆக்கேட்டு கண்ணின் அசலைத் தெரிந்த ஷெய்கின் சமுகம் வீற்றிருந்து. அவருடைய அன்பையே நினைவில்கொழுகிவிட்டு அத்துடன்குர்ஆன் ஆயத்தைஓதக் காதில் கேட்டு வெகுஉண்மையான அன்புடன் அவர்கையைப் பிடித்து நஸிஹத்துப் பெற்று தன்னுட்டத்துடன் ஷெய்கு சொல்லிவைக்கின்ற திக்றைப்பூட்டி. நிஷ்டையிலமர்ந்து ஒரே நிலையான தியானத்தில் ஷெய்கைக் கண்டால் அந்தக்காண்கையானது. என்னைக் கண்டதாக இருக்கும் என்று நமது வள்ளலான நாயகமவர்கள் திருவாய் மலர்ந்து கூறினுர்கள். எ - று.

வலியகண் கேள்வி பேச்சுமூச்சு,வறைக்கும்மிருநாலுக்காப்பாலேதான்-கலைதான் பனிரண்டும் அலிபாகவே,கருணை திக்றைந்து மெட்டிக்குள்ளே-மலைமேற்ஷம்சுமின் மினிவிளையு,மதியுக்கினிபயித் துல்லாவிலே-லைத் ஐம்கூவுமூன்றுசுக்கூ, னவின்ற னல்லாவுமுல் குறுஆனிலே. (13)

ஞா-பொ-ரை:— அப்படிதரிபடும் தவநிலையில் தானாகவே பார்வை கேள்வி பேச்சு மூச்சு என்னும் புலன்கள் எல்லாம் அடைபடவேண்டுமானால் எட்டுகருமங்களான ஷஹாதுக்கும் அப்பால்கடந்தான் அதற்கடையாளங் களாகிறது பன்னிரண்டு சுவாசங்களைகளும் அலிபுக்குள் வந்துநின்றுவிடும்திக்றுஜந்துகளும் ஷெ ஷஹாது எட்டுக்குள்ளேவந்து அமைந்துகொள்ளும் வர நிலையாகிய புருவமத்தியில் சூரிய ஒளியின்மின்னலும் பெரிதாக தோற்றவாகும். சந்திரனுடைய யக்கினி, விம்பமானது. பைத்து ல்லாஎன்னும்நேத்திரங்களில் மூன்றுசுக்கூனும்ஜம்ஹாத்தும். லை லத்துல்கதுருடைய வேளையில்காணப்படும்என்று, நபிநாயகமவர்கள் உபதேசித்தார்கள். உம்முல்குற்ஆனில் நின்றும் வெளியாக்கப்பட்டது. எ - று.

மத்தா னதுதிருக் காயதுமுத், மவா யிருந்தது சுல்பானதிற், குற்ற னதுக்குமே லிருந்துதானே, குவ்வ மதிரண்டிற் கிடைநடு வே-சித்தா னதுவாயிற் றிறக்கமோதுந், திருவுங் கருவான ஷத் துக்குள்ளே-யுத்தா ரமதாரச் சொன்ன னல்லா ஒஸ்ஸமாயி ஒத்தாரிக்கிலே. (14)

(ஞா-பொ-ரை):—மகத்தானது திருவடிவாய்எழுந்து நின்று தோன்றிக்கொண்டிருக்கும் கல்புக்குள்ளே அதில்ஒரு நுக்தா வானதுக்கு மேல்இருளும் ஒளிவுந்தோன்றும் அதற்குநடுவில் ஒருவாசல் உள்நாவுக்குள்ளே வெளியாகும் அதில்சந்திரகலையில் நின்று அமிர்தசஞ்சீவி இறங்கிவடியும்ஷெசொல்லியதிருவுக்குக்கரு வான ஷத்துக்குள்ளே முத்தியின்வடிவாகிய முகம்மதியாளாகிய வாலையானது தன்னைக்கலந்த விவேகவான்களுக்கு முத்திவரங் களைக்கொடுக்கும் என்று நமது ஆண்டவர்கள் ஸல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள் உபதேசித்தார்கள். எ - று.

ஒஸ்ஸமாயி ஒத் தாரிக்கிலே, யுவந்தல் லாசொன்ன னபித மக்கு, லெஸ்ஸத் துடன்மகு லாக்குகட்குள்; மேனிக்கலந்தொன்று பிருமினென இஸ்ஸாத் தொழுமுன்னே யொருஸா அத்த, திறைஞ்சி வெளியாக்கு மென்றே திறைன்-அச்சமி லாநாயன் றிருத் தூதனைரதுகொண்டிருந்தார்தஞ் சிபத்தினகே. (15)

(ஞா-பொ-ரை):—திருக்குர்ஆன் ஷரீபில் ஒஸ்ஸமாயி ஒத்தாரிக்கு என்றசூரத்தில் நபியவர்களுக்கு அல்லாகுத்தஆலா கட்டளையிட்டருளினான். எப்படியானால் ஓ என் ஹபீபே என்மக்லூக்காத்து கட்கிடையில் ஒன்றுபட்டுக்கலந்து. இரும்! இன்னும் இஷாவின் தொழுகையைத் தொழுகிறதற்கு முன்னதாக. இரண்டரை நாழிகைவரையிலும் நம்முடைய தியானம் என்கின்ற முஷாஹிதாவைத்தொழுது நினைவு கூரும்! என்று திருவுளம் சற்றினன் அவ்விதமே நபியவர்கள் ஷெ சிபத்தில் தரிபட்டிருந்தார்கள். (எ-று).

தன்னையறியாத நாளையிலே, தனர்ந்துகண்கெட்டகுருடரா
னப்பன்னு முஷாஹிதா வானதிலே பலரூபங்காணும்பரிசுகேளிர்-
அந்நோங்கனோர் யானைதனை, யாளுங் கண்ணிலாக்குருடர்கண்டு-
பின்னர் மொழிகின்ற பழங்கதைபோற் பேணித் தன்சூறத்
தாகுந்தானே (16)

(ஞா-பொ-ரை):—யாராயிருந்தாலும் சரியே எதுவரையிலும் ஒருவன் தன்னைப்பற்றி யாரென்று விசாரணை செய்து அறிந்து கொள்ளவில்லையோ அதுவரையிலும் கண்கெட்ட குருட்டுப்பயலாகத்தான் இருக்கிறான். அவன் எவ்வளவு கல்வி கேள்விகளைக் கற்றறிந்தபெரியமலிக்குல் உலமாவாக இருந்தாலுஞ்சரியே. காயம்பட்டணத்து மஹாத்மாவாகிய தைக்கா சாஹிபவர்கள் திருவாய் மலர்ந்து கூறியவாறு ஞானவான் என்பவனே ஞாயவான் ஆவான் அல்லாதவன் எவ்வளவு பெரிய கல்வி. அல்லது அமல் உள்ளவனானாலும் அவனடலங்கலும் அநியாயவான்கள்தான். ஏனென்றால் ஞானம் ஒருவனுக்கு உதயமானால்தான் தன் அசடான இருதயத்தில் வந்து, வேரூன்றிக்கிடந்த அகங்கார இருட்பிழம்பானது விலகி சாத்வீகம் என்கின்ற தெளிவான அறிவு சூரியன் பளிரென்று வெளிச்சங்கொடுக்கும் அப்பொழுதுதான் இந்த மாயவுலகத்தின் அந்தரங்கமான சூட்சியானது உள்ளங்கையில் வைத்த நெல்லிக்கனிபோல் தெரிந்து வளர்பிறைக்கு ஒளிவு நாளுக்குநாள் அதிகப்பட்டு வருவதுபோல் அல்லாவின் பிரதாரமான தஜல்லியாத்து சிறுகச்சிறுக வளர்ந்து வெளியாகி விடும் அப்

பேரிது மக்லூக்காத்துகளின் சுயராஜ்யத்தலைவனாக ஆகிவிடுகிறான் அக்ஷணமேஜீவ ஜந்துக்களின் பேரில் கருணையும் தயாவி சாலமும் உள்ளவனுகிய சதாநந்தியாகிவிடுவான் ஆதலினால் தான் றசூல் நாயகமவர்கள் தன்னையறிவது. பறுலு என்றும் அல்லாவை யறிவது சுன்னத்தென்றும் கதீது குதுஸியில் கட்டுரைத்தார்கள். இன்னும் தன்னை யறிந்திராத பகல் வேஷக்கார குருட்டு குருமார்கள். உபதேசிக்கின்ற பல திக்றுகளிலும் பலவிதமான முஷாஹிதாக்கள் நம்பிக்கையின் புண்யத்தால் வெளியாகிறது முண்டு. அந்த வெளியாகும் பல சூறத்துகளில் ஒருவன் தன்னை. அல்லது. பீரைக்கண்டேன் என்று சாதிக்கிற ரூபமானது. குருட்டு ஆண்டிமார்கள் நால்வர்போய் ஆனையைப்பார்த்து வந்து சொல்லிய பழங் கதையைப் போலாக இருக்கும். எ - று.

ஆகுமே காபக் கவுசுக்குமே, லானஸிதுறத்துல் முந்தஹாவு-மேகுமெளவதனுவாகிலா, யிலங்கி மிம்சுல்தான சிறுவின்மேற்-பாக முடினல்ல ஹலறத்திலே, பதிவாந் தலமேவு நடுவாகவே-மோக மெனும் ஹக்கன் சற்பனையா முடுகு மக்காமஹ்மூதாகுமே. (17)

(ஞா-பொ-ரை):—இதில் நல்ல காமிலானபீர்மார்களிடம் தவநிலையை ஒப்புக்கொண்டு அதன்படி நிஷ்டை ஸமாதி அமர்ந்த புண்ய புருஷாள்களுக்குள் வெளியாகும் முஷாஹிதாவில் அவன் தன் சூறத்தும் வெளியாகும் அதுதான் கன்ஜுல்மக்பியாவாக இருக்கும்,இன்னும் காப கௌவ்ஸைனி என்கின்ற புருவ வில்மத்தியில் வெளியாகும் சிதறத்துல் முன்தஹாவும் அவ்அதுனு என்னும் இருநேத்ர கரு நீலவட்டத்தின் நடுவில் சுல்தானான் நசீறு என்னும் தன்றப்புடைய தோத்ரமும் வெளியாகும் இந்த மக்காம்களில்வெளியாகும்படியான ஹலரத் ஒளிவைக்கலந்து எல்லாம் இல்லை. என்கிறலாமகான் என்னும் முத்லக்கில் ரஹித்துக் கொள்ளும் நடுமத்திதான் தன்னுசை என்னும் மக்காமன் மகுமூதாக இருக்கும் இதில் சுருக்கி முடித்திருக்கிறது. விபரம் காமில் பீர்மார்களின் சமுகத்தில் உசாவித்தெளிந்து கொள்ளவேண்டியது. ஷரீஅத்தின் மரியாதையைப் பேணிக்கொள்ளவேண்டியது

எந்த மக்காமிலும் இருக்கின்ற படியால் இந்த இடத்தில் பொருட் சூட்சியைப்பற்றி விஸ்தரிக்க எனக்கு பேனு நீளவில்லை, இது ஹக்கின் பெருமையாக இருக்கிறது. எ - று.

மக்காமன் மஹ்மூதென்னுந் தலத்தில், வழங்கு நூனுக்குள் வருவிபத்து-ஹக்காயிக் கெனும் நுகத் தாமூன்றுடல், காணுஞ் சுடர் மூன்று மொன்றுகவே-லிக்காவென் றுருமணிக் குள்ளிருந் தே, இலாஹ ுல் ஹக்கென்றுங் கற்பனையாம்-ஸக்ஃறத்தானே அல்லாசொன்னன், தருமாம் அல்ஹாக்குமுத் தக்காதிறில். (18)

(ஞா-பொ-ரை):—ஆனபோதேமகாமன்மகுமூதென்னும்ஸ்லத் தத்தில் வெளியாகக்கூடிய நூனுக்குள்ளே வருகின்ற விபத்தாசி றது. பாரதூரமான ஹக்காயிக்காக இருக்கும் இன்னும் அதா னது. நுக்தா. வாகிய. மூன்று விதமான ஸ்தூலசரீரமாக இருக் கும்.அந்த மூன்றுந்தோத்ரத்தில்முச்சுடராகப் பார்வைக்குகாணப் படும் ஒரு சுடராக வந்துபளீரென்று ஜொதிப்பிரகாசஞ் செய்யும் அதுவே (லிக்கா) என்று உணர்ந்துகொள். அதுதான்இலாஹ ுல் ஹக்கென்னும் முக்திவரங்கொடுக்கப் பெற்ற சகல கற்பனையும் பொதிந்ததாக இருக்கின்றது. அதுவே ஹாக்கனுகைஇருக்கும்இதை ப்பற்றி அல்லாகுத்தஆலா குர்ஆனில்"அல்ஹாக்குமுத்தக் காதிறு ஹத்தஸ ுறுத்து முல்மகாபிர்" என்ற சூறத்தில் திருவுளம் பற்றி யிருப்பதை நல்ல அகமியவான்களான தப்சீர்க்காரர் எழுதியதில் பார்த்து நோட்டமிட்டுக்கொள். எ - று.

மிசுக்கீனுவுநாட் பசித்திருந்த, வேளை யவனுக்கோர் காசு வந்து-பசிக்குப் புசிப்புவாங் கப்போகையிற்,பாரில் விழுங்காசைத் தேடும்போதி லசைத்தபுவிமணற்குள்ளிருந்துஅநந்தந்தங்கந்தான் கண்டதன்மேல்-யிசைக்கு முருகினைப் போலப்பாரு, மென்றே யறுஷேறு நபியோதினர். (19)

(ஞா-பொ-ரை):—யாதொருவன் மெய்ஞ்ஞான மென்ற மதிப் பற்ற அறிவான மாணிக்கத்தை எவ்வித ஆசையுடன் அறிந்து கொள்ளவேண்டுமானல் ஒரு பரதேசியான மிசிக்கீனவனுக்கு நான்கு நாள் பட்டினி கிடந்து வருந்துகிற வேளையில் ஒரு தங்கக்

காசு அகஸ்மத்தாகக்கிடைக்க அதையவன் பெருத்த ஆநந்தத்துடன் கொண்டு உணவுப் பொருள் வாங்கவேண்டி. பஜாருக்குப் போய்க் கொண்டிருக்கிற வழியில் அந்தத்தங்கக்காசுகைதவறிக் கீழேவிழுந்தவுடன் மனம் பதறி கீழேகிடக்கும் மணலை கிளைத்துத் தேடும்போது அந்தமணலுக்குள்ளிருந்து பல ஆயிரந்தங்கக் காசுகள் ஒன்றின்பின் ஒன்ருய் அடுக்கடுக்காய்க் கிடக்க எடுத்தபோது. அந்த ஏழை என்னவிதமான ஆநந்தம் அடைந்து அவைகளை எடுத்துமடியில் கட்டுவானே அவ்விதம் ஆநந்தக் குதூகலத்துடன் கிடைத்ததம்மா என்று இருதய அடக்கத்தில் வைத்துப் பொதிந்து கொள்ள வேண்டியது. என்றி எழுவானுஞ்சென்றேறி அறுஷில்மேவிய நமது ஆண்டவர்கள் நபிகள்சிரோரஞ்சித மஹோமகான் அவர்கள். திருவாய் வுதயஞ்லிசய்திருக்கின்ருர்கள். தங்சுகாசின் பேரில் உலகமுழுதும்கவிந்து நிற்பதால் அந்த மோகத்தைமஅரிபாவில் கவிந்தால்தான் அது வந்து சிக்கும் என்பது. நபியவர்களின் கருத்து என்று உணர்ந்தறியவேண்டியது. என்பதே.

கலிமா முதலிய காரணப்படலம்

பூரண மாயிற்று.

---

ஆகவே படலம் 1 இதிருப்பாடல்கள் 22

# தொழுகைப்படலம்

ஒரு நூற்றுப்பதி ஞல்ஹறுபு, முறைக்குங் கலிவிலே மாந்து கொண்டு, நரகே ழகின்றனை யெழுத்துமேழு, நாகுனைத் தான் பேர் நீங்கலாக-இருபோதிறக்குமே ழாயத்தூடே, யிசுமே ழுறும் பாத்திஹாவானதிற்-பிறகே பதினைன்குஷந்துமுண்டுபிசகர்மூன்று பங்காயோதுமே. (1)

(ஞா-பொ-ரை):—நூற்றுப்பதினைன்கு ஹர்பு என்ற குட்சம அட்சரங்களும் கலிமா பாத்திஹாவில் அறிந்து. நரகத்தின் தலைமைக்காரர்களாகியவர்கள் பேருக்கு எழுஹர்பும். நரகத்தின்

தலைமை ஷைத்தான்களின் அட்சரங்களாக இருக்கும். ஆனதால் அந்த எழு அட்சரங்கள் நீங்கலாக உறாஜ்றாஜமில் உடைய அந்த ரங்கமான ஆயத்தூடே இஸ்ம்கள் எழ் இருக்கின்றன. பாத்திஹா என்பதில் பதினன்குக்ஷத்துகளும் உண்டு. அதுகளை ஒன்றும்பிசகாமல் மூன்று பங்காக்கி. ஓதிவாசிலாத்தாக்கிக் கொண்டு வரவேண்டியத்து. எ-று.

தாயும் ஜீம்ஹேயும் ஸேயும்சீனும், லேயும் பேயிவை யெழுத்தேழென்றூர்-ஆயும் துலில்ஹர்பு ஹியவ்கனவி, மறியும் கனஸ்தவ லைபிஅலைக்-காயும் நரகேஹின் றலைமையான கடியஷைத் தான்கள் பேரெனவே-தூயவன் றாதராலநபி, சொன்னூரென வுலமாக்கள் சொன்னார். (2)

இன்னும் துலில் ஹர்பு ஹியல்கனவும் அறியவும். கனஸ்தவு லைபிஅலை. என்ற இந்த இஸ்முகள் வைலுன் என்றகொடிய நரகத்தின் தலைமைஷெய்த்தான்களின் இஸ்முகளாக இருக்கும் என்று துய்யவனான அல்லாவின் தானதிபதியானநமதாண்டவர்கள் திருவாய் வுதயமானூர்கள் என்று உலமாக்களான. இமாம்கள் சொன்னார்கள். எ-று.

இன்னம் பாத்திஹா வரலாறினை. யிசைக்கக் கேளுங்கள் தீனோர்களே -பன்னுமதிலுள்ள விபரங்களும், பண்பாரதிலுள்ள இசுமுகளும் பின்னுமிருக்கின்ற ஆயத்துவும், பேணியோதாதா லுறுமிடறு- மின்னு மிபாதத்துச் செய்வதுவு. மேவும் விசளங்கள் மிகுதமாமே. (3)

(ஞா-பொ-ரை):—இன்னமும் பாத்திஹாவைப்பற்றியவரலாறு கனைக். கீழேவரும்படி அறிய வேண்டியது. ஓ! தீனவர்களே ! அதிலுள்ள விபரங்களும், இன்னும் அதிலுண்டான இஸ்முகளும், அதிலுள்ள குர்ஆன் ஆயத்துகளும், பேணுதலுடன் அறிந்து ஓதித்தெழுகாததினலே வருகின்ற. தீங்குகளைச்சொல்ல முடியாது ஆனதினலே இந்த விதமான இபாதத்தினலே அநேக பறக்சத்து களும் தறஜாத்துகளும் கணக்கிலடங்காமல் உண்டாகும் எ-று.

பாத்திஹத்தொரு கித்தாபமென்றும், பலன்கண்டிடுமும்
மூல்கித்தபாமென்று-மேற்ற முளவும்மூல் குருஆனென்று, மிலங்
கும் சூறத்துர் றஹ்மானென்றும்-போற்றும் சூறத்துல்அஸாசி
யென்றும், புகழ்சேர் சூறத்து சிபாவென்றும்-சாற்றும் சௌபு
லம் தானியென்றும், சௌபுல் அசுமாநன் னபியோதினர். (4)

(ஞா-பொ-ரை):—ஆனதினாலேபாத்திஹாஎன்னும்அல்ஹம்து
சூறத்து. அதாகிறது ஒரு கிதாபாக இருக்கும். அதாகிறது. உம்
முல்கிதாபாக இருக்கும். என்னும் இன்னும் அதாகிறது உம்முல்
குர்ஆனக இருக்கும். இன்னும் அதாகிறது. சூறத்துர்றகுமானகை
இருக்கும் இன்னும் சூறத்துல் சுஜாஜியாக இருக்கும் சூறத்துஸ்
ஸிபாவாக இருக்கும் இன்னும் அதாகிறது தசௌ்புல்ஹம்தானி
யாக இருக்கும். என்று எங்கள் ஆண்டவர்கள் தசௌ்புல் அஸ்மா
என்னும் நபிகள் சிரோமணி ஸல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்
கள் திருவாய் அமிர்தம் வார்த்து அருளினார்கள். எ-று.

அடவா மதிலில்லா எழுத்திலேயே, யங்கி நரகத்தின் பேரு
மாகுங், கொடிய தபூறென்றும், ஜஹன்னமென்றுங், குல்தாவென்
றும் சுக்கூமா மென்றும-விடமாரும் சர்ப்பப் பல்கீமென்றும்,
வெம்பிபிருக்கின்ற பிருக்கியென்றும்-திடமாய் முசிலிம்க ளறிய
வெண்டிச்செம்மல் முஹம்மது நபியோதினர். (5)

(ஞா-பொ-ரை):—இன்னும்அந்த சூறத்தில்இருக்கின்றலில்லா
என்ற அரும்பதமானது. அக்னிமண்டலமாகிய. நரகத்தின்
பெயர்களாக இருக்கும். தபூறென்னும், ஜஹன்னம். என்றும்!
குல்தாவென்றும், ஸுக்குமா என்றும், இன்னும் கோடிய விஷங்
களை யுடைய பாம்பு தேள்களையுடைய நரகமாகிய பல்ஹீம் என்
றும் அக்னிஸ்வாலைகளையுடைய பிருக்கி யென்றும். நமது அன்பர்
களான முஸ்லிம்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு நமது ஆண்ட
வர்கள் நபிநாயகமவர்கள் எடுத்து வெளிப்படுத்தினார்கள் எ-று.

பாத்திஹாவிலே ழாயாத்தெனப், புகர்ந்த வலமாக்கள் மிகு
தமுண்டு-மாற்ற முரைக்கொண்ண மக்கிகளும்,வரிசை பெருகிய மத
னியரு-மேற்றமுள கூபா நகரினரு, மிருநான் காயத்தென் றிசைத்
தாரெனச்-சீர்த்திமிகவுள்ள கித்தாபுணர்ந்து, சிறந்த பெரியோர்க
ளுரைத்தனரே. (6)

(ஞா-பொ-ரை):—அல்ஹம்து சூறத்தில் ஏழு ஆயத்தென்று சொல்லிய உலமாக்கள் அநேகம் பேருண்டு அந்த உலமாக்களில் மக்கத்தையுடையவர்களும், மதீனத்தையுடையவர்களும், இன்னும் கூபாவிலுள்ளவர்களுமான சில மஹான்கள் மாத்திரம் எட்டு ஆயத்தென்று ஒருமித்துக் கூறினார்கள் அதே பிரகாரம் உலகத்தில் புகழ்ச்சி படைத்துள்ள இமாம்களும் அதேபிரகாரம் சொல்லியிருக்கின்றார்கள். எ-று,

ஆதம்நபியவர் சுபுஹொகுத்து,மாசறிபுறூஹீம்லுஹறொகுத்
தும்-நீதமுளநபி யூனூசசுறாம்-நிகழ்த்தும் வரிசையார் அசறொகுத்
தும், வேதமுனாரீசா மக்ரிபிலும், வீரநபிமூசாஇஷாவகுத்து-மேத
மணாதாத றஹ்மான்றனை, பிறைஞ்சி னரென்று ருலமாக்களே. (7)

(ஞா-பொ-ரை):—ஆதிகொண்டுபாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் சுபுஹு ஒகுத்தைத்தொழுகையாக நியமித்துக்கொண்டார்கள். நபிஇபுராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் லுஹறு ஒகுத்தை நியமித்தார்கள் மஹாநீதவானாகிய நபியூநுசு அலைஹிஸ்ஸலாம் நிகரில்லாத அசறு ஒகுத்தை நியமித்தார்கள். மஹானாகிய ஈஸாநபியவர்கள் மகரிபு ஒகுத்தை நியமித்துக்கொண்டார்கள். வரிசை பொருந்திய மூசா அலைஹிஸ்ஸலாமவர் இஷாஒகுத்தை நியமித்தார்கள் நியமித்து அதன்படி தொழுதுவந்தாகள் என்று உலகவாசிகளான உலமாக்களே அறிந்துகொள்ளுங்கள் எ-று.

இபுறூஹீம்நபி சபபினாலே, யியம்புந்தக்பீறுண்டாச்சுதென்
றும்-நவமாம்பிறைபொழு தவையைக்கண்டு,நவின்ற தொஜீஹத்த
தாகுமென்றும்-தவமா மலக்குக ளதாவோதினர், தனியே னபி
மூசாது ஆவோதினர்- புவியேழ்புகழ் சுலைமானபியும், போறறிப்
சிபிமில் முன் னோதினரே (8)

(ஞா-பொ-ரை):—இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சபபினால் அதாவது சூரியனையும் சந்திரனையுங்கண்டு நாயனென்றெண்ணியதினால் தக்பீறுஉண்டாயிற்று ஆனதினால் ஒஜீஹாவும் பறுலாயிற்றுஆனதினால் மலாயிக்கத்துகளும் அதாஓதினார்கள் மூசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்துஆவைத் தொழுகைப்பின் ஓதிவந்தார்கள் பிஸ்மில்லாஹிர்றகுமானிர்றஹீம் என்று ஓதி

வந்தபறக்கத்தைக்கொண்டு சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூலோகமுழுமையும் ஒருகுடைநிழலின்கீழ் வைத்து அரசுபுரிந் தார்கள். ஏ-று

பல்கீஸாநம்பி ராட்டியர்க்கும்,பறைந்து விடும்கத்தி லெழுதி னார்கள்-அல்ஹம்து லில்லா ஹீயதனை,ஆதநபி சொன்னார் சபபினை லே- சொல்ஹாறாத்துமாறாத்தானவர்,ஸுபுஹான றப்பியல்அலீ மெனவே-நல்குந்தவுலத்தம் மலக்கிருவா,நவின்றார் தசுபீஹில்லஃ லாவென்றே. (9)

(ஞா-பொ-ரை):— தவிரவும் ஷெ பிஸ்மில்லென்ற இஸ்முல் அஉலத்தை மஹாவீரபராக்ரம ராணியாகிய பல்கீஸ் அவர்களுக்கு சுலைமானபியவர்கள் எழுதிய ஸ்ரீ முகஸன்னதில் ஏழுதியபடல் விஷயங்களைக் குறிப்பிட்டனுப்பினார்கள் பதினாயிரம் சக்ரவர்த்தி களின் சிரங்களையறுத்தெறிந்த மஹாசூரியாகிய அந்த அம்மாள் ஷெ பிஸ்மில்லின்பரக்கத்தால் நபியவர்களுக்கு உடனேவசியப் பட்டார்கள். அன்றியும் பாவாஆதம் நபியவர்கள் தமது பாவவி மோசனத்தின் பொருட்டு சரந்தீபகல்பத்தில் நின்ற நிலையில் அல்ஹம்து லில்லாஹி என்றுமொழிந்தார்கள் உடனேபிழை பொறுக்கப்பட்டது ஹாரூத்து மாரூத்து என்றமலக்குகள் தங்கள் பஞ்சபாதகந் தீருதற்காக வேண்டி சுபுஹானறப்பில் அலீம்.என்று சொல்லினார்கள். உடனேபழய பிரகாரம்மலக்கா னியுடையதறஜாத்தில்திரும்பினார்கள். அவர்களே இந்த இஸ்மை தஸ்பீஹால் அஉலாஎன்று சொன்னார்கள். எ-று

அந்த ஹிய்யாத்தென்றோதுமஃ,தனைத்துமஹ்றமிதன்றோது கின்ற- முத்தி நபியுற்ற மிஃறாஜினில், முதலவன் வைத்த காணிக்கையாம்-சித்த மகிழ்கின்றசலாமானது,சிறப்பாகியமுஹம் மதர்க்கெனவே-சுத்த னுரைத்தது மாகுமிவை, கருதித் தொழு வோர்களிமாமாகுமே. (10)

(ஞா-பொ-ரை):—இன்னமும்அத்திஹிய்யாத்தென்கிறதானது. அனைத்தும்அஃருமதுடையகூறத்தில்நின்றபூரணமாகவேசமைந்திரு க்கின்றது.அனைதினமேலேதான்நபிகள்சிரோமணியவர்கள்சென்றமிஃ

ஜியின் இரவில் அல்லா அந்த அத்தஹிய்யாத்தை அவர்களுக்கு காணி க்கையாக வைத்தருளினான். இன்னுந்திட்டவட்டமாக ஸஹீ மாகிறது. மிஃறுஜியில் நமது நபியாவர்களுக்குத் தனியாக அல்லா குத்தஆலா சொல்லியதாக இருக்கும் இந்தவிபரங்களை நல்ல அறிந்து தொழுகிறவர்கள் தான் இமாமத்துச் செய்யமுடியும். மற்றவீர்களுக் குத்தகாதே தகாது. எ - று.

இந்த் தொழுகையில் நிலை அலிபா, மேகன் றுக்கூவுதான் ஹேயாமென்றும்- சந்தே கம்மிலா சுஜூது மீமாம், தாலத்த ஹிய்யாத் தாமெனவே-முந்தி யிருமூச்சைச் சொல்குவன்கேள் முதலா மலிபுதான் ஷீ அத்தென்றே, சிந்தை யுறவாடுமிருலா முடன், தெளிய் வொருஹேயு முஹப்பத்தாமே. (11)

(ஞா-பொ-வுரை) இப்படித் தொழுகிறதில் தக்பீரில் நிற்கின்றநிலை யானது அலிபாக இருக்கின்றது. றுக்ஊவாகிறது. ஹேஆக இருக் கின்றது. ஸுஜூது தாகிறது மீமாக இருக்கின்றது. அத்தஹிய்யாத் தாகிறது தாலாக இருக்கும் இந்தவண்மையில் முதல் மூகல் இர ண்டுஸ்வாசம் செய்கிறவிதமாவது தக்பீரில் நின்றநிலை யாகிய அலிபாகிறது ஷீ அத்தாக இருக்கும் அப்பால் வரக்கூடிய இரண்டு லாமும் ஹேயுங்கூடி முகம்மதாக இருக்கும். எ - று

வருமே னிலை அலிப் மரமதாக, வணங்கும் ஹேறுக்கூஃ மிருக மென்ற-சருமா மீம்சுஜூதார் வினமாம், தாங்குந்தாலத்த ஹிய் யாத் திருபிற்-பருமா மலையாகப் படைத்தவனைப், பாங்காயறி யுவே வணக்கமாச்சு-சுருமா முஹம்மது நபியிறசூல், சொன்ன ரதுகண்டு யானுஞ் சொன்னேன். (12)

(ஞா-பொ-ரை):—இன்னும் அதானது பலஜீவராசிகளின் வணக் கமாகவும் இருக்கும் அதன் விபரமாவது:—கேள் அந்த நிலை யான அலிபானது விருட்சசாலங்களின் வணக் கமாக இருக்கும். இன்னும் றுக்கூ ஆகிய ஹேயாகிறது. மிருக ஜாதிகளுடைய வணக்கமாக இருக்கும் இன்னும் ஸுஜூது ஆகிய மீம் ஆகிறது ஊர்வன வஸ்துக்களின் வணகக்மாக இருக்கும் இன் னும் அத்தஹிய்யாத்தில் இருக்கும். படியான தாலாகிறது அசி

லத்தின் அறைமுளைஸ் தம்பங்களான மலைகளுடைய வணக்கமாக இருக்கும். இந்த விதமான வணக்கத்தைக் கண்டு படைத்த நிர்விகார ஜோதியை உணர்ந்தறிந்து. தொழுகவேண்டும் அப்போது தான் ஜனனம்முத்தியடையும் என்று சுறுமாவட்டத்தையுடைய மகாமன்மகுமூதாகியநபிகள்பெருமானவர்கள் திருவாயுதயஞ்செய்தார்கள் ஆனதாலே நானும் சொல்லினேன் எ - று

நிலையாந் தக்குபீறு மகுஷ்றெனும், நிறைந்த றுக்கூவுதான் தராசுநாக்கு-மலையா ஸுஜூதுதான் ஹௌலல் கவுதர்மகிழ்ந்து மூழ்கியேமுஸ்தகீமில்-அலையா மத்தஹிய் யாத்திருப்பி, லானபால முந்தான் கடந்து-குலையாமற்சொர்க்கம் புகுதுவார்கள், குதுசிதனில் முஹம்மத ரோதினர். (13)

(ஞா-பொ-ரை-):—அவ்விதம் அறிகிறதில் இன்னொருவிதமும் அறிய வேண்டியது கடமையாக இருக்கும் அஃதெப்படி யென்றால். ஷெ நிலையாகிய அலிபானது மஹ்ஷராக இருக்கும்ஷெ றுக்கூவாகிறது: மீஸான் என்கின்ற திராசின் நாக்காக இருக்கும் இன்னும் ஷெ ஸுஜூதாகிறது. கௌலல் கௌதர் நதியாகவும் இருக்கும் ஆனதினாலே ஷெ நதியில் நீராடிக்கொண்டு சிறுத்துல் முஸ்தக்கீன் என்னும் அத்தஹிய்யாத்தில் ஷெபாலத்தையும் கடந்து தொழுசிறவர்கள் தான் சக்கற. சுவர்க்க லோகத்தின் சதா வாழ்வையுடைந்து கொள்வார்கள் என்று நபிமார்களின் நாயகமவர்கள் கூறினார்கள் எ - று.

முன்பு மணியாய்ப் பின்வருநபிக்கு, முதல்வ னுரைத்தநல் வரிசைகேளீர்-அன்ப தொகுத்தினிற் றெழும்பதவி, யைந்துநேரத்திலே யாக்கினன், இன்ப முறுநன்மை யொன்றுசெய்தா, லீரைந்தாசவே யெழுதச் செய்தான்-துன்பப் பவமொன்றுக் கொன்யல்லாது துணையர யெழுதிட வேண்டாமென்றான். (14)

(ஞா-பொ-ரை);—ஆதியின் தன்சமுகத்தில் நூறுல்முகம்மதியாவென்னும் ஒளிவாக இருந்து பின்னால் மாநுட அவதாரத்தில் உதயஞ்செய்த நமது நாயகம் அவர்களுக்கு அல்லாகுத்த ஆலா தன்சமுகத்தில் வைத்து மிஃறாஜியுடைய இரவையில் செய்த

வரிசையில் முக்கியமானதை நான் சொல்கிறேன். முஸ்லீம்களே! கேட்டருளுங்கள். அதாவது, ஐ. என் ஹபீபே மற்றநபிமார்களுக்கு ஐம்பது வேளைதொழுதால் கிடைக்கும் தவாபு உம்முடைய உம்மத்துகள் ஐந்துவேளையில் தொழுதவுடன் கிடைக்குமென்றான். இன்னமும் மனிதர்களுக்கிடையில் செய்யப்பட்ட நன்மையான கருமங்கள் ஒன்றுசெய்தாக்கால் அந்தவொன்றுக்கு பத்துநன்மையென்று எழுதச்செய்வேன் அதுபோல மனிதர்களுக்கிடையில் துன்பத்தை விளைக்காநின்ற தீமையானகருமம் ஒன்றுசெய்தால் அந்தவொன்றுக்கு ஒருதீமையே எழுதச்செய்வேன் என்றான் அல்லது எவ்விதத்திலும் அதிகப்படுத்தி யெழுதவேண்டாமென்றே தடுப்பேன் என்று உறுதிகூறினான். எ - று

உந்த மும்மத்தோர் பிழைகள்செய்தா, லுடனே யெழுதுவதில்லையென்றான்- பிந்த இருசாமம் பார்த்திருந்து, பேணியவர் தௌபாச்செய்திலையே,லந்தப் பவமொன்றுயெழுதப்படு, மவனுந் தௌபாச்செய்தாற் பொறுப்பேன்-சிந்தை நினைநன்மை யெழுதியுவன், செய்ய நினைபவமெழுதே னென்றான்-இந்தப்படியல்லா சொன்னமென, இறசூல் நபியுல்லா தாமோதினர். (15)

(ஞா-பொ-ரை):—இன்னும்தன்ஹபீபைநோக்கிஉமது உம்மத்களில்யாதொருவன் ஒரு பாவத்தைச் செய்தானாகில் உடனே அதை எழுத ஏவமாட்டேன். என்கிலும் அவன்தௌபாச் செய்து மீள்கின்றானா இல்லையா என்று. இரண்டு ஜாமம் வரையிலும் பொறுத்திருந்து அவன் தௌபாச் செய்யாத பட்சத்தில் ஒருபாவமே எழுதக்கட்டளை கொடுப்பேன் இதற்கிடையில் அந்த அடியான் தௌபாவை விஷயம் பண்ணிடுவானாகில் உடனே பொறுப்பேன், அதுபோல் ஒரு நன்மையை ஒரு அடியான் செய்யும்படி மனதில் நினைத்தால் உடனே அவன் செய்ததாக பத்து நன்மை எழுதிவைக்கும்படி ஆக்கியாபிப்பேன் என்று அல்லாகுத்தாஆலா திருவுளம் பற்றினான், என்று நமதாண்டவர்கள் திருவாயுபதஞ் செய்தருளினார்கள். எ - று.

செய்யும் பணிவிடை செய்தவனே, சிறந்த இபாதத்துப் பதி னேழையும்-பையப் பழகியேதொழுதுகொள்ளப்,பாங்காய் நாயக னபிக்குச் சொன்னன்-மையலாய்த் தொழ வேண்டுமென்று மகிழ் வரய்க்குறுஆனிற்சொன்னதாலே,வையம் புகழ்ஹபீபிறகூலுல்லா, வகுதத்தா ரதிலுள்ள வகையைக்கேளீர். (16)

(ஞர்-பொ-ரை):—அவ்விதஞ்செய்யப்படும் உமது உம்மத்துக ளில் நின்றும் ஒருவன் மேற்கூறியபடி ஐந்து நேரத்தொழுகைக ளிலும் மொத்தமாக வரக்கூடிய பதினேழு பறுலுகளையும் மஅ ரிபா ஒழுங்காக மனம் அசையாமல் வணங்கிவருகிறதற்கு நாளா வட்டத்தில் சிறிதுசிறிதாகப் பழக்கஞ்செய்து மனசித்தியடைந்து வரவேண்டியது என்று மிஃறுஜிராத்திரியில் கலந்தி ரகசியம் பன் னிராயிரம் திருவசனத்தில் கட்டளையிட்டருளினன். அதற்குஉதா ரணமாக குர்ஆன் ஷரீபிலும் முகம்மதே உமது உம்மத்துகளுக்கு என்னை மனம் நிறைந்த ஆசையுடன் வேறு எண்ணமற்று வணங் கிக்கொள்ளச் சொல்லும் என்று உத்திரவு பண்ணியிருக்கின்றன் ஆனதினலே நமது நாயகமவர்கள் நமக்கு ஹதீது குதுவஸியில் உபதேசித்தார்கள் இனிமேல் வரப்பட்ட பாராவில் அதன் செய் பாகப் பரிசுகளைப்பற்றி சொல்கிறேன் கேளுங்கள்! எ - று.

துய்ய நாயகனைந்துநேரந், தொழுகையைப் பறுலாக்கி விட் டான்-மெய்யாகச சொன்ன னதனையென்று, மேலா நபிசொன்ன ருண்மையாக, ஐயமறவாதிபஜுறா னதி லருளும் றக்அத் திரண்டா மென-எய்யும்மவல்ஹேற மீமெனவு, மிசைத்தா னஃதிரண்டெழுத் தானதே. (17)

(ஞா-பொ-ரை):— துப்புறவாகிய றகுமானென்றும் நாயன் முஸ்லிம்களுக்கு ஐந்து ஒக்துத் தொழுகையும் பறுலாக்கிவிட் டான் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலம் அவர்க ளுக்கு வெகு உண்மையான நிலமையிலெடுத்துப் போதித்தான் அதுகொண்டு நாயகமவர்கள் நமக்கு எடுத்துச் சொல்லி விட்டார் கள். அந்த ஐந்து தொழுகையில் முதலாவது பஜ்ருத் தொழுகை இரண்டு றக்ஆத்தும் அதில் முதல் றக்அத்தானது ஹேயென்றும்.

இரண்டாம் றக்ஆத்தானது. மீம் என்று. றசூலுல்லாவுக்கு அல்லா ரகசியம் வகுத்தான். எ-று.

லுஹறு றக் அத்து நான்காமதி, நுன்னிதமான நான்கெழுத் துப்-பகரும் அலிபுலா மீம்றேயென்று, படைத்தோன் குறுஆனிற் சொன்னனின்னும், வகிருமசறு நால்றக்அத்துக்கும், வகுத்தான் தேஹே எசீனெனவே-பகரு மக்ரிபில் அலிபுலாமீ, மோதினு னல்லா வுறுதியாக. (18)

(ஞா-பொ-ரை):—அப்பால் லுஹறுத்தொழுகையில்உள்ள நா ன்கு றக்ஆத்தும் நான்குரகசிய அட்சரமாக இருக்கின்றனவிவரம் முதலாவது அலிபு. இரண்டாவது லாம். மூன்றாவது. மீம் நான். காவது. றேய் என்றும். அல்லா குர்ஆனில் கட்டுரைத்திட்டான் பாத்தின் மஅனாவில்கண்டு கொள்ளவேண்டியது. இன்னும் அச றுத்தொழுகையின் கண் உள்ள நான்கு பறுலும்வேறு நான்கு அட்சரங்களாக இருக்கின்றன; அவைகளுக்கு விபரம் முதலா வது தேய் இரண்டாவது. ஹேய். மூன்றாவது. எய். நான்காவது. ஸீன். ஆகநான்குமாக இருக்கின்றன. இன்னும் மக்றிபுத்தொழு கையில் மூன்று பற்லும் ஒன்று அலிபு. இன்னொன்று லாம் மற் றொன்று மீம். ஆக இருக்கும் என்று அல்லா சொல்லினன்.எ-று.

நன்றி ஷாவுக்கு நால்றக்ஆக், நாட்டினு னல்லா எழுத்துநா லும்- வென்றி பெறச்சொன்னு னிப்படியே, வேண்டும் பதினேழு எழுத்தானதும்-ஒன்று மறியாமல் வணங்கிறதை, ஒருவ னிபா தத்தே யில்லையென்றான்-பண்டு பயஹாம்பர் மயிலாகவே, பணி ந்து ஸுஜூதிட்டார் பண்பாகவே. (19)

(ஞா-ரை):—இன்னமும் இஷாத்தொழுகையில் வரக்கூடிய பறுலு நான்குக்கும் முதலாவது அந்த மீமில் ஒன்று லாமில் ஒன்று. ஹேயில் ஒன்று றேயில் ஒன்றாக இருக்கும். இந்தப்படி யறிந்து பதினேழுபறுலையும் தொழுது வரவேண்டும். அன்றி இந் தவிபரம் அறியாமல் வணங்குபவர்களுக்கு ஒருதவமும் கைக்கூடி வராது. என்று அல்லா நமது நாயகமவர்கள் மயிலாக இருந்த

அவதாரகாலத்தில் அந்த மயிலுக்கு எடுத்துப் போதித்தான். மயில் அப்படியே அட்சரங்களை யறிந்து தஸ்பீஹுடன்தொழுது வந்தது. இதுதான் கல்குகளுக்குசரியூான இபாதத்தாக இருக்கும்.

கூறும் பதினேழு றக்அத்தையும், கூவி வணங்கினர் வலம்பு ரிக்குள்-ளூறுமுத்தாக இருந்தநாளி, லுடையோன் பணிவிடை யிபாதத்தாச்சு,மீறு மைந்தான நேரமென்ன மிகுந்தகாபுஹே-ஏ ஐன்ஸாது, வாரிங் கிஃதெல்லரிந் தொழுகையென்றே, வைத்தான் றொழுகையில் மணிமந்திரம். (20)

(ஞா-ரை):—நபிநாயகம் முத்தாயிருந்த யுஹத்தில் இந்தப் படியே பதினேழு றக்ஆத்தையும் வலம்புரிச்சங்குக்குள் தரிபட்ட வர்களாக. ஷை. உருவுடன் ஜெபித்து. இபாதத்துச் செய்து வந்தார்கள். ஷை அந்த ஐந்து நேரத்தின் தொழுகைக் கும் அட்சரங்களானது. காபு. ஹே. ஏ. ஐன்சாது ஆக இவைக ளாக இருக்கும். இந்த மணி மந்திர அட்சரங்களைக் கொண்டுதான் தொழுகையில் பிரம்மதத்வம் ஏற்படுகிறது. எ-று.

கருத்து.

அட்சரங்களை உச்சரித்த விபரம்,ஒருவித ஞானமுழக்கம் என்றும் அந்தமுழக்கத்தின் தாற்பரியமும். ஒசையும் காமிலானபீரிடம் கேட்கவேண்டும் அவ்விதம் யாரும் உச்சரித்தவுடன் சரீரம் மயில் ரூபமாகத்திரும்பும் என்று இன்ஸான்காமில், பாருஸுவாது என்னும் ஞானகிரந்தங்கள்வற்புறுத்துகின்றன ஆனதாலேதான் அந்தஅமல் முத்தில்திரும்பிய அவதாரகாலத்தில் பரிபூரண வடிவில் வந்து நின்று திருமணியாயிற்று.இந்தத்திருமணியின் தறஜாக்களை. பெரிய ஞானியார் அவர்களின் திருமணிப்பதிகத்தில் ஊன்றியறிய வேண்டியது. இன்னும் ஐந்து வேளைத்தொழுகையும் மொத்த மாக அல்லாசொன்ன;விபரத்தின். அட்சரங்களான ஷை மணிமந் திர அட்சராதிகளைப்பற்றிரஹஸியாரஹஸியம்பேசுவேண்டியதற் கென்றே தன்ஹபீபை மிஃரு ஜிராத்ரி அறுவில் அழைத்து முத் ராங்களு செய்வித்தான்.

யாரு மொருநாளும் பயப்பிடாமற், பாடியடியார்செய் பிழை போகவே-ஆறு நூறுன, காரியத்தை, அல்லா தான்சொன்னன்

குறுஆனிலே-ஆருமிவ்வகை யறியர்விட்டா,லல்லா தான்சொன்னு னரகமென்றே- ஆருமிவ்வகை யறிந்துகொண்டா, லல்லாதான் சொன்னுன் சுவர்க்கமென்றே- (21)

(ஞா-ரை):—பாருங்கள் மூஸ்லிம்களே! ஒருநாளும் பயப் டாமல் மனிதர்கள் செய்கிறபாவங்கள் அழியும்படியாக ஆறு நூறுகாரியங்களான நல் அமல்களைப்பற்றி அல்லாகுர்ஆனில் திரு வுளம்பற்றினுன். ஆனதினுலே மனிதர்களில் இந்த விபரங்களை யறிந்து செய்யாதவர்களுக் கெல்லாம் நரகமே குடியிருப்பாக இருக்குமென்று குர்ஆனில் அல்லாதிட்ட வட்டமாக சொல்லியி ருக்கின்றுன் யாராயிருந்தாலுஞ் சரியே இந்த விபரங்களையறிந்து கொண்டார்களாகில் அவர்கள் தங்குந்தானமானது. சுதம்பவா சனைகளையுடைய சுவர்க்கலோகமாக இருக்கும். எ-று.

நிலைதான் அலிபாச்சு றுக்கூஆனது, நிலைபட்டால் றுககூஃ ஹேயாச்சுது-உலையா மீமாச்சு சுஜூதானது, முற்ற தாலாச்சு இருத்திதாலே-கலையா தருமதுதானெழுந்து, காணிக்கை யாச்சு ஹக்குக்காகத, தலையை யறியாமல் வணங்கினுக்காற், றுனேன் கபூலல்லவென வோதினுன். (22)

(ஞா-ரை):—ஆனதினுலே அந்த பரமஞானமாகிய தொழு கையில் தக்பீர் நிலையானது. அலிபாகஆய்விட்டது. றுக்உ ஆனது ஹேபாய் விட்டது, சுஜூதானது. மீமாய்விட்டது. இருப்புடன் அடங்கலும் தாலாய்விட்டது; இவ்வாருக தொழுகையின் தாற் பரியமாவது, எல்லாஞ்சேர்ந்து அகுமது என்ற கோலத்துடன் நிரம்பியிருக்கிறது ஆனதினுல் அல்லாறசூலுல்லாவுக்கு மிஃருஜி யில் காணிக்கையாகவைத்தது அகுமதென்கிற தொழுகையாக இருக்கும் தொழுகிறவன் யாரும் அத்தொழுகையின் தலையை அறியாமல் ஒடியோடி அமல் செய்வானுகில் அது ஒன்றும் றகு மானிடம் கபுல் செய்யமாட்டாது. அல்லாகுத்தஆலாவின் சொல் ஒன்றிருக்க. மனிதர் ஒன்று செய்தால் அல்லது வயிற்றுத்துருத் தியை வளர்க்க வேண்டிபகல் வேஷம் போட்டுத்திரிகின்றபடிசத புண்யவான்களின் குருட்டு உபதேசங்களைக்கேட்டு கள்ளத்தொ ழுகைதொழுதால் அது ஒன்றும் ஒருவன் கட்டைக்குப்பலன் தர

வேமாட்டாது இப்படியே அல்லாவும் குர்ஆனில் வெட்டவெளிச் சுஞ்செய்கிறுன். எ-று.

ஆகையா லைந்து நோத்தையு, மறிந்து கலாவிடா மற்றெழு தே-யேக னேவலை யெடுத்தவனு,யிசைத்தத விர்தலை யகற்றிவைத் தாத்-தேக வுறுப்பாலுங் கருத்தினுலுஞ், செய்யும் பாவத்தின் ஞெடாறுக்க-வாகு பெறுந்தெளபாவுடனே நல்ல, வாழ்த்து மவுத் துன்னி நடப்பீர்களே. (23)

(ஞா-ரை):—ஆகையினுலே ஐந்து நேரத்தையும் இவ்விதமாக அறிந்து. கலாவிடாமல் தொழுது. ஏகபெரிய றப்புடைய ஏவலை யெடுத்து நடந்தவனுகவே ஆண்டவன் வேண்டாமென்று தடுத்த வில்கலை தவிர்த்துவிட்டு திரேகத்தின் அவயவங்களினு லும், இருதய ஊசாட்டங்களாலும், அல்லாவின் கட்டளையான நற்செயல்களிலேயே நடந்து பாவத்தின் அழுக்கான துடக்கை யறுத்து. எந்த நேரமும் தெளபா என்னும் பிழைபொறுக்குதலை வரியினுலும் மனலினுலும் தேடித்தேடி நிர்த்தோஷவாளர்களாக நடந்துகொள்வீர்களாக. எ-று.

உனிதா கியதறா துஸ்ஸலா த்தி,னிசைத்த விபரத்தின் முறை யின்படி-நினைவு தனிலொன்று மொழியிலைந்தும், நெறியாம் செய லினிற் பதின்மூன்றுமெய்க்-கனதிபெறுகின்ற மூஷாஹிதாவுங் கத் தன்றெழுகையில் மறக்காமலல-வினவ லுடனன்றுய்த் தொழுது கொள்ள, விதியா யிருக்குமென் றுரைத்தனரே. (24

(ஞா-ரை):—கல்குகளுக்கு இருதய இன்பத்தைத் தராநின்ற ஸலவாத்தென்னும் தருதை நியமித்திருக்கும் முறைமையின்படி. நினைவுதனில் வைத்து ஆசையுடன் பாராட்டி அதில் ஒன்றும். வாயால் மொழிகின்ற மொழிச்சலில் ஐந்தும் செய்கில் பதிமூன் றும் கருமங்களாகக்கொண்டு. மெய்யான தொழுகையாகிய முஷா ஹிதாவை அல்லாகுத்த ஆலாவைத் தொழுவுந் தொழுகையில் இருதயத்தில் மறந்திடாயல் ஒரேகதிர்முனையைப் போல்நினைவை நிறுத்திதொழுதுகொள்ள முஸ்லிமான வர்கள் எல்லார் பேரிலும் கடமையாகயிருக்குமென்று நமதுநபிகள் சிரோரஞ்சிதம் கட்டளை யிட்டருளினுர்கள். எ-று.

அல்ஹம் தஃதைந்து ஹறுபானதி,லமைந்தலாம்வந்த வாறு கேளீர்-நல்ல பதினைறு ஹறுபானது, நாட்டு முறமையில் கிண்றொளிவாம்-இல்மந்த கிந்தீல் லாமுங் கூட்டி, யிலங்கு முஹம்மதும அல்ஹம்தான-சொல்லுந்த ஆதம் சூறத்திலே, தொகுத்தே யறியுங் கா ளுலமாக்களே. (25)

ஞானவுரை:— ஐமுஸ்லிம்களே, அல்லாகுத்தஆலாவின் திருக்கலாமில் முதன்மையான அல்ஹம்து என்ற ஐந்துஅட்சரத்தில் (லாம்) என்றஅட்சரமானது வந்தவரலாறு என்னவென்றால்:— மேலேசொல்லிய பதினைறு இல்முகளும் பதினைறு அட்சரங்களாகிறதில் மொத்தமும் நூறுல்முகம்மதியாவாகஇருக்கும் அல்லா தன்னுடைய அறுஷியிற் கொழுவியிருந்த கிந்தீல் என்னும் பரஞ்ஜோதிதீபமானது. லாமாக ஜோலித்தெழுந்தது தீபத்தின் ஒளிவானது. முகம்மதிய்யாவாகவும். தீபத்தின் உருவமானது. அஹமதாகவும், ஆகஎல்லாங்கூடி ஆதமுண்டிய சூறத்தாகவும். உண்டாயிற்று.இவ்விதமாக மெய்ஞ்ஞானவரம்பில் அந்தஅல்ஹம்தை யறிந்து வணங்குபவர்களைத்தான் ஜனங்கள் உலமாக்கள்என்று நம்பவேண்டும் அல்லாதவன்கள் எவ்வளவுபெரியதலைப்பாகையும் ஆள்முழங்கி ஜூப்பாவும் போட்டு பெரியபள்ளிவாசல் கபீஸ்மாதிரி தாடியும் வளர்த்து வந்தாலும் அவன்களைதிட்டமாக லஅனத்துல்லா என்று எண்ணிக்கொண்டு வாசலில் ஏறவிடாமல் விரட்டிவிட்டு மறுவேலைபார்க்க வேண்டும். எ-று.

அலிபு மண்ணுகும் லாம்தண்ணீராம். ஆன ஹேகாற்று மீமக்கினி-மெலியா தால்வெளி யொன்றுகவே, மேவும் அல்ஹம்தினைந் தெழுத்து, மொலியாம் ஆதமி கோலத்திலே, யுவந்து முஹம்மது மவுஜூதாகக்-கலிமாப் பொருளினை யறியவேண்டிக், காணப் படு லாகும் சுன்னத்திலே. (26)

ஞானவுரை:— ஒ! உலமாக்களே! இதோ கேளுங்கள் அல்ஹம்து என்ற பஞ்சாட் சரங்களின் உருவவிபரம் தெரிவிக்கப்படுகிறது. உண தார்ந்கொள்வீர்களாக அதாவது; அலிபானது. மண்ணாக இருக்கும்.லாம் ஆனது. தண்ணீராக இருக்கும் ஹேயானது. காற்றாக இருக்கும். மீமானது அக்கினியாக இருக்கும்.

தாலானது. ஆகாயமாக இருக்கும். இந்த ஐந்து அனுசிறுதளுங் கூடி. அல்ஹம்து என்று சூத்ரமாயினது அதானது ஆதமுடைய கோலத்தில் வைத்துப் பொதிந்துஇன்னும்அத்துடன் முகம்மதியா என்னும் ஒளிவை மவுஜூதொன் றஹூல் குதுஸியாகவும் உள்ள டைச்சு இவைகளை யெல்லாம சேர்த்து கலிமாவை ஸ்திரமான அரைமுளையாகவைத்து. சரீரத்தை வெளியாக்கப்பட்டது. ஆன தாலேதான் தன் உடலையறிவது. இன்ஸான்கள் பேரில் பறுலாக அதாவது. முக்ய கடமையாகவும் தன்றப்பையறிவது. சுன்னத் தாகவும் கட்டளையானது மிஃறுஜிராத்திரஹஸியஸம் பாஷையில் அருளிச் செய்யப்பட்டது. எ-று.

தாலாம் கால்ரண்டுங் கண்ணுனதுந், தாறு ஹேமீமும் காதுக் குள்ளே-மாலா மூச்சிலே நாவலிபு, மருவித் தானைந்தும் ஜெம்ஹா கிறற்-கோலா கமாலன ஆதமிய்யிற், கோமான் கூறத்த தான திலே-ஆகு மதில்மேவு மஹ்றமதிய்யா, அடங்க லாகும்அல் ஹம்து வில்லா. (27)

ஞா-ரை அல்ஹம்து என்ற பட்சாட்சரமானது ஆதமுடைய சொரூபத்தில் எப்படிசமைந்ததென்று. சிலஜனங்களுக்கு சந்தே ஹம்வரக்கூடு மென்றதனுலே மஹாத்மா ஆசிரிய ரவர்கள்சொல்கி ருர்கள் தாலால்கால் இரண்டும், கண் இரண்டும். ஹேமீம் இவற்று ல்காது இரண்டும் மூக்குஸ்வாஸம் முதலியஇரசிய உள்ளுறுப்பு களும். இன்னும் அலிபால் நாவு என்று இவ்வைந்து ஹறுபுகளால் உயர்அட்சரங்களான இருபத்தொன்பதும் உதயமாயிற்று. எ-று

இருதயத்தில்உதயமாயினுல் உடனே, ஆதமியான தன்சரீரமா னது அப்பவே அல்லாவின் சூரத்தாக விளங்கிவிடும் அப்போது தன்னை அறிந்து கொண்டமஹான் பார்க்கப்பட்ட எந்த ஐந்துவும் முகம்மதிய்யாவின் வடிவமாகத் தோற்றரவாகும். இதுதான் அல் ஹம்தாக இருக்கும் இந்த மஅரிபாவாகிய மாணிக்கப் புதையலா னது அல்ஹம்து என்றதில் அடங்கிவிட்டசங்கதி மெய்யறிவில் லாத பொய்யறிவாளர் களுக்கெல்லாம் தெரிந்துவிடுமா இதற்குத் தான் குதாக்கேஸமஸ்து குதாக்கே மஅலூம், அதாவது அல் லாஉண்டிய சலாமின் அர்த்தமானது அல்லாவுக்கே தெரியும் என்

றூர்கள், இதைமெய்ஞ்ஞானிகள் உள்ளுக்குள் உணர்ச்சி செய்து கொண்டு போகிறதுதான் கனம் அல்லதுவாய்விட்டு மொழிந் தால்கனதிக்குறைவுஏற்படும் எ-று

தன்னை யறியமுன் காபிரென்றூர், தலைவ னறிந்தபின்னிசிலா மென்றூர்-பின்னை யறிகுவ தறிவில்லையாற், பேசும் கமலக் கண் ணுடியூடே-மன்னன் றஹ்மத்து ஹலறத்திலே, மணியாம் தௌசி னில் வீற்றிருக்கு-மன்னை பிதாவாச் முன்னுனவ, ஞதி அல்ஹம்து லில்லாஹியே. (28)

ஞானவுரை:— தன்னையறிவதற்கு முன்னதாக ஒருவன் எவனுனும் சரியே அவன்திட்டமாக காபிராகயிருக்கிறுன் ஆனுல்இஸ்லாமுடைய பதவிஎப்போது வருமென்றுலோ அவன் தன்றப்புடையதானஅசலை அறிந்தால்தான் அதுதிட்டமாக உண் டாகும் இஸ்லாம்என்பது வெளிச்சமான பாதையாக இருக்கும் என்று நமது மஹான் ஆகிய்நபிகள் சிரோமணியவர்கள் வற்புறு த்தியிருக்கின்றூர்கள் அதன்பின்னுல் அறிவைப்பற்றியறிந்து கொள்ளவேண்டியது அவ்விதம் அறிவதில் அதுஒருகண்ணுடி போல் நினைவுஒன்றுகக் கலந்தபோது அல்லாவுடைய றகுமத் தானது. அவனுடைய சமுகத்திலே வந்து விளையாடி இரத்ன மாணிக்ககொலுவாகிய நேத்ரகபாலத்திலே உள்ளபீடத்தில் அதா வது சுறுஷேமுஅல்லாவில் வீற்றிருக்கின்ற கற்பூறதீபம் போன்ற ஒருஜோதியைக்காணப்படும் அதுவே நமது. தசப்பன் தாய். நாம் என்கின்ற. முச்சுடர் வடிவுஆதியாக இருக்கும். இன்னும் அது தான் அல்ஹம்துலில்லாஹிறப்பில்ஆலமீன். என்னும் பரஞ்சோதி யாக இருக்கும். எ-று

தொழுகைப்படலம் முற்றிற்று,

ஆகப் படலம் 2-க்குத் திருக்கவிதை 50.

# அல்ஹம்துப் படலம்.

கலிச்சந்த விருத்தம்.

மேலெழுத்துக ளாலும் வியந்து மயங்கியே
யாவி தொந்தி யுதிரத் தடைக்கிமை தானிற்போய்
மூளை முந்திசின் காவல் வலியின் முயங்கியே
அவூது மில்லாஹிமி னஷ்ஷைத்தா னிர்றஜீம். (1)

(ஞா-பொ-ரை):—மேல்சொல்லிய பஞ்சாட்சர கோலங்களால் உண்டாக்கிய இந்த மயாமான சரீரத்தின் கண்ணே உயிர் என்கிற பரமாத்மாவை தொப்பூள்வழியாக விட்டு அமைத்து, மைதானமென்கிற கபாலத்தின் மணிமாடமாகிய நேத்ரவெளியில் வெளிச்சஞ்செய்து மற்றயபூதிய நப்சுகளையெல்லாம் தன் அதிகாரத்தின் கீழ்வைத்து நடத்தா நின்ற வல்லமையுடையவனே! உன்னைக் கொண்டும் காவல் தேடுகிறேன் கொடுமையான ஷெய்த்தானுடைய தீங்கை விட்டும விலகிக்கொள்ளும்பொருட்டு. எ-று.

வேறு.

வசையுள்ளா ரைவராவர் வாய்வரா தான்கூர்
விசையில்லாத வின்பகுதி மேவாக ரானபேர்
நிசமில்லார் செய்யமறை நேர்மை நேர்தலே
பிசுமில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீ மானவா. (2)

(ஞா-பொ-ரை):—ஞான மென்ற மெய்யறிவை யுணர்ந்து கொள்ள திறம்படையாதவர்களை உன் விண்ணுகத்தின் ரத்னப் பதியாகிய சுவர்க்கலோகத்தில் வர இடங்கொடுப்பதே இல்லையென்று நீ சொல்லிய உன் திருவசனுமிர்தக் கஞ்சியமானதிர் குர்ஆன்ஷரீபை நிசமாக விசுவதித்தும் அதிலுள்ள உண்மைப் பயனை நல்லதீர விஜாரணைபண்ணி யுணர்ந்து கொள்ளாத காலத்திலன்றி மெய்யை உண்டுபண்ணி வைப்பவனே! இதோஉன் திருநாமமந்திரமாகிய இஸ்முல் அஉலத்தை நான் துவக்கஞ் செய் கின்றேன்உன் காருண்யம் தயைமுதலிய வைகளைப் பெறும்படியாக. எ-று

வேறு

இல்லில்நின் றிறையிசைக ளெங்குமாகிய
சொல்லின்று நற்சுரூப தோற்றமெங்கு மாகவும்
வல்லநாய கன்னியென்று வாழ்த்துஞ்சொல்
அல்ஹம்து லில்லாகி றப்பில் ஆலமீன். (3)

(ஞா-பொ-ரை:)-கலிமாவில்இல்என்ற மணிமந்திரத்தில் புதைந்ததான அஸல்றப்பானது. எல்லாஜீவகோடிகளிலும் ஒருநூல் ஆகிய ஹூ என்றதை ஜல்லியாத்தின் தோற்றமானது. படையுண்டெழுந்தவஸ்தடங்கலுமாக உலகத்தில் பரவி. அந்தரங்கத்தில் அந்தறாஹானது.கடைசியில் ஒருமுகவரை கிருத கன்னிகையின் ஸ்ரூபத்தில் வெளியாகும்கூதுறத்து அல்ஹம்து லில்லாஹு என்ற அட்சரங்களின் இரகசியமாகவேகாணப்படுகின்றது. எ-று.

வேறு

சிற்றைத்தெள்ளும் செகப்புங் கறுப்புமாய்
துர்றத்தென் றேமறு அத்ததின் சூத்திரம்
பிர்றத்தேவர வேண்டுமவ செய்குவாய்
அர்றஹ் மானிர்ற ஹீமெனதானவா. (4)

(ஞானவுரை):—சிர்றென்ற மக்பியானதுமுத்லக்கானபோது அதில்மீதமிருக்கின்றது. சிகப்புஒன்று கருப்பொன்றுதான். சிகப்பு. தண்ணீர், கறுப்பு. நெருப்பு. இதன்கருத்து. றாஹூ. றாஹானி. சிர்று. என்பது. நீனேவென்கின்ற ஆகாயமாக இருக்கும்: இந்த மகாமில் உணர்ச்சி பண்ணுகிறவன். அதுவரையிலும் நடைபழகிவனுகை இருந்தால் மாத்திரமன்றி காரிய மின்னதென்று அறிந்துகொள்ள சாத்தியப்படாது. ஆனதினலே அந்த. சூத்ர மாகிய. ரகசியத்தை சந்தேஹ மறவிளக்கியருள் செய்வாய் அற்றகுமானிர்றஹீம் என்னும் பேரின்பக்கிருபை செய்பவனே. எ-று

வேறு.

தாலில் நின்று தயவெங்கு மேவிய
ஹாலி லுன்னைக்கருதி வணங்கிட

மேனு முன்னிதம் வேண்டுதல் செய்குவாய்
மாலிக் கியவு மித்தீனென் மன்னவா. (5)

(ஞா-பொ-ரை):— தாலகிய பூஞ்சாட்சர நேத்ரமத்தியில் நின்று இலங்குகின்ற. தயாபர ஆத்மாவாகிய தலைமைத்தனத்துடைய வஸ்த்தே! பூலோகமாயபந்தகங்களை நீக்கிய ஹாலில் நான் உன்னை தியானஞ்செய்யும்பொருட்டு மென்மேலும் நின் அனுக்ரஹத்தை உபகாரமாகச் செய்தருள்வாயாக. மாலிக்கு ஏவ்மித்தீன் என்னும் மன்னவனே. எ-று

வேறு.

ஷிய்யாக்க நிசப்பட்டதே மெய்யாகி வைத்துநீ
நிய்யாக யுவும் போடிவை நீய்யாக்கி விட்டதால்
குய்யாக்க நகைப்பற்றதைக் கைய்யாக முத்திதர
இய்யாக்க நஃபுதுவ இய்யாக்க நஸ்தஈனு. (6)

(ஞா-பொ-ரை):—. எவ்வளவுகல்விசாஸ்திரியாக இருந்தபோதைக்கும் இருதயசாட்சியாக எதுஉண்மை வஸ்தென்று தோன்றுகின்றதோ அதை முடிவான ஹக்கென்று ஈமானில் உறுதிசாதித்து. அதையேதியானமாகவும்நினைவுடன் நாட்டத்தில் வைத்துப் பாராட்டிப் பழகிக் கொண்டு வரவரநீ யாகவே விரவினவுடனேமற்றபலஉற்பணத்தில் சம்பாதித்துஅலங்கோலப்படும்பூதநப்சுகளை யெல்லாம் பரிசுத்தஞ்செய்து முத்திதரப்பட்டவனே, நீயே. ஈய்யாக்க நஉபுது ஒ இய்யாக் நஸ்த்தஇன் என்ற பெரும் பாக்கியத்தையும் உடையவன் எ-று

வேறு.

அஹதில் நின்று மரும்பெருள் மேலவன்
பகுத்து வந்து பரிமள வாசமாய்
வகுத்துயர்ந்த வகுப்புக்கு மாக்கினன்
இகுதி நஸ்ஸிருத் தல்முஸ்த கீமென்றே. (7)

ஞானபொழிப்புரை:— இன்னும் இஹ்தி நஸ்ஸிருந்தால் முஸ்தகீம் என்ற ஆயத்தின் பொருளின்படி அஹதியத்தில் நின்றும் தன்நாட்டத்தை பலவேறு சொரூபப்படுத்தி எங்கும் தன்

மயமான வாசத்தைக் கமழவைத்து அப்பால்பலபல வகைப்பட்ட பிரிவுகளான ஜீவகோடிகளாக தன் உஜூதை பின்னிக் கொண்டு விட்டான். எ-று.

வேறு

உருதுல கோடு மெவையு மமைத்தவா
நருதன மென்னுநடுவிலெழுந்தவா
புரதன மேன்மைப் புகழ்கள் படைத்தவா
ஷிருத்தல்ல தீன அன்அம்த அலைஹிம்நீ. (8)

ஞானபொழிப்புரை:— இன்னும் சிருத்தல்லதீன அன்அம்த என்றஆயத்தின் பொருளின்படி தன்வல்லமையான நாட்டத்தைக் கொண்டு உலககோடிகளை யெல்லாம் உண்டுபண்ணி அப்படியுண்டுபண்ணிய வஸ்துகள் அடங்கலிலும் நடுமத்திபஸ் தானத்தில் நின்றுகொண்டிருக்கின்றாய்? நீயாகிறவன் பழயகாலந்தொடுத்து உதயமாய்விட்டாய் இன்னும் காலமே நீயென்ற பெரியபுகழ் உடனே சிருஷ்டிகளை நடத்திக்கொண்டுவருகிறாய்?. எ-று.

தக்கவல்பமானவர்கள் தன்னில்லையைவிட்டுனையுந் தானுங்காத் தக்கமறை யோரவர்கள் தன்னிலையிலுற்றனையுமோம்பலாக்க மிக்க மஃ ஞவரன சொற்குவுமுவந்தபடி மேன்மைக் கோர்த்த-இக்கெனுஞ்சொல்கொய்ரில்மகுலூபிஅலைஹிம்மென இசைத்தல்லீயே. (9)

ஞானபொழிப்புரை:— இன்னும் மெய்ஞ்ஞானமஹான்களான தக்கன பெரியமேதாவிகள் உன்னைக்காண்கும்பொருட்டு அதே கவலையாக. தன்சிபத்துகளான உலகமாய்கை களையெல்லாம் வெட்டவெளிமயமாக விட்டொழித்து. இஷ்குபூண்டுஅலைவார்கள் அதல்லாதார். உன்சொல்லாகிய வேதப்பாடல்களை மாத்திரங்கற்று பிரசங்கித்தலைவார்கள். எவ்விதமாகிலும்உண்பூரணமானது. படைப்புகள் அனைத்திலும் நிரம்பிப்போய் இருக்குந்தத்துவத்தையே மனுவாக நான் இந்த வேதபுராணத்தைக் கோர்வை செய்தேன். ஆதியானஉன்னைகல்குகள் அறிந்துவணங்கும்படியாக கெளறில்மக்லூபி. அலைஹிம். என்னும் ஆயத்தின் பொருளுக்கிணங்கும்படியாக. எ-று.

வேறு

வல்ல பப்பொருள் வாஹிதாய் வந்ததிற்
சொல்லுந் தூமெதனுஞ்சொல்லேபியற்றினேய்
வெல்லு மில்லல்ல வெவன்று வியந்து சொல்
நல்வ லல்லா லீனுமீ னுனவா. (10)

இ-ள் வல்லமையானநின் முத்தலக்கான உஜூது வாஹிதிய்யாத்தான ஒரே பொருவஸ்தாக இருந்தால் உன்னை உனக்குத் தெரிவதெப்படி? அதற்காக உன்னூதாக. ஒரு ஒளிவை ஜனனிக்கச் செய்து அதன்மூலமாக. இந்தமர்மசர் மங்களான ஞானங்களை உன் வேதத்தில் அமைப்பித்து, கலிமாஎன்னும் மூலமந்திரப் பொருளை அந்தரசூலுக்குக் கைவல்லியமானதாக. உன்குற்ஆனில் வலல்லா லீன் ஆமீன் என்றஆயத்தில் அமைத்து அனுப்பிவித்தாய்?. எ-று.

அல்ஹம்துப்படலம் முற்றிற்று

ஆ படலம் 3-க்குத் திருக்கவிதை 60.

# இன்னிசைபடலம்

அல்லா வுரையின்படியும்முல்குறு ஆனதிலே
சொல்லால் மறைபோலே தொழுதே துஆவிரந்து
வல்லாண்மை பொய்யும் பகிலுங்கிபறும் மறுந்திங்
கில்லான சொல்லிதிலேயுறைஞ்சுவது நச்காலம் (1)

(ஞா-பொ-வுரை):— அல்லா உம்முல்குர்ஆனில் சொல்லிய படியா தொருபிசகும் இல்லாமல் சொல்லானதிக்றிலேயே தியானித்துத்தொழுது. நேர்முகமாக. அவனிடம் துஆக்கேட்டால் அப்படிகேட்குந்திராணி யுள்ளவன் மன அகங்காரம். பொய் கமா விகாரங்களை வைத்துக் கொண்டு பகில்தனம். மனவஞ்சனை இவையாதிய பஞ்சகருமங்கள் இல்லாத்தெளிந்த இருதயத்துடன் இருந்து கேட்டால். உடனே. அவனை இல் என்ற திக்றுல்ஹக்கானது. லீகாவை நேத்ரவழியாகக்காட்டி பக்காவான ஒன்று படுதலில் கொண்டு சேர்த்துவிடும். ஆனதாலே அன்பர்கள் அல்லா

சொல்லிய நல்வழியாகிய இப்படிச் செய்வதே ஒவ்வொரு முரீதீன் களுக்கும். நல்லகால்மாக இருக்கும். எ-று.

குல்அவூது சூறத்திலே குதாயோதி னன்வசனம்
அல்லலணு காச்சற ஹதுபோலே தானடந்து
வல்லபமுங் கற்பனையும் வந்தவிடந் தானறிந்தே
இல்லி லெழுஞ்சுடரை யிறைஞ்சுவது நற்காலம். (2)

(ஞா-பொ.ரை):—அல்லாகுத்தஆலா குல் அஊதுஎன்கின்ற. சூறத்தில் தன் றசூலுக்கு ரகசியவழியில் சொல்லிவிட்டான் அதாவது. ஐ. என் ஹபீபே! எவன் ஒருவன் என் மஅரிபத்துல்லாவை அறிய இருக்கின்றானே? அவன் உமது ஷரீஅத்தின்படி நடந்து அந்தப்படிக்கட்டின் வழியாகத்தான் என்வல்லமை கற்பனைகளை ஆராய்ந்தால் அது உடனே பளீரென்று அவன் அறிவில் வந்து கானகத்தில் வைத்த விளக்கும்போலத்தெரிந்துபோகும் தான் இந்த சூறத்தான இன்ஸானுக்குமுன் இருந்த தோற்றமும் விளங்கிவிடும் அப்பால் அவனுக்கு நாமே காமிலான பீரை அனுப்பிவைப்போம். அவர்மூலபாய் இல் என்ற அட்சரகோலத்தைக் கண்டு பிடித்து திக்றுசெய்யும்போது என் உஜூதை பதினெண்ணாயிரம் ஆலமும் நிரம்பிய ஒருபிரமாண்டமான ஒளிமயமாகக் காணக்கப்பெறுவான் அவ்விதங்கண்டுஅதைதொழுதுகொள்வானே அப்போதுதான் அவனுக்கு நற்காலம்பிறந்தது. எ-று.

குல்குவல்லா வானதிலே கூறினனல்லா வொருவன்
நல்வணக்கமாம் பாத்தி ஹாவேதி நன்றிசெய்தால்
சொல்பிழை வராதுசுப ஹானல்லா வுதவிகொண்டே
அல்லுபக லற்றவிட மறிவதுவு நற்காலம். (3)

(ஞா-பொ-ரை):—குல்ஹுவல்லா என்ற சூறத்திலே றகுமான் உதயஞ்செய்தபடி. யாதாமொருவன் என்னைத்தொழுது கொள்ளும் பொருட்டு அல்ஹம்தையே ஓதித்தொழுது கொண்டு வந்தால் அவன் பேரில் வாய்கை. முதலான சமஸ்ததுப்புறவான மேன்மை உண்டாகும். அப்போது. அவன் மெய்பாவம் செய்பாவங்களை விட்டும் நிர்க்கோவியாய்விடுகிறான். அப்போது அல்லா

வின் தயாளக்கிரபையானது. அவன்மீது இறங்கினவண்ணமாக இருக்கும். அந்த திருவருள் உபகார அநுக்ரஹத்தின் கடாட்சத்தினலே இராப்பகல் என்ற எல்லையற்ற லாமக்காணைத் தெரிந்துகொள்வான். அப்போதுதான். நற்காலம் வந்து பிறந்தது. இப்படித்தான் நமது நாயகம் முதலிய நாதர்கள் எல்லாரும் அல்லாவின் மஅரிபத்தையடைந்துகொண்டார்கள் எ-று

தப்பித்தியா தாசூறத் தானதில்லல்லாவுரைத்தா
னெப்பொருளுமும்முல்குரு னேரதிலிசைந்துவந்தாற்
செப்பமுடன்சோர்க்கமதிற் சேர்ந்துகூறுல்ஹீன்களுட
னெபபமுடன் சேர்ந்திருந்தே யுவைப்பதுவுநற்காலம். (4)

(ஞா-பொ-ரை)—தப்பத்யதாஎன்றசுவர்னசூத்ரத்தில் றப்புல் ஆலமீன் கட்டளை யருளியபடி மனிதவர்க்கத்தார்கள் நான்ஹபிபுக்கு மிஃருஜியுண்டிய இரவில் கலந்து வெளியாக்கின என்ரகசியகளஞ்சியமாகிய உம்முல்குர் ஆனில் வருகிறபடி அமல் செய்தார்களானல் தடையன்றி சுவர்க்கமாளிகையில் சேர்ந்து அங்குள்ளரம்பைஸ்திரீகளான ஹூறுல் ஈன்களை மணந்து வாழ்ந்து அங்குள்ள ரஞ்சிதங்களை அனுபவிப்பார்கள் அப்போதுதான் ஒவ்வொருமனிதனுக்கும் நற்காலமானது வாய்த்ததென்று சக்கறநம்பவேண்டியதாக இருக்கின்றது. எ-று

இதாஜ அநசுறுல்லா ஹிஸ்றைசூறத் தானதிலே
மாசால ரசவாதம் வைத்திருக்கு தென்றுசொன்னன்
கோஜா நபிக்கிறைவன் கூறுகின்ற சொல்லறிந்தால்
பூசா பலன்பெறலாம் பொய்மறந்தால் நற்காலம். (5)

(ஞா-பொ-ரை):—இன்னமும் அல்லா ஹூஜல்ல ஷானுகு தன் திவ்யவசனமாகிய குர்ஆனில்இதாஜாஅ, நஸ்றுல்லாஹி என்ற சூறத்தில்ஓஇன்சான்களே உங்களுக்கு நான் உங்கள் சரீரக்களிம்பானதைபோக்கி பரிசுத்த புடத்தில் வைத்து. அதை ஊதிபசும்பொன்மயமாக ஆக்கிக் கொள்ள'நாம் நம்கிதா பின்மார்க்கமாக நல்லதெளிவானதோர் ரசவாதம் சொல்லி இருக்கின்றேன் என்றசொன்னன். அதை வெள்ளிடைமலைபோல் ஆலியின் சாற

மல்லாஹு அவர்களுக்கு றசூல்நாயகமவர்கள் தெரிவித்தார்கள் அலியவர்கள் வழியாகபதினன்கு கான்வாதாக்களிலும் அதைப் பற்றிவிளக்குப்போடப்பட்டது அந்தவிபரம் நான்இதற்கு முன் எழுதியதற்கலே ஞானியவர்கள் திருப்பாடல்களான ஞானமணி? பிஸ்மில்குறம் இரத்னக்குறவஞ்சி முதலானமகா ஞான்நூல்களின் திரவியஉரையில் ஆங்காங்குசூரியகிரணம்போல் காட்டியிருக்கின்றேன் அறிவையெழுப்பி அந்தத்தெளியவைத்து நோக்கும் அறிவாளிகளுக்குத் தானே விளங்கிவிடும். ஆனல்ஞானத்தின் துறைமுகமானது ஒருவனுக்குத் தெரிந்துவிட வேண்டுமானல் அவன் எந்தவிஷயத்திலும்எந்தசமயத்திலும்நீதியில் நின்றுவிடுகிறவனக ஆய்விடவேண்டியதுடனே வாயில்பொய் என்கிறநாற்றவிடக்கைக் கலக்கவிடாமல் எதிலும் உண்மைவாளனக ஆகவேண்டும். அதுவே அவன் செய்கின்ற பூசாபலன். அப்போதுதான் அவன்சமுகம் நல்லகாலமானது. வந்துவிட்டது. எ-று.

குல்யா ஐயுஹல்காபி றான்குறுஆன் சூறத்திலே
பொய்யார் குபிறுத்து மெய்யதிலே போதங்கொண்டு
சையோகஞ் செய்யாமற் றனவனு பியத்தாகி
இல்யாசு நன்னபிசொல் வலசறிக்கொண்டால் நல்லகாலம். (6)

(ஞா-பொ-ரை):—இன்னமும் ஓ அறிவுடைய ஜனங்கே; ஒன்றுகேளுங்கள். அல்லா குர்ஆனில் குல்யா ஐயிஹல்காபிறான என்ற சூறத்தில் கட்டளையருளிய பிரகாரம் பொய் நம்பிக்கையென்ற இருவினைப் பந்தங்களான கெட்டகுபிரியத்தான பொய்யை அறவே ஒழித்துவிட்டு மெய்யான மஅரிபாவிதுறையிலேயே மனசைமஸ்தாக்கிவிட்டு அதே கவலையாக அலைந்து துனியாவின் மாயப்பெண்களின் சுலபமான சிறு ஆசையான சையோகத்தில் வைத்திருக்கின்ற நாய் எண்ணத்தை மனஸை விட்டும் பிடுங்கி எறிந்து தானே தனக்கு இணையான அல்லாவின் மோட்சத்தை உங்கள் சரீரக்கோட்டை யானது இடிந்துவிடுகிறதற்கு முந்தியே அடைந்துகொள்ள வேண்டியது எப்படிப்போல் என்றல். இல்யாசுநபி எவ்விதம் சரீரத்துடன் சுவர்க்கம்போனர்களோ அது

போல நீங்களும் உங்கள்நாட்டத்தை ஒருநிலைப்படுத்தினால் இந்த உலகம்தானே உங்களைவிட்டும் விலகிவிடும் அப்போது அல்லா வின் இஷ்க்கு மீறும். உடனே மலிக்குல் குத்தூசியின் சிபத்தா னது ஒளிமயமாக உங்களைவந்து சூழும்அத்துடனே நீங்கள் இரு க்குந்தானமானது.சுல்த்தானன் நசிறு என்கின்ற சுவனலோகமாக க்காணப்படுவீர்கள். இதுஞான சூட்சமயம். இப்படித்தான் நமது நாயகம் மிஃறாஜியின் வழியில் சுவர்கத்தில் சேர்ந்து அதன் சிங் காரஸ்தலங்களைக்கண்டு மகிழ்ந்தார்கள். இப்படித்தான் அப்துல் காதிறுல்ஜீலானி.செய்துஅருமனுல்கபீர்முதலியமஹான்கள் முகா ஷ்பா—என்னும் கடவுள் பீடதரிசனஞ்செய்து கிாட்சிகளைக்கண் டுமீட்சிபெற்றார்கள். ஆனபோதே நாம் இந்தவழியை படை வதுதான் நல்லகாலம். என்று உணரவேண்டியது. எ - று.

இன்னா அஃத்தைன இறைகூறத் தானதிலே
மின்னார்க ளாண்களுக்கு வில்லிபில்லி வாராமற்
பொன்னா ரிறசூல் புகழ்சலவாத் தோதிவந்து
கன்னாசு செயல்மறந்து ஹக்கறிந்தால் நற்காலம். (7)

(ஞா-பொ-ரை):—இன்னா அஉத்தைன என்கின்ற சூறத்தில் மாநுடவர்க்கத்தார்களுக்கிடையில் ஆண்களுக்கும் பெண்களுக் கும் பில்லி ஜனியம் நோய்கள் உண்டாகாமல் அதில் கருமங் கள் அல்லாகுத்தஆலா மெய்ஞ்ஞான மார்க்கத்தைக் கொண்டும் உயிர் அட்சரங்களைப் பொருத்திவைத்திருக்கின்றான். அதுவே ஞான நிஷ்டையில் ஷெய்தானுடைய கலவி ஒன்றும் வந்து நிற்கா மல்செய்து விடும். அத்துடனே நமது நாயகத்தின் ஸலவாத்து வும் வாசிலாத்தாக்கிக் கொண்டுவருகிற வழக்கத்தைப்பெறுகிற போதே கன்னாசின் செயலாகிய மதிகேட்டையும் மறந்து விடுகிறதே. நமக்கு நல்ல காலம். எ-று.

அருயித் தல்லதிரு றத்திலுவந் தாதிசொன்னான்
முறுக்குபாவி லேயிருந்த முச்சுடரைத் தானறிந்தே

இருதாய் மிசுக்கின்கட் கிரணதான மீந்துவந்து
குருஷயத் தோதித்தொழுங் குணமறிந்தால் நற்காலம். (8)

(ஞா-பொ-ரை):—அல்லாஹு றப்பில் ஆலமீன் தன்து குர்ஆன் ஷரீபில் அறஜத்தல்லதீன என்ற சூறத்தில் சொல்லியபடி யாதாமொருவன் தன்னையுந் தன் தலைவனையும் அறிந்து முறுக்கிபா என்கின்ற தனித்திருக்கும் இருப்பில் இருந்து ஒரு கிலேத்தியான நிஷ்டையில் வெளியாகும் முச்சுடர் என்கிற பரம ஒளிவை அறிவினல் அஹதுது. உஹது. வாஹிது. அதாவது தாய்தந்தை தான் என்று இருதயத்தில் ஊன்றுதலான உறுதிகொண்டு இந்த இருதாவிலே சில காலம் ஆசை என்னும் மஸ்தானது பற்றிபிடிக்கச் செய்து பணமுடையவர்கள் சில காலம் மிஸ்கீன்களான யாசகர்களுக்கு அன்னதான தருமஞ்செய்து. அத்துடனே சூரியோதய சமயந்தோறும் குர்ஆன் ஷரீபை வோதிவந்து ஸலவாத்தும் வழக்கமாய் கடைப்பிடியான பழக்கத்தில் கொண்டு இராக்காலங்களில் தஹஜ்ஜுத்துத்தொழுது வந்து தன் குணம் என்பதை இன்னதென்று பகுத்தறிந்துகொண்டு தான் என்ற வேற்றுமை இருளை விலக்கி ஒட்டுவதே இன்ஸான்களுக்கு நல்ல சாலம் என்று ஆண்டவன் அருளிச்செய்திருக்கிறன், எ-று.

வியிலா பிகுறைஷி விறையோதினன் வசன
மாலார் மருந்திடு வஞ்சனை தெறித்தோடும்
பாலான சிர்க்கஃபத் துல்லாவைப் பார்வைகண்டு
காலோ டமுதகனி கருதிக்கொண்டால் நற்சாலம். (9)

(ஞா-பொ-ரை):—இன்னும் லிஈலாபிகுறைஷின என்ற சூறத்தின் அருமைகளைப் பற்றி அல்லாகுத்தஆலா திருவுளம் பற்றினன் மனிதர்களுக்கிடையில் செய்துசொள்ளும் ஈடுமருந்து,வஞ்சி மாரணம் கோகரணம். வசியம். முதலிய சகலமும் அந்த சூறத்தைக்கொண்டுத்தெறித்து விலகும் ஞானத்தில் அதன் உயிர் அட்சாங்களை யறிந்தால் இதய அழுக்கு, மண்டியறிவு. மனக்கலக்கம். சோம் பேறித்தனம். களவு. ஊக்கமின்மை, பித்தமயக்கம். பெருநோய். முதலான சமஸ்த்தமும் விலகிக்கொள்ளும் அதுந்த விரவும். இதை உச்சரிப்பு செய்கிற விதம் தன் யாதுடன் வைத்து

தியானித்து வாயால் மொழிந்து, அந்தவாயில் பொய்யைமறந்து திக்று செய்து வந்தால். அவன் எப்பொழுதும் கஉபத்துல்லாவுக்குப்போய் வரக்கூடிய சக்தியை அடைவான், அந்தப்பழக்கத்திலேயே தன் சுவாச நிலைத்தெரிந்து. அதன் அமிர்தக்கனியான கலிமாவைப்பிடித்தேறி விட்டால் அப்பொதுதான் நல்ல காலம் என்கின்ற சூரியன் உதயமாகி மாற்றிப்பிடித்தல் என்னும் பொழுதும் விடியும். எ-று.

அலம்தறக்கைபா சூறத்தகீனுவர்தல் லாஹு சொன்னான்
ஜலந்தனிலே தான்குளித்துத் தசுபீஹு செய்துவந்தாற்
பலன்மிகுதி வந்தெய்தும் பர்க்கியங்களுண்டாகும்
கலம்அறுவில் நாட்டங்கொண்டுஹக்கறிந்தால்நற்காலம்.(10)

(ஞா-பொ-ரை):—இன்னும்அலம்தரக்கைபா என்னும் சூறத்தில் அல்லாஹு நாயன் திருவுளஞ்செய்தான். எப்படியானல் ஜனங்கள். தாட்டுறவாகுவதற்குக் காரண கருவியாகிய சுத்த ஜலத்தில் நீராடி தஸ்பீஹு என்கின்ற தியானஞ்செய்து கொண்டு வந்தால் இந்தப்பூலோகத்தில் இன்ஸான்களுக்கு என்னென்ன பலன்கள் வேண்டுமோ அவ்வளவுங்கிடைக்கும் அன்றியும் பிள்ளைகுட்டி ஸம்பத்து முதலான, சமஸ்தமும் உண்டாகிவிடும்கலம் என்கின்ற அஸிமை மனவில் நாட்டத்துடன் கலக்கச்செய்து. அறுஷின் ஒளிவை இன்பத்துடன் ஆசைகொண்டால் அதுவே யறியக்கூடிய ஹக்காக இருக்கும். அது நல்ல காலமுமாக இருக்கும். எ-று

வைஹுன்லிக் குல்லிபிலே வல்லவன்மா நாயஞ்சொன்னான்
ஐனுல்எக்கீ னைபல ஜனங்கொகுத்தி னங்கொழுது
பயிராதுக்கு நீர்பாச்சும் பலனதுபோற் பார்வைகண்டு
கையூ மெனுந்தலத்திற் காத்திருந்தால் நற்காலம். (11)

(ஞா-பொ-ரை):—குர்ஆனில் வைஹுல்லிக்குல்லி யென்ற சூறத்தில் அல்லாகுத்தஆலா சொல்லியிருக்கின்றபடி. ஜனங்களே. நீங்கள் ஐனுல் எக்கீன் என்ற நேத்ர ஜோதியைக்கண்டு தரிசிக்கவேண்டுமென்றால். நாம்மேலே சொல்லியபடி. கிரமம் கிரமமாக என் ஹபீபிடத்தில் சொல்லியபடி. ஐந்து வேளைத்தொழுகையுந்தொழுது. நீங்கள் இடுகிற பயிர்களுக்கு நீர்பாய்ச்சுகின்ற பான்

மையைப்போல உங்களை நீங்கள் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளும் படியான தவநிலைக்கு ஷை தொழுகையானது, பயிரைவளர்க்கின்ற தண்ணீராசவும்பாவித்துக்கொண்டு உங்கள் மனதியானமாக வைத்து, ஒவ்வொரு தொழுகையிருப்பிலும் அறுசுவையபார்வை யாகக் கண்ணைப்புருவமத்தியான கபால மேடையில் பார்க்கும் வழமையாக்கிக்கொண்டு ஷை. ஸிஹ்யுல் கையூம் என்கின்ற சுழி முனைக் கண்ணாடியை நோக்கிச் சாக்கின்றவர்களாக நீங்கள் ஆகிவிடுகிறதே உங்கள் நல்ல காலமாக இருக்கும். எ-று.

ஒல்அஸிரி சூறத்திலே யுவங்தோதி னிறையோன்
நல்சபறு லாகிறிலே நாட்டங்கொண்டு பார்க்கச்சொன்னான்
அல்சிரசு மேலாக வானபெருங் காட்சிகண்டு
சொல்சவனஞ் சேருதற்குத்தொழுதுவந்தால் நற்காலம். (12)

(ஞா-பொ-ரை):—இன்னும் ஒல்அஸ்ரி என்னும் சூறத்தில் அல்லாகுத்தஆலா ஜனங்கள் பேரில் உகப்புவைத்து நல்மாராயஞ் செப்பினதாவது. நல்லபடி சீரப்பொறுமையுடன் ஸஹிறின் கோலமாகிய முகம் என்ற கண்ணாடியாகிய. நேத்ரத்தை உறுதியுடன் பார்க்கும்படி அல்லா கட்டளையிட்டான் உங்களுடைய சிரசானது ஒரு கசகசாவின் தோற்றம்போல் ஒரு திருமணியான ஒளிவாகத்தோற்றும். அந்த மஹாகாட்சியை நீங்கள் மனசாறக் கண்டு உடனே கலிமாவை விஷயஞ்செய்து கொள்ளுங்கள் அவ்விதங்கண்ட ஒளிவானது. உங்களை பொதிந்துகொள்ளும்வரையில் நீங்கள் ஷரீஅத்தின்படி ஐந்தொகுத்தும் தொழுதுவந்தால்தான் உங்கள் கருமங்களான பாவ துவேஷமானது உங்களை விட்டும் விலகும். அப்போதுதான் சுவர்க்கலோக சிங்கார வுதயங்களை நீங்கள் கண் கூடாய்க்கண்டு பரமாநந்தம் அடைவீர்கள். அதுவே நல்லகாலமென்று அறிந்து கொள்ளுங்கள். எ-று

அல்ஹாக்கு முத்தக்காது ருகுமந்தச் சூறத்திலே
இல்முல் எக்கீன்மாத்தி லிருந்துமயில் ரூபங்கொண்டே
இல்யா ஐனுல்எக்கீ னிருந்ததிணற் றிற்குளொளி
சொல்யா றசூலென்று சொல்லறிந்தால் நற்காலம். (13)

(ஞா-பொ-ரை)—இன்னும் அல்ஹாக்கு முத்தக்காதிறு. என்ற சுவர்ண சூஸ்திரத்தில் இருக்கின்ற மஅனுவில் பாத்தின் என்ற இபாறத்தின்படி. இல்முல் எக்கீன் என்ற மரத்தின்மேல் விஜயமாய் வீற்றிருந்த மயிலானது. ஸ்ரூபத்தில் ஐனுல் எக்கீன் அதாவது நேத்திரத்தின் மத்தியில் பளீரென்று தெரிகின்ற பாப்பா ஒளிவாக இருக்கின்றது. ஹயாத்துல் கைபாறுகடல் என்பது ஒரு ரசக்கிணறு அந்தரசக்கிணற்றில் விளைந்தரச ஒளிவானது. முகம்மதாக இருக்கும் அப்போதுதான் அதற்கு யாறசூல் என்ற நாமங்கிடைத்தது. எப்படியானல் அது செய்த தஸ்பீஹ் என்கின்ற ஜெபமானது யாறசூல் என்று தொனித்தது, அதனால் அதற்கு அந்த மகாமில் அந்தப்பெயர் காரணப்பெயராய் உண்டாயிற்று. அந்தரசவொளிதான் எல்லா உலகங்களையும் ஜெனித்து வெளியாக்கிற்று, அதனால்தான் அதற்குறசூல் என்றபெயர் உண்டாயிற்று, அதன் ரஹஸியத்தைகிரஹிதாயுஹத்தில் வசித்திருந்த வாஸியென்னும்ஸமஸ்க்கிருதஆசான் அறிந்துகொண்டதால் தான், உலகத்தில் சிசுக்களைக் கற்பமாகஉண்டாயிருக்கின்ற ஸ்திரீகளுக்கு சூலிகள் என்றும் கற்பத்திற்குசூல்என்றும் பரப்பச்செய்தான் அதுவே அறபிபாஷையிலும்அல்லா அறிவித்தான் தெரிந்து கொள்ளுங்கள். இவ்வளவு தூரந்துலையான ஞானமர்மசர்மங்களையெல்லாம் இந்நூல் ஆசிரியரான மஹான் அவர்கள். உங்களுக்கு எடுத்து போதித்தும் நீங்கள் ஏன் கவனிக்கச் சுணங்குகிறீர்கள் ஆனதிலே அந்த சொல்லானசூல் என்றரகசியத்தைத்தியானஞ்செய்து அதன் பலனை அடைகிறதே. மனிதர்க்கு இன்றியமையாதநல்ல காலமாத இருக்கின்றது. எ-று

அல்காரி அத்துமல் காரிஅத்து சூறத்திலே
நல்வசன மானஜெம்தில் நன்று யிருக்கச்சொன்னான்
சூத்மவுன தீதங் கூவுங் கிளிமொழிந்த
சொல்மவுனமாட அம்பு தொகுத்திவந்தால் நற்காலம். (14)

(ஞா-பொ-ரை):இன்னும்றகுமானாகியஆண்டவன் குர்ஆனில் அல்காரியத்துமல்காரியா என்னுஞ்சூறத்திலே நல்லபிப்பிராயஞ் செப்பியிருக்கிறதாவது,ஓஇன்சான்களே நீங்கள் ஜிம்ஹ் என்ற இரு

வீணபற்றமகாமிலேயே சதாகாலமுந் தரிபட்டவர்களா இருங்கள் எல்லாம் மவுனபாஷையாகிய ஹகீகத்து என்கின்றகீகம் அதாவது பஞ்சபட்சியில்காகம். கிளி இவைகளின்திக்ருகிய (குல்)என்ற காப் லாம் அட்சரங்கள் உச்சரித்தால் உடனே காப கௌஸைனி என்ற மணிமாடம் தோன்றும் அவ்விதம் தோன்றின மாடத்தின் பெயர் தான்ஜெம்ஹறூத்தாக இருக்கும் அதற்கு நேராக உங்களின் நினைவைப் பரிபூரணநிலையாக நிறுத்திகிறபழக்கம்வைப்பதே இன்ஸான் தன் சுயச்செயைப் பெறுகிற நல்லகாலமாக இருக்கும். எல்லா உலகங்களுக்கும் சொந்தக்காரனென்ற உரிமையை கைவல்லியமாகக் கொண்டுவந்த சூக்கும்வடிவானது. அப்பால் சரீர உலகமாகிய ஆலம் இன்ஸான் ஆகிய இந்தபூலோக மாய்கையில்வந்து. பிறந்தவுடனே. பழயஸ்வாதீன பதவியைமறந்து. கேவலம் ஸ்திரீஆசைக்கும். மண். பொன். முதலான காமியங்களுக்கும் உட்பட்டு. வேற்றுமையான சகல துர்விஷயங்களுக்கும் ஆளாய் கடைசியாக அடிமைத்தனத்தின் நோயால் மரணத்திற்கும் தலையிடுகிறான். ஆனதினாலே அந்தஇன்ஸான் தன்பழயஸ்திதியான வல்லமையை யடையும்படி ஆண்டவன் தன்றசூல்மார்க்கமாய் இத்தாதி சூஸ்திரங்களையெல்லாம் பூலோகத்திற்கனுப்பி தக்கனபரிகாரஞ் செய்யச்சொல்கிறான். அதன்படிநடந்துகொள்ளாத வர்களுக்கு நரகத்தண்டனையையும் வைத்திருக்கின்றான். எ-று.

ஒல்ஹாதி சூறத்ததி லுவந்தோதி றனிறையோன்
அல்லா இசுலா மைந்தாறி யீமான்கொண்
டில்லார் திரையையறுத் தினத்துடனே சேர்ந்திருந்து
சுல்லான பார்வையிலே கூடிக்கொண்டால் நற்காலம். (15)

ஞா-பொ-ரை:— அல்லாகுத்தஆலா குர்ஆனில் மறுபடியும் ஒல் ஹாதிசூறத்தில் ஜனங்களே! நீங்கள் இஸ்லாம் ஐந்துகாரியமும் ஈமானில் ஆறுகாரியமும் தேர்ந்து. அல்லாவைதொழுது நல்லஅமல்களைஎடுத்து நடந்து. அப்பால்மஅரிபாவின் துறையில் பழகிக்கொண்டுவந்து. பிணக்கான இருவினைபந்தங்களின் திரையாகிய இருளையறுத்து ஒதுக்கி. தியானவழியில் சேர்ந்திருந்து. சுழிமுனையின் பார்வையாகிய நல்நோக்கத்தில் இருப்பதுவே. நற்காலமாக இருக்கும். எ-று.

இதாசுல்லிலத் தில்லறுலு லில்சால ஹாவதிலே
ககாவின்றியே கலிமா கமலமதிலே தெளிந்து
பிகாவான மனபயம் பேசும் பொருளறிந்து
நிதானமுடனீமா னிறைந்திருந்தால் நற்காலம். (16)

ஞா-பொ-ரை:— இன்னும்அல்லா என்னும் றப்பில் ஆலமீன் தன்குர்ஆன்ஷரீபு. இதாசில் சில்த்துல் அறுலுசில்ஸாலஹா. என்றசூறத்தில் சொல்லிய மஅனுவல் பாத்தின்படி ஜனங்களே! நீங்கள் உங்கள்சரீரம் பரிசுத்தம்பெறுகிற தற்குஒரு உபாயம் அதாவது. கலிமாவின் உயர்நிலையான இல்லல்லாஹு. என்ற். தியான மந்திரத்தை இருதயக்கமலத் தோடும்வைத்து ஸ்வாசத்துடன் பொதிந்து நித்திரையாகிய. பூலோகஇச்சையில் நின்றும் அறிவான தன்னினைவில் எழுந்துதெளிந்து. அப்பால் மனப்பயம் அறக்கூடிய. தாமரைக்காயின் பொருளான றாஹ்ின் அந்தரங்கத்தையறிந்து முற்றிலும் ஈனுடைய வட்டத்தில் தறிப்பட்டிருப்பதே நல்ல காலமாக இருக்கின்றது. ஞா-று.

லமயக்கூ னில்லதீனக் கபறுவெனும் சூறத்திலே
அம்ஆபு சம்கிணற்றி லன்பாகநீ ரருந்தி
சம்மான நல்மஃரி பத்தினிற்கலாமொழிந்த
தம்மான கேள்வியிலே சார்ந்திருந்தால் நற்காலம். (17)

(ஞா-வுரை):—இன்னும் வல்லமைப் பொருளான றகுமான் தனது திவ்யகலாமாகிய குர் ஆன் ஷரீபு லமயக் கூனில்லதீனக் கபரு. என்ற சூறுவில் சொல்லியிருக்கிறதாவது. இரண்டு மஅனுவாக இருக்கும். ஒன்று. ஓ ஜனங்களே நீங்கள் திருமக்கா என்னும் ஹறத்தில் போய் தவாபு செய்து ஆபுஸம் ஸம் என்னும் திவ்யகிணற்றின் நீரையள்ளி யருந்தி ஹஜ்ஜுடைய பறுலுகளின் நல்வணக்கங்களை நிறைவேற்றுவதே உங்களுக்கு நற்காலம் என்பது; மற்றொருபொருளோ—அலிபு. மீமான. ஐனுல் எகினில்ஜொலிக்கின்ற உண்மைவஸ்துவான. வான ஒளிவை சந்திக்கும் பொருட்டு நீங்கள் கொண்டுள்ள இஷ்கின்புறத்தால் ஒழுகிவழிகின்ற. அமிர்தத்தைக்குடித்து மஸ்தாகி பின்பு—அருமையான மஅரிபத்துல்லாவின் திவ்யவாசலாகிய சுழிமுனையில் சேட்டும் ஹூ என்

கிற வலம்புரி முழக்கஸப்தத்தைக் கேட்டு பரமாநந்தங் கொண்டிருப்பதே இன்ஸான் களின் நல்வாழ்வா காலம். எ-று.

இன்னுஅன் சல்னுனி லேகமுத லோனுரைத்தான்
முன்னுளோ டிந்நாள் மொழியும்பின்னு ளும்மறிந்து
கன்னு சவணேவிட்டு ஹக்குடனே சேர்ந்திருக்கச்
சொன்னுர் முஹம்மது றசூலேக்கண்டால் நற்காலம். (18)

(ஒ-வுரை):—குர் ஆன் ஷரீபில் அல்லா குத்த ஆலா சொல்லிய பாத்தின் மஅனுவின் பிரகாரம் ஜனங்களே நீங்களாகிற வர்கள். அஷறப்த்துல் மகுலுக்காத்து அதாவது படையுண்ட ஜீவகோடிகளுக்கெல்லாம தலைமைய்ஸ்தானத்தை யுடையவர் களாக இருக்கின்றபடியால் உங்கள் சுவாசத்தில் சூரிய சுந்திர சுழினை. என்னும் மூன்று வந்தனகலேகள் இருக்கின்றன. அந்த மூன்றும் முன். பின். தன். அதாவது. முற்காலம்-பிற்காலம்-தற் காலம் என்பதாக காலங்களேயும் அவைகளின் கிரகங்களேயும். கொழுவியிருக்கின்றன. அவசியம் நீங்கள் அந்த முக்காலப்பிரவு களே முதல்படியில் அரிய உங்கள் சுவாசகலேயின் கணக்குகளேக் கண்டுபிடித்தீர்களாகில் அப்போது உங்கள் காலரகசிய பராசிய சக்திகளே தானே கானகத்தில் நட்டிய விளக்குப் போலத்தெரி யப் பெறுவீர்கள் அப்போதுதான் சகலரகசியங்களே கண்மூடிவி ளிப்பதற்குள்ளாகத் தெரிந்து சொல்லும் ஒலிமார்களாக ஆய்விடு வீர்கள் அப்பொது கன்னுசென்கிற. நப்ஸு அம்மாருவின்சுயகு ணங்களான அழுக்கு ஆனுவம் பேராசை. பெருமை. வஞ்சகம் சூதுகபடுஇருவினைஎல்லாம் உங்களேவிட்டு சூரிய உதயங்கண்டுவில கியோடும் இருளேப்போல விலகிக்கொள்ளும். அதுதான் லஅனத் துப் பெற்றஷெய்தான் என்பவனின் சூறத்தாகஇருக்கும். இதை யற ஒழிப்பதர்குத்தாண் ஆயிரங்கணக்கான மஹான்களெல்லாம் பிரமாண்டமானமலே கெபிகளிலும். காவடர்ந்த கானகங்களிலும் இருளான குகைகளிலும் போய் இருந்தது. எத்தனே யோவருஷ ங்களேக்கடத்தி ஜயங் கொண்டுவந்தார்கள் இதுதான்மனிதன் எவ் விதத்திலும் அடையவேண்டியசுயராஜியம் ஆகவே ஷை சொல்லிய படியான சரீரஉலக கோடிசுயராஜ்யம்பெற்றுக்கொண்டால்மனிதன்

சகல குணத்திலும் முகம்மதாகிவிடுகிருன் தன்னை எந்த சமயத்தி லும் முகம்மதாகக்காண்பான் அப்போதுதான் இன்ஸான் இப் போது இருக்கின்ற. ரகசியஸ்ரூபமான ஹைவான்குனரத்தின் நின்று விலகி நீதமாவிய. காமில் இன்ஸானுடைய பூரன அழகில் வந்து பிரகாசிப்பான். அப்போதுதான் அவனுக்கு நல்லகாலமா னது பிறந்தது. எ-று. (கவனிப்பு.) இந்தஇடத்தில் பரமதடித் தனமான மண்டிபுத்தியைக்கொண்டு நோக்காமல் அரிவைபல உணர்ச்சியைக் கொண்டும் தெளியவைத்துப் பார்த்தால் உண்மு கம் உனக்குத்தெரியும் கண்டுகொள். அப்பால் உன்வாயை மூடிக்கொள்- ஆசிரியன்

இக்குறஃ பிசமிறப்பி யிறைசூறத் தானதிலே
தக்குமஃ ரீபத்தினைத் தானறிந் துணர்ந்தாக்காற்
பிக்குறும் நினைவொடிக்கிப் பேசும்பொருளையறிந்தே
ஹக்குலா மமலதனை அறிந்திருந்தால் நற்றகாலம். (19)

(ஞா-பெ-ரை-) திருக்குர் ஆன்ஷரீபில் இக்குறஃ பிஸ்மிறப் பிக்கல்லதீன. என்றசூரத்தில் பாத்தின்மஅனுவில் அறிவித்தான். எப்படியென்றல் ஜனங்களே! நீங்கள் உங்கள் சிர்றையறியவேண் டுமானல். மஅரிபாவில் துறைமுகத்தை நல்லபடி வேற்றுமை யான சந்தேகங்கள் இல்லாமல் அறிந்துஅதுஎது? என்றுதாண் டித்துருவி. காமிலானபீரென்னும் நல்லாசான்களைத்தேடி அவர் களை நான்முன்பாராவில் சொல்லியபடி நடையுடைபாவினைகளால் கண்டறிந்து. அவர்களின் பாதத்தண்டையில் ஊழிய நாயைப் போல் காத்துக்கிடந்து. நீங்கள் துனியா என்னும்காட்டுமடத்தில் வந்து இருந்துகொண்டு பார்க்கக்கூடிய வீன் அலுவல்களான பிக் றுகளை யெல்லாம் இருதயத்தைவிட்டும் ஓட்டோட்டவிரட்டிவிட்டு. பொல்லாத சேஷ்டைக்குரங்காகிய நபசு அம்மாரு என்பதை இடவலம் பிரிந்து செல்ல விடாமல் ஒருநிலைஎன்கின்றஇருட்டறை யில் விட்டுசிறைபடுத்தி விட்டு. கடைசிஇல் ஒன்றொன்றாக. பூதப் புலனுதியச் செயல்களையெல்லாம் பன செய்துவிட்டு மீதமிருகின்ற நித்யவஸ்தான ஹக்கை வைராக்ய மென்ற. பிடிவாதத்தால் கை வல்யப்படுத்தி அதையேதியானித்திருப்பதே உங்களின் நற்கால மாக இருக்கும். எ-று.

ஒத்தினி வஸைத்தானி ஒத்தூரி சூறத்திலே
பத்தியுட னெஞ்சுவந்து பாருமிசுக் குற்றறிந்து
முத்தான துர்றத்துல்பை லாவென்னு மூவுலகிற்
சித்தான மாளிகையிற் சேர்ந்திருந்தால் நற்காலம்

(ஞா-பொ-ரை):—அல்லாகுத்த ஆலாதன் கலாமுல் அஉலா வான குர்ஆனில் விளம்பரஞ்செய்திருக்கிறன் ஒத்தீனி ஒஸைத் தானி என்ற திவ்ய சூறுவில். என்னமையே யானல் ஒ மனிதவர்க்கங்களே, நீங்கள் பக்தி என்கிற வைராக்ய பத்தியத்தைகைப் பிடித்து. உங்கள் இருதயத்தைத் எந்த ஸமயத்தினும் ஒரே நிலையில் தரிபாடான் வசியஞ் செய்து மேலே நோக்கின பார்வையிலேயே மன இஷ்க்கு எழுந்து அலை மோதச் செய்து அறிவைக் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு ஞான ஆராய்ச்சிலேயே நேரத்தைக் கடத்தி துனியாவின் சிங்காரத்தை மறந்து, மோட்சத்தைக் காணகக் கூடிய,துர்றத்துல் பைலாவாகிய மூவுலகங்களும் அடங்கிக்கொண்டிருக்கின்ற மகாமன் மகுமூதென்கின்ற மணிமாளிகை ஆசனவீட்டை அடைந்த தவஸாலியாக இருப்பதே உங்களுக்கு நற்காலமாக இருக்கும். எ-று.

## இன்னிசைப்படலம்.

பூரண மாயிற்று.

ஆ படலம் 4-க்குத் திருக்கவிதை. 80.

# குத்துபாப்படலம்.

## தொங்கல்.

நட்பாம் ஜும்மஆவின் வேளையிலே, நவில்வார் துன்யாவின் பணுவானதை-அப்போதே அல்லாஹுத்தஆலா, அரியமலக்கைக் கொண்டவர் தலைமேற்-கைப்பாம் லகுனத்து முசிபத்தையுங், கலங் தொன்றுகவே யிறக்கச் சொல்வான்-சப்பஹு லில்லா ஹீயெனவே சாற்றும் சூறத்திற் றேற்றும்பாரே- (1)

(ஞா-பொ-ரை):—ஒ உடற்பிறப்புகளே! இந்த நல்ல கவனித்து, இதன்படி நடந்தால் உங்கள் பாவங்களை. மன்னிக்கவும்

உங்களை சுவர்க்கத்தில் கொண்டு சேர்க்கவும் றசூலுல்லா அவர்களே சாமீன். என்ற போறுப்பாளியாக இருக்கின்றார்கள். அவ்விதஞ்செய்தவன் எவனோ அந்த மன்னன் ஜெயம்பெறுவான். பாட்டின் பொருளாவது அல்லாவுக்கு மிக்க உகந்ததுமான ஆநமாஸ் வேளையாகிய குத்துபாத்தொழுகும் ஒக்த்தில் துனியாவின் விஷயமான வியாபாரம் உத்யோகம். கொடுக்கல் வாங்கல் முதலானகருமங்களை எவன் மன அச்சமின்றிநடத்துகின்றானோ அவனுடைய தலையின் பேரில் அல்லாகுத்தஆலா லஅனத்தானகஹ்றுடைய மலக்கின் புறத்தால் பெரிதான முசீபத்தையம் பலாவையும் விரவிச்சிந்தும்படிசெய்வான் இதைக்கண்டறிய வேண்டுமானால் குர்ஆனில் "யுஸப்பிஹ்றலில்லாஹி" என்ற சுவர்ணசூஸ்திரத்தில் நல்ல தெளிவாகக் கண்டறிந்து கொள்ள வேண்டியது. எ-று

வேறுவிருத்தம்.

நித்தமு மைந்து நேரம் நிமாசுசெய் மூமினானோர்
பத்தியி னூற்பான் பேர்கள். பள்ளிவந் திருக்கி லப்போ
கத்திபா னவர் தானோக் கணக்கொடு மோதப் போதும்
புத்தியின் குருனுக் குள்ளே புகன்றன னாதி நாயன். (2)

(ஞா-பொ-ரை):—ஒஹேமூ மீன்களான நல் ஜனங்களே! நீங்கள் ஸலாமத்து அடைகிறதற்காக வேண்டி. ஒவ்வொரு நாளும் நீங்காமலும் மன ஊக்கமில்லாத சோம்பேறித்தன மில்லாமலும் கிரமங்கிரம் போல் மேற் சொன்ன வண்ணமாக. மஹாஷறஉளான தவமாகிய. மோட்சரத்னமாகிய ஐந்துவேளை நமாஸையும் தொழுது இவ்வித தொழுகையுள்ள. சீதேவித்தனமுடைய கனவான்களாக. நாற்பதுபேர்கள் பள்ளிவாசலில் வந்து கூடியபோது கதீபானவர் மிம்பர்ப்படியிலேறி சகலகணக்குடன் குத்துபாஓதித் தொழுகிறதற்குப் போதுமானதாக இருக்கும். இந்தசட்டமும் குர்ஆனில்தான் அல்லாகுத்தஆலா திருவுதயஞ் செய்திருக்கின்றான். எ-று.

வடுவொன்று மில்லான் வேண்டு மெனவல்ல நாயன் சொன்னான்
அடிமைய்ா யொருவருக்கு ளாகினோ னாகா தென்றுங்

கொடுமைசெய் பவருமாகாக் குணமிலாப் பலிசைவாங்குந்
தடிமைசெய்ஹறாக்குமுள் ளோருஞ் சாற்று ஜும்ஆவிற்காகார் (3)

(ஞா-பொ-ரை):— அப்படி ஜும்ஆவுக்குப்பள்ளிவாசலில்கூடக்கூடிய நாற்பதுபேரில் சரீரஉறுப்புக்களில் யாதொருகண்குருடு நொண்டி சப்பாணியானவர்களும், ஒருயஜமானுக்கு அடிமைச்சீட்டு எழுதிக்கொடுத்து விலையாகிய அடிமையானவர்களும், இன்னும் வட்டி-வாசிகளுக்குக்கொடுத்து ஊரார் இரணத்தைஅநியாயவழியில் அபகரித்துதின்று கொழுத்துப்போயிருக்கின்ற மூதேவிஜனங்களும். இன்னும் எளியவர்கள் கொண்டுவருகிற வழக்கை நோக்கி ஓரவஞ்சகம்பேசுகின்றமுனாபிகீன்களும், இன்னும்ஜனாச்செய்கின்ற வெறியருந்துகிறவர்களும் இன்னும் ஷறஇன் ஹாக்கும் அவர்களின்மேரில்பாக்கியாய்யிருந்தவருமே அப்படிக்கொத்தவர்களும். ஷெ ஜும்ஆவுக்குவந்துகூடி ஷெ நாற்பதில்கணக்காகினல் அந்தஜும்ஆத்தொழுகையானது கூடவே கூடாது. எ-று.

பெண்கொளா தவருஞ் சின்னப் பிராயத்தோர் கிழவரான
தங்களும் நாற்பதுக்குட் டரித்தவரல்லர் கேளீர்
பங்கினில் மால்மிகுத்தும் பசித்தவர்க் கீயாப் பாவி
யிங்கிவர் நாற்பதெண்ணத் திற்குளே கூட்ட லாகார். (4)

(ஞா-பொ-ரை):— இன்னும் ஷறஇன்படி சுன்னத்துல் அபுலலான கல்யாண சோபனஞ்செய்துகொள்ளாத * பிரமசாரிகளும், அக்குல் எத்திக் கொள்ளாத சிறுமைனர்களும். முதிர்ந்து தள்ளாடின கிழவோர்களும், இன்னும் தங்களிடம் அதிகமான செல்வாக்குகள் இருக்க வாசலில் வந்த மிஸ்கீன்களுக்குப் பசிக்குதவாத ஈனபகீல் ஜனங்களும், ஷெ குத்பாவுக்குப்போதுமான நாற்பது எண்ணிக்கைக்குச் சேர்க்க ஆகமாட்டார்கள். எ-று.

ஒற்றைக்கண் ணோடு மொற்றைக் காதுமூக் கிழிவுள்ளாரும்
ஒற்றைக்கால் கையி னோடு மொருபல்லுக் கொச்சையானோர்

* பிரமசாரிஎன்றால் கல்யாணஞ்செய்யாமல் காலத்தைத்தள்ளுகிறவர்கள். ஆனால். யோகவான்களானதபோதனர்களையல்ல.

மற்றிய மாற்பின் மேலே படர்ந்திடுங் குறைநோ யாள
ரித்தனை பேருந்தானே யிரண்டிருபதுபேர்க்காகார் (5)

(ஞா-பொ-ரை):—இன்னமும் ஒரு கண் குருடர் ஒரு காது செவிடர் மூக்கரையர்கள். ஒருகால் நொண்டியர். ஒரு கைகட்டையுள்ளவர்கள். பல்லில் குறை குற்ற முடையவர்கள். இன்னும் உடம்பில் மார்பில் குஷ்டமுதலிய குறைபட்ட நோய் உடையவர்கள். ஆகிய இத்தனை பேர்களும கூடிமேற் சொன்ன ஜும்ஆவுக்கு வேண்டிய நாற்பது பேர்களில் சேர்ந்தால் அந்த ஜும்ஆ கூடவே கூடாது. எ-று.

வேறு,

அளவு முழுதுந் தெரிந்தகுரு னறிந்தே பறுலு சுன்னத்துக
ளுளமீ துணர்ந்து கலிமாவை யொருநா ளினுமாறு தீனோர்
பழகுந் தீனி னிசையுடையோர் படைத்தோன் பேரிற் பேராசை
யளேயுங் கிருபை மூமினவ ரஷகா கிடுநாற் பதுபெயரே. (6)

(ஞா-பொ-ரை):—மறுபடி எப்படிப்பட்ட கனவான்கள் அந்த தீய்தான ஜும்ஆவுக்கு லாயக்காகுமென்றாலோ. இஸ்முடைய தர்த்தீபின் அளவு அந்த முழுவதுந்தெரிந்து கொண்டதோடு கூட குர்ஆனின் அத்தியங்களிலும் சூறுக்களிலும அநேகம் மனப்பாடம்பண்ணி ஒரு சிறிதாகிலும் அவைகளின் அர்த்தங்களேயும்தானுகவோ, அல்லது உலமாக்களின் மூலமாகக் கேட்டறிந்தோ கொண்டு. ஷற இன்பேரிலும் அமல் பேரிலும் சதாவும் மனப்பூர்வமான ஆசையாகவும் கண்டைப்பிடியாகவும் இருந்து வருகிறவர்களாகவும், அன்றியும் இஸ்லாமுடைய. தொழுகையுடைய பறுலு சுன்னத்து. முஸ்த ஹப்பு. வாஜிபு. முதலிய ஷர்த்துகள் ஒன்றையும் விடாமல் எடுத்து நடப்பவர்களாகவும், கலிமாவை எப்போது இஷ்க்குடனே வாயுச்சரிப்புமன உச்சரிப்புடையுவர்களாகவும், அல்லாவின் பேரிலும். அவன் றசூலாகிய நமது நாயகமவர்களின் பேரிலும் சர்வ நம்பிக்கையுடைய பேராசை தூண்டிய உள்ள முடையவர்களாகவும், அன்றியும். இஸ்லாமான ஜனங்கள் பேரில் கிருபை இரக்கம் சமய உதவி ஒத்தாசை. செய்கின்ற. மூஉமீன்களாக நாற்பது பேர்கள் கூடினவுடனே தான், ஜும்ஆத்தொ

மூகையானது. சரிவர நிறைவேறப்படும். இந்த ஒழுங்கில் ஏதேனும் தவறுதல் வரவேகூட்டாது. எ-று.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

குறித்தநல் மூமீனுனோர் குத்துபாக் கேட்கவந்தோ
ரறிந்திட வோதும் கத்தீ பவர்மொழி செவியுருரு
பறைந்திடி விருந்தோர் குத்து பாப்பலன் குறைவா மென்ன
நிறைந்திடுங் கருணை யாதி நிகழ்த்தினன் குருனிற் குள்ளே. (7)

(ஞா-பொ-ரை)—இன்னமும் மேலேகுறித்த மூமீன்கள் நாற்பது பேர்களன்றி. மற்றவரப்பட்டவர்களில் சிலராவது. பலராவது. குத்பாப்ரசங்கம் செய்யும்போது. அந்தகுத்பா ஓதும்கத்தீபானவர் சொல்கின்ற நல் வசனத்திற்குத்தங்கள் செவிகளைக் கொடுத்து அமைதியுடனிருக்காமல் ஏதாகிலும் ஒருவருக்கொருவர் தங்கள் பரிவர்த்தனைகளைப்பற்றியாவதுவேறு விதத்திலாவது பேசிக்கொள்ளும் பட்சத்தில் அந்தக் கெட்டவர்களின் குற்றத்தினால் பக்கத்தில் இருந்த நல்லோர்களின் குத்பாத்தொழுகையின் பலனுக்கும் உடனே குறைவுவந்து நேரிடும் என்று உலகெல்லாம் பரிபூரண மயமாகிய, அல்லா. தன் கலாமுல்லாவில் திருவுளம் பற்றினான். எ-று.

தங்களின் முஷாஹி தாவுந் தரித்திடு முருக்க பாவும்
பொங்கிய அறிவுதன்னுற் போற்றியே புலம்பல் தானு
மிங்கிதத் தூக்க மூர்க்க மியல்பிலாச் சோம்பல் சாய்தல்
முங்கிய வெட்டுந் தங்கள் முறைகுத்து பாவுக்காகார். (8)

(ஞா-பொ-ரை) ஷரீஅத்தில் சொல்லியபடியல் லாத. வேறுரகசியவழியில் அல்லது, பதினான்கு வகைப்பட்டகான்வாதாக்களில்நிர்ணயித்திருக்கின்ற உண்மையான முஷாஹிதாஇருப்பில் இருந்தாலும், அல்லது, தன்னைமறக்கப்பட்ட மஸ்த்தான்களின் முருக்கபா இருப்பானாலும். சரிஅவைகளும். இன்னும்ஞானத்தின் இஷ்க்குப்பொங்கிமனம் புலம்புகின்ற திவ்யபாடல் புலம்பல்களும். அல்லது தன்னைமறதி வருத்தும்படியான நித்திரை செய்தாலும், இரத்தமூர்க்கத்தினால் ஏற்படும் சோம்பல்களும் முதுகுக்கு அணைதாங்கல்வைத்து அதன் பொறுப்பாக சாய்ந்திருக்கிறதும்,

இன்னும்துயில்சரீரம் அழுக்கு துப்புறவின்மைகளைப்பற்றிய பல அங்கிஷயங்களும், ஷை :ஜும்ஆகுத்பாவுக்காகாத கருமங்களாக இருக்கும். எ-று.

ஒருவரோ டொருவர் நக்க லொடுமொழி பேசினாலும்
அருவருத் தேப்பஞ் சத்தி யஃதொடு மசதிபுத்தி
வெருவுத லச்சங் கூச்சம் வேலையான் றியற்ற லெல்லாங்
குருமொழி குத்துபாவிற் குறுமென்க் குறுனிற் சொன்னான். (9)

(ஞா-பொ-ரை):— இன்னும் குத்பாநேரத்தில் பள்ளிவாசலில் வந்துகூடின முஸ்லீம்கள். ஒருவருக்கொருவர் ஏதுகருமத்தைப்பற்றியாவது.மினவிக்கொள்ளுதலும், வாய்திறந்து பழக்கம்பேசுதலும் மனஸிஅருவருப்பான.ஏப்பம் கீறுபூறென்றுகாறல்செய்தாலும்சத்திசெய்தாலும்புத்திமாறும்படியானசரீரஅசதிகொண்டிருந்தாலும்.பித்தம்அதிகரித்ததாலோ அல்லதுவேறுஎந்தவிதத்தாலோ மனநடுக்கங்கொண்டு உடலம்வெறுக்கொண்டாலும்,அல்லது உடம்பில் அதிகப்படான கூச்சங்கொண்டுசொறியத் தலைப்பட்டாலும், அல்லது.ஏதாகிலும்வேலைசெய்துகொண்டிருந்தாலும்,இவையாவும் றசூல்நாயகமவர்களின் ஸ்தானத்தில்நின்று கத்தீபானவர்செய்யும் நல்உபதேசமாகிய.குத்பாவுக்குஅறவேகூடாதபொல்லாதகருமங்களாக இருக்குமென்று. குர்ஆனில் அல்லாதிருவுளம்பற்றிஇருக்கின்றான். எ-று

செவியுங் குறைவாகிச் செவிச்செவிடுவும் சிறப்பின்மேனிமேற் சிரங்கும் வங்கும்-குவியுங் குரங்குபோல் மேனிகூனிக், கொஞ்சங் கீழ்த்தாடிசிறைத்தவரும்-புவிபிற்றலையிலீர்வண்ணமாகப், பொருத்திச் சுல்பாக்கள் வைத்தவருங்-கவியு மறுக்கண்ணோர் முகங்கறுத்தோர், கழறும் குத்பாவின் கணக்கிற்காகார். (10)

(ஞா-பொ-ரை):—இன்னமும் ஜும்ஆவின்தொழுகைக்குச்சேரக்கூடிய நாற்பது பேர்களில் ஆகாதவர்கள் யார்யாரென்றால்: செவியில்லாதும் கோரையானவர்களும்.செவியானதுகேளாத செவிடர்களும் சரீரமுழுவதும் சிறங்கும் வங்குமாக அருசையானவர்களும்,கிழக்குரங்குபோல் சரீரங் கூனல்விழுந்தவர்களும், ஷறீஅத்திற்கு விரோதமாக.தாடியைக்கொஞ்சம்விட்டு மற்றஎல்லாத்தையும்

அறக்களைந்தவர்களும், பெண்களைப் போல்தலையில் ஈரும்பேனும் உலாந்தும்படியாக சல்பாமயிர் வளர்த்து மினிக்கிக்கொள்ளப் பட்டவர்களும், இன்னும்கண்களில் மாசுமறுவுடையோரும், அல் லாவுடைய லஅத்துக்கு அடையாளமாக முகத்தில்கறுப்பு விழுந் தவர்களும் ஷெநாற்பதுகணக்கிற்கு ஆகவேமாட்டார்கள். எ-று.

மஸ்தா னனவர் தலைவிரித்தோர், மருளு முடியொடுங் தாடி யொடு-முஸ்தாதுகளெனச்சொலிப் புழுகி, யுடம்பெல்லாம்பூசுமண மிகுத்தோர்-மஸ்தாய்க் கள்ளுட னரக்குமுண்டு, மருளுமிருகண் ணுஞ் செவந்தவரும்-விஸ்தாரக் குத்துபாவுக்காகார், வேந்தன் றொழுகைக்கு மாகாரென்றுர். (11)

(ஞா-பொ-ரை):— மஸ்தான் மார்களைப்போல் தலையைவி ரியவளர்த்து அழுக்கும் சிக்குமாக ஜனங்கள் மருளும்படியாக, தாடியை ஏகமாய்ப் பின்னலாகவளர்த்து தெரியாத ஜனங்களிடத் தில் தான் வடதிசைக்கு அப்தால் என்றும், ஷெய்கு என்றுஞ் சொல்லிப் புழுகிக்கொண்டலைகின்ற பகல்வேஷப்பீர்மார்களும், இன்னும்ஷரிஅத்திற்காகாத சவாதுபுனுகுமுதலான கெட்டிவாசங் களை உடம்பெல்லாந்தடவிக்கொண்டு திரிகிற டம்பாசாரிகளும், இன்னும் கள்சாராயம் அரக்குமுதலான வெறிவஸ்துக்களையரு ந்தி கண்சிவந்துவருகிற வர்களும் ஷெ குத்பாவுக்கும் ஆகமாட் டார்கள் மற்ற தொழுகைக்கும் ஆகவேமாட்டார்கள். எ-று.

ஒருபக்கம்சாய்ந்த தலையுங்கண்ணு, மொருகை யொருகாலும் வளைந்தவரு-மருவும் வங்கொடு சொறிசிறங்கும், வாதக்கால் நடுக் குள்ளவரும்-பருவந் தப்பிய மூப்பினோரும், பழைய வலுப்பிடிப் பில்லாதாரும்-இருபதிருபது பெயர் கணக்கிற், கிணங்கா ரென இறகு லோதினர். (12)

(ஞா-பொ-ரை):—ஒருபக்கமாகச்சாய்ந்திருக்கும் தலையுள்ள வர்களும் அதேமாதிரியான கண் உடைவர்களும் ஒருகையும் ஒருகாலும் வளைந்துள்ள வர்களும், இன்னும் காலில் வாதமுதலிய முடக்கு வியாதி தோன்றியதால் நடுக்குள்ளவர்களும், இன்னும் பருவந்த வறியதால் குறுகுறுத்துப்போன கிழட்டு ஜனங்களும்

ஷெகுத்பா வுக்குடைய நாற்பது பெயர்களில் சேரமுடி யாது. எ-று.

சீத்தை வடிகாதுங் கணிற்பீழையும், சிறப்பில்லா வாயுங் குஷ்ட முள்ளோர்-மாற்றக் குபிரேடுறவுள்ளோரு, மந்திரம் பேயோ டுறவுள்ளோரும்-வெற்றுப் பாஷைபாற் பலகாலமும் வீங்கிக் கூத்தாடித் திரிவோர்களும்-வார்த்தை மருட்டமானவரு, மனுநாற்பது பெயர்க் காகாதென்றார். (13)

(ஞா-பொ-ரை):—காதில் சீழ்வடிகிற வர்களும், கண்களில் பூழை சாடுகிறவர்களும், வாயில்அவதியானபுண்பொடி முதலிவை கள்உள்ளவர்களும்.குஷ்டரோகிகளும்மாற்றமானநஸராக்களுடன் கைபிடி உறவாடிக்கொண்டுதிரிகிறவர்களும்மந்திரஉச்சாடனங்கள் செய்து.கழிப்பு முதலியவைகளைச்செய்கின்றமந்திர வாசலாத்துக் காரர்களும், பேய் வசியக்காரர்களும் இங்கிலீஷ் முதலிய,அந்நிய பாஷைகளைக்கற்று. அதன்பேரிலேயே மன இச்சை வைத்துமார்க் கத்தைப்பேணமல் திரிகிறவர்களும் ஒருவர்க்குக்கொடுத்தவார்த் தைப்பாட்டை முறிப்பவர்களும் ஷெகுத்பாவின் நாற்பது பேர் களின் கணக்கிற்கு ஆகமாட்டார்கள். எ-று

சாரையரவுபோல் மேனியுள்ளோர்,சகலஜனங்களும் பொய்ய னென்போ-பேரை யாருடிப் பலகாலமும்,பேயை விரும்பிய பேர் கள்கற்பி-ஞரை முகநோக்கி முரையிலாம, லடித் தடித்துதான் பேசும்வீணர்-ஊரைக் கோட்சொல்லிக் கெடுத்தவரு, மொருவன் குத்துபாவுக் கொண்ணுரென்றார். (14)

(ஞா-பொ-ரை):—இன்னும்சாரைப்பாம்புபோல்தேகவாக்க ர்களும் ஊரில்நாட்டில் சகலமானஜனங்களும், இவன் பொய்பேசு கிறவன் என்று தூற்றப்படுகிரவர்களும்,இன்னும் ஸ்திரிகளை உபா யமந்திரங்களாற் கெடுக்கப்பட்டவர்களும், இன்னும் பெண்களிரு க்கும் இடங்களுக்குவெட்கமில்லாமல் வந்துவலியப்பேசி உறவாடு கிற ஜிணப்புலிகளும் இன்னும்பெண்களை வீணுக்கு அடித்து வம்பு செய்கிறவர்களும், ஊரைக்கோள்குண்டிணி முதலியவைகள் சொ ல்லிகெடுத்தும் கேட்டோர்களும், ஷெ குத்பாவுக்கு ஆகமாட்டார் கள். எ-று.

கூட்டும் அலிபாச்சு, அவ்வலாச்சு கோமான் லாகிறுமுடிவ்மாச்சு சூட்டிமறந்தாக்கால் ஹறுமாச்சுது, சொல்லையடக்கினால் பாத்தினாச்சு-நாட்டிக் கலிமாவைப் பராக்காக்கினால், நலுஹறு பாச்சு லாகிருச்சு-மூட்டி யுறங்கினால் மவுத்தாச்சுது, முற்று மூற வாகு மிசைகளெல்லாம். (15)

(ஞா-பொ-ரை):—குத்பாவின் தர்த்திபுகள் இப்படியாகவே. ஆககூடியஐந்துஒக்து தொழுகையெல்லாம், அலிபென்கிற அச்சரத்தினால் உண்டாக்கப்பட்டு, கல்குகளை உற்பத்திசெய்வதற்குமுன்ன மேவெளியாக்கப்பட்டு அல்லாவின் திருக்குர்ஆன்படிவெளிப்படையான லாஹிறுவணக்கங்கள் அந்த அலிபின்சூறத்திலேயே ஸம்பூரணம் ஆய்விட்டது. அதைமறந்துவிட்டால் இன்ஸான்களின் நடவடிக்கையடங்களும் ஹறுமென்றேகுறிப்பிடப்படும். அல்லது. அல்லாஹு என்னும் சொல்லிலடக்கிக்கொண்டு வணக்கஞ்செய்யவேண்டுமானால் அதுபாத்தின்படியான வணக்கமாய்விடும். இருதயத்தில் இல்லல்லாஹு என்னும்கலிமாவை நினைவில்வைத்துஅதுவேபராக்காக்கினால் வாசியின் கணக்குத்தெரியாத ஒருகுறைபாலே அதுவும் லாஹிறானவணக்கத்தில்தான் சேரும். அல்லது. வாசியுடன்கலக்கச் செய்து. நித்திரைசெய்தால் அதும்வுத்தாகி இந்தசரீரஸ்தூலம் பனாவாகிவிடும்-அப்போது. பூதகருவிகளெல்லாம் உனக்குவசியமாகும். எ-று.

நல்லறேய்தானே பீஸபீலாம், நலமானதாலே யொலியதாச்சு-அல்லலானது மிருளதாச்சு, அல்லாஹு அனா இல்லாஹியெனும்-சொல்லுக் கடங்காத சிபாதானது, சொல்ல இலாஹாச்சு ஐனதாச்சு-எல்லைக் கடங்காத இறுஷாதெனும், ஈமானஃதாச்சு கபூலாச்சுதே. (16)

(ஞா-பொ-ரை):— அன்றியும் றேயானது.ஷரீஅத்தின் விதிப்படி பீஸபீல்ஆகிவிடும். தாலானது. ஒலிமார்களில் சேர்க்குங்குணங்களாயிற்று. அந்தகார இருவினைகளானது, இருளானதாயிற்று. அல்லாஹு அனாஇல்லாஹி. என்னும்சொல்லுக்கடங்காத தவமணிமந்திரங்களானது, எல்லாங்கூடி கடைசியில் இலாஹ. என்ற

ஒருசொல்லாயிற்று. அதுமகாமானது. இருநேத்திரங்கள் என்ற ஒருகுறிப்பு ஆய்விட்டது இரவென்றும். பகலென்றும் ஒருஎல்லையில் அடக்கமுடியாத இருஷாது, என்றதுமனஉறுதி என்ற. ஈமானுடையநிலையாய் விட்டது. அதுவே சகலதவங்களும் முத்திவரங்களும் கபூல்செய்யும்படியானதாக ஆய்விட்டது. எ-று.

மாற்ற மில்லாத அலிபான்து, மன்னன் ஷரீஅத்துத் தானுச்சுது-ஏற்றமாகிய நிலவதாச்சு, எங்கே யாச்சுது-றாஹானது-ஆத்துமாவான ஹயாத்தானது, அன கூவாச்சு முஹீமாச்சுது-சாற்றும் சுஜூதாச்சு மீமாச்சுது,தனியோன்தாலாச்சி இஃத்திதாலே

(ஞான-பொ-ரை):— இன்னும்அலிபானது, ஷரீஅத்துமாய் விட்டது. இன்னும்அது. சந்திரனுகவெளிச்சம் செய்கிறது. இன்னும்அது ஸமதியத்துடைய புரத்தில்உலகமெல்லாம். கலந்து கொண்டிருக்கின்றது. அதுவேசரீரங்களுக்கு பிரதான ஆத்மாவாகவும் இருக்கின்றது. அன்றி றாஹாவ்குதுவியானது. ஹூவாக இருக்கின்றது அதுவே முஹீம் என்றுஞ்சொல்லப்படுகிறது. இன்னும் ஸூஜூதாகிறது. மீமானதாக இருக்கின்றது. இன்னும் தாலானது. இஃதிதாலாக யிருக்கின்றது. எ-று.

முந்தஷரீஅத்து நிலையாச்சுது,முற்றும் அலிபான தக்பீறிலே சொந்தமாகிய றுக்கூஆனது, துய்யோன் கேயான தரீக்கத்தாச்சு அந்தமாகிய மீமானது, மருளாம் ஹக்கீக்கத்து ஸூஜூதார்சுது-சிந்தை தெளிவான தாலானது, செய்ய மஃரிபத் தாச்சுதென்றார்.

(ஞா-பொ-ரை):— இன்னும் அலிபின் நிலையானது. ஷரிஅத்தாய்விட்டது அலிபுடைய முழுஉருவமும் தொழுகையின் தக்பீரதக இருக்கின்றது.இன்னும் றுக்கூனது. ஹேயாகயிருக்கும் அதுவே தரீகத்தாக இருக்கும். இன்னும் சுஜூதுஆகியமீம் என்றது. ஹக்கீகத்து ஆகஇருக்கும். இன்னும்தாலானதும் அரிபத்தாக இருக்கும்.என்றார்கள் றசூல்நாயகமவர்கள். எ-று.

குத்துபாப் படலம்.

பூரணமாயிற்று.

ஆகப்படலம் 5-இ திருப்பாடல் 98.

# வாங்குப்படலம்.

## தொடங்கல்.

பாகமுடன் சொல்லும் வாங்குதனிற், பறுலு பதினொன்றுண் டுரைக்கக் கேளீர்-ஆகந் தனிலொருவாங்கோதிட அறியும் புகழுள் ளா னாகவேணும்- ஆகு மிசுலமா யிருக்கவேணு, மரிய மதியுள்ளா னாகவேணும்-காயும் ஹறுபுறுகள் திருத்தத்தோடு,கலிமா விபரமாய் மொழியவேணும். (1)

(கு-பொ-ரை):—பள்ளிவாசலில் ஐந்துவேளைகளிலும்சொல் லப்படுகிற.வாங்குஎன்னுந்தொழுகை அழைப்பில்பதினொருபறுலு கள். உண்டும் அதைச்சொல்கின்றேன் கேட்டுக்கொள் வீர்ளாக அதாவது மார்க்கப்பிரகாரம் வாங்குசொல்கிறதர்த் தீபானதை நல்ல மனனஞ் செய்திருக்கவேண்டும். அதிலும் அவன் இஸ்லாமா னவனாக இருக்கவேண்டும். இன்னமும் அக்குல் நல்லநிறை பூரண மாக இருக்சவேண்டும் இன்னும் அவனால் சொல்லப்படும் பாங்கு சப்தத்தில் அட்சரங்கள் யாதொரு பிசகில்லாமல் பிறக்கவேண் டும் கலிமாக்கள் எல்லாம் வாய்ப்பாடஞ்செய்திருக்க வேண்டியது அதன் அர்த்தமுந்தெரிந்தவனாக இருக்கவேண்டும். எ-று.

சத்தந் தகுதியதாகவேணுந், தணியா வங்கிஷ மாகவேணும் கொத்தி னொழுங்காக மொழியவேணும்,குறிப்பால் நேரங்களறிய வேணும்-ஒத்தனாகநின் றோத ேணுவ, முறுதி அறப்பாகவுரைக்க வேணும்-பத்தாக் குபிருண்டும் வாங்கதனிற், பகரக் கேளுங்காள் தீனோர்களே. (2)

(ஞா-பொ-ரை):—சப்தமானது நல்லதகுந்த படி ஓசையான தாக இருக்கவேண்டியது. இன்னுமவன் இளப்பமில்லாத வம்மி ஷத்தானை நாட்டான் மகனாக இருக்கவேண்டியது. ஒத்துநேரங் களை நல்ல ஒழுக்கமாக அறியத்தெரிந்தவனாக இருக்கவேண்டி யது அதன் குறிப்புகளையும் நல்ல ஒழுங்காக அறியவேண்டியது. பாங்கில் ஒருத்தனாகவே நின்று சொல்லவேண்டியது அவ்விதஞ் சொல்வதை அறபிவாக்யத்தால் சொல்லவேண்டியது இன்னும் பாங்குசொல்வதிலே பத்து குபிர் இருக்கின்றன. அவைகளின்

விபரம் கீழ்வருமாறு சொல்கின்றேன். முஸ்லிமான பிறவிகள கேட்டுக்கொள்ள வேண்டியது. எ-று.

அல்லாஹெனச் சொல்லும் அலிபதனை, ஆக்கமுடனே தானீட்டினலும்- அக்குப றென்றிடு பெதனின், அலிபை யுரமாக விரைத்திட்டாலு -அஷ ஹது என்ற ஹேய தனில், அலிபையுரமாகநீட்டினலும்-ஹேயா வோதவேண்டிய் விடத்தில், கேயாகவர வோதினலும். (3)

(ஞா-பொ-ரை):—அல்லாஹு என்று சொல்லும் அரும்பதத்தையுடைய அலிபை. நன்ருய்வரும்படி நீட்டி விட்டாலும் அக்பர் என்ற பதத்தில் வரும் பேயில் அலிபை நல்லபடி உரைத்து. நீட்டினலும், அஷ்ஹது என்றதில் வருகின்ற ஹேயில் அலிபை நீட்டி உச்சரித்தாலும், இன்னும் ஹேயாகவோத வேண்டி இடத்தில் கேயாக உச்சரித்தாலும், (இன்னும்) எ-று

இல்லாஹு வெனும்லாமதனி,லிசைந்த ஷத்தினைவிட்டிட்டாலும்-அஷ ஹதென்கிறதலத்திலேதான், அலிபைமறந்துதானயர்ந்திட்டாலும்-முஹம்மதெனச் சொலும்ஹேயிலேதான்,மறந்தங்கலிபைத்தான் மொழிந்திட்டாலும்-ஹைய அலஸ்ஸலாத் தென்னும் ஏயை, ஹையா வெனச்சொலி யுரைத்திட்டாலும். (4)

(ஞா-பொ-ரை):—இல்லாஹு என்கின்ற லாமில் பொருந்தி வருகிற ஷத்தினை மறந்தோ அல்லது தெரியாமலோ விட்டிட்ட போதிலும், அஷ்ஹது, என்கின்ற ஸ்தானத்தில் வரக்கூடிய அலிபை எப்படியோ அசதி மறதியிலாவது விட்டுப்போட்டு வோதினலும், முகம்மது என்று சொல்லக்கூடிய ஹேயில் மறந்தாவது அலிபை உச்சரித்து விட்டபோதிலும் இன்னும் ஹைய அலஸ்ஸலாத் என்ற இடத்தில் ஹய்ய அலல்பலாஹி என்று சொல்லி விட்டாலும். இ-ம்.

ஹைய அலல்பலா ஹெனுமெழுத்தில் ஐனை யுரமாக நீட்டினலும்-ஹையவெனச்செப்பும் எயிலேதான், கடந்தஷத்தினைவிட்டிட்டாலும்-இந்தப் பத்திலுங் குபிர்விளையு, மிசைந்த பதினெரு பறுலுகளும்-அந்த மூடனே தானறியாத பேரவர்கள் வாங்கிடப்பொகாதென்னர்- (5)

(ஞா-பொ-ரை:— ஹையஅலல்பலாஹ் என்ற. மொழியை மாற்றி. ஐயஅலல்பலாஹ் என்றுமாருட்டமாகச் சொன்னாலும், இன்னும் ஹையஎன்றுசொல்லும் மொழியில் ஏயில்இருக்கும்படி ஸத்தைவிட்டாலும், இந்தப்பக்குவகையிலும் குபிரானது உண்டாகும். ஷெ பறுலுகள்பதினொன்றும் அறியாதவன்திட்டமாக. வாங்குசொல்வதற்கு நியாயத்தில் உள்ளவனாகமாட்டான் எ-று.

எல்லா இமாம்முக்கும் இமாமிறசூ.லெடுத்தேயோதின பிக்கு ஹதிலே-எல்லா இமாம்களூ மிதைஹதீதா. யெடுத்துச் சொன்னார்கள் கித்தாபதிலே-நல்லமுஃமீன்கள் முஸ்லிம்களும், நடந்த முறை தனை யறியவேண்டி-வல்ல சல்ல முல்லா வென்னுங்கி தாபிஸ்.மழுத்தும் வழுத்தலை யுரைக்கலுற்றும் (6)

(ஞா-பொ-ரை-:)—எல்லா இமாம்களுக்கு முன்னிலையாகிய அசல் இமாமாகிய நமது நபியாண்டவர்கள் தங்கள் திருவாய்மலர்ந்து ஹதீதில்எடுத்துச்.சொல்லியபடியாலே மற்றஇமாம்களெல்லாம் இந்தஹதீதில் நின்றும் இபாறத்துச்செய்து பிரசங்கித்தார்கள். இதைநமது பிறவிமார்களான முஸ்லிமானஜனங்கள் இந்த விளப்பத்தையறியும் பொருட்டு. கலாமுல்லாஎன்னும் கிதாபில் சொல்லிய பிரகாரம் நாமும்இங்கே நல்லவிபரப்படுத்தி விட்டோம். எ-று

எப்போதும் நெறி நீதமுள்ள, எங்கள் நபியிறசூலுல்லாக்குத் தப்பாமல் இபா தத்துச் செய்யத் தனியோஅனிபிவித் தானெவே பெய்பாகிவாஜிப் சுன்னத் தென்றும், விளங்க ஜிபுரில் தமோதினர்- நட்பாம் நாற்பது சுன்னத்தையும்,நவிலு மறு மூன்று ஷறுத்தையுமே, (7)

(ஞானவுரை):—எந்த நேரமும் நீதமும் நெறியு முள்ள. எங்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு யாதொருகாரிய முங்தப்பாமல் அவர்களும் அவர்களின் உம்மத்துக்களான நாமளும் அல்லாவை வணங்கிக் கொள்ளும் பொருட்டு அல்லாகுத்த ஆலா இவைகளை யெல்லாம் நமதாண்டவர்களுக்கு. எடுத்துப் போதனை செய்தான். அவைகளை ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சுன்னத் தென்றும், வாஜி பென்றும் பறுலென்றும் மக்ருஹ்ஹறு மென்றும் விபரித்து வுரைத்தார்கள். மொத்தம்

இஸ்லாமானவன் அறியவேண்டியது. நாற்பது சுன்னத்தும், பதினெட்டு ஷர்த்து மாக இருக்கும். எ-று.

இந்தவகைரண்டு பறுலாறையு,மேக நாயகன் வாங்கிச்சொல் லவ்-இத்தச் ஜிபுரீலே யழைத்து நீவிர், தூய நபிக்குதான் விளம்பு மென்றான்-அந்தப் படியேதான் முஹம்மதனை ரரிய கண்டுங்கு மப் போதிலே-வந்து சொல்லின ரமரர்கோமான்,வரிசைநபியுல்லாகன விற் கேட்டார் (8)

(ஞா-பொ-ரை:—மேற்கூறிய வகை இரண்டையும் ஆறுபறு லையும் வாங்கு சொல்ல வேண்டிய தர்த்தீபில் நபியாகிய என்ஹபி புக்கு. ஜிபூரிலே நீர்போய்ச் சொல்லுமென்று கட்டளையருளினன். அவ்விதமாக நமது நபிகள் சிகாமணியவர்கள் இரவையில் நித்தி ரைசெய்யும்போதில் ஜிபுரீல்வந்து சொப்பனஞ்சாதித்து ஷெவிதிக ளெடுத்து உரைத்தார். எ-று.

ஆபியத்தான ஆல நபி, யருளிச் செய்தார்கழ் மூமின்களுக்குச் சூபியத்தான கித்தாபதிலே, சென்னன்னையகனவனருளாய்த்,தாவி யுரைத்ததை யுலமாகேள,சாட்டுடு பறுலாரையூட்டுகுறேன், கூவி யத்தான அறுவகையாய்க்,கூப்பிட வாங்கிற்பறுலாமென்றார் (9)

(ஞா-பொ-ரை:— எந்தநாளும் ஹயாத்துள்ள வர்களாக இரு ந்து. வாழுகின்ற எங்கள் தயாபரக்கடவுளானநபிகள் கோமான் அவர்கள் அதைத்தங்கள் உம்மத்துக்கிடையில் விபரித்துக்காட்டி னார்கள். சூபியத்தான கிதாபாகிய அவன் குர் ஆண்ஷரீபில் அல் லாகுத்தஆலா திருவுளம்பற்றினன். அதைஇமாம்கள் தங்கள்கிதா புகளில் அருமையுடன் வருவித்திருப்பதைநான் உலமாக்கள் அறி ந்து கொள்ளும்படியாக இங்கேசொல்லிவிட்டேன். அதாவது. ஆ றுபறுலும். வாங்குஸப்தம் கூப்பிடும்போது. ஆறுவகையாக வோ தவேண்டியதாக இருக்கும். எ-று

ஆறுதரம் அல்லாஹூ அக்பர் அஷ்ஹது இரண்டு தரமா கவும் பேருள்ள ஹைய அலஸ்ஸலாத்தும், பிசகிலாஹைய ஹலல் பலாஹும் ஊறு மிஃதிரண் டான தொடு, முணரும் லாஇலாஹ இல்லல்லாஹு மீறு மிவையாறுவகை யானதை, மேலோன் பறு லெனவிளம்பினனே. (10)

(ஞா-பொ-ரை:— அந்தஆறுபறுலாவது என்னவென்றாலோ ஆறுவிடுத்தம். அல்லாஹு அக்பர் என்றும். அஷ்ஹது. இரண்டு விடுத்தமும் சொல்லுகிறதாக அப்பால் ஹய்ய அலஸ்ஸலாத்தும் ஹய்ய அலல்பலாஹும் இவ்வுகள் இரண்டிரண்டு விடுத்தமும். அப்பால் லாஇலாஹ இல்லல்லாஹு. என்றும் ஆகஇந்த ஆறும் ஆறுவகைபடுத்தி அல்லாகுத்தஆலா ஆறுபறுலாக விதித்தருளினான். எ-று,

இந்த வகையாறு முதலிற்சொன்ன, இனிய ஆறுமே பறுலா
மென்றார்-பிந்திச் சொனவாறும் பேணுமெனப், பெரியோன் குறு
ஆனிலே யோதினான்-கொந்துவீசிய மகையர்னது,கோமான்தான்
அக்குபர் றெனவே-சிந்தை தெளிந்துள வுலமாக்களே, செப்பு
வேனினிப் பனிறண்டயும். (11)

(ஞா-பொ-ரை:—மேற்கூறிய இந்த ஆறுவகையும் நான்முன் பாராவில்கூறியுள்ள. அல்லாஹு அக்பர் என்றஆறுவகையுமே ஆறுபறுலென்று நபிநாயகமவர்கள் திருவாய்மலர்ந்து.கூறினார்கள் பிந்திச் சொன்னதான மூவிரண்டு ஆறுவார்த்தையும்பறுலைப்பேண வேண்டியதென்று. அல்லாகுத்தஆலா குர்ஆனில்திருவுளம்பற்றினான். இன்னொரு சங்கையான பறுலானது. ஒன்றிருக்கின்றது. அதாவது. அல்லாஹு அக்பர் என்கிறதாக இருக்கும். ஓ! அறிவை இருதய களஞ்சியத்தில் நிரப்பிவைத்திருக்கின்ற. உலமாக்களே! இதைநல்லதெளிவாக உணர்ந்து கொள்வீர்களாகஇனிவரும் கீழ் பாராக்களில் மற்றபன்னிரண்டு பறுலுகளையும் நல்லவிபரப்படுத்துகிறேன். எ-று

அல்லாஹுவென்று முதலிற் சொல்ல,அதவேபறுபலாஹு
மதின் பிறகே- அல்லவென் றறைந்துதிரஞ்சொல்வ,மதுவேஷறுத்
தாகு மென வோதினர்- வல்லான் ஹையரண்டோதுவகை,வகுத்
தான் ஷறு தெனவகையாகவே-ஒல்லா வுள்வாங்கு ஷறுத்தெத்
வே, யோதினான் பதினேள்ளானதோ. (12)

(ஞா-பொ-ரை):—எப்படி யென்றால் அல்லாஹு அக்பர் என்று முதலாவது. சொல்வதானது ஆறுபறுலையும் அடங்கிவிட்டது. அதன் பின்னால் அல்லாஹுவென்று ஐந்து விடுத்தம் ஓதிக்

கொள்வது ஆறுஷறுத்தும் பொதிந்து விட்டது. அப்பால் ஹைய அலல் என்பதில் கெஷ ஆறுஷறுத்துகளும் பூரணம் பெற்றுக்கொள்கின்றது. இதில் மிஃருஜியின் விஜயத்தில் கூறியுள்ள ரஹசியங்களில் ஒன்றான. உள்வாங்கும் ஒரு ஷறுந்தாக இருக்கின்றது; என்று ஆண்டவன் தன்திருக்கலாமில் கட்டளை யருளினான் ஆகக்கூடி. பறுலுஷறுத்துகள் பதினேழாக ஆயிற்று. எ-து.

நல்ல அஷ்ஹது ரண்டினையும், நடக்கும்ஷறத்துப் பத்தொன்பதையும்-வல்ல நாற்பது சுன்த்தென, வகுத்து முறைக்கிறேன் கலாமிற்கேட்டார் அல்லா இருருபிலிருபத் துநான்கருளுங்கஃபாவைப் பார்பதுவும்-சொல்லிற்செவி குட்கை வைப்துவுந், தூற்றும்பின் வந்து சொல்வதுமே. (18)

(ஞா-பொ-ரை):—அத்துடன் அஷ்ஹது இரண்டையும். பாங்குக்கு இன்றிய மையாத ஷறுத்துதள் பத்தொன்பதையும். இன்னும் நாற்பது சுன்னத்துகளென்றும் அல்லா திட்டப்படுத்தி அதாவது பாங்கு சொல்லக்கூடியவன் கஉபாவின் திஃறியைபை நோக்கின எண்ணத்துடன்முன் நோக்கு தலும்இன்னம் பாங்கு சொல்லும் போது இரண்டுகை விரல்களையும் தன் செவிகளில் வைப்பதும், பின்னால் வறக்கூடியசொல்களை நல்ல ஞாபக சக்தியுடன் ஒன்றும்விடாமல் நல்லதீரத்துடன் சொல்வதும், அதற்கு முன்பட ஒலு வென்னும் அவயவத்துப்புறவுசெய்து கொள்வதும், அவன் இஸ்லாமான ஆண் மகனுக இருக்குதலும். தடமாட்டமில்லாத வாலிபனுக இருக்தலும் ஒரு உயர்த்தியானமேடை. அல்லது மேட்டுத்தரை இவைகளைத்தெரிந்து. அதன்மேல் நின்று சொல்லுதலும் இன்னும் விடியற்காலத்தின் தொழுகையான சுபுஹுக்கு சொல்கிறபாங்கில் கடைசியில் அஸ்ஸலாத்துகைறுன்மினன் நவ்ம் என்று கூட்டிச்சொல்லுதலும், இன்னம்பைத்துல்லாவை வலதுபுறமாக்கி நூற்றிருபது அடி நடந்துதன்சீஹுஸலவாத்தும் ஓதிக்கொள்ளுதலும்(இன்னும்)

சூட்டு முலுகொளஇசுலாமாகத், துய்ய வாலிப வாண்பிள்ளையாய்-மேட்த் தலமேலே நிற்பதுவும், விளம்பும் சுபுஹுக்கு அஸ்ஸலாத்தும்கூட்டுப் பைதுல்ல வலதுபுறம், குறித்த நூற்றிருபது

நாலடி-தாட்டி மற்றுள்ள இகுறுகுழும் நற்,றன்சீஹாம் சலவாத்து முன்னே. (14)

எல்லா நிய்யத்த தானதுவு, மினசந்த அந்நேரஞ் சொல்லுவதே-வல்லார் பேச்சொன்றும் பேசாமலேவரிசைறஹாமானோடி நின்று-நல்ல யிபாதத்துச்செய்யவேண்டும், நயந்தவகையான்வாங் கானதை-அல்லலின்றியே சொல்லுவது, மாக நாற்பது சுன்னத் தாமே (15)

(ஞா-பொ-ரை). அப்பால் செய்யப்படுந்தொழுகைகள் எல்லா வற்றிற்கும் செய்யப்படும் நீயத்துகளையும்வாங்குப் படியிலேறிய வுடன். நான்வணக்கத்துக்காக வேண்டி இந்தபாங்குசொல்லவந் திருக்கின்றேன்என்றுநினைத்துசொல்லுதலும், வல்லார்பேச்சொன் றும்அதாவது மார்க்கத்தைப்பற்றியபேச்சுங்கூட அந்தவேளையில் யாருடனேயாவது. பேசாமல் பத்தியமாக இருக்கவேண்டியது, அதுவும் இன்னும் அல்லாகுத்தஆலா வயேதான் மனதின் தியானமாக்கொள்ளுதலும், உடனே சுன்னத்துமுதலான் வரிசை பொருந்திய இபாத்துகளைசெய்துகொள்ளுதலும், சொல்லக்கூடிய வாங்கை நல்ல அழகான குரலோசையுடன் தர்த்தீபாகச் சொல்லவேண்டியது ஆகக்கூடிநாற்பது சுன்னததாக இருக்கும்இந்தப்படியான பறுலுஷறத்து சுன்னத்துகளை யெல்லாம் அறிந்து சொல்லப் பட வேண்டியது. பாங்குசொல்லவேண்டியதில்இவ்வகைதர்த்தீபுகள்இருக்கிறதை கல்விகேள்விகளில் தேர்ச்சி யடைந்துள்ள ஆலிம்கள்கூட நல்ல ஒழுக்கமாகச் சொல்லிக்காட்டுகிறதில்லை. இவ்வளவு ஷறஜப்பற்றிய நல்கருமங்கள் வேதபுராணம் என்னும் கல்விக்களஞ்சியத்தில் புதைந்து கிடக்கிறதை இவ்வளவு. நாளும் யார் அறிந்தார்கள். எ-று.

வாங்குப் படலம்.

பூரண மாயிற்று.

ஆகூ படலம் 6இ திருப்பாடல் 113

# நோன்புப் படலம்

## தொங்கல்.

ஆண்டிற் கொருபிறைபறுலான்த், ஆண்டிலைந்துநாள் தக்கு பீறும்-ஆண்டிலே யொருநாள் ஹஜ்ஜதாம், ஆண்டிலே யைந்து நாளையிலே-தோன்றும் லைலத்தில் கதிரியாகுஞ்.சொல்லத்தொலை யாதேயெக்நேரமும்தாண்டும்பீஸபீல்ஸக்காத்தையுமீ, தனியோன் பறுலைந்து நேரத்தையும். (1)

(ஞா-பொ-ரை:)வருஷத்திற்கொருமுறை முப்பது நாள் பறு லானஉவாசநோன்புளன்றும்.இன்னும்வருஷத்தில் ஐந்துநாள் தக் பீறுடையநாளாக இருக்கிறதென்றும். இன்னும்வருஷத்தில் ஒரு நாள் ஹஜ்ஜாகஇருக்கிறதென்றும் வருஷத்தில் ஐந்துநாளையில் லைத் துல்கத்ரி என்னும் திருராத்திரி வருகிறதென்றும், இன்னும் எந்த நாளும்எந்தநேரங்களிலும் ஸகாத்தென்னும்தர்ன தர்மங்களும்,ஐந்து வேளைகளில் இபாதத்துக்குச் செய்யும்படியான பறுலுதொழுகை யும்; தீன்மார்க்கத்துக்காக சத்ருக்கள் பேரில் அடங்கேறுகின்ற பீஸ்ஸ பீல் என்னும் மார்க்கயுத்தமும் முஸ்லிமான கனவான்கள் பேரில்விதியாக்கப்பட்டிருக்கின்றது, எ-று

நேரமடியென்ன நீளமென்ன, நிகழ்த்தும் நடுவென்ன முடிவு மென்ன-ஏர்செய் நிற மென்னஅபயமென்ன, இலங்கும் லைலத்துல் கதிரியென்ன- ஆருமிரவென்னபகலுமென்ன அதபு நெறியென்ன வொழுக்கமென்ன- சார்செய் ஜமாலினின் சகராயத்தி சதமான. வன் சொன்னான் சரியாகவே (2)

(ஞா-பொ-ரை):—இன்னும் முஸ்லீம்களுக்கு ஒக்தையறி தற்காகவேண்டி நேரத்துடைய கணக்கில் தன்னடி. நிழல் சாயல் பார்க்கவும்நட்சத்திரக்குறிப்பைஅறியவும்,நிழல்நீளம்சுருக்கத்தால் இபாதத்து நேரங்கண்டுபிடிக்கவும், அந்தக்குறிப்பில் இந்தநிழல் நடு வாய் இருந்தால் இன்ன நேரம் எனவும், இது கடைசியாகிட் டால் இன்ன ஒக்த்தென்றும் லைலத்துல் கத்ரி என்னும் திருரா த்ரியையறியும் விஷயத்தில் ஆகாயபளபளப்பு. அல்லதுபரிசுத்தம் வெள்ளிகள் அடிக்கிப்பூக்கும் சிங்காரம் முதலிய பல அடையாளங் களில் கண்டு பிடிக்கும்படியாயும் இன்னும் இரவு பகலில்செய்யும்

படியான சில ரகசிய முஷாஹித்தாக்கள் என்றும். இன்னும் உலகத்தில் மனிதவர்க்கத்தார் நடந்துகொள்ள வேண்டியநன்னடைக்கைமுதலிய யாவற்றும் ஜமாலியத்தைப் பற்றி விபரிக்கும் ஆயாத்தில்முதல்அங்கத்திலேயே அல்லர்குத்தஆலாநாயன் திருவிளம்பற்றி விட்டான். அதாவது உலகத்திலுண்டான சர்வஜாதிகளுக்கும்பொருந்தக்கூடிய தரமாக. எ-று

அடிதான் காற்றாகும்நீளம்,ஜலமாகும் நடுவனல் முடிபிரவாம் படிதானுகாய வைந்து மொன்றாய்ப்,பகர வொன்றான நிறமதுவும்-நெடியோன் கலத்தல் கதரியாகும், நேர்மையாகவே யடக்கத்திலே-துடியான் துவர்க்கந்தான் ராவாமது,துலங்கும்பெருநாளும் பகலாகுமே. (3)

(ஞா-பொ-ரை:—.நரன்முன்பாடலில்சொல்லிவந்தஅடி.நீளம் நடு.முடிவு.என்னும்வெளியர்த்தத்திற்கு.புராணுசிரியரானமஹான் அவர்கள், உள் அர்த்தம் செய்கிறார்கள். அதாவது அடி என்பது ஸ்வாசம்என்கிறகாற்றாக இருக்கும் நீளம் என்பதுஜலம் ஆக இருக்கும்.நடுவென்பது.அனல்என்னும்.அக்னியாகஇருக்கும்முடிவு என்பது பிரிவாக இருக்கும் பிரிவென்றால் உலகம்அதாவதுமண்ணாக இருக்கும் இனிதான் என்கின்றஆகாயமான நினைப்பையுஞ்சேர்த்து ஒன்றுபடுத்தும் போது பலவேற்றுமையான நகைகளையெல்லாம் புடத்தில்வைத்து ஊதும் போது அவைகளெல்லாம் எப்படி உருகி ஒன்றாக லேகமாககட்டிவிடுகிறதோ அப்படி மேற்கூறிய ஐந்து கருவிகளையும் நினைவில் வைத்து நினைவுஎன்கிறதுறுத்தியைக்கொண்டு ஊதுகிற பொழுது அவைகள்ஐந்தும்ஒன்றின் பின் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு கடைசியாகஹாஹூல்குத்ஸியாகஒன்றுபட்டுவிடுகிறது இனிபகாவென்கிற ஆகாய ரெங்கானதுலேலத்கல் கத்ரியாகிவிடுகிறது. இனிமொத்தமாகப் பேசப்புகுதும் போது மேற்படி அஞ்சிறுகள் ஐந்தும் பகலாகவும் ஒன்றுபட்ட மேற்படி ஆகாயமானது. இரவாக. முடிவாகிறது. இனிஇதைவேறு விபரிக்கவேண்டிய ரகசியகாரியம் என்னதான் இருக்கின்றது. எ-று.

உம்முல் குறு ஆனும் ஹாசிலானு, லுவந்தென் கோலமால் வார்த்தைசொல்லும்-செம்மல் அலியுந் தோட்புயமுஞ், சிறந்த அலிபுடன் தானுங்கூட்டி-நம்மள் நற்கோல மாயெழுந்து நபிநாயு

கஞ் சொன்னர் சூபியத்திற்-சும்மா சொல்லுவோர் காபிருவர்
தீய்யோன் தபாறக்காம்ஆயத்திலே. (4)

(ஞா-பொ-ரை):— றசூல்நாயக மவர்கள் திருவாயுவுத்யஞ் செய்திருக்கிறார்கள். அதாவது:—மனிதர்களில் நின்றும் யாதாமொருவன் உம்முல் குர்ஆன் என்பதை வாசலாத்தாக்கினுகில் அப்போது, அதுதானுகவந்து அவனது சந்தேஹங்களைக் களைந்துவிடும். இன்னும் அவனுடன் அதுவேண்டிய ஞானவழிகளைப் பற்றியதீர்மான்மான நல்லுபதேசங்களை உனக்குக்கற்பிக்கும். ஆனல் அலிபும், தானும் இன்சானில் மூளையாகவும், தோள்புயமாகவும் எழுந்துநிற்கின்றதோர் ரகசியவரம்பையறிய எவ்விதத்திலும் மனிதன்பாடுபடவேண்டியது. அவசியமாக இருக்கின்றது. என்றுகட்டாயஞ் சொல்லியிருக்கிறார்கள். அதாகிறது தபாறக் என்றதில் குர்ஆனில் சூபியத்துடைய பாராவில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில்யாரும் சந்தேஹம் கொள்வாராகில் அவர்கள் திட்டமாக காபிராகிவிடுவார்கள். ஈறு.

ஆலம்சகீருன தருமதுவாம், ஆலம் கபிருன துமுஹம்மதுவாம்
கோலம் பக்கீருன ஆதமிய்யிற், கூடிமுடிந்ததோரிரண்டு மென்றும்,
காலன் இசுறாயீல் காவல்வந்து, ஹக்கைக் காணுமல் மறைய வைத்
தான்-சூல ஆலத்தைக் கடக்கவேண்டிச், சொன்னர் நபிசூபிக்
கித்தாபானதில். (5)

(ஞா-பொ-ரை):—உலகம் என்று சொல்லக்கூடிய ஆலம்ஸகீருனது. கருமத்தில் அஹமதாக இருக்கும்-பெரியஉலகம் என்றுசொல்லக் கூடிய ஆலம்கபிருனது கருமத்தில்முகம்மதாக இருக்கின்றது. ஆகக்கூடிய. இந்தஇரண்டும் ஆதமிய்யான மனிதவடிவத்தில் நிறைந்திருக்கின்றது. காலனுகிய இஸ்றாயீல் உடையகாவலாகிய பீத்துடைய அதிகாரத்தின் குணத்தினுல் ஹக்காகிய ஒளிவை அதாவது. உஜூதுல் முத்லக்காத்தை அறியமுடியாமல் இன்ஸான் மறந்து விட்டிருக்கின்றன் ஆனதினல் இன்ஸான் தன்னறிவுணர்ச்சி வந்தவுடன். மேற்படியிரண்டு ஆலங்களைப்பற்றி இன்னது. இனியது. என்று. முதலாவது அறிந்துகொள்ளவேண்டியது. அவசியம்வேண்டுமானமுதலாம் ஞானிப்படிக்கட்டாக இருக்கும்,

அப்பால்ஒன்றென்றாய் பின்னால்வரக்கூடிய, கடவுகளையும், கட்க வேண்டிய தென்று கிதாபுசூபியாவில் நமதாண்டவர்கள், நபிகள் பெருமான் அவர்கள் சொல்மதூரம் வார்த்திருக்கின்றார்கள். மனித னாய்ப்பிறந்த ஒவ்வொருத்தனும் இதையறிய வேண்டியது. ஏ-று.

அரிவட்டமதான அஹதியத்தி, னமலே யறிந்தவர் மூன்று மொன்றும்-சுரிவட்டந்தனி லுறைந்திருந்த, துய்ய வஹதியத் தொளியைக்கண்டு-பரிவட்டமதான இருதயத்திலே பரிந்தவாஹி தத்தழகையின்று-குருவட்டமதான நபியிறசூல்;குல் அஹதிலே பாருமென்றார். (6)

(ஞா-பொ-ரை):— அலிபானது. ஒருவட்டமாக வளைந்திருக் கின்ற அஹதியத்தின் தவங்களை அறிந்தவர்கள். அடி. முடி. நடு. வென்னும் மூன்றும் ஒன்றாக சுரி. என்னும் ஞானவலம்புரிக்குள் சம்பந்தப் பட்டிருந்து-வஹதத்தில் வீசுகின்ற பேரொளியைத் தெரிசனைசெய்வார்கள். அந்த வஹதத்தாகிறது. இருதய கமலத் தில் ஒருபரிவட்ட மென்ற போர்வையைப்போல் வளை ந்துமூடிஅழகாக இருக்கின்றது. இதைப்பற்றி குர் ஆனில் குல் அஹது என்றசூறத்தில் பாத்தின்தர்ஜுமாவில் கண்டுதெளிந் தறிந்து கொள்ளுங்கள். என்று. நபிகள் நாயகமவர்கள். சயிக்கினை செய்கின்றார்கள். எ-று.

அலிபும் ஹேயுந்தா லாகமுன்னே, அடங்கலும் மொக்க ஜம் ஆகவே-மெலியா எழுத்திலே கலிமாவான,மேவமுறுஷிது பாதந் தொட்டுச்-சலியா தவனருள் தனதாகிய, தங்கும்வைஹத்துத்தா னாகினால்- ஒலியாம் ஹறுபினை 'மாறுமலே ஒனஹன் னபுசினில் ஹவாவாகுமே. (7)

(ஞா-பொ-ரை):— அலிபும், ஹேயும். லாமும். உண்டாகிற தற்குமுன், வஸ்த்தடங்கலும் மெலிவில்லாத அட்சரமாகிய நுக் தாவில் பொதிந்துகொண்டிருந்ததை யறிந்துகொண்ட இன்சான் காமிலான தகுந்த சற்குருவின் பாதத்தைப்பற்றிப்பிடித்து முரீது பெற்று அவர்களிடம் உதயமாய் வருகின்ற ஞானநசீஹத்துகளைப் பெற்று உணர்ந்து கொள்ளாதபட்சத்தில் இன்ஸான்தன் நப்ஸ்

அம்மாறுவின் ஹவாக்களை விட்டும் கடந்தவனாக. ஒருநாளும் ஆகமாட்டான் எ-று.

களைந்த கலைநாலும் நடுவில்வைத்துக்,ககன கமலத்தி னூடு ருவி- வளர்ந்த அக்கினி வீடுந்தாண்டி, மகாமேரு கிரியதி னூடு பாய்ந்து- அலைந்த முத்தலக் கருளைச்சேர்த்து, அம்பரத் தொளி கடலைத்தாண்டி-யளந்து யீரத்தெட்டி தமூக்கப்பா,லவன்றுன்லாற ப்பஒலா அப்தாக. (8)

(ஞா-பொ-ரை):— நாலுகலையான சந்திரன், சூரியன். ரேசகம். கும்பகம். என்னும் நாலும் நடுவாகிய வைராக்ய நடுக்கொது அதாவது. இருதயகமலத்தில் ஊன்றிக்கொண்டு. ககன கமலத்தில் அதாவது. காபக கொளஸைனி. என்ற புருவமத்தியின் நடுவே நாட்டத்தைசெலுத்தி. அக்னியுடையவீடாகிய சுழிமுனைமண்டலம் அதாவது. செவியுடைய மகாமையுந்தாண்டி நின்று. மகாமேரு கிரி. என்றகபாலம். அதாவது. மூளைமண்டலத்தையுடைய நடுவில் பாய்ந்து. அதன்நேராக ஐன்அதாவது கடவுடைய மகாமாகிய. நேத்திரங்களுக்கிடையில் நின்றுஒளி செய்யும் பரஞ்சோதி யையும் தாண்டிதான் என்ற ஆகங்கார நஞ்சைவிட்டும் விலகி. எல்லாம் அது. என்ற தஜல்லியாத்தில் விரவிக்கலந்து முத்லக்என்ற. ஒன்று பட்டு ஏழாகிய மகாம்களுக்கப்பால்போய்ஹலரத்தின் ஒளிவைக் கண்டுகொண்டான். தானாகவே. மனிதத்தன்மை யென்கின்ற. அநித்திய வஸ்துவானது. லாறப்பஒலா அப்த'' என்பதின் அர்த்தமாகிய.றப்பு என்னும் கடவுளானது.அப்தாகிய இன்ஸானுடைய சூறத்தாக. இருக்கும். என்பது. போல் ஆய்விடுகிறது. உன்காமிலான குருவிடத்தில் இதைப்பற்றி விபரங்கேள். அவர் சொல்வார் பதனமாக வைத்துக்கொள். எ-று.

கருத்து.—நோன்பு என்னும் மனிதன் கொள்ளவேண்டிய உபவாச விரதமானது. இந்த. மெய்ஞ்ஞானத்துறைகளே அன்றி. மற்றபடி. வெளிரங்கவாசிகளுக்கு. முப்பதுநாளும் விரதமாகவும் இருப்பதும் ஞானவரம்புதான். அதை. அல்லது. இதையெடு

த்து நடக்கவேண்டியது. மாநிடக்கடமையாக இருக்குமென்று. இன்ஸான் காமில்காரர் வற்புறுத்துகிறார். அறியவும்.

## நோன்புப் படலம்.

பூரண மாயிற்று.

ஆகப் படலம் 7இ திருக்கவிதை 121.

---

# சிபாத்துப் படலம்

## தொங்கல்

கலிமாவினி லீரேழ் சிபத்துண்டுகேள், காணவே யகம்புறமு மாகும்-மலிவாய்ப் புறத்தெழு சிபத்துமுண்டும், வழக்கு மகத்தெ ழுசிபத்துமுண்டும். பொலிவாம் ஹயாத்தில்மு இருதத்துடன். பொங்கும் குதறத்சம்கு பஹீறுகலாம்-சலியாப்புற சிபத்தாகு மேழுஞ், சமைந்தவுள் சிபத்தினைச் சொல்லக்கேள். (1)

(ஞா-பொ-ரை):— ஹேஜனங்களே! நாம்சொல்லி இருக்கின்ற கலிமாவில் பதினான்கு சிபத்துகள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் விபரிக்கின்றேன். கேளுங்கள்? அதானது. அகம் என்று சொல்லும். இரகசியமாகவும் புறம் என்னும் பராசியமாகவும் ஆக இரண்டு வகையாக இருக்கின்றது அவைகளில் இரகசியத்திற்கு. ஏழுசிபாத்தும். பராசியத்திற்கு ஏழுசிபாத்தும். உண்டு. அதில்ஹயாத்-இருதத்து, குதறத்துஜம்உகலாம். பசிறு. இந்தஏழும். பராசியத்தின்சிபத்துகளாக. இருக்கும். இனிமேல் இரகசியசிபத்துகள் ஏழையும் சொல்லக்கேட்பீர்களாக. எ-று.

ஹையும் ஆலிமு முரீதும்காதிர், சமீகும் பசீறு முத்தக் கல்லிமும்-செய்யு முள்சிபத்தாகுமேழுஞ், சிறப்பாகிய சுன்னத்தும் பறுவு. மெய்யா யறியவே விதியாகுமே, யறியாதார் காபிறென் றேதினன்-உய்யும் ஒன்னஜிம் சூரத்திலே, யுவந்து பாருமென்று இறசூல் சொன்னார். (2)

(ஞா-பொ-ரை):— அதாவது; ஹை. ஆலிம், முரீதி, ஸமீஉ, காதிறு. பசீறு, முத்தக்கல்லிம், இந்தஏழும் இரகசிய சிபத்தாக

இருக்கும். இவைகள் அன்றி. கலிமாவில் உள்ள பறுலு. சுன்ன த்துக்களை அவசியம் அறியவேண்டும். அவ்விதம் அறியாதவர்க ளெல்லாம். கட்டாயம் காபிறாக. இருக்குமென்று அல்லாகுத்த ஆலா ஒன்னஜமி என்றசூரத்தில் சொல்லிஇருக்கின்ருன் பாத்தி ன்புரத்திலான தர்ஜமாவில் கூர்ந்து பாருங்கள். என்றுநபிகள் பெருமான். அவர்கள். திருவாய்மலர்ந்தார்கள். எ-று.

வன்னவறிவுள்ளா னட்டமுள்ளான், வரிசைக்குதறத்தோ டெவையுமுள்ளான்-பன்னுங் கேள்வியும் பார்வையுள்ளான், பகா மாய் நின்றே பகர்கிறவன்-அண்ணல் கலிமாவிற் பறுலுபுற, மருள் சேர் சுன்னத்து முள்ளாகுமே-நன்னும் புறசிபத் ததுபோலேதா, னட்டமுட் னன்று யறியுமென்றார். (3)

(ஞா-பொ-ரை:— கலிமாவில் அல்லாவை அறிவும். நாட்ட மும், வல்லமையும், புகழும், கேள்வியும், பார்வையும். அவனதே என்றும். இன்னும்பேசுகிறவனும் அவனே யென்றும் உறுதியாக. ஒப்புக்கொள்கிற தானது. பறுலாக, இருக்கும். அதானது. பரா சியமானசிபத்துக்களில்சேர்ந்ததாகஇருக்கும்மற்றப்படியான.வை களெல்லாம். நபியைப்பற்றிய. வர்னனைகள் ஏல்லாம்.சுன்னத்தாக. இருக்கும்இவைகள் எல்லாம்.இரகசிய சிபத்தில் சேர்ந்துள்ளவைக ள்.இதையும். மேற்படி.பராசியத்தில் சேர்ந்த பறுலுகளைப் போல் தான் திட்டப்படுத்தியறிந்து கொள்ள வேண்டியது அந்தஅறிவு தன்னட்டமென்ற உறுதிஸாதனமாக கமலத்தில் நாட்டி இருத் தாட்டவேண்டியது, இதுதான். மெய்ஞ்ஞானதவமாக இருக்கும் எ-று.

அல்லாவுக் கறுசிபத் தினிடதை, யறிய விதியாகும் நபியும் மத்தே-நல்லா மழைபெய்தல் ரிசுக்களித்தல், நவிலும் ஹயாத் தோடு மவுத்தீவதும்-வல்லார் கருப்பமும் பேராக்கலும் வகுத்த விவையாறு மவன்சிபத்தாம்-ஒல்லாஹு ஒன்னஜிம் சூறத்திலே யுவ ந்து பாருங்கள் நபியும்மத்தே. (4)

(ஞா-பொ-ரை:—இவைகள் அன்றியும். அல்லாகுத்தஆலாவு க்கு.ஆறுசிபத்துகள் சொந்தமாக இருப்பதையாவரும் பகுத்தறி

யவேண்டியது,அவைகள் என்னவென்றால் பூமியில்பயிர்பச்சைகள் எழுந்து விளையும்பொருட்டு ஆகாயமார்க்கமாக மழையைச்சொரி விக்கிறதும். மக்களுக்காத்துகளுக்கு ரிசுக்கு கொடுக்கின்றதும். இன்னும். ஹயாத்தென்கின்ற உயிரைக்கொடுக்கின்றதும், மவுத் தென்கிற மரணத்தைக் கொடுக்கின்றதும், இந்திரியத்துளிகளால் சிசுக்களைக்கருப்பமாக்கி. அவைகளை வெளியாக்கிவைக்குதலும், ஆக.இந்த ஆறும் அல்லாவுக்கு சொந்தசிபத்தாக இருக்கும். ஒன் னஜிமி என்றகூறத்தில் பார்த்தால் விளங்கும். நல்லதீர அறிவீர்க ளாக.நபியின் உம்மத்தானவர்களே!. எ-று.

பன்னுங் கலிமாவில் பனுவுமுண்டும், பக்காவு மதிலுண்டும் வரவறிந்து-உன்னு மதிலொரு ஹயாத்துமுண்டு, முற்று மதைவி ட்டால் மவுத்துமுண்டும்-பின்னி விளையாடப் பிறவியுண்டும், பிறவி தனை நீக்க முறையுமுண்டும்-நண்ணும் லாகிறும் பாத்தினுண்டும் நபியி னிதுபாத்து முண்டதுகேள். (5)

(ஞா-பொ-ரை:—.இன்னும் ஜனங்களே!கலிமாவில் பனுவும். பகாவும் இருக்கின்றது.இன்னும் கலிமாவில் ஹயாத்தும் இருக்கி ன்றது.இன்னமும் அதையறிகிறசக்தியற்ற வர்களுக்கு அதிலேயே மவுத்தும் இருக்கின்றது. இன்னும்நாம் எக்காலத்திலும்உலகத்தில் ஜீவனுடன் இருந்து வாழ்கிறதற்கும் அதில் நமக்குஒருபிறவியுமி ருக்கிறது. அதுமாறினுக்கால். நல்லபடியான முறைசம்பந்தமும் இருக்கின்றது.இன்னும்லாகிறும் இருக்கின்றது.பாத்தினும் இருக் கின்றது. நபிஇதுபாத்தும். இருக்கின்றது. அதன்விபரம் கீழ்வரு மாறுகேளுங்கள், எ-று.

அவ்வ லாகிறுக்கலிமாவிலே,அதிக தன்சீஹாும் தசுபீஹாண் டும்-செவ்வி முறுக்கபா முஷாஹிதாத்துந் திறமான திசகீர் நா லொன்றுண்டும்-குவ்விற் பனிரண்டு பறுலுமுண்டுங், கூடச் சறுத் தெட்டு வகையுமுண்டும்- எவ்வி நடனத்தா லிருத்தவுந்தா னிறு ஷாதான நற்கலிமாவிலே. (6)

(ஞா-பொ-ரை):—முதலாவது கடைசியாவது.கலிமாக்களில் மிகுதமும் தன்சீகும்,தஸ்பீஹும் இருக்கின்றன-இன்னும்அவை களில் முறுக்குபாக்களும்,முஷாஹிதாக்களும் இருக்கின்றன. இன்

10

னும் ஐந்துவகையான திக்றுகளும் இறுக்கின்றன. சரியானவிதத்தில் நின்றும் புகுந்தறியும் பட்சத்தில் பனிரண்டு பறுலுகளும் மிருக்கின்றன. அதுகூட எட்டுவகையான ஷறுத்துகளும் மிருக்கின்றன. மிதமான வாசியை நல்ல நடனத்துடன் கமலத்தினிடையே நடத்தி அக்மல்ஷுறு ஹறுமுதில்வைத்திருத்துதற்கே அந்தக்கலிமாவும் இருஷாதாக இருக்கின்றது. எ-று.

கலிமாத் தனில்ஹறு மதனை நீக்கிக், கசடற்ற ஹலாற் றன்னை நோக்கி-வலியான் பொருளான நாலிலொன்றை, வகையாத் தரிப்பாக்கி நினைவுக்குள்ளே- சலியாக்கபாடத்தின் றாள்திறந்து, சாயுச்சியபதந் தனை பிடித்து-அலிமா மன்றிருமுகைத்தை நோக்கி, பருளு மெனக்கேட்கி லப்போ சொல்வார். (7)

(ஞா-பொ-ரை:—இன்னும் அந்தக்கலிமாவில் ஹறும் இருக்கின்றது. அதைநினைவைக் கொண்டும் களைந்து விட்டு. மனஸ்ஸில் வரக்கூடிய. ஆணுவம் மாயைகாமியும். என்னும் அந்தகாரங்களால் இருவினை நண்ணயாதவண்ணம் பரிசுத்த ஜோதியைப் பிரகாசிக்கச் செய்து. அந்தஸ்தலத்தில் ஹலாலை நிலைக்கச் செய்து. அந்தக்கலிமாவில் வல்லமை யடைந்த அட்சரப் பொருள்களான நாலில்ஒன்றை அதாவது. இல்லல்லாஹு;இந்த நாலில்ஒன்றாகிய. ஹு. என்னும் பெரிய பொருளைஸ்வாசத்துடன்பின்னச்செய்துநினவுக்குள் சதாவும்வைத்துப்பழக்கிப்பிடித்துஒன்றாகவைத்துப்பொதிந்துகபாடத்தின்தாள்திறந்துஅதாவது. இருதயத்திலுண்டான அந்தகாரச்கசடுகளான இருள்மாயாவினோத வெளியானது. கடந்து அங்கேபரிசுத்தஅறிவானதுதெளிந்து. உதயமானநேரம். சகலரகசியங்களும் வெளியாகும்படியான மனக்கண்ணாடி இல்ஹாமாகும். (அதுதான் மனக்கதவுதிறத்தல்) என்றும் தாப்பாள் திறபிடி. என்றும் ஞானிகளான மஹ்றான்கள் எடுத்து கையாடுகிறார்கள். அவ்விதம் மனக்கதவுதிறந்தவுடன் பரமாத்மாவாகிய றாஹுல் குத்துஸியானது. ஒருமின்வடிவுபோல ஐனுல் எகீனில்பளீரென்று எழுந்து. வெட்டிமறையும் அதைத்தான் செந்தமிழ் ஞானிகள் (சாயுச்யம்.) என்று. வலுத்துக்கூறினார்கள். மனிதன். நாளாவட்டத்தில் யோகஸாதனங்களில் சிறுகச்சிறுக பழகிக்கொண்டு வந்து. அதில் நின்றும் ஒளிவைக்கண்ணாரக்காண்பானே யானல். அப்போதுதான்

சாயுச்யபதவியான கலிமாவைசிக்கலறுத்து தூலசரீமான இந்த ஜடலத்தை காயகற்பம் பண்ணிக்கொண்டவனுகிறன். அந்த ஜடலம்ஒளியென்கின்ற. அக்மல்ஷுஹுறூதென்னும் புடத்தில் வைத்து வேகவைத்துக்காய்ச்சிகொண்டதாலே இனி அதைமண் முதலிய யாவற்றும் தீண்டவும், தின்னவும் சக்தியும் கிடையாது. இதற்குத் தான். புராணுசிரியான:மஹான் அவர்கள் சாயுச்யபதவியென்று சொல்லினர்கள். எவன் ஒருவன் சாயுச்யபதவியை திருஷ்டாந்திரமாக அடைந்துகொண்டானே அவன் அந்த மகாமில்முகம்மதியா என்னும் வாலைமனேன் மணியைக்காண்பான் அப்போது அவனுக்கு வேண்டிய மர்ம. சர்ம. பிர்ம. ஸம்பாஷணைகள் யாவும் படிபடியாய் அது சொல்லிக்கொண்டுவரும். அதுதான். ஒளியாக்களெல்லாம் மோட்சகதியடைந்தவழியாக இருக்கும். எ-று.

ஆதி நபியிறசூலுறைத்தா, ரான லாஇலாஹ வென்றோதுஞ் சாதி பனுவாகு மைந்தெழுத்துந் தானே பக்காவாகு மேழெழுத்தும். நீதிதன் வஹுறூக்கலிமாவிலே, நெறிசேர் நான்கெழுத்தாகு மென்னச். சோதி அப்ஜத்துக் கணக்கிலந்து, சுருதி ஹூவென்ற எழுத்தாகுமே. (8)

(ஞா-பொ-ரை):—ஆதியாயுதித்த நூறுல்முகம்மதிய்யா என்னும் நமது ஆண்டவர்கள் நபியுர்றகுமத்து அவர்கள் சொல்லியிருக்கிறதாவது, லாஇலாஹ இல்லல்லாஹு. என்றதில் ஐந்து எழுத்து பனுவாகவும், ஏழு எழுத்து பகாவாகவும் இன்னும் தன்சீஹுக்கலிமாவில் நாலு எழுத்தும் இன்னும் அப்ஜதுக்கணக்கில் ஹூவுக்கு ஐந்து எழுத்துமாக இருக்கும். எ-று.

சுருதி கதுரியா தசுபீஹென்ற சொல்லுக் கடங்காத லாஹூறென்றும்-உறுதிச் சொல்லுக்குள் வருமமாகி, யுற்ற பாத்தினு மதுவேயாகும்-அருதி குறையாத நினைவானதி, லாகச் சொல்லுமாம் பறுலெனவும்-மறதியில்லாத முஹம்மதைத்தான், மனதில் நினைப்பது பறுலாகுமே. (9)

(ஞா-பொ-ரை):—இன்னும் வேதத்தில் உண்டான கதூரியா தஸ்பீஹ என்றதும், எந்த மஹான்களாலும் மட்டுப்படுத்த வொலாததுமான லாஹுறென்னும் ஷரீஅத்தில் அதற்கு மகிமையான

ஒருபெயரும் உண்டு ஆனல் மஅரிபாவும் அதுவேயாகும் ஆகையால் அந்த எழுத்தை அதாவது. ஹூ என்ற அட்சரத்தை நினைவில் ஊன்றி வைப்பது ஞானவான்களுக்கெல்லாம் பறுலான காரியமாக இருக்கின்றது. அப்படி செய்வதில் முதல் வாசற்படியானது. முகம்மதுடைய உயிர் அட்சரங்களைப்பற்றி மனதில் எந்த நேரமும் மறந்திடாமல் மிக்ககவனமாயிருப்பதுதான் அதிலும் முந்திய பறுலாக இருக்கின்றது. எ-று.

வாழும் ஹயாத்துத்தா னினைப்பானது, மவுத்து நினையாமல் மறப்பதுவாம்-நாளு மிறசூலின் ஷபா அத்தைத்தா, னடிப் பெறுவோர்க்குச் சொல்லிகிறேன்கேள்-சூழுந் திக்கிறினை யோதுவோர்க்குத், தெரிந்தம் ஷறுத்தாகு முந்திறசூல்-பாலப்பருவத்திற்பழக்குவது, பரிவாகு சுன்னத் தாகுமென்றார். (10)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் காமில் இன்சான்கள் உடைய ஜடலத்திற்கு ஷெ முகம்மதை நினைக்கும் நினவானது. சதாகாலமும் விட்டும் பிரியாத. ஹயாத்தாக இருக்கும். அதைமறந்து நிற்பதானது. ஜடலங்கள் மண்ணோடும் மண்ணாய் ஜீரித்துப்போகின்ற மரணமாக இருக்கும், இஃதன்றியும், சுவர்க்க லோக ஸ்தரீமார்கள் முதலான பலசௌபாக்யபோக இன்பங்களை நாடிமோகமுற்றிருப்பவர்களுக்கும் றசூல் நாயகமவர்களின் ஷபா அத்தையும் ஆதரவுவைத்திருப்பவர்களுக்கும் ஒரு பரிகாரஞ் சொல்கின்றேன். அதாவது. ஷெ கலிமாவையே வழக்கமானதிக்றுல்லாவாக சிறுபருவத்திலிருந்தே செய்து பழகிக்கொண்டு வருகிறதாவது சுன்னத்தாக இருக்கும் சுன்னத்தாகிறது சுவர்க்கத்தையும் ஷபா அத்தையும் தனதாக்கிவைக்கும் என்று நபிநாயகமவர்களே. திருவாய்மலர்ந்து சொல்லியிருக்கின்றார்கள். எ-று.

நாட்டம் நபியுல்லா தமக்குரைத்த, நாயன்றான் சொன்னான் குறுஆனிலே-கூட்டக் கலிமாவை யோதால்லார், கூடவோதுங்காளென வோதினன்-மூட்டு மூச்சிலே திக்கிறதென்று, முழுதும் ஷறுத்தரீன தைந்தாகவே-கூட்டும் பற்போடுங் கதைபோலவே, கும்தரீக்கத்து வகையாகுமே. (11)

(ஞா-பொ-ரை):—அல்லாஉடைய தன்னுட்டத்தில் புதைந்து போய் இருந்த நமது. வள்ளலானநபியவர்களுக்கு, வஹிமூலமாக அல்லாகுத்தஆலா. குர்ஆனில் திருவுளம் பற்றியதாவதுஹபீபே! கலிமா என்ற திக்றுல்லாவை. உமது உம்மத்துகள் விரைந்தோதும்போது, மற்றவர்களும் கூடத்துடர்ந்து வோதுங்கள் என்று சொல்லச் சொன்னுன். மஃரிபத்தில் இதை எப்படிச்செய்யவேண்டியதென்றால் மனிதர்களே உங்கள் ஸ்வாசங்களுடன் சேர்த்து நினவில் வையுங்கள். மனதால் நினைப்ப தல்லாமல்வாயால் மொழியக் கூடாது. அப்படிச் செய்வதானது மஃரிபாவின் ஷர்த்துகள் ஐந்தையும் பேணிக்கொள்ளவேண்டியது அதாவது புலன் பொறிகளின் வாசல்கள் ஐந்தையும் அடைத்து நடத்த வேண்டியது. அப்படி செய்யப்பழகப்பழக. சிறுகுழந்தைகளுக்கு வாயில் பல்வரிசையானது. எவ்விதம் ஒன்றன்பின் ஒன்ருக முளைத்து வெளியாகின்றதோ அதுபோல மனக்கமலமானது. திறந்து. மெள்ள மெள்ள ஞானமிர்தமானதுஊறித்திரண்டு குணங்குடியார், "பயிர் அன்னம்பிடிப்பதனுலே" என்று சொன்னபடி உன் உஜூதானது கொஞ்சங் கொஞ்சமாக வெளியாகும். இதற்கு ஹகீக்கத்துக்காரர்கள் கும்தறீக்கத்து வகையில் சேர்ந்ததிக்று. என்று சொல்லிக் கொள்கிருர்கள். எ-று.

அவ்வல் ஷரீஅத்துத் தையிபென்று, மரிய தரீக்கத்து ஷஹாதத்தென்றும்-செவ்வை ஹக்கீக்கத்துத், தன்சீஹென்றும், சொல்லுந்தெளஹீது மஃரிபத்தாம் நவ்வி நாவிலே சொல்லானது, லாஇலாஹஇல்லல்லாஹு-வே-குவ்வு ஜபறாத்து அத்தென்றுங் கோமான் இறசூலோதினர். (12)

(ஞா-பொ-ரை):—இபாதத்தில் முந்தினதான ஷரீஅத்தானது, தையிபுக்கலிமாவாக இருக்கிறது. என்றும், இனி இரண்டாவது இபாதத்து ஆகிய தறீக்கத்தானது, ஷஹாதத்துக்கலிமாவாக. இருக்கிறதென்றும், இனி மூன்ருவது இபாதத்தாகிய ஹகீக்கத்தாகிறது தன் சீஹுக்கலிமாவாக இருக்கிற தென்றும், இனி நான்காவது இபாதத்தாகிய, மஃரிபத்தாகிறது. தெளஹீதுக் கலிமாவாக இருக்கும் என்றும், இனி நாவின்சொல்லால் பிரயோசனமுடைகின்ற திக்ருனது, லாயிலாஹ இல்லல்லாஹு என்றதிக்

ருக. இருக்கும், அதுதான் ஜபருத்தாக இருக்கிறது. என்று நமது நபிகள் சிரோமணியவர்கள் திருவாய் மதரமுதிர்த்தார்கள். எ-று

அல்லா வென்னுஞ்சொல் தரீகத்தாகும், அல்லா ஹூவென்றால் ஹக்கீக்கத்தாகும்-வல்லான்ஹூவென்ற சொல்லானது, மஃரிபத்தாமென் றிறசூல் சொன்னர்-எல்லாருஞ் சொல்வார் சொல்லானதை, இல்மைத் தெரிந்தவ ரிமாமத்திலே-அல்லாஹூ அக்பர் என்றோது, ஆன முஹப்பத்த தாகுமென்றார். (13)

(ஞா-பொ-ரை):—இன்னும் கலிமாவில் அல்லா என்கிற சொல்லானது. தரீக்கத்தாக இருக்கிறது, அல்லாஹூவென்றால் அது, ஹக்கீகத்தாக இருக்கிறது, அதில் விஷயமாகின்ற ஹூ என்ற அட்சரமானது. மஃரிபத்துல்லாவாக. இருக்குமென்று. றசூல் நாயகமவர்கள் அலிக்கு உபதேசித்திருக்கிறார்கள். இனி உலகத்தில் முஸ்லிமானவர்களெல்லாம் தொழுகையுடைய வக்தில் அல்லாஹூ அக்பர் என்றதைச்சொல்லிக்கொள்வார்கள். அதன் தாற்பரியங்களை நான்முந்தியபடலங்களில் சொல்லியவாறு ஷறுத்துகளை யறிந்து. சொல்லி திக்றில் வைத்துப்பாராட்டிவருகிறதாக இருக்கும் பட்சத்தில் அதுவே அவர்களுக்கு இமாமாக ஏற்பட்டு அல்லாகுத்தஆலாவின் முஹப்பத்தில் கொண்டுசேர்க்குமென்று அப்பால் சராசரங்களெல்லாம் ஒன்றுபட்டு கலந்து ஸமதின்துறை முகமாகிய வஹதானீயத்தில் நிரம்பிக்கொள்ளும். எ-று.

ஆலம் அறுவாஹூ றாஹெனவும், ஆலமிதாலதின் பார்வையென்றும்-ஆலம் இன்சானே நபுசாமென்று, மதிலோர் கண்ணுதவுண்டதைக்கேள்-சோல ஆதமி தானுமங்கே, கூச்சப்படாமலே ஹாலிருகிச்-சோலைமதுவான திக்கிறதிலே, சொல்லை யூட்டிக் கொண்டில்லைப்பாரே. (14)

(ஞா-பொ-ரை):—இன்ஸான் ஜடலமானது, கூடிய சூட்சமானது, எப்படியென்றால். ஆலம் அறுவாஹ் என்றது றாஹாகிய ஆத்மமாக இருக்கிறது. ஆலமிதால் என்பதானது. இருநேத்ர வடிவு என்னும் ஒளிவாக. இருக்கின்றது, ஆலம் இன்சானுகிறது, நப்ஸ் அம்மாறூவாக இருக்கின்றது. இவைகளைப் பிரித்து அறிய வேண்டுமானல் பெரியஞானியார், (ஒருகண்ணுண்டோ அம்

மானை) என்றதுபோல் ஒருகண்ணிருக்கிறது. அந்தக்கண்ணில் தான் ஆதமி தன்வடிவைக்கண்டுகொள்ளவேண்டியது அதற்கு உபாயம் எப்படியானல் வெளிக்கண்களை பக்கவாட்டில் ஆட அசையவிடாமல் நோக்கினவனாக. திக்று ஜல்லியை சோலையும், நிழலும்போல் சுவாசத்தில் பொருத்தி ஆசையான ஒரு சொல்லை மூட்டிக் கொண்டவனாக. இல்லில் இருத்தியஇருத்தலான தியானத் தோடும் புருவமத்தியை நோக்கவேண்டியது. எ-று.

பாரும் ஆயத்துக் குறுசானதிற், பார்க்கி லிறையவன்சொன்னது கேள்-பேரும் அல்லாஹுயுல்க் கைபூமென்றதிற், பேச்சு மூச்சையு மடைத்துவிடு-ஊரும் போற்றவே நாயனைத்தா,னேதும் கையூமெனும் நினைவானதிற்-சேரும் நபியி றசூலொளிவிற், சேர்ந்து விளையாடும் ஹூவொளதே. (15)

(ஞா-பொ-ரை):— ஒ ஞானத்தின் துறைமுகத்தில் வந்து நின்று. சந்தேகமென்ற கிடங்கில் விழுந்துகிடக்கும் உறுதியற்ற ஜனங்களே! குர்ஆனில் ஆயத்துக்குரிசி, என்றதில் நல்ல உற்றுப் பாருங்கள். அல்லா அதில் நல்லதீர்க்கமாக சொல்லிஇருக்கிறதைப் பாருங்கள். அல்லாஹு யுல்கையூம். என்றதிக்றை நினைவில் உச்சரித்து. பேச்சு. மூச்சுமுதலான. புலன்களைசரிவரஅடைத்து. அந்த நிலையோடும். ஹையூம்என்கிற, நினைவை. தன்னுட்டத்துடன் சேர்த்துக் கொண்டால். ஹூஎன்ற. உயிர்அட்சரமானது-றசூல்உடையஒளிவில்கொண்டுபோய்சேர்க்கும். அதுதன்னைக்கண்டு கலந்து ஆரிபுடனே சேர்ந்து விளையாடும். எ-று.

ஹூவ்வானதுக் கப்பால்ஜம் ஆனதிற். கூடுமதற் குள்ளே தம்மானது-உவ்வாம் ஹறுபொன்று யிருந்துவந்த, வோசையான சொல் மலுஹறிலே-புவ்வாய் நிறைந்தெங்குந் தானனவன், புண்யவாளனு மல்லா சொன்னன்-மூவ்வான நூன்வல் கலமியிலே, முஹம்மதைப்பாரு மும்முள்ளே. (16)

(ஞா-பொ-ரை):— அல்லாகுத்தஆலா குர்ஆனில் ஒல்கலமி என்றசூறத்தில் சொன்னதாவது. மனிதர்களே! நீங்கள் ஹூவென்ற அட்சரத்தை ரம்மித்துக்கொண்டு அதற்கப்பால் இருக்கும் ஜம்உ அதற்குள்ளிருக்கும்படியானதம். என்கிற றாஹூல் குதுவியானது. ஒருஹர்பாக. அடங்கியிருக்கின்றது. அதுதான் இல்என்

கிற சொல்லாக. எழுந்து. உலகைத் தோற்றப் பொருளாக, நிரம்பி பொருள்கிம்ளபி விட்டது. அதுதான் அல்லாவுடைய ரகசியமாக இருக்கும் அதை அறியப்போகும் மகாமில்முகம்மதையும் அறிந்து அத்துடன் வேண்டிய முத்திவரங்களையும் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். எ-று.

திக்கிறைந்திலே யிசுலாமதாய்த், தெளிவாம்ஜம்ஆறி லீமான் கொண்டு-பிக்கிறெனும் பார்வை யானதிலே, பாரும் கஸ்மியல்லா ஜுசுவில்-ஹக்கிறெனும் நம்சை யடக்கிவாங்கிச், கருணைமணியான கண்ணைமூடி-முக்காலமதான முஹம்மதிலே முங்கி முடுகுமென் றல்லா சொன்னான். (17)

(ஏா-பொ-ரை):—இஸ்லாமானது. திக்று. ஐந்தாகியதில் நிரம்பிவிட்டது. இன்னும் ஈமான் என்பது. ஜம்உ. ஆறிலும் நிரம்பி விட்டது; பிக்றென்றும் பார்வையாகநோக்கும். பட்சத்தில் தானு கவிளங்கும். இதைப்பற்றி அல்லா கஸ்மியல்லா என்னும் ஆறத்தில் பாத்தின்புரத்தால் நல்லவெட்டவெளிச்சமாக வுதயஞ்செய்திருக் கிறான். ஆனபடியால் ஹக்கிஹென்ற திக்றைஅதாவது. நம்ஸானதை ஸ்வாசத்துடன் கொழுக்கிவிட்டு இழுத்து வாங்கி. இருகண் களையும் உலகப்பார்வையைவிட்டும் மூடிக்கொண்டு. மூன்றுகாலங் கள். என்கின்ற.முகம்மதியாவின் மகாமில் நினைவைக் கொண்டுமுடுகுங்கள். அப்போது. அந்தமுகம்மதானது. உங்களைவந்துமுடுகி விரவிக்கொண்டுவிடும். என்று அல்லா குர்ஆனில் அல்லது உம்முல் கிதாபில் கட்டளை பண்ணிவிட்டான். எ-று.

மஃகூசு மன்கூசுசனது, மதிழ்ந்து கித்தாபிலே சொன்னது கேள்-தங்கும்படி யில்முல் எக்கீனுவதுங், தகுதி ஐனுல் எக்கீனுவதும்-பொங்குங் குதுறத்து ஹக்குல எக்கீன், பூண்டு மூன்றுங்காபாகவேவ் தான்-எங்கு மஃ கூசு நபுசுடனே, ஏகனறுஷேறும் நபியோதினர். (18)

(ஏா-பொ-ரை):— இன்னும் மன்கூஸ், மஉக்கூல் விஷயங்களைப்பற்றி கிதாபுகளில் மஹாத்மாக்கள் சொன்னதாவது. ஏதென் றால், மன்கூஸ் என்றது. இல்முல் எகீனுகஇருக்கும். மஉக்கூஸ்என்

பது. ஐனுல் எகின்என்றும். இன்னும்குதுறத்தானது. ஹக்குல் எகீனகஇருக்கும. ஆகஇந்த மூன்றுங்கூடி. காப். ஆய்விட்டது. ஆனதினலே மஉக்கூசு நப்ஸுகளில் றப்பானியாபுரத்திலுள்ள தாக இருக்கின்றது. என்றுநபியவர்கள் திருவாய் அமிழ்தத்தை ஊற்றினர்கள். எ-று.

குரைந்த புரைச்செக்கி லெள்ளைப்போட்டுக், கூட்டியாட்டுங் கன்றுவிரண்டும்-தறைந்து திரும்பித் தானுடும்போது, தானே யொருசத்தங் கேட்குமப்போ-தரைந்து மசிந்துதா னெய்யா மதை, யறிந்துபாருந்தன் சூறத்திலே-பர்ந்ததாலிடை 'பார்த்துப் பார்த்துப், பழகவொளி சூறத்தாகுமென்றார். (19)

(ஞா-பொ-ரை):—மேற்கூறிய அக்மல் ஷுஹூதில் ஒருசப்தம் ஒரு அட்சரமாகஎழுந்துவரும். என்றுசொன்னதன் உதாரணம் எப்படியென்றுகேட்டால். செக்கில் எள்ளைப்போட்டுசுற்றிஆட்டும் போது ஒருசப்தம் எவ்விதம்வந்தவுடன் எண்ணெதிரளுகின்றதோ! அவ்விதம் இல்மென்றதிக்ரை ஸ்வாசசெக்கில்போட்டு தினவால். ஆட்டும்போது. திரள்கிற எண்ணெயாகிய ஆசையானபயனுகஅந்த ஆத்மஒளிவானது. தன்னில்நின்றே வெளியாகும். எ.று.

நடக்கு முயிர்தானே வுடலதுவோ, நாட்டமுளநல்லவுலமாக் களே-உடக்கும் பாவைக்குட் சூட்சம் போட்டே, யோட்டு மாட் டாந் தானுனதுவே-அடக்கங் கேட்டறி யறிவல்லவே. யாளுந் தலங்கண்டே யறியவேணும்-கடைக்கண்டுவிலே முஷாஹிதாவிற், கண்டே யறியலாம் நபியுல்லாவை, (20)

(ஞா-பொ-ரை):— அந்த ஒளிவானது. இந்த ஜடலத்தில்தங் கிநடக்கின்ற. ஆத்மாவா? அல்லது. இந்தஜடலந்தானு? அல்லது. இந்த சரீரமானதும் அறுமஹில் சூக்கும சரீரமாக இருந்தபோது. அந்தஒளிவானது. எவ்விதபாவனையில் கூடிஇருந்தது? முதலாவது ஞானவான். என்பவன் தன் தெளிந்துகொண்ட அறிவையே குரு வாகப் பாவித்து. அதனிடம்கேட்டறியும் போது. அதுவானது. மனவுதயமாக. அறிவிக்கும். அதுதான் இல்ஹாமுடையபுரம். என் பது. அவ்விதம்அறிந்துகொள்வதிலும். மகாம்இன்னதுதான். என் றுசந்தேஹமற அறிந்து கொள்ளவேண்டும். மகாம்என்னவென்

ருல். இதோயாதொரு சிக்கலுமில்லாமல் வெட்டவெளிச்சமாக உடைக்கின்றேன்தெரிந்துகொள்ளுங்கள் அதாகிறது உங்களுடைய நேத்ரத்தின் நடுவே ஒருசிறு வட்டமாகத்தோன்ற கூடியமஹா வல்லமை வாய்ந்தபிர்ம ஒளிவாகஇருக்கும் ஓ! ஆமகல்குகளே அதுதான்.முகம்மதாக இருக்கும். இதைதான்,காட்டானேஷெய்கு குணங்குடியார் தற்கலையார் பெரியஞானியார்-கரூரார் முதலிய மஹாத்மாக்கள். நல்லபடிதிறந்து சொல்லிப்போய் யிருப்பதைக் கவனித்து உங்கள் சந்தேஹங்களை நீக்கி ஒப்புக்கொண்டு உங்களை நீங்கள் பரிசுத்தவான் களாக ஆக்கிக்கொள்ளுங்கள் அந்தஒளிவை முஷாஹிதாவுடைய தபோதன இருப்பில் இருந்துநோக்கினல் மஹ்ரூபாகிய முஹம்மதுடைய ஸ்ரூபத்தை நீக்கமறக் கண்டுகொள் வீர்கள். எ-று.

வெட்டவெளிபார்த்து முழிக்குகிறீர், மேலோன் கற்பனை தானுண்டாமோ-தட்டான் விழித்தக்கென்னபலன், தன்னை யறியாத மூர்ந்தர்களே-கொட்டாவி யிட்டமீன் வெள்ளத்திற், குமிழி யறிந்துபார் அகமதுள்ளே-பட்டாங் கானசொற்களா முல்லா தான், மழக்கங் கேட்டவர் மனுடராவார். (21)

(ஞா-பொ-ரை):— ஓமனிதர்களே! வெட்டவெளியானவான ம்பூமிகளை எந்தநேரமும் நோக்கினவர்களாக இருக்கின்றீர்கள். அதன்சிற்றையறிய மாட்டீர்கள். இன்னும் உங்களுக்கிடையில் கற்பனைகளைப்பற்றிப்பற்றி நம்பினவர்களாக இருக்கின்றீர் களே யன்றி. உங்கள்தன் முயற்சி ஒன்றும் செய்யவலையாதமாட்டாங்கி களாகக்கிடந்து. முழிக்கிறீர்கள். ஆதியானநாயன் குர்ஆனில் சொல்லியதைக்கவனித்துக் கொண்டீர்களுமில்லை (மன்ஜத்த. ஒஜத்த) நீ. முயற்சிசெய் நான் கூட்டிவைக்கிறேன். அல்லது. உதவிசெய்கிறேன். என்றதிருவசனத்தை ஆராய்ந்துபார்க்க உங்களுக்கு சக்தியில்லை. ஓ! காபிரீன்களே! கருமான்செய்து நாட்டிய விக்ரஹரூபங்களுக்கு என்னசக்திஉண்டு. அடபாமர ஜனங்களே! கடலில் உலாவுகின்ற மீன்கள். உப்பில் பிறந்தும் தமதுஜடலத்தில் அந்தஉப்பை வருவிக்காமல் இருக்கும்வல்லமை கூடஉங்களுக்கு இல்லை, நீங்கள் அத்தப்பொய்-என்றுநல்லதெரிந்துவிட்ட இந்தஉலகஇச்சையை உங்கள்மேலெல்லாம் எடுத்துதடவி பீநாற்றங்கொண்

டலே கிறீர்களே! இதுஎன்னமதி கேடு. அந்தமீன்கள், எறைவசி யம் பண்ணினதால் அந்தஉப்பு அவைகளைச்சேரவில்லை?. என்று சற்று உணர்ச்சி செய்வீர்களானால் உங்கள் இருதயத்தில், அல்லா உடைய சலாமாகிய. உம்முல் குர்ஆன் நிரப்பமாகிவிடும். அப் போது நீங்கள் திட்டமாக. மனுஷர்களாகிவிட்டீர்கள். சற்று கவ னித்துக் கொள்வீர்களாக. எ-று.

ஒருவர்க் கொருவர்தான் கைபிடித்தே, யோதும் சலவாத்து முகத்தைம்பார்த்துக்-கருதுய் ஷரீ அத்துக்காகு மென்றுங், காணுந் தரீக்கத்திற்கு பியத்தாய்-பருதி முகத்திலே நின்றிட்டா லுய், யாரின்மண்ணின்மேல் நிற்கலாமோ-சுருதி மறைவேதங் குதுசியிலே, தோகை மயிலான நபியோதினர். (22)

(ஞா-பொ-ரை):— ஜனங்களே! நீங்கள் ஒருவருக்கொருவ ராகச்சேர்ந்து கைகளைக்கோர்த்துப் பிடித்திருந்து ஸலவாத்துச் சொல்கிறதாவது.வெளிப்படையான ஷரீஅத்திற்கே அது ஆகும். தரீக்கததுடைய வழிகளில் அதுகூடாத ஹறாமாகஇருக்கின்றது. எதுபோலேயானல் கொடியஅக்னி வெப்பத்தையுடைய சூரியனு டைய வெயில்முகத்தில் நின்றுசமாளித்தாலும். அந்தவெயிலால் காய்ந்துவிட்ட மண்ணிடத்தில் காலைவைத்து நிற்கமுடியாது. ஆகையினல் ஷரீஅத்தென்பது சூரியவெயில்போல் வெளிச்சந்தர க்கூடியது. அதில்எவ்வளவும் மனக்கசடுடையவர்களுக்கு இடமு ண்டு. தரீக்கததாகிய-ஞானத்தின் துறையில் நடப்பவர்களுக்கு. மனக்கசடானது, பொல்லாத நஞ்சின் விஷமாக இருக்கின்றது, அதை நீக்கிநடந்தால்தான்விஷம் தீர்ந்துவஹ்தானீயத்தின் துறை யானது. தானகவே வந்து தரிபடும். என்று. கதீதுகுதுஸில் நபிகள் நாயகம்அவர்கள்உதயஞ்செய்வித்திருக்கின்றர்கள். எ-று.

எந்த னும்மத்திலே சிலபே, ரேற்ற முதலுள்ளோர் முதலுள் ளோரும, கந்தமாகவே முஹப்பத்தாவார், காட்டாரெவியுள் கள் முகத்தைப் பார்க்கச்-சொந்த மானதோர் மருஷறிலே தோணுரென் முகங்காணுரென-விந்தை மறைபேசுங் குதுசியிலே மேகக்குடை மேகவும் நபியோதினர். (23)

(ஞானவுரை):—இன்னும் நபிநாயகம் ஹதீதுக்குதுசியில் சொல்லியிருப்பதாவது. என்ன வென்றல்:—என்னுடைய உம்

மத்து மார்களில் நின்றும் அதிகம் பணச் செல்வாக்குடையவர்கள் கணக்கில் லாமல் உண்டாவார்கள். அவர்கள் அல்லாவின் மஅரிபாவைத்தெரிந்து கொள்ள இச்சைவைப்பார்கல், ஆனல் கன்ஞ சுதனதனைதக்கைவிட மாட்டார்கள் எளிய ஜனங்களுக்கு நல்முகங்கள் கொடுத்து ஆதரிக்கமாட்டார்கள். அந்த ஈனஜனங்கள் எல்லாம் கட்டாயம், நாளை மஹ்ஷரில் என்முகத்தைக் காணவே மாட்டார்கள் என்று, நபிநாயகமவர்கள் திருவுளம் பற்றினர்கள், எ-று,

எறும்பி னுடலுக்கு மதகரிக்கு, மிருக்கு முயிரஃதொன்றோ ரண்டோ, செறுமபின் கிடாரத்துங் சிண்ணத்திலுஞ், செம்புதானென்றோ ரண்டோ சொல்லும-குறுகும் சிறுகுழி பெருங்குளத்துங், கூடும் ஜலமஃதொன்றோ ரண்டோ-பொறுக்கும்பெரியோர்க்குஞ் சிறியோருக்கும், பொருந்தும் றாஹொனருகும் பின்னேனே. (24)

(கு-பொ-ரை):—நபிநாயகம் சொல்கின்றார்கள். ஓ! ஜனங்களே! ஒரு சிற்றெறும்புடைய உடலில் தங்கிய உயிருக்கும், பிரமாண்ட சரீரத்தையுடைய மதயானை யினுடைய் உயிருக்கும் என்ன வித்தியாசமிருக்கின்றது, ஒருபெரிய கிடாரத்திலும், ஒருசிறிய கிண்ணத்திலும், என்ன இருக்கின்றது, அந்த செம்பு ஒன்றல்லவா பெரிதான ஏரியிலும், ஒருசிறுகுழி குண்டத்திலும் நிரம்பி இருப்பதானது, ஒரே ஜலந்தான, அல்லது வேரு? பொறுமை தங்கிய மஹான்களுக்கும் சிறியவர்களான சுத்தமடையர்களுக்கும். இருக்கின்றது. ஒரே றாஹுதானு? வேறு ஏதும் வித்தியாசம் இருக்கின்றதா? ஆகக்கூடி ஆத்மா. என்ற ஒரு ஒளிவு தான் ஸமஸ்தங்களிலும் நிரம்பிவிட்டிருக்கின்றது. என்ருலும் அந்த நிரப்பத்தைக்கண்டு அதுடன் நிரம்பிவிடாத போது சகல முபவேற்றுமை வேற்றுமையே. எ-று.

கழைக்கு நிலையாத பெருங்குளத்திற், காணுதிறங்கினுற் ருழ்ந்திடுவா-மழைத்தண்ணீர் ஜலங்கட்டுஞ் சிறுகுழியில், மகிழவாயிறங்கித்தான் போகலாகும்-பிழைக்கும் பெரியோர்க்குச் சிறியவர்கள் பேணுக்கசத்திலே தாழ்ந்த தொபபென்-றுழைக்குப் பிணையான நபியிறசூலுறுதிக் குருசிகண் டோதினரே, (25)

(ஞா-பொ-ரை):—மெய்ஞ்ஞானமென்கின்றவரம்பை யேறிக் கடக்க வந்துள்ள புத்திமான்களே! இதைக்கவனியுங்கள். பெரு வாரிஜலம் நிரம்பிய ஆழக்கசங்கள் உள்ள. ஏரியினிடத்து நடப்ப வர்கள் நிலையாமல் தாழ்ந்துபோவார்கள் அதே ஜலமான மழைத் தண்ணீரால்ஒதுங்கப்பட்டுள்ளசிறுகுழிகுண்டங்களில் இறங்கிநடந் தவர்கள்அக்கரைபோய்ச்சேருவார்கள். அதுபோலவேபெரியோர் களின் விஷயத்தில் அக்ரமமாக நாவு அசைப்பவர்களுக்கு ஸமீ பமாக் கேடு விளைந்து விடும் மடையர்களின் ஹக்கில் பெரியோர் கள் அறிவை உண்டாக்கும்படியாக என்னதான் அவமானமாக வைது பேசித்திட்டினுலும் ஷை பெரியோர்களுக்கு ஒரு சேத மும் வராது என்று கானகத்தில் வேடன் உடையகண்ணியில் அகப்பட்டுக்கொண்ட ஒருபுள்ளிமானுடன் ஸம்பாஷித்து அதற் குப் பிணையாக நின்ற தயாபரக்கடவுளான நமது நபிகள் நாய கமவர்கள் திருவாயுதயஞ்செய்திருக்கின்றார்கள். அதாவது ஹதீது குஸிதுயில். எ-து.

## சிபாத்துப் படலம்

பூரண மாயிற்று.

ஆக் படலம் 8-இ திருப்பாடல். 146

---

## (முக்கிய கவினிப்பு)

நாகரீக தர்மார்த்தம் படர்ந்திருக்கும் இக்காலத்தின் கல்வி மான்கள் அறியவேண்டிய முக்கியாமிஸமாவது:—இதன் பக்கத் து சைட்டில் வருகிறது "இல்முநிசாப்படலம்" அதன் அர்த்தமாகி றது. ஞானமார்க்கத்தில்இஸ்திரீகளின்ஸம்போக விஷயத்தைப்பற் றிச் சொல்கிறதென்று பொருட்படுகிற படியால்அவ்விதவிஷயங் கள் நமது காருண்யம் பொருந்திய. இங்கிலீஷ் க்வர்னமெண்டாரு டைய திவ்ய நோக்கத்திற்காதவிஷயங்களென்று எனக்குத்தோன் றுகிறபடியான் நான் அதற்கு இணங்கினவனாக. ஷை இல்முனி சாப்படலத்தின் அர்த்தங்களைப்பற்றி ஒன்றும் எழுதப்புகுதாமல் விலகி. அதற்கடுத்த வேறுபடலங்களுக்கு உரை எழுதும் கருமத் தில் நோக்கினவனாக நான் அதை உரை எழுதாமல் அப்படியே கவிப்பிண்டமாக விட்டு விடுகிறேன். என்ற எனதுகோட்பாட்டை. தனவான்களுக்கு. அறிக்கை செய்கின்றேன். உரையாசிரியன்.

# இல்முனிசாப்படலம்.

## தொங்கல்.

இருகண் முடித்தா னெருக்கண்ணாலே, இல்லெனுந் தம்மா விழுத்து வாங்கி-முருகு நூனிலே நக்தாவிலே, முட்டுவதுமட்டும் சுல்புமட்டும்-பருகும் நுகத்துமேல் வாங்கிக்கட்டப், பாகமறியாத மனுடர் கேண்மோ, சொருகுங் குழல்மங்கை ஹாலுடனே, சுக மாய் மதந்தீர்க்க வறியமாட்டீர். (1)

குஷியா யூணுண்டே யிரவுகாலங், கூடியிருக்கவே யிருச்சா மத்தி, லொசியா துயிரெல்லா முறங்கும்போதி, லோசையொரு சத்தங்கேட்குமப்போ-மசியார் ஹலாலைத்தான் முன்னிறுத்தி, மகிழ்ந்தங்கிருகையுா லணைத்துக்கட்டித்-துசியரர்ஜெம்கூவில்மனத் தைநாட்டிச், சூட்சப் பதினான்கு தலமுத்தே. (2)

உச்சந்தலையிலு மூகங்கண்ணிலு, முவந்த இருகன்னங் குமி ழிதழும், இச்சையுட னிருவிலாப்புறமு, மிசைந்த தனமரண்டு மிடைநடுவும், பச்சமுடன் றொப்பு ழரையல் குலும், பரிந்து நாவு கொண்டாட்டி நீட்டி-யச்சமின்றியே யமுதம் வாங்கி, யருந்தும் பெரியோர்களமலாகுமே. (3)

அருந்தி யதின் பின்னர் தவுசிருத்தி, யரைநாழிகைசுற்று இறை மட்டாகப், பொருந்துங் கமலத்தைச் சுற்றும்போது, புரையுண்டதில் முனைவிரலை யூன்றிடிற்-றிருந்து மெழுகாமத் திரை திறந்து, ஜெகத்திற் பாயுமபார் சிமைவெள்ளம-இருந்து கலங் கொண்டு சுற்றும்போதில், இல்லெனுந் தம்மா விருத்தி வாங்கே.

வாங்கியே மெள்ளத் தான்கிடத்தி, மணியை மேல்வாங்கி வாசியூடே-எங்கும் அலிபுநா னிடைவிடாம, லிசைந்த ஷத்துக் குள் புத்தைமூடடு-தாங்கும் பாலகன பாலுண்ணல்போற், றங்கும் நபுசதை நுணைத்துவாங்கும்-ஒங்குங் கீருபபாய்ந்து தங்குமாணு, லுவந்தே யவளமனம சமதாகுமே. (5)

சேர்க்கை செயும்போதி லீடதுபுறந், திறமாய் நுதுதுபுதான் விழுந்ததாலுற்-கூர்க்கப் பெண்ணாகத் தான் விளையுங், குறியினடு விலே தங்கி நின்றாற்-பார்க்க னலிமாகத்தான் விளையும், பகரு மிது

முறை யறிந்துமிகு-தீர்க்கமுள்ள நல்ல நபியிறசூல், செப்பினு ராதி சொற்படியே. (6)

இப்படிச் சேர்க்கை செய்யாதவர்க், கிளைங்காள் ஹலாலுமே பிணங்கிடுவாள்-துப்புரவதான நபியிறசூல், சொன்னரில்முனிசாவ திலே-கொர்பத்துடன்காமங் தங்குமாகிற், கேடா கும்பிள்ளை தாய் தந்தைக்கு-மொப்பில் லாதுறும் ஹைவானுமா, முண்மை யாயிதை யறியுமென்றூர். (7)

எழுநான் கெழுத்தினி லெழுத்தோரொன்ப, திலகுங் கலிமா விலறு நான்குமாம்தொழுகு மைம்பத்து மூன்றலக்கம், சுஜூது மவுஜூதாம் சூக்கூனுள்ளே, பழுதில் லாசுன்னத் தவதயறியப். பார்கப் பறுலான சூறத்திலே-வழுவில்லாமலே சொன்னன் அல் லா, மாக்கான முஹம்மதுன் ஆயத்திலே. (8)

முந்நூற் றிருபத்து மூன்றுலக்கம் முறுசல்கூடின முறையாமிது-மன்னூர் தனில் வந்த ஹறுபைந்ததில் மணமா மொழியதன் பறுலறியத்-தன்னூரைம்பத்து மூன்றுலக் கஞ், சார்ந்த ஹறுபுநால் சுன்னத்தாறு-பொன்னூர் சுவர்க்கத்தி னிடைவாழலாம்,பூண்டு நன்றாய் அறியுமென்றூர். (9)

உன்னு மூச்சிலே யுண்டானசொல், லுடுப்பு மொடுக்கமு மறிய வேண்டும்-பன்னுங் கிளிபல பேசினுலும், பகைபாம் பூனை தான் பிடிக்கும்போது-சொன்ன பலபேச்சும் வாரா ப்போ தீணயாம் தன் பேச்சிற் சீவன் போகும்-முன்னென் றுயிர் சொல்லும் சொல்லறிந்து, கூடும் ஹலறத்திற் கூடலாகும். (10)

ஷர்று நீங்சவே அமல்சள்செய்ய, ஷஹாத ஷாஹிதாகக்-தார்றத் தென்பிறு அத்தகுத்ரங், துலங்குமதலைபன் கற்பனைசொல்-அர்ற பீக்குல் அகுலாவென, அருளுங் கலிமாவின் பொருளானது-திர்றஹ் யெனும் பிசுமில்லாஹி,நிறைந்த ஷறுபுபத் தொன்பதிலே. (11)

திக்கிர் பறுவாகு முஷாஹிதாவுஞ். செய்து முடிக்குபின் னவிசெய்யுமே-தக்கர் மதமாகிச் ஜிமாஉ செய்தாருனே விற்கில் மதமடங்கும்-சக்குறுந் தன்மையும் பாடுபட்டாற், றுலக்க மாகவே யறியவரு-மக்கர் செய்ஹைவா னிய்யத்தான, மனுட்டை வெருட்டினல் மனமொடுங்கும். (12)

தவறுத் தொடுமிஞ்ஜீல் சபூறனதுஞ், சாற்றும் பொருளெல்லாம் புறுக்கானிலெ-அபரு பமதான புறுக்கானதி, லாரும்பொருளெல்லாம் யாசீனிலே-ஜெபறாத் தெனுங்கல்பு யாசீன்கலாம், சிறந்த பாத்திஹா வானதிலே-நவரு பமதான வும்மூல்குறு, ணட்டம்பே யலிபானதிலே. (13)

அலிபானது ஙுக்கத் தாமூன்றகி லழகா. யொளிசேருஞ் சுக்கூறனதிற்-சலியாமற் சுக்குன் மீமானதிர், றரள மணியீன்ற வலம்புரிக்குள் ளொலியா யலேமோதி யங்குதித்த, உஹறதும் அஹ்றதுக்கு முன்பாகவே? கலிமாப் பொருள்தன்னை யறியவிதி காணு தவர் மனங் காபிறென்றார். (14)

அழியாப் பொரும் வாழ்வை அஹதியத்தையன்பாய்மனதினி லுருதியாக்கி-அழிவிலா அல்லா குறுஆனிலே. யளவ தாகவே சொன்னதிகேள்-ஒளிவு லாநபி முஹம்மதையு,முவத்து மனதிலே யுறுதியாக்கித்-தெளிவா மன்திலே திறம்தாக்கிச், சேர்ந்து முஷாஹிதாச்செய்துவாவே. (15)

இல்முனிசாப் படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 9க்குத் திருக்கவிதை 161

## தௌஹீதுப் படலம்.

### தொங்கல்.

ஆழிக் கடலிணை வருத்திட்டாலும்,அமரர்வந்தேவல்செய்திட்டாலும்-பழாம்சவம்பேசவைத்திட்டாலும்,பகரும்பொன்வெள்ளி பண்ணினாலும்-நாளும் மழை பெய்யவுரைத்திட்டாலும், நீபமாய் வான் மட்டும் பறந்திட்டாலும்-வாழுந்தௌஹீதி னில்லையில்லென, வள்ளல் நபியிறசூலோதினார். (1)

(ஞா-பொ-ரை):—நபிகள் நாயகம் அவர்கள் தங்கள் உம்மத்துகளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறதாவது. ஓ!என் ஷரிஅத்தை எடுத்து சுமக்குகிறகனவான்களே! நீங்கள், மஅரிபாவின் துறையையறிய வேண்டியது அல்லா உடையகலாமில் இருந்தே அறிய வேண்டியது? அஃதல்லாமல் பூலோகத்தில் பலவிதமான வேஷ

தாரிகளான பொய்குருமார்களால் எழு சப்தசாகரங்களானகடலை
ப்பார்த்து ஏ கடலே இங்கு எழுந்தோடிவா? என்று, அப்படியே அழைத்துக் காட்டினாலும், இன்னும்வானவர்களான மலாயிக்த்து களைத்தங்கள் ஏவலாளியர்களாக ஆக்கிவைத்தாலும், இன்னும் ஆத்மாவான பரஞ்ஜோதியானது, இல்லாமல்போன செத்தபிணங் களைப் பழயபடி வாய்திறந்து பேசவைத்திட்டாலும், இன்னும், இரும்புத்துண்டையுங், செம்பையும் வெள்ளி பொன்களாகச் செய்து எடுத்துக் காண்பித்தபோதிலும், நினைத்தவேளை யெல்லாம் ஆகாயத்தில் மழைமாரி தூவச்செய்தபோதைக்கும் இன்னும் ஸஹத்ரஸத்குளிகைகளை வாயடக்கஞ்செய்து, வான்வுயரம் பறந்து போனபோதிலும், நீங்கள். அந்தப்பிரட்டர்களை சற்குருவாகிய காமில்கள் என்று ஒப்புக்கொள்ளவே வேண்டாம். திட்டமாக நம்புங்கள். அந்த வேலைத்தரங்கள் அட்டமாசித்தில் நின்றும் உள்ளதென்று சொல்லிவிடுங்கள். என்று அருளிச் செய்திருக்கின்றார்கள். என-று.

தௌஹீதது செய்வோர்க் கசலாவது, தானே பேச்சற்று மூச்சுமற்றுப்-பவுசாம் பார்வையுங் கேள்வியற்றுப், பகரு மனமற்று நினைவுமற்று-நவுசு தனிற்கத்தி போட்டுவெட்டில், நாரமது போலே கூடிக்கொள்ளு-மவுத்தாங் தருத்திலேயிருந்துகொண்டு, மாயு முனதாய்ந்தே வுருப்பார்களே. (3)

(ஞா-பொ-ரை):—இன்னும் பரிசுத்தமான மஃரிபத்தின் மார்க்கா நுசாரிகளின் அடையாளம் எப்படி யென்றால்:—அவர்களின்வாயில் துனியாவைப்பற்றியவீணானவார்த்தைகள் யாதொன்றும் இருக்காது. வீனில்ஸ்வாசச் செலவுகளும் இருக்காது. அநாவசியமான காமவிகாரமான பொருமையான பார்வைகளும் கண்களிருக்காது, கெட்ட கருமங்களைப்பற்றிய யாதொரு செய்திகளும். அந்தக்காதுகளில் நுழையாது, இன்னும் அவர்களின்மனஸ்களானது ஒரு நிலையன்றி பல நினைவுகளாகப் பிரிந்தோடியாகிற ஹஊசாட்டாங்களெல்லாம் அறத்தீர்ந்து. ஒடுங்கிப்போய் இருக்கும். இன்னும் அவர்களின் நப்ஸ்கள் வெட்கம் கொள்ளும்படி. அல்லது. கோபங்கள் கிளம்பும்படியாக ஒருவர் அலட்சியமாகத்திட்டி விட்

டாலும் சற்றுமுகம் சிலிர்த்து. அப்போதே தண்ணீர் பிளந்து கூடின வண்ணமாக ஒன்று சேர்ந்து. பேசி தயவுபண்ணிக்கொள் வார்கள், முகத்தில் எந்த நேரமும் சிரித்த செந்தாமரையின் வஜீ கரமே ஞான ஒளிவாக நின்று பிரகாசித்துக்கொண்டே யிருக்கும் இன்னும் அவர்களாகிறவர்கள். எந்த நேரமும் மரணத்தையே நினைத்து. இந்த உலகத்தின் சகலமான இச்சைகளையும் வேருடன் பிடிங்கிபெறிந்து விடுதல் என்னும் மவுத்தாகுமுன் மவுத்தாகின வர்களாகவும் இருப்பார்கள். இவ்வடையாளங்களை எவரிடம் காண்பீர்களோ அவர்களை நீங்கள் காமிலான பீரென்று ஒப்புக் கொண்டுவிடுவீர்களாக. எ-று.

பருதீ முகத்திற் கண்ணுடிகாட்டிப், பகரும் நெருப்பினைப் பற்றுமாப்போற்-சுருதிச்சுக்கூனிலே நுத்தாவிலே.சூட்டுங் கமலக் கண்ணுடியூடே-பொருதி யனற்பற்றி றாகுநெய்யிற், புந்தித் திரிய தைப் பொருத்திப்பார்க்க-வொருவனு மல்லா குறுஆனிலே, ஒஷ் ஷம்சு ஓல்லுஹாவிற் சொன்னுன். (3)

(ஞா-பொ-ரை):—ஞானவான்களே! நல்ல கவனித்துக்கொள் ளுங்கள். சாதாரணமாக ஒரு கண்ணுடியை சூரியகிரணங்களுக்கு எதிரேகாட்டி ஒரு பஞ்சுத்துண்டை அதுடன் ஸம்பந்தப்படுத்திய உடனே பளீரென்று அந்தப்பஞ்சியில் நெருப்புப்பற்றிக்கொள்ளு கிறதைப் போல் சுக்கூன் என்ற நினைவை நுக்தாவாகிய இஷ்க்கு டன், மனஸ் என்ற கண்ணுடியில் ஒரேசாதனையாகப் பொருத்திய உன் றாஹ் என்னும இந்திரிய ஒளிவானது.அக்னிமயமாகம்பற்றி விடும். அதை நாட்டம் என்னும் நெய்யில் அறிவு என்கிறதைத் திரியாக்கித்துவைத்துப்பார்த்தால்தான் என்கிற ஸ்ரூபம் அந்த விளக்கின் வெளிச்சத்தில் வெளியாகிப் போகும் அப்போது மனி தத்திரையானதுதானே யறுந்துபோய் ஏகமயமான அரூததவம் உதயஞ்செய்யும் என்று. அல்லாகுத்தாஆலா குர்ஆனில் ஒஷ்ஷம் ஸ்வல்லுஹா. என்ற சூருவில் கட்டளை உதயஞ்செய்திருக்கின்றுன் நல்ல தெளிவாய்க்கண்டுணர்ந்து கொள்ளுங்கள். எ-று.

கையுங் காலுமில்லாத வேடன், காணும் வில்லுமம் பில்லா மலே-ந்தக்க வொருமானை யெய்துவீட்டித்,தலேமே லொருதட்டி

லெடுத்து வைத்தான்-உய்யு மவன்மகட் கெட்டாமையா, லுயர் மேல் நின்று கெட்டிலாத-லெய்யும் பூமியை யெட்டிவாங்கி, பெட்டித்தாழகின் றெடுததுக்கொண்டான். (4)

(ஞா-பொ-ரை):—ஜனங்களே! இதை நல்ல கவனித்துக் கொள்ளுங்கள். கையும் காலுமில்லாத ஒரு வேடன் கானகத்தில் நின்று ஒரு மானைக்கண்டு. தன்வசம் வில்லும் அம்பும் ஒன்றுமில்லாமல் எய்து. அந்த மானைக் கொன்று அப்பால் அதைப்பதம் பண்ணிச்சுட்டு ஒரு தாலாவில் எடுத்துவைத்து எந்தினன். அவன் மகள் தனக்குகைகெட்டாத ஒரு மேட்டு மேல் நின்று கீழ்தகுத் தராவரையிலும் கைநீட்டி எடுத்துக் கொண்டாள். எ-று.

நினைவில்லைக் காலுங் கையுமில்லை, நிறைந்திடு மீமாஅு தனத்தைவேண்டிக்-தனமாம் சரத்தைத்தா னெழுந்துவாங்கித், தனிமையாகவே யிருந்திகொண்டே-யினமாம் ஸஜதிலே தானெய்தினு விலங்கு மவுஜதா மிசுலாமைந்தில்-மனமாய் முஹம்மதுநபியிற சூல், வகுப்பா யலிதமக் கெடுத்தோதினர். (5).

அதாவது:—கையுங்காலுமில்லை. என்பது. நினவு ஊசாட்டம் நின்று விட்டவேடன்நப்ஸ்முத்மஇன்ன. அதாவது,உலக இச்சைகளை வெறுத்த இருதயம். காகம் என்பது, துனியா.—ஒருமான் என்பது. நப்சு அம்மாரு வில் அம்பு. இல்லாமல் அதைக்கொன்றான் என்பது. முக்காமங்களையும் நப்சுகளின் இயந்திரங்களை விட்டும் கிற்பாட்டிய உடன் ஷை அம்மாருதானேமடிந்து விடுகிறதாக இருக்கும். அப்பால் அதைப்பக்குவஞ்செய்து ஒருதட்டையில் எடுத்தேந்தினன் என்பது. குணங்குடியார் "முட்டையைப்பொறிப்பேன் முழுக்தோழிதான் பொறிப்பேன் தட்டைப்பீங்கானில் வைத்துத்தருவேன்" என்று கூறின பொருளாகிய. நப்ஸுடைய தொத்திங்களில் கொழுகின மகாம் கள்பனுவானவுடன் அந்தந்த நப்ஸுகளில் இருந்தே அஹல்குதுவலியின் மஹிஹுயுனு ஒளிவு. வெளியாகி- பக்குவம்பண்ணின மான்தசையாகிய. இந்த மாநுட ஸ்ருபத்தை. கையெட்டாத மேடாகிய இரண்டு நேத்ரங்களின் கபாலமேடையில் நின்று பிரகாசித்து. தன்னுடன் சமாசம் பண்ணிவிடுகிறது.இதுதான் லாமகானுடையஅந்தரங்கமாக இருக்

கும். இப்பொழுது தான் இஸ்மில் அல்லாகூறிய ஐந்து பறு றுகளும் நிறைவேறும்கல்புகள் ஸலாமத்துப் பெற்றுக் கொள்கின் றன. என்று வள்ளலாகிற நமது ஆண்டவர்கள் ஹஸ்ரத் அலிய வர்களுக்கு உபதேசம் செய்தருளினார்கள். எ-று.

சிறப்பாய்க் குருவைத்தான் முடித்துக்கொண்டு, செம்புக னிற்றாக்கச் செம்பொனாகும் அறைப்பில் லாச்செம்பு செம்பிற்றாக் கி, லான பொன்னிலுள்ள மாற்றுண்டாமோ-துறப்பாம் பெரி யோர்க ளுபதேசத்தாந் றுலங்கும் ஞானக்கண்டனைத் திறக்கும்- கரைக்காரற் கற்றவ ருபதேசித்தாற், காணார்தன்கோலங் காணா ரென்றார். (6)

ஞானவுரை:—இன்னும் நபியவர்கள் அலியை நோக்கி. முதலாவது. குரு என்கின்ற. முப்பூவை எப்படி முடிக்கவேண்டு மோ. அந்தவிதமான முக்காமங்களும் அறவொடுங்க பரிசுத் தமாக முதல் முடித்து கைவசம் வைத்துக் கொண்டு. அப்பால் அதை தாம்பிரத்தில் தாக்கினவுடனே பத்தரை மாற்று செம் பொன்னாகப் பழுத்துப் போகும். அப்படிசெய்யாமல் சேம்பையே எடுத்து. செம்பில் சேர்த்து புடம்போட்டு மண்டலமண்டலமாக வூதினாலும் அதுபழயபடி செம்பே அன்றி அது பொன்னாய் விடுமா? அதுபோலதன் மனக்கண்ணை உயர்ந்த குருவால் திறந்து கொண்டமஹான்களிடம் உபதேசம் பெற்றால் உடனே, ஞானக் கண்ணானது திறந்து காட்சி தரிசனங்கள் உண்டாகிவிடும். அது வன்றி வீணுக்காகிலும் மொஹரம் பண்டிகை வேஷதாரிகளைப் போல்தாடியை அகலநிகளமாக வளர்த்துகையில் மூசாநபி ஆசா வைப்போல ஒருதடியையும் பிடித்து. நீளத்திற்கும் தஸ்பீஹ் மணியையும் பிடித்து. உக்காவும் கையுமாகத்திரிகின்ற புகல் முட்டிய. பிந்தினஸமான் இப்லீசுகளை யெல்லாம் காமிலான பீரென்று தாறுமாறான உபதேசங்களை வாங்கி விட்டால் அதனால் என்ன காட்சிகளை பாபம்! அந்தோ பாமரஜனங்கள் காணப்போ கிறார்கள்? ஒருபோதும் தன் கோலத்தை அவர்கள் கண்டு கொள் ளவேபோகிறதில்லை. என்று. திருவாய்மலர்ந்துகூறினார்கள். எ-று

கடுகிண்ணை தங்கஞ் சலத்திற்போட்டாற், காணா தாழத்திற் றாழ்ந்துவிடும்-கொடுக்குங் கன தங்கந் தனையெடுத்துச், சுரைக்கா

ய்பழத்தைக் தான்குறைந்தே-யடுக்கத் தண்ணீர்சேர்த்துவிட்டா, லாடி மிதந்திடுஞ் சொல்லக்கேளீ-ரொடுக்கம் பெரியோர்கள் சிறி, யோர்களி, னுறவுமதுபோலே யாகுமென்றார். (7)

ஞானவுரை:—இன்னும் நபிநாயகமவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தங்கத்தில் நின்றும் கடுகுபோலொத்த சிறியதோர் சன்னத்தை தண்ணீரில் மிதக்கவிட்டால் உடனே தாழ்ந்துகாணாமல் போய்விடும். அதுபோல காமிலான பீரில்லாத முரீதுகளுடைய தவங்கள் பாழ்பட்டுப்போகும். இன்னும் அதிகமான ஒருதங்கக்கட்டி யையெடுத்து நெந்தான ஓர் சுரைக்காயைக்குடைந்து தோண்டி அதனுள் வைத்துத் தண்ணீரில் விட்டால்அதுதாழாமல் மிதந்து கொண்டேபோகும். அதுபோலகாமிலான பீரைத்துயர்ந்து அவர்காட்டும் வழிப்பிர காரம் தவஞ்செய்யும் முரீதுகளுடையதவம் ஜெயத்துக்குவரும் இதே மாதிரிதான் உலகத்தில் அறிவில்லாத மௌடீகர் களெல்லாம் தன் தன் மனஸ்போன வழியில் காலத்தைக்கழிக்காமல் பெரியோர்களையடுத்து அவர்கள் சொல்கிறவழியைப்பிடித்து நடக்கவேண்டியது. எ-று.

கடசியில் நூறாண்டுஜலதுற்றாலும். கரைந்துநீரினைத்தானுண்ணுதிங்-கடற்சி யன்பில்லா மாதரைத்தா, னனைவ துஞ்சண்டாளரினுடனே-துடர்ச்சிப் பலகல்வி பயிற்றினாலுஞ், சுகமாய்க் காதுக்குள்ளேறுதென்றும்-படற்சி முஹம்மது நபியிறசூல், பகர்ந்து குதுசிகண் டோதினாரே. (8)

ஞானவுரை—காய்ந்து போன பாத்திரத்தில் நீ எத்தனை நூறுவருஷங்கள் வரையிலும் தண்ணீரை நிரப்பிவைத்திருந்தாலும் கடைசியில் அந்தபாத்திரம் அத் தண்ணீரை ஒருசிறிதாகிலும் கிரஹிக்காது. அதுபோல மனவில் சிறிதாகிலும் முஹப்பத்தே இல்லாத கெட்டபெண்களுடன் ஜமாஉசெய்கிறதும், பாமரர்களான மடையர்களுக்கு. மதுரிபாவைப்போதிக்கிறதும் யாதொருபிரயோசனமுங் கொடாதென்று நபியவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள். எ-று.

மாலை மணவாளருரைத்தமொழி-மருகரலியார்க்குச் சொன்னதகேள்-பாலனும் கண்ணி விருக்ஷாதிலே, பார்க்கப் பராக்கின்றி விழிமூடியே-கோலமானஹூறு! ஓசையான, குதறத்து ஜலாலான

கிலே, எல எல வென்றிருத்திவாங்கி, இனிமே விருவிழி நடுவுக்கு
ள்ளே. (9)

(ஞா-பொ-ரை):—சுவர்க்கலோகத்தின் மணவாள பூபதியாகிய நமதுநாயகமவர்கள். தங்கள்மருகாரன அலியவர்களுக்கு உபதேசித்த ஞானங்களாவன: சொல்கிறேன்கேளுங்கள் றாஹூல்குதூசியாகிறது ஒருமுகவறை கிருத பால்யஸ்ரூபத்தில் கண்ணின் நடுவே இருஷாதென்கின்ற மோகத்துடன் யாதொரு பராக்குமின்றி விழிகளோத்தியானத்துடன் இருக மூடிக்கொண்டு கல்புக்கண்ணால் நோக்கிப்பார்த்து ஹூ என்கின்றஓசையுடைய ஜலால் என்னும் மகாமில் மனசைக் தரிப்படுத்திக்கொண்டு ஸ்வாசத்தை இல்லல்லாஹ என்ற இருத்தி மூன்றுகமலங்களிலும் எடுத்துவிட்டுக்கொண்டு ஏற்றிவிடவேண்டியது (இன்னும்) எ-று

தங்கள் சூரத்தைப் பார்க்கச்சொன்னான், தந்தை தாயுமில்லா-விந்தைதஆதத்தைப் படைக்கஅசல், வேந்தன் ஜிபுரியில் தன்னையழைத்தே-எந்தன் ஹலறத்திற் புகுந்துபாரு, மிலங்கும் சுரூபமே ஆதம்பாவா-சொந்தமாகவே முஷாஹிதாவிற், றேற்றும் சூறத்தைப்போற்றுவதே. (10)

(ஞா-பொ-ரை):—அந்த ஏற்றத்துடன் இரண்டுவெளிகண்களான இருநேத்ரங்களுக்கும் மத்தியிலே மனிதன்இந்த இருஷாதில் எப்படிவெளிபாகிறன் என்றுநோக்கும்படி, அல்லாஉம்முல்குர்ஆன்என்ற மிஃறாஜியின் ரகசியவசனத்தில் நபியவர்களுக்கு எதிர்முகமாக அருளினான் இதுதான்-ஆதியில் ஆதத்தைஉற்பத்தி செய்வதற்கு. ஆண்டவன் ஜிபுரீலைப்பார்த்து மண்கொண்டுவா? என்று அருளியபோது ஜிபுரீல் றப்பின் சொந்தஹலரத்தாகிய இந்திரிய உஷ்டானத்தில் புகுந்து பார்த்தார். அங்கே ஆதமுடைய ஸ்ரூபம் நின்றிலங்கிற்று. அதைச்சித்திரம் பிடித்துக்கொண்டு அப்பால் அதன் சொரூபத்தைத் தயாரித்துக் கொண்டுவிட்டார் அந்த ஸ்ரூபஒளிதான் முஷாஹிதாவில் தோற்றரவாகிவரும். அதுதான் இன்ஸான்தன்னுடைய சோலமாகக்கலந்துவிட வேண்டியது. இனிஅந்தஸ்ரூபம் என்றதைத் தரிசித்து கொள்வதற்கு மிக்க சுலபமாகஒரு உபாயமிருக்கின்றது அதை நாம் இங்கெடுத்துக்காட்டி விடுகின்றோம். எ-று,

இன்ன முஷாஹிதா வொன்றுகேளு, மேகன் அல்லாஹூ,
நாலெழுத்தை-மன்னுந் தாமரைக்குள்ளே வைத்து, மாயையாவை
யும் வெருட்டிவிட்டுப்-பன்னுங் கலிமாவில் அல்லாஹூ வைப்பா
ரும் வெளியாகு முஷாஹிதாவே. (11)

(ஏ-பொ-ரை):—அதாவது, கலிமாவில் அல்லாபுதைத்து வைத்திருக்கின்ற ரகசியமந்திரமாகிய இல்லல்லாஹு என்ற நாலட்சரத்தையும் ஈரலில் சம்பந்தமாயிருக்கும் தாமரைக்காயின் உள்ளே வைத்து அந்தநோக்கத்துடன்பூலோக இச்சைகரணங்கள் எல்லாவற்றையும் மனசைவிட்டும் விரட்டி அகலச்செய்துவிட்டு ஒரேநாட்டமாய் அல்லாஹுவென்று மூச்சைவிட்டடக்கி ஒரே நோக்கமாக கண்களின் நடுவில் வளைத்துநோக்கும் பட்சத்தில்உடனே முஷாஹிதாவெளியாகும். எ-று.

இப்படி மூன்று முஷாஹிதாவை, யெங்கள் நபியிறசூலோதி
னார், தப்புரவான அல்லா சொன்னான், சொன்னதைச் சொன்னே
னென வோதினார்-அப்படித்தானே சொன்னேனென்றும், ஆதம்,
சூறத்த தானத்திலே மெய்ப்புக் கலாமுல்லா அதனிலேதான்,
மேலொன்றுஞ் சொன்னானிங்ஙனங்கேளே. (12)

(ஏ-பொ-ரை):—இந்தமாதிரியான மூன்றுவிதமான நிஷ்டைகளை அல்லாகுத்தஆலா மிஃறாஜ் திருராத்திரியில் நபியவர்களுக்கு அருளிச்செய்தான். ஆனபடியால் அவைகளின் விபரங்களை ஆண்டவர்கள் அலிபவர்களுக்கு உபதேசஞ்செய்தார்கள் இன்னும் நபியவர்கள் அல்லாவெனக்குச் சொன்னதைநான் உங்களுக்குச்சொன்னேன் ஆனபடியால் உங்களுடைய ஸ்ரூபமான ஆதமுடைய ரூபினைக்கண்டுகொள்ளுங்கள். அல்லா குர்ஆனில் திருவுளஞ்செய்திருக்கின்றான். எ-று.

அப்பன் கலக்கசமாவாத்திலே, அல்லாதான் சொன்னானின்
மையாக- இம்மை தனிலொரு காரிலான, இருதத்துசெய்குகிடை
யாவிட்டால்-உம்முல்குர்ஆனி லல்லாசொன்ன, ஹுதியாகவ
ஷீ அத்திலும், செம்மைதரீக்கத்து ஹக்கீகத்திலும், சிறந்தமஃ
ரிபத் தானத்திலும். (13)

முந்து நபிமார்க்கு முதல்வரான, முஹம்மது நபியிறசூ லுல்லா, சிந்தை தெளிவான வைந்துமாறுஞ் செயலா மார்க்கத்தை யிடைவிடாமற்-சொந்தகுறுஆனி லல்லா சொன்னான், சொன்னதைச் சொன்னேனென வேரதினார்-பந்தி பந்தியாய்ப் பணிவிடையாய்ப். பணிந்து செய்புங்கள் நபியும்மத்தே. (14)

(ஞா-பொ-ரை):—கருத்தாவது:— மிஃறாஜில் நான்றப்பை சந்தித்தபோது அல்லாஎன்னுடன்கலந்ததாவது. ஹபீபே!உமது உம்மத்துகளுக்குச்சொல்லும் பூலோகத்தில்சரியான அமலையுடையதவசாலியான ஒருசற்றுருகிடையாதேபோனல் அந்தஜனங்கள் உம்முடைய ஷரீஅத்திலேயேனும்இருக்கின்றபடியால்அதையே யெடுத்து நடந்துமுந்தின நபிமார்களுக்கு நான்எவ்வித தாக்கீது செய்து வைத்திருந்தேனே அதேபடி. இஸ்லாத்தின் ஐந்துகருமங்களையும்ஈமானில்ஆறுகருமங்களையும்நழுவவிடாமலும்,பகல்வேஷக் காரகுருமார்களைக்கண்டு பேசாமலும். எடுத்து நடந்து வந்தார்களானல்போதும். என்று நேர்நேராகச் சொன்னதுமன்றி. அப்பால் எனக்கிறக்கிவைத்த ஒஹியான குற்ஆனிலும் அம்மன் கலக்கசமாவாத்தி என்றசூறத்தில் தெளிவானவிடி வெள்ளி உதயம் போல் சொல்லிவிட்டான். எ-று.

முஹம்மதுர்றசூ லுல்லாஹென்று, முழுதும் வெளியான கமாலியத்தில்-றகுமான் ஆதமி ஐசதாகவே, தானே யெழுநான்கு ஹறுபுகூடி,புகமையின்றியே பதினன்செழுத் தாபிரதாகவே தானிறுத்திப்-பகமாம் லாஇலாக இல்லல்லாஹு, பகரும் பனிரண்டுசலையோடுமே. (15)

(ஞா-பொ-ரை):—மூன்று முஷாஹிதாவில் நான்முன்கூறிவிட்ட ஒன்றுபோகமற்ற ஒன்றும் இனிவெளிப்படுத்து கின்றேன் அதாவது.முகம்மதுர்றசூலுல்லா ஹிஎன்று ஆண்டவன் வெளிப்படுத்திய கலிமாவில் ஆசமிதன்வல்லமையை அடைந்துகொள்ளும் வண்ணமும்அசலியத்தான ஹக்குக்குக்கீட்டாயம் ஸாஷ்டாங்கம் செய்வது கடமையாய்விட்டது. அதுஎதுக்கென்றால் கலிமாவின் இருபத்தொன்பது அட்சரங்களால் ஆதமியன் ஜடலமானது. உண்டுபட்டிருப்பதாலே அவ்விதம் தலைசாய்ப்பது பறுலாயிற்று

தைச் சொன்னேனென வோதினர்-பந்தி பந்தியாய்ப் பணிவிடை யாய்ப், பணிந்து செய்யுங்கள் நபியும்மத்தே. (14)

முஹம்மதுர்றசூ லுல்லாஹென்று, முழுதும் வெளியான கமாலியத்தில்-றகுமான் ஆதமி ஸசதாகவே, தானே யெழுநான்கு ஹறுபுகூடி,யுகமையின்றியே பதினன்கெழுத் துயிரதாகவே தானி றுத்திப்-பகமாம் லாஇலாக இல்லல்லாஹு, பகரும் பனிரண்டு கலை யோடுமே. (15)

லாஇலாஹவென் றிடுமெழுத்தை,நடுவே மூலத்திற் றுனிறுத் திப்பாயும்-இல்லெனும் ரெண்டெழுத்தைப், புகர்சுவா திஷ்டானத் தெழுப்பிக்-காயுமணி பூரகம்மதுள்ளே, காணும் இல்லெனும்ஹறு பதோங்கி-ஆயும் அனகதம் வாவென்றோடி, யடக்கும் விசித்தியக் கினி ஹூவதாம். (16)

(ஞா-பொ-ரை):—.ஆகையாலே தவ்ஹீதுக் கலிமாவாகிய. (லாஇலாஹ இல்லல்லாஹூ.)என்னும் உயிர்மந்திர அட்சரங்களு பனிரண்டையும் ஆதிமூலமாகிய.தாமரைக்காயின் நடுவே இருத்தி வைத்து·மேலும்கீழுமாகப் பாய்ந்தோடிக்கொண்டிருக்கும் ஸ்வா சக்குதிரைமட்டத்தை,(இல்)என்றஇரண்டு உபயஅட்சரங்களுடன் சேர்த்துப் பிணைத்துக்கட்டி, எந்நேரம் வலதுபக்க நாசிவழியாக பாயும்படியான பூரகம்என்கிற சூரியனையுள்ளேசரிபாகம் நிரம்பி விடச்செய்ததின்பிறகு நீ* நான்* நான்* நீ* என்ற சூட்சியத்தை ஹூஎன்ற அட்சரத்தின் வல்லமையால் நாட்டிப்பார்க்கவேண் டியது(இன்னும்) எ-று.

சந்திர சூரிய மண்டலமுந் தானு மக்கினி மண்டலமு
முந்த நடுமூலந் தனிலெழுந்து மூன்றில்ரண்டான விடுதாண்டி
யுந்தி யுணர்வற்ற முப்பாழப்பா லுவந்து சுழுயது பூதியூடே
யந்தி பகலற்ற பட்டணத்தி லாகுமெனச் சொன்னர்
குருநாதரே. (17)

(ஞா-பொ-ரை):—.மனிதர்களே நீங்கள் தவத்தில்தரிபடக்கூ டியமகாமாகிறது சந்திரமண்டலமும் சூரியமண்டலமும் ஒன்றுகூடி மூலாதாரத்தின்நடு உந்தியாகவும்,பனிரண்டுசுவாசங்களும்வைத்து கிதநாதவோசை செய்யும்படியான ஞானவாசலாகவும், ஐந்து ஆ

டுக்ராணமாளிகை வீடுகளையுந் தாண்டியதாகவும் நினைவும்,அறிவும்பொறிபுலன்களும் தானாகவே உணர்வு அற்று ஆனந்தமயமாகமிதந்து அனியாவின் முதலான முப்பாழ் வெளிகளுங்கடந்து அப்பால் வரக்கூடிய இறவு பகலற்ற லாமகானாகஇருக்கும் என்று சகலஜகத்குருநாதராகிய நமதுநபியாகிய சிரோமணியவர்கள் திருவாய்மதுரமுதிர்த்தார்கள் இந்தநிஷ்டையின்ரூபம் காமிலான ஷெய்குமார்களுக்கன்றிமற்ற வேஷதாரிகளான கள்ளக்குருமார்களுக்கெல்லாம். கட்டவிழ்த்துச் சொல்லவும்பரிட்சிகாரமாகக்காட்டவும் இயலாது. எ-று

குப்பை தனைக்கோழி கிண்டக்கிண்டக்,கொடுக்குமிரணத்தை ஒஜீ பணிக்கும்- செப்பு முபதேசம் ஷெய்கிடத்திற்,றினந்தினங்கேட்கத் திக்திக்குமா-மொப்பு முவமையில்லாதவனை,யுவந்து மனக்கண்ணால் சுஜூது செய்து-முப்பால்பழங்கனி ஹலறத்திலே,முழுதும் பசிதீரப் புசிக்கச்சொன்னார். (18)

(ஞா-பொ-ரை):—இன்னும் நபியவர்கள் தீர்மானமாக உபதேசித்ததாவது; கோழியானது தன்குஞ்சுகளை யணைத்துக்கொண்டு போய் குப்பைமேட்டை சீய்த்துக்கிளரி விடவிட அதன்பின்னடியார்களான குஞ்சுகள் இரைகளைப்பொறுக்கிக் கொத்தித்தின்று கொள்வதுபோல. காமிலான குருவென்பவன்வாயிலிருந்து வருகிற இரஹசியப்புதையல்களை அன்றுடந்தவரவிடாமல் முரீதுகள் அவன்தலைக் கடைவாசலிற் காத்திருந்து பெற்றுக்கொள்ளவேண்டியது. அப்படி நாளாவட்டத்தில் வஹதானியத்தின் துறைமுகமானது சிறுகச் சிறுகத் தெம்படும். அவ்விதம் பழகிக்கொண்டு வந்து, மனக்கண்ணானது. திறந்துவிட்டவுடனே. அதில்ஒரு இந்திரஜாலவட்டமான கண்ணாடிஒன்று தோன்றும். அதில் மக்லூக்காத்துகளின் ஆதிசித்திரஸ்ரூபமான முகம்மதியாவது. பளிரென்றுதோற்ற ரவாகி மின்னல் வெட்டிமறைந்தது போல்மறையும். அன்றியும் இஷ்க்கின் புறத்தால் நிறுத்திக்கொண்டுவிட்டால் அது கையால்-மாவுல் ஹயாத்தென்னும் அமிர்தஸஞ்ஜபீல் என்னும் சர்வமதுரபானத்தை வாயில்வைத்து. ஊட்டும். அதைஅருந்தியவுடன்.. எல்லாவல்லமையும் இன்ஸான்தானாகவே அடைந்த குதுறத்துள்ளவனாக ஆகின்றான். என்றார்கள். எ-று.

அலிபா முலக்கைதா னெழுந்தோங்கியே,யழகார் சுக்கூனுர லதற்குள்ளிலே-மெலிதாயத் தனியைத்தான் தீட்டிநேம்பி,மேவும் ஷரீஅத்துத் தரீகத்ததுஞ்-சலியா ஹக்கீகத்து மஃரிபத்துஞ், சமைத்த போசன முஹப்பத்தாகக்-கலிமாப்பொருளன்ன முஹம் மதுவை,கல்பு மகிழ்ச்சியாய்ப் புசிக்கச் சொன்னர். (19)

(ஞாபொரை):— இன்னும்றசூல்நாயகமவர்கள் அன்னமுஹ ம்மதின்பாடத்தில் சொன்னதாவது. அலிபு. என்றதை. ஒருஉலக் கையாக்கி. ஸுக்கூனை. ஒருஉரலாக்கி. அப்பால் தனியானதால் என்றதை அரிசியாக்கி. கலிமாவின் உயிரட்சரங்களால் தீட்டிநே ம்பி. ஷரீஅத்தென்னும் அடுப்பில்ஏற்றி. தரீகத்தென்னும்-நெரு ப்பைமூட்டி ஹக்கீகத்தென்னும் ஊதுகுழால்ஊதி. மஃரிபத்தெ ன்கிற. பக்குவத்துடன்வடித்து அப்பால்முஹப்பத் தென்கிற போசனத்தை அருந்திக்கொள்ளுங்கள். என்றுதிருவாய் மலர்ந்து சொல்லினர்கள். எ-று,

உன்னி லொருநபு சறியாமலே,யொடுக்கமதைக்கண்டேயறிய மென்னத்-தன்னிற்றுணை மூளத்தெழுந்து,சாகா நபுசதை யறிய விதி முன்னின் மூன்றுக்கு முதலானவர்,முஹம்மதாம் அன்ஹு ஐனுல்லாவை-இன்னி லறக்கண்டே யறிந்தவர்க,ளிருப்பார் சுவர்க் கத்தென் றல்லா சொன்னன். (20)

(ஞா-பொ-ரை):— நபியவர்கள்சொன்னதாக ஹதீதுகுதுஸி யில் சொல்லப்பட்டிருக்கின்றதாவது. மனிதர்களே! உங்களில் ஒருநபுசானது. எந்தநப்சுக்குந் தெரியாமல்நடந்துகொண்டு வருகி றது. நீங்கள்முதல் மகாமில் அதையறிய வேண்டியது. அவ்வாறு அறிவதில் அதன்தீர்மான மான நிலையையறியவேண்டியது இன் னும் உங்களில் ஒரு றூஹானது. எந்தமரணத்திற்கும். சாகாமல் இருந்துகொண்டு. உங்களை திருப்பிநடத்திக்கொள்ள. காத்திருக் கின்றது. அதைநீங்கள் முகம்மதின் கலிமாவைக்கொண்டு உணர் ந்துமெதுவாகஅதை ஸ்நேகித்துக்கொள்ளவேண்டியது இவ்வாறு டன்மூன்றும் பங்காளியாக முகம்மதியாவானது. இருக்கின்றது, அதையும் நீங்கள் அறுஷெழு அல்லாவாகிய. இருநேத்ரங்களுக்கும் நடுமத்தியில்கண்டு வசியதானஞ் செய்துகொள்ள வேண்டியது. உங்களிலுள்ள எல்லா கடமைகளுக்கும். முதன்மையானது, அவ்வி

தஞ் செய்துகொண்ட புண்யவான்கள்தான் சதாஇன்பஉலகமாகிய சுவர்க்கத்தின் ஆதீனக் கர்த்தர்களாக. வாழ்ந்திருப்பார்களென்று முக்காலும் கூறினர்கள். எ-று.

ஊசிதனில் நூலைக் கோக்குதல்போ,லிவந்து சுக்கூனிலே நூல
தைக் கோர்த்துப்-பூசி காலைந்து பீற்றலையும்,பொருத்தி மூடியே
நன்றாய்த்தைத்துக்-கூசிடாதைம்பத் தொன்றிற் சேர்த்துக்,கூறும்
அஹ்மது மவுஜூதிலே-சூழ்ச்சியுட்னே தானறியவேண்டிச்,சொன்
ஞனிறையும்முல் குறுஆனிலே. (21)

(ஞா-பொ-ரை):— இன்னும ஒருஷுஹூதனது விபரங் கீழேவருகிறது. அதாவது:— மனிதர்களே! நீங்கள் ஊசியில் நூலைத்திரித்து. கோத்துக் கொள்வதுபோல. உங்களுடை ஸ்வாசத்தில் நினைவானதை நூலாகத் திரித்துக்கோர்த்து அப்பால் அந்தநூலைக்கோர்த்தவன் தன்கிழிந்தவஸ்திரங்களைமூடித் தைத்துக்கொள்வதுபோல நீங்கள் உங்கள் ஷுஹூதென்ற, ஊசியும் நூலையுங்கொண்டு பதினொரு பீற்றலாகிய. உங்கள் ஜடலத்தின் துவாரங்களை யடைத்து நன்றாகமறுபடியும் பிரிந்துபோகாதபடி தைத்துக்கொண்டு. உங்கள் கண்களை பார்வையின் கூர்மையில் கூசவிடாமல் ஒரேநோக்கமாக. இமைகளை வெட்டவிடாமல் பழக்கம் பண்ணிக் கொண்டுவந்து. ஐம்பத்தொன்று அப்ஜதுக்சணக்கட்சரமாகிய மவ்ஜூதாகிய அகுமதியாவின் பிரமாண்ட வெளிச்சத்தை. க்கண்டு கலிமாவை திரப்பமாக்கிக் கொள்ளுங் ளென்று அல்லா உம்முல் குர்ஆனில் அதாவது மிஃறாஜில் வசனித்த இரஹஸியம் பனிரண்டாயிரம் திருவசனங்களில் கட்டுரைத் திருக்கின்றான். இந்த. தவநிலையான நிஷ்டை ஸாதனங்களை. ஒருவன் அடைந்து பரலோக வாழ்வைக்கண்டுக் கொள்ளவேண்டு. மானல்அவன் வாயைகடைபசாரின் வழியாகபினத்திக் கொண்டுதிரியாமல் கூடியவரையிலும் நிதானித்து மௌனஞ் சாதித்துக்கொண்டுஞருடன் கூடூரீசாரியத்தில் கண்வைத்தவனாக இருந்துவரவேண்டியது, எ-று,

மண்ணும் பழ்குத்திக் கொப்புநாக்கு,வடிவாம்ஜிபுரீலும் அபூ
பக்கரும்-நண்ணுங் கருஈரற் கொப்புக்கண்ணும்,நல்மாமீக்காயீலும்
மூமறுங்-நண்ணைப் நறையீரற் கொப்புநாசி,கருவாமிசுறாபீ லும்மு

துமான்-ஒண்ணும் பித்ததிற் கொப்புக்காதா,மோங்கு மிசுறுயீ லொடுமலியே. (22)

(ஞா-பொ-ரை):— ஒ! உடற்கூறு அறிந்துகொள்ளவந்த ஜனங்களே! கீழ்வரும் தாற்பரியங்களை நல்ல அறிந்து கொள்வீர்களாக. இந்த சரீரத்தில் வெளிப்பூதங்கள் உட்பூதங்கள் என்று இரண்டுவகைகள் இருக்கின்றன. விபரமாவது:— அனாசிறுகளில் ஒன்றுவது மண்ணாக இருக்கும். அதானுடைய வெளிப்பூதத்தில் நாவாக இருக்கும். உள்பூதம் பற்குத்தியாக இருக்கும் அதுதான் அந்தரங்கத்தில் ஜிபுரீலென்று அறிந்துகொள்ளுங்கள். அவதாரத்தில் அபூபக்கராக இருக்கும்! இரண்டாவது பூதமானது, தண்ணீர். அதன் வெளிப்பூதமானது, கண்ணாக இருக்கும். அதன்உள்பூதமானது. கருஈரலாக இருக்கிறது. அந்தரங்கம் மீக்காயீலாகஇருக்கும். அவதாரத்தில் உமீறாக இருக்கும். மூன்றாவது அனாசிறு ஆனது. காற்று. அதன்வெளிப்பூதம் நாசியாக இருக்கும், உள்பூதம் நுரையீரலாகஇருக்கும். அந்தாரங்கத்தில் இஸ்றாபீலாக இருக்கும் அவதாரம் உதுமானாக இருக்கும்-நாலாவது அனாசிறு. அக்னி. அதன்வெளிப்பூதமானது. செவியாகஇருக்கும். உள்பூதம் பித்தமாகஇருக்கும். அந்தரங்கத்தில் இஸ்றாயீலாகஇருக்கும். அவதாரம் அலியாகஇருக்கும இவ்விதம் அனாசிறுகளின் வெளிக்கோலம உட்கோலங்களைப் பகுர்ந்தறியவேண்டியதே ஞானத்தின் முதலாம் வாசற்படியாக இருக்கின்றது. எ-று,

அடவாம் பற்குத்தி ஷரீஅத்தாக,அருளும்லாஇலாஹஇல்லல் லாஹ் நடவாம் கருஈரல் தரீக்கத்தாக:நாடும் திக்கிறதில் லல்லாஹென்றும்-வடவை நுரையீரல் ஹக்கீக்கத்தாக,வாழுஞ்சொல் திக்கிறல்லா ஹென்னும் கடவாழ்வு பித்து மஃரிபத்தாய் காணும் திக்கிறல்ல ஹூவெனதே. (23)

(ஞா-பொ-ரை):— இன்னும் இருக்கின்ற. அந்தரங்கமான விபரமாவது. என்னவெனில் மேற்கூறியபற்குத்தியானது. வெளிக்கோலத்தில் ஷரீஅத்தாக இருக்கின்றது. கலிமாவில் லாஇலாஹ இல்என்றும் பூரணமாகியிருக்கின்றது. இனி. கருஈரலானது. தரீகத்தாக இருக்கின்றது. கலிமாவில் அல்லாஹ என்ற திக்றாகஇருக்கின்றது.இன்னும்நுரையீரலானது ஹக்கீக்கத்தாகஇருக்கின்றது

68488

திக்ருனது. அல்லாஹ் என்றதாகஇருக்கிறது. இன்னும் பித்தமானது. மஅரிபத்தாக இருக்கும். அதன்திக்ருனது. ஹூ, என்ற ஒருசொல்லாக இருக்கின்றது(குணங்குடியாரும்,)நல்லாயிருக்குது காணும் ஒருசொல்லாலே யிப்படிதோணும்) என்று அருளியதும் இந்த ஹூவே. ஆனதால் காரியம் ஹூவில்தான் நிறைவேற வேண்டியதாக இருக்கின்றது. எ-று

ஹூவாம் ஆகாச முத்தலக்கு.குணமாம் பாத்திமாஜம்கூத்திலே-கோவா யிருந்து தானடங்கூத்தைக்கூறவரிதாகுங்குவலப்த்திற்பாவாயிருந்துதா னறிவோர்கட்குப்,பழமாயருந்துவார் பெரியோர்கள்தாம்-நாவாம் றாஹூடே யுறவாடியே,நல்லமுஹப் பத்தாயி ருப்பார்களே. (24)

(ஞா-பொ-ரை):— ஷை ஹூவானது. ஆகாயமென்கின்ற, ஜம்ஹூத்தென்னும் காமில் பாத்திமாவென்னும் அன்னபட்சியானது. ஒளிவீசிநடனமாகின்ற திருநடனத்தை இருதயசாட்சியாக. கண்டமஹான்களுக்குங் கூடஇந்தவுலகத்தில் நாவினால் சொல்ல முடிந்த காரியமா அந்த ஜெம்ஹூத் மகாமில் அந்தவாலேஸ்ரூபம் ஆடும் நடனத்தைக்கண்டுக்கொண்ட அதிர்ஷ்டவான்களுக்கு அதுஸ்ரூபம் தானகவே வந்துமஹா தேவாமிர்தத்திரளை வாயில் வைத்தூட்டும் அப்போதுதான்பேரின்பமென்றதானதுஅர்த்தமானது. இன்னமாதிரிதான் என்பது. மலேமேல் தீபம்போல் விளங்க வரும். அந்தவடிவானது. றாஹின் கோலத்தில் சம்பந்தப்பட்டிருப்பதினலே மனிதன்.றாஹூடனே பழகிக்கொண்டு வர வர அதனுள்ளிருந்தே ஷை மஹ்பூபுமனேமணியுடைய வடிவம்.வெளியாகும் அதைக்கண்டவன் தான் பெரியவன் மற்றப்படி, உலகுபுகழக்கூடிய பெருமைகளையுடைய வல்லவனயிருந்தாலும் சரியே அவனெல்லாம் மௌடீகன் என்பதற்கு என்னதடையிருக்கின்றது, எ-று.

இதுகளைத் தூக்குர் தாமரைக்கா, யிசைபு மதின்கொப்பு ஆகாசமாம்-சதுமா முஹமமதும் பாத்திமாரீங், தப்பா மதுகூறு யாகுமென்ன-வுதிப்பா முஹப்பத்துப் பார்வையதா,முறவாயதை நாடித் தானிருந்தாற்-குதுபா முஹம்மது நபியுடனே, கூடியுறவாடி யிருக்கலாமே, (25)

(ஞா-பொ-ரை):—மேலே கூறிய இந்த பூதங்கள் நாலையும் சுமந்து நடத்தக்கூடிய ஆகாயமானது. தாமரைக்காய் என்றதாக இருக்கும். இனி அதன் ரகசியமானது முகம்மதும், பாத்திமாவுமாக இருக்கிறது, இனிமுகப்பத்ராகிறது. நாட்டத்துடன் ஷஹூதை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறதாக இருக்கும் அதுதான் சிந்தீலப்பார்க்கும் பார்வையாகவும் இருக்கின்றது. இனி அந்தப் பார்வையில் தரிபடும் பட்சத்தில் முகம்மதையும். முஹியித்தீனையும் அந்தமகாமில் கலந்து உறவாடியிருக்கலாம். எ-று.

இருப்பாம் பிரிதிவி அம்மாறத்தா, மேகன் ஜிபுரீல்மக்காம் நாசூத்திலே-கருப்பாம் றப்புதான் லவ்வாமத்து,காண்பூர் மீக்காயீல் மலக்கூத்திலே-யுருப்பார் தெய்வுதான் முல்ஹிமத்தி,னுருவா மிசுறுபீல் ஜபறூத்திலே-குருப்பார் வாயுவு முத்தும இன்னு, கூடு மிசுறுயீல் லாகூத்திலே. (26)

(ஞா-பொ-ரை):—பிரிதிவி என்ற மண்ணானது. நப்ஸ் அம்மாறுவாக இருக்கிறது. மலக்கு, ஜிபுரீலாக இருக்கின்றார் மகாமாகிறது நாசூத்தாக இருக்கும், இனி அப்பு என்பது, தண்ணீராக இருக்கும் புலன் கண்பார்வையாக இருக்கும்,மலக்கு மீக்காயீலாக இருக்கும். ஆலம் மலக்கூத்தாக இருக்கும். நப்ஸ்லவ்வாமத்தாக இருக்கும். இனி வாய்வு ஆகிறது. காற்றாக இருக்கும் மகாம் அல்லது. புலன் நாசி மலக்கு இஸ்றாபீலாக இருக்கும் ஆலம் லாஹூத்தாக இருக்கும், நப்ஸ், முத்ம இன்னுவாக இருக்கும் இனி.தேய்வு ஆகிறது. நெருப்பாக. இருக்கும். மலக்கு இஸ்றாயீலாக இருக்கும் மகாம். செவி, ஆலம் ஜபறூத்தாக இருக்கும். எ-று. நப்ஸ் முல்ஹிமாவா இனி கீழ்வரும்பாடலில் தவம்செய்பவர்கள் சுழுமுனை மண்டலம் அறியக்கூடிய விபரங்களுக்கு ஒரேமகாமின்களில் தீர்மானஞ்சொல்லப்படுகிறது. காண்க.

(ஞா-பொ-ரை):—இனிநாசூத்தான ஆலம் எதுவென்று அறியும்படி கேட்டால் நாசியின் நுனியாக இருக்கும். இனிமலக்கூத்தென்றது, நாசியுடைய நீளமாக இருக்கும் இனி ஜபறூத்தென்றது. நாசியுடைய மூடாக இருக்கும் லாஹூத்தென்றதுதான் நேத்ரங்களுடைய பார்வையாக இருக்கின்றது. பாத்திமா. என்

னும் அன்னமானது. ஜெம்ஹூஉத்தாக இருந்து. தாமரைக்காயின் ஒளிவின் வடிவாக இருந்து, ஜடலத்தில் பிரகாசஞ்செய்கின்றது, என்று நமது கண்மணியான் தீர்க்கதரிசனத்தின் விடிவெள்ளிராசியானது. உபதேசமருளிற்று. எ-று,

நாசூத்தானது நாசி ஒனி, நலமா மலக்கூத்து நாசி னீளம் வாசி ஜபறாத்து நாசி மூடு, வடிவாம் லாகூத்துக் கண்பார்வை யாம்-ஆசில் பாத்திமா ஜம்ஹூஉத்தாக, அழகாந் தாமரை யொளி வாமென்றுங்-கோஜா முஹம்மது நபியிறசூல் கோமான் சுருதி கேண்டாதினரே. (27)

(ஞா-பொ-ளை):—இனியாதொருவன் ஷஹூஉதில்காணும் போது. நாசூத்துடைய மகாமில் இவன் செய்தபாவதோஷங்களின் சூருமத்தாலுண்டான இனி வரும ஸ்ரூபமாகிய ஹைவானை அப்படியே எடுத்து இவனுக்கே காட்டும் இது ஹக்காக இருக்கும். அப்பால். லாஹூஉத்துடைய மகாமை எத்தினபோது அதில் அறுவாஹில் இவன் இருந்த தோற்றத்தை எடுத்துக் காட்டும். அப்பால் எத்திக்கொள்கின்ற ஜபறுத்துடைய மகாமில் தன் ஷெய்காகிய ஞான உபதேச ஆசானைக்காண்பிக்கும் இனிதன்வடிவாகிய லாஹூஉத்திலே எல்லாமலுஹரும். அதாவது சர்வ ஸ்ரூபங்களும் தன் ஸ்ரூபத்தில் வந்து ஒட்டியதன் மகத்தான பரமஸ்ரூபத்தைக் கண்டு கொண்டுவிடும்படி எடுத்துக்காண்பிக்கும், அப்பால் ஹாஹூஉத்துடைய மகாமை எத்தினபோது. வேண்டிய வரம் முத்தி, இவைகளைப்பற்றி முத்துதிர் தோற்றமாக வார்த்தைவந்துபேசும் இனிபாஹூஉத்துடைய மகாம் வந்து எட்டியபோது அதில் சர்வ இன்பரசங்களுங் கொண்ட ஒரு தேமாங்கனியைக்காட்டும். அப்பால் ஜம்ஹூஉத்துடைய மகாமை எத்திக் கொண்டபோதுதான் இன்ஸான் காமிலியத்தாகி நிரப்பங்கொள்வான் மேற்கூறிய தேமாங் கனியையும் ஜம்ஹூஉத்துடைய மகாமில் வைத்துத்தான் ஊட்டப்படும். அப்போதுதான் ஒளலியாக்கள் என்று பட்டமும் சூட்டப்படும். எ-று.

அறிவிப்பு.

இதன்கீழ்வரும் 28. வது நெம்பருடைய திருப்பாடலின் அர்த்தம் அதன்மேலே தனியாக நிற்கும் ஞானப்பொழிப்புரையாக இருக்கிறதை அறிவுடைய்யவான் காண்கும்படியாக எடுத்துக் காட்டப்படுகிறது.

நாசூத்தினிலே ஹைவானைக் காட்டும், நல்லாஹூத்தரு வானிஹைக்காட்டும்-வாசூ ஜபறூத்தில் ஷெய்க்கைக் காட்டும், வடிவாம் லாகூத்திற் றன்சூறத்தாம்-ஆசூ ஹாஹூகூத்திற் பேச்சதாசூ, மழகாம் பாஹூத்திற் பழமதாகும்-பேசும் ஜம்ஹூத்தில் நிரப்பமாகும், பிசகாமற் கனி புசிப்பார்களே. (28)

அதிக பெரியோன்ற னிடத்தில்நின்றே, யறியபனுபக்காரண் டோனாகி-யதிய மெனுமொரு மத்தியிலே, வீழும்அலிபுலாமீமாகவே-புதின் மானதோர் ஷத்தானதிற், பூட்டு மிருஷாதுக் கலிமா வைத்தா-னிதியாம் பக்ரூவின் ஜூசுவானதில், நிகழ்த்திருனல்லா நிசமாகவே. (29)

(ஞா-பொ-ரை):—இனிவிளங்கிக் கொள்ளும் விஷயமாவது. அதேமகாமில் நிரப்பமானவுடன் அல்லாஃ என்னும் பரம் ஒளிவடிவானது. எந்த ஒருகுதுறத்தான கருமங்களும் அறிவிக்கும். அந்த விளக்கத்திலேயே இனிபனு. பக்கா. என்ற இரண்டும் ஒன்றுபட்டு பூரண சந்திர ஒளிவு நின்று இலங்ககூடிய. புருவமத்தியின்கண்ணே அலிபு. லாம். மீம். என்கிற. இறுஷாதுக்கலிமாவாகிறதை விரவிக் கொள்ளுங்கள். என்று பக்ரூ என்ற ஜூஸ்வில் அல்லா திருவிளம்பற்றினன். எ-று.

தலையாம் ஜீம்ஹறு பிலக்கத்திலே, தானும் வெள்ளலி பதையறியக்-கலை தான்பணிரண்டினடுவாகவே, காணும்ஷம்சுதாத் துதயத்திலே-மலைமா முருஷின் முகத்தைநோக்கி, மாலாய்க்கதிருந்த மகுமூதாக-அலையாக் கலிமாவின் பயனையதை, அல்லா குல்குவல்லாவிற் சொன்னன். (30)

(ஞா-பொ-ரை):—தலை என்ற ஜீம். அட்சரத்தின் கணக்கில்

பன்னிரண்டு கலைகளுக்கும் நடுவேஷம் சுதாத்தென்கின்ற, ஒரு வெள்ளைரெங்குடைய குழாய் ஒன்று வெளியாகும். அதுதான் வெள்ளலிபு. அதை அறியவேண்டியதுதான் இன்ஸான்களின் முக்ய கட்மையாக இருக்கும் அந்த வெள்ளலிபின் மகாமில் முகம் மதானது.நமக்கு இறுஷாதுதந்த முரிஷிதாக வெளியாகும்.அதன் திவ்யசந்திரோதய முகத்தைப்பார்த்து, நீ எதைக்கேட்டாலும் அதையெல்லாம் அது கலிமாவில் நின்றே எடுத்து எடுத்துப்போதிக்கும் என்று, அல்லாகுர்ஆனில் குல்ஹுவல்லா என்ற் சூறத்தில் திட்டமாகச்சொல்லியருளினன். எ-று.

பேயும் சீனுமீம்லாம அலியும்,பெருகும் ஹே-றே-ஹே-நுனும் ஏயும்-ஆயும்பத்தெழுத் தவையானதும், அல்லா பிசுமில் லருமாக-வாயின் கலாமுக்கெல்லாந் தலையாம்,வின்ளல்முஹம்மது நபியோதினர்-தாயிமாகவேசார்ந்தவர்கள்,தானு யெங்கெங்குந்தானவரே ()

இனிஇஸ்முல் அஃலம்.என்றதன் அட்சரங்களை இன்னதென்று மஹாஜனங்கள் அறியும்படிக்கு இங்குவிளக்கபடுகிறது.காண்க.

(ஞா-பொ-ரை):—பிஸ்மில் அஉலமாகிறது பேசீன்மீம்லாம் அலிபு. ஹேஸேறே நூன் வ.ஆச இந்த பத்தெழுத்துமாக இருக்கும் இந்தப்பத்தெழுத்தில் நின்றுந்தான் நாலுவேதங்களும் உண்டு பண்ணப்பட்டது எல்லா வேதங்களுக்கும் இந்த அட்சரங்களே தலைமையான வைகள்.என்று நபிகள்சிகாமணி கற்பனை செய்தார்கள். இந்தபத்து அட்சரங்களையும்வாசிலாத்துச் செய்தவர்கள்.உலகத்திலும் ஆகிறத்திலும், பெரியவல்லமையுடையவர்களாக இருப்பார்கள்.அவர்களை எந்தஒருஆபத்தானகருமங்களும்.ஒன்றும் அசைக்க முடியாது. எ-று.

கஞ்சாச் சாராய மபினுங்கள்ளுங்,கள்ளமாய்த்தின்று கவிழ்ந்திருந்தும்-அஞ்சா முஷாஹிதா தனிலிருந்து, மமுதம் வாங்கினனுண்டேனென்பார்-நெஞ்சால் நீர்க்கோழி ஜலத்திற்குள்ளே, நெடுநேரமதர்க மூச்சடைக்கித்-துஞ்சாப் பெருமூச்சை விட்டதுபோற், றய்ய நபியிறசூ லோதினர் (32)

(ஞா-பொ-ரை):— இதுவன்றி. பூலோகத்தில் உள்ள சிலகள்ள ஞானிகள் தங்கள் மஸ்துகளுக்காகவேண்டி. எந்தஞானத்தி

னுமில்லாத பொல்லாச்செயல்களான. கஞ்சா, சாராயம், அபின் கள் முதலிய வெறிவஸ்துக்களை உண்டு மதிமருண்டுபோய் ஞான வான்களுக்கிடையில் வந்துநின்றுகொண்டு. நாங்கள் முஷாஹிதா வில் இருந்துவருகின்றோம். என்றும். அதனால் இஷ்க்கென்ற தேவாமிர்தமுண்டதனால் இப்படிப்பட்ட மஸ்த்தைக் கொண்டிருக் கின்றோமென்றும் சொல்வார்கள். அதாகிறது. எதுபோலென்று கேட்டால் நீர்வாழ்கோழிகள் ஒருசமயங்களில் ஜலத்தின்உள்ளே நுழைந்திருந்துகொண்டு. மூச்சடக்கிப் பெருமூச்செறிந்து மூச்சு முட்டியவுடன் வெளிக்கிளம்பி வருவதுபோலாக இருக்குமே. அன்றி. வேறுஎன்ன பிரயோசனங் காணக்போகிறார்கள்.எ-று.

தௌஹீதுப் படலம்

சம்பூரன மாயிற்று

ஆகப் படலம்10-க்குத் திருக்கவிதை 164.

---

# மிஃறாஜுப்படலம்.

## தொங்கல்.

அல்லா சலாஞ்சொன்னான் முஹம்மதென, வடுத்து ஜிபுரியீ லிரவையிலே-வல்லோன் சபாமறு வாவிடத்தில்,வள்ள லிருக்கின்ற வேளையிலே- நல்லோர் மீக்காயீல் புறுக்கானதில்,நபியை யெடுத் தின்முதுகிலேற்றி-அல்லா கஃபாவி னெழுவாயிலே,யுவந்து ஜிபுரீல் கையாலடைத்தார் (1)

(ஞா-பொ-ரை):— இதில் மிஃறாஜிக்கு மஹானாகிய நபியவர் கள் போய்வந்தஉண்மையை அகில மஹாஜனங்கள் மனவிற்கு திருப்தி கரமாகும்படி ஆசிரியர் பலபெரிய ஆதாரங்களைக்குறித் தும் சுருக்கமாகத் தெரியவைக்கின்றார். அதாவது:— அன்றிரவு. ஒருபோது. றசூலுல்லாமக்காவில் இருக்கும்வேளையில் ஆகாயத் தில் மின்னலும் இடிமுழக்கமும். மைஇருட்டுமாகஜாமமாகவும்நக ரமெங்கும்அரவம் ஒடுங்கின அமைதியாகவும் இருந்தது. அந்நேரம் நபிநாயகமவர்கள் சபாமறுவாளன்னும் வட்டவளையமான ஒரு மலையடிச் சார்பில்தங்கியிருந்தார்கள், வானலோகத்தில்நின்றும்

ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்திறங்கி யாமுகம்மத் அல்லா தங்களுக்கு ஸலாம்சொன்னான். என்று மஹோ மஹான் அவர்களிடத்தில் அடுத்துநின்றனர். அப்பால் ஒருசிறிது நேரத்திற்கெல்லாம் பளீரென்று, மலக்கூத்துஎன்ற ஸ்தலம் ஒளிமயமாகும்படி மீக்காயீல் என்றவானவர் தமது கையில் தெய்வலோகத்தின் வாகனமாகியபுறாக், என்றதைப்பிடித்தவராக வந்திறங்கி மஹோ மஹான் அவர்களுக்குப் பாதார்ச்சனை செய்து. நபிமஹான் அவர்களை மேற்படி புறாக்கில் எடுத்தேற்றி அல்லாவின் திருவீடாகிய. கஃபத்துல்லாவின் வாசல்களையெல்லாம் அடைத்துவிட்டார். ஆனால் இதில் மீக்காயீல் புறாக்கில் ஏற்றினர். ஜிபுரீல் கஃபாவின்கதவுகளையடைத்தார் என்று உணர்ச்சி செய்துகொள்ளவேண்டியது. எ-று.

அடைக்கும் போதினில் புறாக்கானதங்,காகாசத்தினிலே நடந்து,படைத்தோன் முக்கத்தீசுப் பள்ளிதனிற்,பயஹாம்பர் தமைத்தா இறக்கி-நடத்திப் புறாக்கைத்தான் ஜிபுரியீலும், நலமருர் ஹக்குல்லா வெனுந்தூணிலே-குடைந்தார் கைத்தலை யாலதிலே குதிரைதனை நன்றாய்க் கட்டினரே. (2)

(ஞா-பொ-ரை):— கஃபாவை ஜிபுரீல் அடைக்கும் போதே புறாக்கானது நபிமஹான் அவர்களைத்தூக்கி பைத்துல் முகத்தீஸ்க்குக்கொண்டுசென்று. இறக்கிற்று. அப்பால்மஹான் அவாகள் அந்த புறாக்கை. அங்கு * ஹக்குல்லா என்றந் தூணில் தங்கள்திவ்ய கலிமா விரலால்துளைத்து அந்தத்தூணில் கட்டினார்கள்.

கட்டியதன்பின்னேர் வாங்குச் சத்தம்,ஹக்கன் ஜிபுரியீல்சொலக்கேட்டுத்- தட்டில் லாமலே யாதுவைத்துச், சமுகமாகியொன்றாகக்கூடி-நட்டமறலட்சத் திருபஃது,நாலா யிரநபி மார்களுடன் மட்டிலா னேவல் மலக்குகளும்,வந்தார் முக்கத்தீசுப்பள்ளியிலே,()

---

*இந்தஇடத்தில்தூணுக்கு ஹக்குல்லா என்றபெயர் வரும்படி எனது ஐந்தாந் தலைமுறைபாட்டனர் ஸ்ரீமத்ஆலிப்புலவர் மிஃறாஜ்மாலையில் அருளிச்செய்த பாடலை மஹான் அவர்கள் கேட்டு உடனேபிரசன்னமாகி ஆனந்த பாஸ்கர முற்று புலவர் அவர்களுக்கு பரிவட்டமும் மோட்சவரமும் அளித்துவிட்டுப் போந்தனர். என்றுயாவரும் தெரிந்தறிய வேண்டியது உரையாசிரியன்.

(ஞா-பொ-ரை):—கட்டிமுடிந்ததும் பைத்துல் முகத்தீசில் ஜிபுரீல் பாங்கு சொன்னார். ஜிபுரிலின் சப்தத்தைக்கேட்டு உலகத்தில்நாலா திசைகளிலும்அடங்கியிருந்தறசூல்மார்கள்நபிமார்களின் சூக்கும சரீரங்களெல்லாம் எழுந்து அந்த ஸ்தானத்தில் வந்தன அத்துடன் வான லோகத்தில் நின்றும் அநந்தம்லட் சம்மலக்குகளும் வந்த ருளினார்கள் ஆனால் வந்தநபிமார்களின் தொகைமாத்திரம் ஒரு இலட்சத்து இருபத்துநான்காயிரம் அன்றி வானவர்கள் கணக்கு மட்டுபடுத்தற்கியலாது இவ்வளவும், ஒன்று கூட்டிகொண்டுமுகத் தீஸ் பள்ளிவாசலில் பிரளயமானார்கள் எ-று

ஹக்கன் கற்பனை முஹம்மதுடன்,காலியிமாமுன்னே தொழுதபின்னர்-பக்கஞ் ஜிபுரியீல் பாலுமீந்து,பயஹாம் பர்பாலேத்தான் பருகித்-தொக்கன் கல்லதின் மேலிருந்து, தொழுது பயஹாம்பர்துஆ விரந்து- மெய்க்கும் ஜிபுரியீலேணியின்மேல், மேவி யேறு பெண்றோதினரே (4)

(ஞா-பொ-ரை):—அல்லாஉத்திரவுசெய்ததுபோலமேற்கூறிய மஹான்களின் கூட்டத்துக்கெல்லாம் நமது மஹாமஹானாகிய வள்ளலார் அவர்கள்முன்னிலையாகநின்று இமாமத்துச்செய்துதொழுதாயினபிறகு ஆகாயமண்டலத்தினிடமாக.ஒரு அற்புதகரமான பாத்திரதில் பால்வைத்து இறங்கிற்று அதை ஜிபுரீல் கொண்டுவந்து நபிநாயகமர்களுக்கு அருள அதை நபியவர்கள் உடனே வாங்கிப்பருகி அங்கிருந்த ஒருதெய்வத்தன்மை வாய்ந்ததிருக்கல் ஒன்றின்மேல் சாட்டாங்கம் செய்தெழுந்து தெய்வப்பிரார்த்தனையைநிறைவேற்றியதின் பிறகுஇவ்வளவுதான்என்று மதிக்க முடியாது மாணிக்க ராசியால் சமைத்தெடுக்கப்பட்டது வூர்அற்புதனேதாகர ஏணி ஒன்று நபிமஹான் அவர்களின் சந்நிதானதின் நேரவந்து நின்றது உடனே ஜிபுரீல் யாமுகம்மத் இதில் தங்கள் பாதகமலங்களை வைத்தேறுக.என்று அநுமதி வேண்டினார். எ-று

ஆலம் நபுசிலே கஃபத்துல்லா, அகத்திற் கமலசிங் காசனமாம்-கோலமதற்குள்ள எழுவாயிலிற்,கோமான் முஹம்மதா சனமதாகும-தால்ம் பைத்துல் முகத்தீசுப்பள்ளி,சார்ந்த நமக்குள்ளே

குரல் முடிச்சாம்-காலு மதற்குள்ள தூணவது, கலந்த நரம்பது தானகுமே (5)

(ஞா-பொ-ரை):—. ஆனால் இதன் சூட்சியமானது எப்படியென்றாலோ. மக்காவில் கஃபத்துல்லாஎன்றது. நல்ஸானியாஎன்ற ஆலம்ஸகீறாக இருக்கும். கமலசிங்காசனமென்பது ஏழுவான் என்றது இந்தஜடலத்தின் உருப்புகளான ஏழுவாசல் அதாவது புலன்களுடைய ஏழுதுவாரங்களாக இருக்கும் இதில் ஒன்று முகம்மதியாவின் சொந்த ஆசனமாயிருக்கின்றது. ஆனால் இதில்பைத்துல் முக்கத்தீஸ் பள்ளியானது. நமதுஜடலத்தில் எதுவென்றுவிசாரணை செய்தால் அது குரவளைமுடிச்சாகஇருக்கும். இதில்தான் திக்று தஜல்லியின் சப்தம் வெளியாகும் வலம்புரிச்சங்கானது வீற்றிருக்கின்றது. இனிபுருக்கைக்கட்டிய. ஹக்குல்லா என்கின்ற தூணாகிறது அதற்கும் கபாலத்திற்கு மிடையில் போய்க்கொண்டிருக்கின்ற பச்சைநரம்பாக இருக்கின்றது.(உதாரணம்.) மிஃறுஜிமாலையில் அந்தத்தூணின்ரெங்கானது பச்சை மரகதத்தின் நிறமென்று பாடியருளப் பெற்றிருக்கின்றது. காண்க. எ-று.

சங்கு ஷஹறெனுங் கல்லாவது,சார்ந்த குரலதின் மேலுண்ணவு-பொங்கும் பைத்துல் மஃறமூறுவது, பொருந்தும் அண்ணவுக்குழியதுவாம்-தங்கும் நரகங்கீழ் சுவனமேலாங்,தானே னிப்படியைம்பத்தைந்துந்- தொங்குந் தாமரைக் குழலதிலே, தொடரும் படியைம்பத் தைந்தாகுமே. (6)

(ஞா-பொ-ரை):—. அதன்பிறகு மஹானவர்கள் சாஷ்டாங்கஞ்செய்த செங்ஷஹறு என்னும் கல் ஆனது குரவளையின் மேல் இருக்கின்ற உள்நாவாக இருக்கும் அப்பால் இருக்கும் பைத்துல் மஃமூர் என்றஆலயம் என்பது அந்த உள்நாவுக்கு மேல் இருக்கும் குழியாகஇருக்கும் கபாலவழியாக இருக்கும். நரகமானது. அதன்கீழ் உள்ள உந்திக்கமலம் வரையிலும் உள்ள உபாதிகளாக இருக்கும்-சுவர்க்கமானது. அதற்கு மேலுள்ள கபாலமண்டலம் வரையிலும் உள்ளபரமஸ்தானங்களாக இருக்கும். இனிஐம்பத்தைந்து அடுக்குத்திரைகள் என்றதன் உண்மையானது. மூளைமண்டலத்திற்கும். இருதயதாமரைக்கும் இடையில் நீண்டிருக்கும்ஆத்

மக்கொழுவின் சிங்காசனப்படிகள். அதாவது. நரம்புக்குழாய்க
ளின் கடவுகள் ஐம்பத் தைந்துள்ளன. அவைகளாக இருக்கும்.
இனிசிதுறத்துல் முந்தஹா. வென்பது. இந்தஐம்பத்தைந்து படிக
ளுக்குமேலாலே இருக்கின்றதென்றது. முக்கோண வளைவாகிஇரு
க்கும் சுழிமுனை அல்லது. புருவமத்தியாகஇருக்கும். அதன்மேல்
ஜிபுரீல் செல்லமுடியாதென்பது. வாசியின்உதயமானது. நாசியு
டைய நிகளத்தின் மட்டிலும்என்றது. இனியதின்மேல் நபியவர்
கள் தனியாகசென்றார்கள்.என்றதன்கருத்துநாசியின் உள்ளத்தண்
டோடவேஸ்வாசமானதும்கண்புலன்செவிப்புலன்ஆனதும்ஒடுங்கி
விட்டன.இனியதின் மேல் உலகமாகிய.ஆலம் ஜபறூத்தென்கின்ற
கபாலம்வரையிலும்றாஹுல்குதுஸியானது.யாதொருகாரணங்க
ளின்.கூட்டுறவு அல்லாமல் தனியாகவே தான்சென்று மீட்சிபெரு
கின்றது.இதனால்றாஹுல் என்பது.கருமத்தில்முகம்மதின்சிபத்தில்
உள்ளதென்று புத்திமான்கள் நல்லுணர்ச்சி செய்ய வேண்டியது
(இனியப்பால் விஷயமானமகாம் என்னவென்றால்சுல்ததானன்னை
சீறு. அல்லது. மகாமன் மகுமூதாக, இருக்கும் இதன் மூடுமந்தி
ரம் என்னவென்றால் மூளையின் வட்டவடிவம். இதுவே அறுஷேமு
அல்லா வாக. இருக்கின்றது இதன் காந்தியானது இரண்டுகண்ணி
லும் நடுவே ஒருகஷகஷாவின் பிரமாண்மாகத் தெரிகின்றது. இந்
தமகாமில் நினைவுவிஷயமாகினால் அங்கேஒருசப்தம் சேவற்கூவும்
விதமாகக்கேட்கும். அதானது மூளையின் ஜவ்வுக்கிப்பால் உள்ள
ஒருதனியான பரவெளியாக இருக்கின்றது. அந்தசப் தங்கேட்ட
வுடனே முகம்மதியாவானது அதைஅடுத்து ஒளிவின் குறிப்பை
யறிந்து கொண்டு. அங்கேவந்த. அமாவென்னும் இருள்வெளி
யைத்தாண்டி ஒளிவின்காந்தியின் திவ்யகாரண கதிர்கோடிகளைப்பி
டித்துக் கொண்டு றகுமானியாவின் திருவாசங்களை நோக்கிச்சென்
றார்கள்.—. எ-று.

சிறக்கும் படியைம்பத் தைந்ததின்மேற், சிதுறத்துல் முந்த
ஹாத்தலத்திற் - பறக்கும் ஜிபுரியீ லதுமட்டாகப், பகரும் நாசி
னீள மட்டும்-துறக்கும் ஜபறூத்தா சனத்திடத்திற், றுய்யநபி யிற
சூலேறினார்-நரைவீ சும்மக்கா மஹ்மூதிலே,நற்சிங் காசன மான
துவே. (7)

மக்காமன் மஹ்மூதுத் தலமாவது,வழுத்து 'மிருகண்ணி னடு
வாகவே ஹக்காயிக்கானது கடுகளவு, காணு மொருவாயிற் கப்
பால் நின்று-சக்கா வத்தாகவே காவற்கூவுஞ் சத்தமது கேட்டங்
கருகிற்சென்று,புக்காமற் றின்தேர் ரேறித் தாண்டிப்,புகழ் முஹம்
மதப்பாலானதே. (8)

அப்பாற் காபக்கௌசெனுந் தலந்தா,னருள்சேரிருகண்ணின்
மணியதற்குட்-செப்பார் பெரியோர்களதின் பொருளைச், செகத்
தில்அறிந்தவர் பெரியோர்க ளதின்பொருளைச், செகத்தில் அறிந்
தவர் பெரியவர்கள்-ஒப்பில்லா சுல்தானசீறுவதிங்குயர்ந்த சிரச
தின் பொருத்தத்திற்குள்-தப்பில்லா னுதி கற்பனையாற், றுனே
முழங்கும் அவ்வதுனைவிலே. (9)

(ஞா-பொ-ரை):—இதற்கப்பால் மிஹ்றான் அவர்கள்சென்றஸ் தலத்தையும். கண்டமகாட்சிகளையும் இந்த பூலோகத்தில் வாய் திறந்து சொல்ல. அவின்நான் என்றுவரமுடியும். அல்லது அதற் கொருபிஷையில் அந்தந்த தோற்றக்காட்சிகளுக்கு உடைய ஒரு பாதச்சொல்லாகிலும்உண்டா அப்படியிருக்க. அதுவோமஹாமௌ ஞேதயம் என்னும். மூடுமந்திரம். என்னும் ஞானிகளெல்லாம் வரையறுத்துக் கூறிவிட்டிருக்கிறார்களே! இருந்தாலும் நான்அ தைச்சொல்ல வந்துவிட்டதாலே. ஒருசிறுதினையளவு மாத்திரம் எடுத்து. வெளியாக்கின்றேன். கண்டுபிடிக்க அவ்வளவு புத்தித்தி றமை யுண்டா. கண்டுபிடியுங்கள். மஹ்றான்அவர்கள். அதற்கப் பால் சென்றஸ்தலமானது. காபகௌஸைன் என்றதாகஇருக்கும். அப்படிஎன்றால் எப்படிவிளங்கும். அதானது. முகத்தின்வெளியே நமக்கு இரண்டுகண்களிலும் உள்ளே தெரியும்கறுப்பு நீலவட்ட மாகஇருக்கும். இதன் அர்த்தம்என்ற மேற்படிவட்டத்தை எந்த ஞானியானாலும் குட்டிக்கரணம்போட்டாலும் சொல்லிவிடமுடி யாது. முடியாது. அப்படிஒருக்கால் இந்தக்கடல்சூழ்ந்த பெரிய உலகத்தில் எத்தனையோ கோடியில்ஒருவர் கண்டு கொண்டாரா கில் அவரேசகல பிராணிகளுக்குந்தலைவர் என்பதற்கு என்னதான் ஆட்சபனை இருக்கின்றது. அதன்உயறத்திற்குப் பெயர் தான்அல் லாவும் குர்ஆனில் சுல்தான் நன்னுசீறு என்று. தெரிவித்தான்.

இதானது. மூளையுடைய ஐவ்வுகள் வட்டமாகப் பொருந்திய ரகசியஸ்தானமாக இருக்கின்றது. இதற்குள்ளே அல்லாஹு ஜல்லஜலாலஹூ என்றஒரு உதிப்பின் கற்பனையால் ஒரு அசரீயான முழக்கமானது, முழங்கும். அந்த முழக்கம் வந்தஸ்தலந்தான். அவ்அதுனென்று ஆயிற்று. எ-று.

வாழும் அவ்வது னுவெளியில் வழங்கும்வேதத்தினயத்தொலாம்சூழுந் திரையாகத் தான்வளைந்துதய்யோன் கற்பனை வாவாவென்றும்- நானு நபிமார்களித்தலத்தில், நான் வரச்சொல்லவில்லை யென்னும்- ஆளுங்குருவான முகம்மதுவே,யடுத்திங் கடுக்கத்தான் வாருமென்றான். (10)

(ஞா-பொ-ரை):—அவ்வதுனு, என்னும் பரவெளியில் இந்த பூலோகத்தின் கண்ணே இயற்கையாகவே இறங்கிய வேதங்களின் ஆயத்துகளெல்லாம். ஒரு பர்தாவாகச் சூழ்ந்து கொண்டு நிற்க. அல்லாகுத்தாஆலாவின் ஜலால் என்கின்ற கற்பனையானதி,வாவா முகம்மதாவா,முகம்மதாஎன்று அல்லது என்ஹபீபே!வருகவருக நபிகளில் நின்றும் ஒருவரையாவது. இந்த திவ்யஸ்தானமட்டிலும் நான் வரும்படிச்செய்யவே இல்லை, ஆனபோதே யாமுகமத் இதோ என் ஹலரத்தை யடுக்கவாரும். என்று ஒரு உதயசப்தமுண்டாயிற்று. எ-று

வாருமெனுஞ் சொற்கேட்டி றசூல்சொல்வார், வள்ளலே யுனைக் காணுதில்லைச்- சேர இருகன்னு மருண்டுபோச்சுச், சித்தமயங்கித்தான் வீழமுன்னர்- காரும் ஹலறத்திற் காதிர்வந்து,ஹாமீமுஹம்மதைத் தான்தாங்கியே- பாருங் கண்மூடி யொருகண்ணுலே பார்த்து வாருமென் றுத்திரவானதே. (11)

(ஞா-பொ-ரை):—அந்த உதிப்பொலியை நபிகள் நாயகமவர்கள் கேட்டு வள்ளலாகிய கிர்பையாளனே! உன்னை நான் எப்படி காண்கிறது. எண்கண்ணும் பூத்துப்போயிற்று. என்று. ஒரு பேரொளியான பர்தாவைக்கண்ட ஒரு ஆயாசத்தில் ஸ்மரணையற்று விழுவதற்குள்ளாக அதேஸ்தலத்தில் காதிறு. என்னும் நாமத்திற்குரிய ஒருதயாவிசாலமானது. நமது வள்ளலவர்களை

அப்படியே தாங்கி யெடுத்தணைத்து யாமுகம்மத் ஒரு கண்ணை மறைத்துக்கொண்டு மற்றொரு கண்ணைக்கொண்டுஇதோ என்னைப் பாரும் என்று. திருஉத்திரவு பிறந்தது. எ-று.

பொருந்தும் அவ்வது னுவாகிலாய்ப்,புகழுந்தலந்தனிற்றிரை யானது-பரிந்தாறாயிரத் தறுநூற்றது,, பத்தாறுயத்துத் 'திரைவ ளைந்து-திருந்து மிறைவன்கற் பனையீதல்லாற், றிறம்வே றிலையெ ன நபியோதினர்-அருந்துங் குல்ஹூவெல் லாவானதில், அஹதா னவன் சொன்னான் சமதாகவே. (12)

(ஞா-பொ-ரை:—அந்தஸ்தலந்தான் அவ்அதுனு என்றதாக இருக்கும். உடனே நபியவர்கள் அந்தஸ்தலத்தின் கண் தங்கள் ஸ்மரணை தெனிந்ததும். ஆறாயிரத்து அறுநூற்றுப்பதினாறுதிரை சலு வளைந்து வந்து திறந்து பளீரென்று ஒரு மஹாத ஜல்லியான பேரொளிக்கு ஒத்தானது வீசிற்று. நபிகள் நாயகமவர்கள் அந்த பேரொளிவைத்தவிர வேறு வல்லமை என்ன இருக்கப் போகின் றது என்றுகண்டார்கள். அந்த ஒளிதான் வெளியாகும்போதே குல்ஹூ அல்லாஹூ என்னுந்திவ்யவசனந்தொனித்தது. அதுவே ஸமதானது, என்று நபிநாயகமவர்கள் திருவுளம்பற்றினார்கள். அதற்கப்பால் ஒன்னஜ்மி என்றசூறாவில் நின்றும் இருபது ஆயத் துகளை அந்த ஒளியானது, சொல்லிற்று, என் ஹபீபே உனக்கே. நான் என் உஜூதை, வெளியாக்கினேன்.என்றும் சத்யம்செய்து கொடுத்தான். அந்த சத்யம் எது கொண்டானல், முகப்பத்தின் அதிகப்பற்றினாலன்றி, இறை செய்வதற்கில்லை, என்றறியவேண்டி பது இன்னும் அந்த ஒளிவானது, ஹே! என் ஆலம் எல்லாவற் றிற்கு முந்தி றகுமத்தென்ற கோலாகலத்துடன் உற்பத்தி செய் திருந்த. இன்னும் நெருங்கும் குதுறத்தும். தௌஹீதும், கஷ்பும் உமக்கே சொந்தம். என் ஹலரத்தில் உமது அருமையான பாதர கைஷகளைத் தூக்கிவையும் என்று ஒரு தொனி முழங்கிற்று. எ-று.

ஒன்ன ஜூமியி லிருபதாய்த். தோதி னனிறை கற்பனையாற் றன்து ஜூமென்ப துஞ்சிரசிற்,றமக்கே யளித்தனன் பிரசங் கொ ண்டு-முன்ன ரஹூமதா னவரேயினி, முடுகுந் தௌஹீதும் விலா

யத்தான்- பொன்னந் தாள்கபு ஷோடறுஷிற், பொருந்த யேறிவா
ருந் தோழரே. (13)

ஏறினார் காபக் கபுசுடனே, யோகன முஹம்மது நபு அறு
ஷிற் கூறினா.னாதி கற்பனையாற்- குதறத் துப்பெற்ற என்ஹபீபே
பேரும் பதவிய முற்றவரே,பெல்மா யெப்படி வந்தீரேன்று,னாறி
லாஎன்கா லா லேறிபிங்,குற்றேனாஹ தவுறதுக்கு முன்னோய்.(14)

துஞ்சா யுறக்கமு மில்லாதவ, சுல்தான் மாலிக்கி யவுமித்
தீனே-முன்சேர் அன் அம்த ஐனுல்லாவே,முடுகுமுத்து வொத்துல்
புஆகானவா- தன் தா னுயிரெல்லாந் தான்படைத்துக்,குன்ப யக்
கூனைய் வளர்த்தவனே; இன்ஸான் கோலத்தில் நீயிருந்தே,யின்ன
ஹாக்கான தவ்வாபாவே. (15)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் தஜல்லியின் உத்திரவுபோல் நபியவர்கள். தங்கள் இருபாதங்களில் தொடுத்திருந்த ரக்ஷையுடன் அறுஷிடத்தில் ஏறினார்கள். அப்போது,அல்லா நமதுநாயகத்தை நோக்கி நற்பேறும் பெரிதானபதவியையும் பெற்ற என் ஹபீபே! இந்த மஹாகடவுகடவான பரவெளிஸ்தலங்களெல்லாம் கடந்து. இந்த.அறுஷா மட்டில் எம்படி வந்தீரென்றான். அதற்கு நாயகமவர்கள் அளவுகடந்த நாறுல்ஜனே! நான் உல்லமையைக்கொண்டு உன்வல்லமையையடைந்தேன் இதாகிற உஹத்தத்தாகஇருக்கும். ஹே! நித்திரைபசி, மறதி. ஏலாமை ஒன்றும் இல்லாத சர்வவல்லமையாளனே!என்றுசொன்னார்கள்.இன்னும்சொன்னதாவதுஹே! யாசுல்தான்மாலிக்குஎவ்மித்தீன் என்பவனே!அன் அம்தஜனுல்லாவே! வாமுத்லக்கத்துபு ஆதானவனே! குன்என்றதில் எல்லாம் சிருஷ்டித்து குன்பயக்கூனைக வளர்க்கின்றவனே! இன்னும்ரகசியத்தில் இன்ஸான்கோலத்தில் நீயிருந்து. இன்ன ஹாக்கான தவ்வாபாகஇருக்கின்ற ஸ்ரீமானே!என்று புகழ்கூறி நின்றார்கள்.எ-று.

தாஹா நபியே என் சமுகத்திலே, தன்னை யறியவே தான
ழைத்தேன்-காபு ஹே எ ஐன் சா தாயிருந்த, ஹாமீ முஹம்மதே
சலிப்புண்டுமோ-வாகாயஸ்தக்பிறுல்லாவென்றே வள்ளல்,நபிஇஸ்
திக் பாறுசெய்து-பீஹா மக்அது சிதுக்கினிந்த, பீயா மாலிக்கின்
முக்ஹறந்திரியின். (16)

பிரிய மதுகொண்டு ஹலறத்திலே,பேருமறைபெல்லாந்தான நிந்தே-அரிய முன்னுள்ள இல்மானது, மருள்சேர் பெருந்தவு ஹிதானதுஞ்-செறியு மவனூறுமொன்ருகவே,செம்மல்முஹம்மது தமைச்சூழவே-குறிசேர்நினைவெல்லாந்தான்மறைந்து குழம்பிவிழு மூன்தின் தோள்தாங்கினர். (17)

(ஞா-பொ-ரை):—அதற்கு. இலாஹியானது-வள்ளலவர்களை நோக்கி. ஹே. என் ஹபீபே! இதுநாள்பரியந்தம் நானுடம்மை சமரசத்தில் வைத்துப்பாவிக்கின்றேன் என்பதை நீரென்பால் வந்தாலொழிய தெரியாதென்பதை நீரும் உமது உம்மத்து மார்களும் கண்டரியும்படி இப்போது. என்சமுகத்தில் நான் உம்மையழைத்ததாவது. நீர்உம்மைக் கண்டுக்கொள்ளும்படித்தான் ஆகையாலே சாபு ஹே. ஜன். ஸாதாக இருந்த ஹாமீம் முகம்மதே! அதனுலேயேதும் உமக்கு சலிப்புண்டுமோ! என்றுகேட்டான். அதற்குநபியவர்கள் அஸ்தகுபிறுல்லா என்ற. இஸ்திகுபாறைச் செய்தார்கள். செய்து. றப்பைநோக்கி. பிஹா மக்அத்து. விதுகின். என்றுசொல்ல அறுஷானது ஒளிகளின்குழங்களுக்கிடைசூழ்கும்படியான ஒருபெரிய தறஜாத்தில் வைத்து. அல்லா பிரியங்கொண்டு. ஹலரத்தில்வைத்து றசூலுக்குச்சொல்லவேண்டிய அநந்தாநந்தம் மர்ம. சர்ம. பிர்ம. விஸயங்களை யெல்லாம் வெளியாக்கி. நபியவர்களின் பழய புராதனவிருத்தாந்த உபநிஷதங்களையும் ஒன்றென்ருக எடுத்துஅவிழ்த்தான். அவன்தமது பழயவிஷயங்களை எடுத்துவெளியாக்கினவுடன் இஷ்க்குப் பொங்கி. அல்லாவின் நூறும் தமது நூறும் ஒன்ருகக்கூடிப் பற்றிக்கொண்ட மஸ்த்தால் நபிகள் பெருமானர் அவர்கள். நினைவுயெல்லாம் அந்தஸ்தானத்தில் மறந்து. தன்னை மறந்துகுழம்பி கீழேவிழ இருக்கும் அந்தஸமயம் முஹீயித்தீன் என்றளம் பெருமான் உடனே ஒளியுடன்பிரசன்னமாகி நபியவர்களைத்தமது தோளுடன் தோள்வைத்துத்தாங்கியணைத்தனர். இதில் ஒளிப்பகுப்பு. விலாயத்து. என்றதின் அடித்தளம் அறியாமல் மாட்டாங்கித்தனமாய் வந்துவாயைப் போடுகிறவர்களெல்லாம் நமதிடத்தில் கனக்குரைவு பெற்றுக்கொள்வார்கள். என்று. கவனிக்குமகவு. நாம் அவர்களை. கேட்டுக்கொள்கின்றேன், எ-று,

நல்லேலர்க் கிரங்கிடும் நாயகனே நாட்ட மிருந்தவர்க் குறும் பொருளே- சொல்லா லுயர்ந்தவோர் துய்யவனே, தடரின்ப துன் பமற்றவனே- வல்லோய் றகுமத்தும் வாழ்வுமுள்ளோய், வகுத்த இரணங்கள் வகுத்தவனே- ஒல்லி நானுன்னை யறியவந்தே, துயர் ந்த தலத்துக்கு மெத்தாதவா. (18)

(ஞா-பொ-ரை):— உலகத்தில் நல்லோர்கள் என்றறியாய வான்களுக்கு வெளியாகும் ஆதிபரனே! அறிவைத் தெளியவைத் துக்கொண்டவர்களுக் கன்றிமற்றவர் களுக்கு உன்கிருபையைக் காணமுடியாதே அப்படிக்கொத்தவனே! நான்இங்குஉன் ஹலரத் தில்வந்ததானது. என்னைநான் அரிவதற்காக வேண்டியே. என்று நபிநாயக மவர்கள் சொல்லினூர்கள். எ-று.

என்னுள் ளிருந்துநீ அஹதாகவே, இரைஞ்சும் சுஜூதிலே மவுஜூதாகத்- தன்னுட் டாஞகத் தரிப்பாகவே, தானும் பதியி லே நீயிருந்தாய்- முன்னே யிருந்தி னிருந்தேன், முதல்நா ளிருந்ததில் நீயிருந்தாய்- பன்னு மதின்பெயர் குறுசாமென்னப், பகர்ந்தென் றேழமரே முஹம்மதுவே. (19)

(ஞா-பொ-ரை):—அப்போது அல்லாகுத்தஆலா நபியவர்க ளைப்பார்த்து. யாமுகம்மத எனக்குள்ளிருந்தே நீ அஹதாகி. அப் பால் என்னை நீ வணங்கும்படியான மவ்ஜூதானாய். அப்பால் நீ உனக்குள்ளேயே உன்னைக்கண்டாய்? அதானது, தான் என்பது, எது! என்று விசாரணைசெய்யப்புகுந்ததும் நீ உன்னைக்கண்டாய்? ஆதியில் நீ அலிபின் சூறத்தில் கொழுகியபோது இருந்ததுநானே யன்றி வேறில்லை. முதல் நாள் என்ற காலபூதங்களின் தோற்றத் திலேயோ நீயாகிய ஒளிவு முத்லக்காத்துதான் இருந்தது. அதன் நாமகரண மாகிறது. குர்ஸாக இருக்கும். என்றுதன் ஹபீபுக்கு எடுத்து. அறிவித்துவிட்டான். இதுதான். அவ்அதனுஸ்தலத்தில் இஷ்க்கை எழும்பச்செய்தது. எ-று.

அந்நற் சிறுபாலன் றெட்டிதனி, லரிய முன்தூக்கம் விழிக்க முன்னே- யுன்னு மொடுக்கமு தருந்துவேத, வுரையா மிருபத்து நான்காயிர- மென்னும் விசலங்கள் பகருமென்ற, னினியே பேரு னமுஹம்மதுவே- பன்னும் பேச்சன்றி மூச்சுமன்றிப், பகருங் கேள்வியும் பூர்வையற்றே. (20)

(ஞா-பொ-ரை):— இன்னும் அல்லா தன்ஹபீபை நோக்கி. ஹேர்! என்ஹபீபே! இனிநீர்பேசியாக வேண்டியவிஷயங்களெல்லாம்இதோ. மாணிக்கத்தொட்டிலில் என் அருமை மஹபூபு. முஹியத்தீன் நித்திரைசெய்கிறார். அந்தப்பாலவடிவம் நித்திரைதெளிவதற்கு முன்னதாகபேசி முடித்துக்கொள்ளும் என்று சய்க்கினை செய்தான் அந்தசமயம் பெருமான் அவர்களுக்கு தானுகவேஜடலத்தில் யாதொருவூசாட்டமும் இன்றிப்போயிற்று. எ-று.

பார்வைதானற்ற பறிசறியப்,பதமார்கத்திதான்போட்டாட்டினால்-நேர மாகவே சவிலத்தோடே,திசமாங்கத்தியை போட்டாட்டினல்-கூர்மை அல்ஹையுல் கையுமாகக் கூறுந் தேகத்திற்றழிவில்லானே-சேரும் நபியிறசூலோதினர், சிறப்பார்பொருந்த குத்தூசானவா. (21)

(ஞா-பொ-ரை):— இந்த மகாமின் திறமையால்தான் சூபிஸர்மூத் பீயாபானி ஷக்கர் கஞ்ஜி முதலானமஹாத்மாக்களின் சரீரங்களில் கூரியகத்திகள்ஓடியும் ஒன்றுஞ் செய்யக்கூடாமையால் ஆயுதங்கள் மழுங்கிற்று. அந்நேரம் றசூல்நாயகத்தின் பொன்னொளிமேனியானது. அல்ஹய்யும் ஒல்கையும் என்று சிலிர்த்துநின்றது. எ-று.

பாலா யிருந்துதானெய்யாகினேன்,பாலாய்மறுபடி யாகவந்தேன்- மலார் மக்குஅதுசிதுக்காவே, மன்இன்தல மல்க்கில் குதூசானவா-பூலாம மசிந்ததே நாமருந்திப்,புகழ்வே றில்லாத தம்பிரானே ஆல மஹ்மதாய்நாமம்பெற்றேன்,அல்ஹம்துலில்லாஹறாண்டவனே. (22)

(ஞா-பொ-ரை):— நபியவர்கள். இலாஹியை நோக்கி. யாஅல்லாஹ். நான்அசலில் பாலாகஇருந்து. நெய்யானேன். இப்போது. மறுபடியும் மீண்டும் பாலாகவந்தேன். முன்மக்அதுவிதுக்காக இருந்து. இப்போது.மலிக்குல் குத்தூஸானவனே. உனக்கேபுகழ் என்கின்றபுகழெல்லாம் உண்டாவதாக. நானே இப்போது. ஆலம் அஹ்மது என்ற நாமத்தை யுடையவனுக இருக்கின்றேன் உன்னை நான் புகழ்ச்சிசெய்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லினர்கள். எ-று.

எந்தன் ஹபீபான சல்லல்லாவே, யெனக்குக் கடனைந்
தொகுத்தும்-தொந்த மலானி லாஹைந் துநாட், டொடரா யென்
னேன்னையும்மத்தோர்க்கு-லிக்தயபறுவேஷெங்வே தாம்புரே,மீட்
டுங் கனதைய்யை மீட்டாவிட்டார் பந்தங் கொளித்தித்தா னீதாபு
செய்வார்,பார மலகுகள் மஹ ஷறிலே. (23)

(ஞா-பொ-ரை):—இவ்வளவும் தொகுத்துப்பேசியவுடன் அல்லா. நபியவர்களை நோக்கி. முகம்மதே. எனக்கு நீரும்உமது உமமத்துகளும் கடனாகிய-ஐந்து வேளைத் தொழுகையும். வருஷத்தில் ஒருமாதம் உபவாசநோன்பு இருக்கிறதும் முக்யபறுலாக ஆக்கி வைத்தேன். இதோடுகூட மற்றபறுலுகளையும் தகுதிபோல் செய்யவேண்டியது. இவைகளில் எதையும் தொடர்பிடியாகச் செய்யத் தவறினால் கடைசிஅவர்கள் ஒதுங்குந்தானமானது. நரகமே அன்றிவேறில்லை. மஹ்ஷருடைய கேள்வியும்மிக்க வருந்தக் தக்கதாக இருக்குமென்றான். எ-று.

நாற்பதுக்கொன்று கைர்செய்வதும்,நலமார்ககுபாவிறவாப்
செய்வதும்-பூர்ப்பக்கலிமாவி னடபடியும் புகழ்சே ரிவையைந்தும்
பறுலா மென்று - மூப்பர் முஹம்மதேயும்மத்தோர்க்கு,முறையா
மிக்கடன்தீர்க்கச்சொல்லுங்-தாழ்பாம் பறுலதைத் தீர்க்கா விட்
டாற், றகுமீ மானேரிர் சேரமாட்டார். (24)

(ஞா-பொ-ரை):— இன்னும் நபியவர் களைப்பார்த்து. அல்லா சொன்னதாவது. ஹபீபே! உமதுஉம்மத்துகளில் ஒருவன் நாற்பது ரூபாய்உள்ளவனாக இருக்கும் பட்சத்தில் அதில்நின்றும் ஒரு பங்கு ஸக்காத்து செய்துவிடவேண்டியது. அப்பால் மக்காவில் போய் ஹஜ்ஜு உம்ருவை நிறை வேற்றிக் கொள்ளவேண்டியது. அப்பால்கலிமாவின் ஷறுத்தின்படி நடவடிக்கைசெய்ய வேண்டியது. இந்த ஐந்தும் முக்ய பறுலாகஇருக்கும். ஆனதினாலே என் ஹபீபே! இந்தக்கடன் ஐந்தினையும் அவசியம்உமது உம்மத்துக்கள் செய்து தீரத்தான்வேண்டும். அப்படியவர்கள் அக்கடன்களை இறுக்க ஏலாதுபோகும் பட்சத்தில் அவர்களில் ஒருவனாவது. ஈமானுடன் மவுத்தாகமாட்டான் என்றுதிருவுளம்பற்றினான். எ-று

ஆதிநாயகன் சொன்னான் பின்னு, மஹ்மதே விருந் தருந்து மென்று-சோதி யொளிவீசும் ஹலறத்திலே, துய்யோ னெடுக்கமு திறக்கிவிட்டா-னீதி நபியென்ன முன்னும்போதில்,நிசமா யொரு கைவந் தள்ளக்கண்டுபாதம் நிலத்திலே தோயாதவர்,பருகுமசாத் திற் கையைவைத்தார். (25)

(ஞா-பொ-ரை):— அதன்பின்னால் றகுமானாகிய ஆண்டவன் நமது வள்ளலார் அவர்களைநோக்கி யாமுகம்மத் என்ஹபீபே! நமதுவிருந்தை நீர்ஒப்புக்கொண்டு அருந்து வீராக. என்றான். அந் தசமயம் அல்லாவின் திவ்யஹலரத்தில் நின்றும் தேவாமிர்த மிறங் கிற்று. அதில்நாயகத்தின் வழக்கமான உணவுகளும் ஒன்றுசேர்ந் திருந்தது. அதுகண்டு நபியவர்கள் மேற்படி அசனங்களை யருந்த இருக்கும்ஸமயம். அகஸ்மத்தாக ஒருகையானது. அதைவந்து அள்ளக்கண்டு புதினப்பட்டு விட்டார்கள். அப்பால் விருந்தின் உணவில் தங்கள் முபாறக்கான கையை வைத்தார்கள் எ-று.

ஒடுக்கா மசனந்தா னுண்டபின்ன, ருடையவன் சொன்னான் முஹம்மதுவே-திடுக்க மில்லாமல்மக்கனிற், சீக்கிரம் போமென்று சலா முரைத்தான்-அடுக்கும் ஸிதுறத்துல் முந்தஹாவி,லருள்செர் ஜிபுரியீல் சிறகிலேற்றி-யிடுக்க மில்லால் முஹானியில்லி,லிறக்கி ஜிபு யீல் சுவர்க்கம்போனார். (26)

(ஞா-பொ-ரை):— மிஃறாஜியின் தோற்றரவில் கடைசியாக விருந்துண்டு மகிழ்ந்தபின் றகுமான்நபியவர்களைநோக்கி. ஹபீபே இனிசீக்ரம உமது வாசஸ் தலமாகிய. மக்கம். போகலாம். என்று அருளிச்செய்தான். அதற்கடையாளமாக-ஒளியின் உள்ளிருந்து. அசரீரியான-ஸலாமும், நல்மாராயமும் தொனித்திற்று. திரும்பி பார்த்து சிதறத்துல் முன்தஹா என்னும் விருக்ஷத்தின் அடியை நோக்கி விட்டார்கள். அங்குஜிபுரீல் இறகுகளை ஆசனபீடமாக்கிக் கொண்டுவெகு தயாரில் இருந்தனர். உடனேநபியைத்தூக்கி எழு வான்கீழ் வெளிகளில் பறந்து வந்து மக்காவில் உம்முஹானி என் னும் நச்பிராட்டியாரின். கிருஹத்தில் விட்டுவிட்டு மாராயம்பெற் றுக்கொண்டு சுவர்க்கம் சேர்ந்தனர். அந்தசமயம் விடிவெள்ளியா

னதும் கீழ்வடதிசை மார்க்கமாக தோன்றியவைகளை வேளையாக இருந்தது ஆகாயம் பரிசுத்தநிலையில் இருந்திற்று. நபிகள்சிரோரஞ் சிதமவர்கள் ஒருவித இஷ்க்கின் பிரக்னையால் அறுஷின்சிங்காரஒங் காரரீங்காரங்களை கண்ணின் தோற்றாவை விட்டும் விலகாதகாட்சி மஸ்துடையவர்களாக இருந்து மெதுமெதுவாக பிரக்னைதெளிந்து பூலோகசன்னத்துகளை நோக்கினார்கள். பொழுதுஉதய சமுத்திர வாயிலிற்கிளம்பும் சமயமாகக் கண்டார்கள். தேவாலயத்தில் முஅத்தின் பாங்கும் சொல்லும்சப்தம் கேட்டுத்தொழுகைக்குஎழு ந்தருளியானார்கள். எ-று.

கிழக்கு வெளுத்தபின் வாங்குச்சததங்கேட்டு நபிதோழன் மார் பலரும்முழக்கதுடன் கூடி மௌஷமாக முன்னில் முஹம் மதுமிமாமத்தாக-தழைக்கத் தொழுதான்துஆவிரந்து,தனியோன் மிஃருஜூவிசளமிதை விளக்கமாகவேயார்களுக்கு, வேதாம்பரால நபியோதினர். (27)

(ஞா-பொ-ரை):— அப்பால் ஸஹாபாக்களும் கூட்டமாகவந் துபள்ளிவாசற்கு வந்தருளி எல்லாரும் பின்னணியாக. நாயகமவ ர்கள் முன்னிலையாக நின்று இமாமத்துச்செய்து ஸலாம்வாங்கிய உடன் துஆஓதிமுடிந்ததின் பின்னால் நாயகம் அன்றிரவு தாங்கள் அல்லாவின்திவ்ய கொலுவாசனமாகிய மிஃருஜிக்குப் போய்வந்த திவ்ய விஷயத்தைப்பற்றி அவர்களில் பிரபலஸஹாபாக்களுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்து விபரம்விபரமாகப் போதனைபுரிந்தார் கள். எ-று.

சித்தீக் கபூபக்க ருமறுகத்தாப் செல்வ ருது மானர் சலாம் சொன்னபின்-பத்திய பீத்தாலிபலியார்வந்து, பரிந்து சலாம் சொ ல்லியாழிவைத்தார்- கத்தீப் யாறப்பில் ஆலமீனே, கற்ற அசிலிர் றை யறிவானென்று-முத்தி முஹம்மது நபியிறசூல்,முடுகும் சஹா பாக்கட் கோதினரே. (28)

(ஞா-பொ-ரை):— அந்த திருவசனங்களைக் கேட்டுக்குளிர் ந்து. ஹலரத்து அபூபக்கரும். ஹலறத்து உமறும் ஹலரத் உதுமா னும், எழுந்து ஸலாம்சொல்லிப் புகழ்ந்தார்கள். அதற்கப்பால்

ஹலறத் அலியவர்கள் வந்துஸலாம் கூறிமிஃறுஜியில் நபியவர்களின்திருவிரலில் இருந்துதமது திருவிரலில்வேங்கைவடிவில் நின்று அணியப் பெற்ற ஷைதிருவாழிமோதிரத்தை எடுத்து குறுஞ்சிரிப்புடன் நபியவர்களுக்குக் கொடுத்தார்கள். மோதிரத்தைஅலியின் கையில்இருந்து எடுத்துக்கொடுத்தவுடன் நபியவர்கள் அப்படியே பிரமித்துவிட்டு மகிமைபொருந்திய அலியின் சிர்றை அல்லா ஒருவன்தான் அறிவான்என்று அஸ்ஹாபிமார் களைப்பார்த்து அருளிச்செய்தார்கள். எ-று.

ஹக்கனிடத்தமுதுண்ணும்போது.கண்டே னொருகைவந்தமுதள்ளவே-இக்கு மக்கையை யறியவேண்டி, யிதமா யசனமுங் கையில் வைத்தேன்-புக்கு கானகம் வரும்போதிலே, புலியாய் வந்தென்கை யாழிகொண்டதைக்கொண் டலிவைக்கக் கண்டேனென்று, தாஹா நபியிறசூலோதினர். (உ9)

(ஞா-பொ-ரை):— அப்பால் அதுஎன்ன எங்களுக்குஅறியக்கூடவில்லை. என்று.ஸஹாபாக்கள்-கேட்டபோது சொன்னர்கள். அதானது. அல்லாவுடைய சமுகத்தில் எனக்கு விருந்துவைக்கப்பட்டது. அந்த உணவைநான் அருந்த எத்தனிக்கும் சமயத்தில் ஒருகையானது காட்சியாகவந்து அவ்வுணவில் விழுந்து, உணவு களையள்ளிற்று. அப்பால் தோன்றிய இருட்கானத்தில் ஒரு மஹா வேங்கையானது வந்து வாயைப் பிழந்து கண்களை நெருப்பாக்கி விட்டு நின்றது அதன் விரலானது. மாத்திரம் முன் ஆண்டவன் அருளியவிருந்தில் என்கையுடன் ஒருவினேதமாக வந்து போட்டு உணவுஅள்ளிய கையாக இருப்பதைக்கண்டேன்-.அத்துடன் என் கையில் இருந்தமோதிரத்தை விரும்பிற்று அப்போது நான்என் மோதிரத்தைக் கழற்றிஅதன்விரலில் இட்டேன் தற்போதுமக்கத்தில் வந்துபார்த்தால் அந்த மோதிரம் அலியின் விரலில் அணிந்திருந்து கழற்றித்தரப்பட்டதே. இதுஎன்ன விநோதம். இதுஎன்ன அதிசியம்! என்று ஐயுற்றார்கள். எ-று.

புலியாய் வந்ததங் கெனையதட்டிப், புந்திதனைக் கலக்கும்போதிலே-வலியோன் கற்பனை முஹம்மதேநம், வலக்கை யாழியை யெறியுமெனத்-தலைவாய்பிளந்ததிலாளிவிழ்ந்து, தானேபுலிகானம்

போகக் கண்டேன்-அலியார் வெந்தன்மு ஆழிவைத்தார், அல்லா அவர் சிர்றை யறிவானென்ருர். (30)

(ஏா-பொ-ரை)—மறுபடியும் நபியவர்களை நோக்கி ஸஹாபா கள்எதிர் கேள்விகள் கேட்கத் தலைப்பட்டார்கள் என்னவென் ருல் நாயகமே சரி; அந்தப்புலிக்கு எவ்விதம் தேவரீர் மோதிரம் கொடுத்தீர்கள்? என்று வினவினதற்கு நாயகமவர்கள் சொன்ன பதிலானது அல்லாவின் ஹலரத்தை விட்டும்விலகினவுடன் ஒருஇருட்கானகம் எதிரேதோன்றிற்று அதன்நடுவே ஒரு புலி யானது. நின்றதென்று கூறினேன் அப்புலியானது என்னை நோக் கிதனது கோரவா யைத்திறந்து வாலைமுறிக்கிஉறுக்கிற்று அந்நேர ம்கல்புநடுங்கிற்று. அந்தசமயம் அல்லாவின் புறத்தால் இருந்து. ஒருசப்தம் ஐ. என்ஹபீபான முகம்மதே நீர்உமது திருவாழியை க்கழற்றி அந்தப்புலிக்கு எதிரே வீசிவிடும்! என்று உண்டான கட்டளையைநான்கேட்டு அப்பிரகாரஞ்செய்துவிட்டேன் அப்பால் அந்ததிருவாழியானது. அதன்தலையில்விழுந்துநழுவி வாயிற்போய் விழுந்தது அதைஅதுஎடுத்துக் கொட்டாவி விட்டுக்கொண்டு தன் விரலில் போட்டுக் கொண்டு உடனே பிரமாண்டரூபத்தை மாற்றி விட்டு கானகம் போவதைக்கண்டு ஆச்சிரியங்கொண்டேன் இப் போது பார்த்தால் அலிவந்து ஷெமோதிரத்தைத்தன் கரத்திலி ருந்து கழற்றித்தருகிருர் இவருடைய அந்தரங்கம் அல்லா ஒருவ னுக்கன்றி. மற்றவர் அறிய எவ்வளவும் முடியாதே முடியாது என்று கூறினார்கள் எ-று.

## (கவனிப்பு)

அதன் பின்னல் நடந்தேறிய சில அற்புதா கரமான விஷயங்களும் இருக்கின்றன. அவைகளை நல்லதெளிவாக. எனது ஐந்தாம் நலேமு றைபாட்டனர் ஷெய்கு ஆலிப்புலவர் அவர்கள் தங்கள் மதுர வானந்தக்கவிதாசமுத்திரமாகிய. மிஃறாஜிமாலை. என்னும் தெய் வீக நூலில் அருளிச்சொரிந்து விட்டிருக்கின்ருர்கள் அதைத்தகு ந்த ஆற்றலுடன் நான் ஆராய்ச்சிசெய்து ஹிஜிரத்து, 1335ம் வரு ஷம் றம்லான்மீ க்கில் என்னால் செய்துவெளியாக்கியுள்ள மிஃறாஜி

மாலேத்திருவசனமென்ற கிரந்தத்தில் பார்த்து விளங்கிக்கொள்ளும் படியாக' நானே ஒவ்வொரு முஸ்லீமான கனவான்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன், உரையாசிரியன் எ-று.

மிஃருஜூப்படலம்

பூரண மாயிற்று.

ஆகப்படலம்11-க்குத் திருக்கவிதை224.

---

# உபாத்துப் படலம்.

## தொங்கல்

---

ஆதிநபியிறசூலிடத்தில், அல்லா இசுறயீல் தம்மையேவி நீதி. முஹம்மது நபி றூஹினை. நீர்கேளுந்தந்தால் வாங்கிவாருஞ்-சோதி நபியிறசூலிடத்திற், சுபுஹானேன்விட்டமலக்கு வந்து-சாநபியே நம் றூஹைபிறை, தான்கேட்டானெச் சொன்னாப்போ. (1)

(ஞா-பொ-ரை):—அல்லாகுத்த ஆலா இஸ்றயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைநோக்கிஹே இஸ்றயிலே நீஎன் ஹபீபுமுகம்மது நபியவர்கள் சமுகம்போய் தேவரீர்கள் உயிரை அல்லாவிருப்பத்துடன் கேட்கின்றான். என்று கேளும் அவர்கொடுத்தால் வாங்கிக் கொண்டுவாரும் என்று ஆக்ஞாபித்தான் அதன் படி மலக்கல் மவுத்து நபியவர்கள் சமுகம் வந்தார் வந்து. அல்லாவுடைய றசூலே தங்கள் வரிசையான றூஹை அல்லாகுத்தஆலா கேட்கின்றான். என்று சொல்லினார். எ-று.

தங்கள் றூஹினைவாங்கியொரு தம்பிரான்விட்ட மலக்கிடத்திலெங்கள் நபியல்லா கொடுத்தகற்பின், னெழிலார் பாத்திமா நாச்சியாரின்-திங்கள்முகம்வாடி மிகவழுது, செப்பினார்நம்பிராட்டிமார்க்குப்-பொங்கியவரெலா மழுதுமிகப், புகழ்ந்தார் அல்ஹம்து லில்லாஹியை. (2)

(ஞா-பொ-ரை)—:அந்தஸமயம். மலக்குல்மவுத்துச் சொன்ன பிரகாரம் தங்கள் றூஹைவாங்கி. எடுத்து மேற்படி மலக்கல் மவுத்திடம் நபியவர்கள் ஒப்பித்தார்கள் அதன் பிறகுபாத்திமா அஸ்ஸ

ஹறு அவர்கள் பிரம்பிபவிசனகரத்துடன்சலித்தழுதனர் ஆனால்நம் பிராட்டிமார்களுக்கு இந்த சூது ஒன்றும் தெரியாமற் போயிற்று. ஆபினும்கனமிக்க நபியவர்கள் மகளார் அவர்களால் விளங்கிக் கொண்டு அழுதவர்களாக அல்லீர்வைப் புகழ்ந்து ஷுக்றுசெய்து அல்ஹம்துலில்லாஃ என்று சொல்லினார்கள். எ-று.

நல்லநபிபிறசூல் மர்மனார், நாயன் ஹபீபான எங்கள் நபித், தில்லை யுயிர்போக இல்லையென்றே-யேகனபி ஜனுசா வானத்தைத் தொல்லைப் புவிதனி லடக்கவேண்டா-மென்னவுமறுகத் தாடி சொன்னார்-அல்ல லறுமபூ பக்கரவர்க்,காயத் தினையோதிக் காட்டி னாரே, (3)

(ஞா-பொ-ஸ்ர):—,இன்னும் அந்தக்கூட்டத்தில் ஒருவரும், நபியவர்களின் மாதுலருமான ஹலரத் உமறிபுனுல்கத்தாப் என்பவர்கள் கையில் ஆபுதம்பிடித்த கோலத்துடன் நின்று கொண்டு எங்கள் நாயகமவர்கள் உபாத்தாகவில்லை அவர்களின் திவ்யசரீரத்தை இந்தபூமியில் அடக்கம்பண்ணவும்படாது,என்று வற்புறுத்திக் கொண்டு பேசினார்கள் ஹலரத் அபூபக்கர் சீத்திக்கு அவர்கள். மேற்படி உமறவர்களுக்கு நபியவர்களின்உபாத்தின்திட்டத்தைப் பற்றி அல்லாகுர் ஆனில்அருளிச்செய்திருக்கும் ஆயத்துகளைஎடுத்துவிபரித்துக்காட்டினார்கள், அதோடுகூட அநேகவிதமான ஸமாதானங்களும் எடுத்துப் போதித்தனர். எ-று

அலம்தற இலல் லதீனவெனு, மாயத்தை யோதிக்காட்டிய பின் கலம்வரிப் பட்டதுண்டோ வெங்கள்-ஹக்கன் ஹபீபான முஹம்மதர்க்குச், சிலம்பி லொளிவீசு முதுமானப்பான்-திருநாம முளகுதுஆனிலே- அலம்பும் இன்னக்க மையத்தெனு, மாயத்தை யவர்க்கெடுத்தோதினார். (4)

(ஞா-பொ-ளை(: அபூபக்கர் அவர்கள் எடுத்துப் போதித்த குர்ஆன்ஆயத்துக்களின் நமூனு என்னவெனில்,இன்னக்க மையித்துன் என்றதையும், இன்னும் அலம்தறஇல்லல்லதீனு" என்றவைகளாகஇருக்கும்இதற்கும் உமறவர்கள்.எங்கள் நாயகத்தின்சரீரமும் உபாத்தை ஏற்றுக்கொள்ளுமென்று, அந்த லௌஹில் கலமான து என்னவிதத்தினால் வரிபிளங்லெழுதிற்று ? அதிசயம்! அதிசயம்!! என்று ஐயுற்று இன்னம் சொன்னதாவது; எ-று.

பலன்பெற்றுளமுஹம் மதுநபிக்குப்,பயமுண்டோமவுத்துண்டோவுண்டோ-புலன்பொறியுண்டோ முஹம்மதுக்குப்,போகவரமனந் திகைப்பதுண்டோ- வலம்புரிச்சங்கி லிருந்து பின்னர், மண்ணும்புவினில் வந்திருந்தார்-கலம்பலாயவர்க் கழிவுண்டோகாண், சருணை யுயிர்வாங்கக் காலனுண்டோ. (5)

பூமிமுதலாக வானமட்டும்,புகழாயேந்திக் கொண் டறுஷுமட்டும்-ஆமினார்மக னபியா மென்றே,அல்லா திருமுன்னு சனத்தில்வைக்க-நேம நபியாமென் றிறைபுகழ்ந்த, நெறிசேர் நபியிறசூலுல்லாவின்-வாம மறியாம லுயிரைவாங்க,மலக்கல்மௌத்துண்டோ வருள்யார்களே. (6)

(ஞா-பொ-ரை):—இந்த சராசரகோடிகளெல்லாம் படைக்கக் காரண ஒளிவாக இந்த எங்கள்நாயகமவர்களுக்கு உலகத்தில் ஒரு கருமத்தைப்பற்றியாவது, பயமுங்கிடையாது, மவுத்துங்கிடையாது. அவர்களுக்கு, பூதநப்ஸுகளின் குணதிசயங்களும் புலன்களாட்டங்களும் இல்லை, உலக விதம்போல் ஸம்சாரஸஹிதாதிகளை வைத்திருந்தார்களே அன்றி அவ்விஷயமான ஒரு இச்சையும் இல்லையே! அவர்கள் ஆதியில் ஹபாத்துல்கைபார் என்கிற பிர்ம சமுத்திரத்தில் உலாவியரஹீம் என்னும் வலம்புரியின் கர்பத்தில் ஒளிஸ்ருபமாகஅமைந்திருந்து,யாருக்கும் விளங்காதமர்மகாரராக இந்த மண்ணுலகத்தின்கண் வந்திருந்தார்கள், ஆனதாலே அந்த பரமஜோதிக்கு அழிவு என்ற பொய்மையானது ஏது? அவர்களின் பரமாத்மா வைக்கைப்பற்ற காலன் ஏது! ஆதியில் இந்நகரத்தின் மத்தியில் அவர்கள் மாநட ஸ்ரூபத்தில் அவர்கள் அவதரித்தவுடன் ஜிப்ரயீல் அவர்களை எடுத்துச்சென்று சராசரங்கள் எல்லாவற்றிலும் கூட்டி. இவர்கள் தெரியுமா? அளவற்ற வல்லமையையுடைய கர்மூல் முர்ஸலீன் என்று அல்லாவின் திரு ஹலறத்தின் முகதாவில் வைத்தும்புகழ்ந்தவுடன் றகுமானும் ஆம்! இவர் தாயும் தீயுமான என் ஹபீபு, என்று ஸ்தோத்ரம் செய்தமஹா மாகிமை வாய்ந்துள்ள எங்கள் நாயகத்தின் அநேகவரிசையுள்ள திவ்ய ஆத்மாவைக் கைப்பற்ற அந்த மலக்கல் மவ்த்து அத்தனை திராணியுடையவரா? என்ன விநோதம்! என்று யார்களிடம் சந்தேஹத்துடனே உறுதிகூறினார்கள், எ-று.

தந்தை தனைவெட்டி மறைமவிளைத்த, தருவேயுமறே நீர்சேரு மென-வந்த தாயத்து சபர்மாதத்தில், வள்ளல் நபி மேனிக் காயாச மும்-இந்த றபிவுலவ் வலீராறி, விறசூலாகிறம் வரவேண்டுமென்றே யந்தப் படிவந்த ஆயத்தாலே, அல்லா இடப்போனு ராலநபி (7)

(ஞா-பொ-ரை):—அதற்கபூப்க்கர் அவர்கள்; பெற்று வளர்த் ததகுப்பனுரை இந்த இஸ்லாத்தின்கதி மோட்சத்திற்காக வேண்டி சிரச்சேதஞ் செய்தமகாவோர்மையுள்ள எங்கள் உமறே! கேட்பீ ராக, அல்லாகுர்ஆனில் ஸபர்மாதத்தில் என் ஹபீபு ஆயாசமடை ந்து, இந்தறபீஉல் அவ்வல்மாதத்தில் பிறை பனிரண்டில் என் ஹல ரத்தில் வந்து ஒன்று கூடிக்கொள்வார். என்று, நல்லவிபரத்துடன் அருளிய ஆயத்து விதித்த பிரகாரம் நமது நாயகமவர்கள், இந்தப் பொய்யை விட்டும் மெய்யைப்பொருந்திவிட்டார்கள். எ-று.

அன்று நபியிடங் கேளாமலே-ஆயத்து வந்த படியன்றியே இன்று மூடுகத்தான் தடையுண்டுமோ- ஏக நாயகனுக்கேர்க்கு டமே, குண்டுநேர்புயருமறுகத்தாப்-கோமானளவிலேபுகழ்ச்சியாகித் தொண்டு மிகச்செய்தார் செய்துபின்னர்-துங்கமனமதுசலித்திருந் தார். (8)

(ஞா-பொ-ரை):—ஆதியில் அல்லாவுக்கும் நாயகமவர்களுக் கும். இதைப்பற்றிய விவகாரங்கள் ஸம்மதங்கள்நிறைவேறியிராத பட்சத்தில் இப்போது அந்த உத்திரவிற்கு கீழ்ப்படிவார்களா? அல்லது. அல்லாவும் வலிய அவ்விதம் கட்டாயம் செய்வதற்கு நியாயந்தான் இருக்கின்றதா? இதுவே ஒவ்வொருமக்லூக்காத்து களின் மரணகருமங்களாக ஏற்பட்டிருக்கின்றது. இதை ஒப்புக் கொள்கின்றீரா இல்லையா? என்று எடுத்துச் சொன்னவுடன் பெரிய பெரு மூச்சுடன் எர்ந்து கொண்டு அல்லாவைப் புகழ்ந்து ஷுக்று செய்தார்கள். அப்பால் தாங்கமுடியாத மனக்கிலே சத் துடன் மனமுருகிப் போய் நின்றூர்கள். எ-று.

மனமானதுசலித் துறங்குமுமர்-மஹ்மூதைததேடுமாசையி னற், புனலோடும் பொறி தனையடைத்துப்- புழுங்கி யுறங்கிடுமன் னேரத்தி, லினவானவர்க்கெல்லா மேலானவ- ரிறசூல் முஹம்மது நபி நாயகர், சொனமாப் பரியினிலேறியுமர்த்-தோன்றல் கனவி னிற் கண்முன்வந்தார். (9)

கண்ணின் மணியான நபிமருகர்-கருணை மிகவுள்ள அலியார் சொன்னார்'-ஒன்றா னவன் சொன்ன வாயத்திலே ஒசியத்தில் நபி தாமுஞ்சொன்னார்,எண்ணார்ஒல்லுஹாவானதிலே-இயம்பினனுமர் கேளுமென்றே அண்ணா வியான 'முஹம்மதரீ' ஞவிதனை வாங்க மலக்குமுண்டோ. (10)

அவராலனைத்தையும்படைத்ததல்லா-லவரையாராலேபடைத் தான் சொல்லும், இவரையுயிர்வாங்களவராயினு,மில்லையொருவரு மில்லையென்றான், கவக்கென்றிது.சொல்லஅலியார்சொல்வார்-கரு ணைச்சபர் மாதம் முதல்நாளையிற்,றுவக்கமானவன்சொல்லிவிட்ட திபத் தாயத்தை யுணர்ந்திலீரோ. (11)

(ஞா-பொ-ரை):—இன்னும் அதேசமயம் மறுபடியும் உம றுக்கு மனங்குழம்பிற்று,மறுபடியும் நாயகம் ஒருக்காலும் உபாத் தாகவில்லை. ஒருசமயம் இது ஒரு மயக்கமாக இருக்கலாம் அறியா மல் சொல்பவர்களின் தலைகள் இதோ! இந்த உமறின் அகலவா ளின் வெட்டால் அறுபடும்.என்று கூறினார்கள். அப்போது அவர் களின் சமுகம்யாரும் போய் சமதானஞ்சொல்லப்பயந்து நடுங்கி னார்கள். அது சமயம்ஹலரத் அலியவர்கள் அதிக ஆக்ரமத்துடன் எழுந்து உமறவர்களின் சமுகத்தில் வந்து உமறே தாங்கள் சொல் கிற பிரகாரம் நம்நாயகம் எல்லா வல்லமையுமுடையவர்கள்தான். என்றாலும். அல்லாகுத்தஆலா இந்த தர்க்கம் வருமென்றே. குர் ஆனில் நீர் அறியும்படியாக குறிப்பிட்டு பத்து ஆயத்துக்களில் நமது நாயகமவர்சள் உபாத்தாகிவிடுவார்கள் என்று கானகத்தில் நட்டிய விளக்குப்போல, அருளியதை ஒப்புக்கொள்ள மாட்டீ ரோ! என்று அரற்றினார்கள், அது கேட்ட வுமர் றகுமானுடைய கலாமுக்குத்தலைசாய்க்கின்றேன் என்று ஒப்பினார்கள். அந்த தரு ணம் அவர்களுக்கு மதிமருண்டு ஒருவித ஆசோக நித்ரை தோன் றிற்று. அதில் எங்கள் இருலோகத்திற்கும் வள்ளலாகிய. நாயகம் ஸல்லல்லா ஹூ அலைவஸல்லமவர்கள் உமறவர்களின் கனவில் ஒரு பசிய குதிரையின்மீது சவாரி செய்தவர்களாக. உதயமாகி வந்து முகாமுகமான சந்திப்புக்கொடுத்து, அவர்களை நோக்கி,

மந்தரக் குடை நபியோதினர்-மாமனுமறேநீர்கேளுமென்றே யந்த ரங்கமா யவனூரிலே-யழைத்தா னுயகன் புவனமீதில் வந்த ரப்துல்லா நுதலில் நின்று-மானு ராமினருதரத்தினிற்,சிந்துசுரூப மாய் மனுவடிவாய்ச்-சிவனபுசுமாய்ப் பிறந்தனரே. (12)

பிறந்து குழந்தையாய்வாலிபமாய்ப்-பிறந்ததற்காகமவுத்தே வினன்,இரந்து போறந்த யுமறேகேளு-மிறையோன் ஷபா அத் திற் கிரக்கவேணும் அறந்தருந் தீதார் காணவேணும்-அருளின் யார்களு மும்மத்தோருங்,குறைந்து போகாமல் நிறைந்திருக்கக் கோமான் சொல்லியேயெனையழைத்தான் (13)

(ஞா-பொ-ரை):—ஓ! என் அன்புள்ள உமறே! உண்மை யான சங்கதியை அவிழ்த்து விடுகிறேன் கேட்பீராக. ஆதியில் அல்லாகுத்தஆலாவின் ஒளிவிலே என்னை சிருகவைத்திருந்து. அப்பால் சிற்சில அவதாரங்களில் திருப்பினன். அதன்பிறகு ஆதமிவடிவத்தில் செல்லென்றுன் அதன் படி இந்த பூலோகத் தளவில் வந்து அப்துல்லாவின் நுதலில் நின்றும் ஆமினரின் உதி ரப்பிண்டத்தில் விளைந்து உங்களைப்போல் நானும் சில பூதரப்ஸா களுடன் சில அடையாளங்களுடன் மனுவாகப் பிறந்தேன் அவ் விதமாதாவின் உதிரத்தில் நானும் உருவத்தை எடுத்து சிசுவாகப் பிறந்து வாலிபமெத்தினதற்காக மரணத்தை ஏவினன் அப்படி மரணத்தை நான் ஏற்றுக்கொண்டது. உங்களுக்கு நன்மையைச் செய்வதற்கே யன்றி வேறல்ல, நான் மரணத்தை ஏற்றதால் தான் நாளை மகுஷரில் உங்களை சந்தித்து, ஷபாஅத்துச்செய்ய முடியும், அன்றியும் ஹபீபே உமது! உம்மத்துக்கள் நாளை என் தீதாறைக் கண்டுகொள்ளவேண்டுமானல் நீர் இப்போது மவுத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எனக்குறகுமான் உத்தரவிட்டான் ஆன திஞலேநான்உங்கள் நன்மைக்காகவே மரணத்தை ஒப்புக்கொண் டேன். எ-று.

அழைத்த செய்தியை யுமறேகேளு-மவனே பிறப்பில்லா னிறப்பு மில்லான், விளைத்த வதிலென்று சொல்லக்கேளும்-வேந்த ஞெருவர்க்கு மடங்காதவன்,பழத்தைக்காயாக்கிப்பழமாக்கினன்

பய்ஹாம்பர் நபி பாருமென்றே-யுளத்தைத்திருப்பிய வுமருனவ ரொக்கு மெனநபி ஹக்கேயென்றார். (14)

(ஞா-பொ-ரை):—இன்னும் என் உமறே கேளும் ஒரு உண் மையைக்கிளப்பி விடுகிறேன் அல்லாவுக்கு மவுத்தில்லை என்றிருக்க, நான் அவனாகிய ஒளிவாக இருக்க. எனக்கெப்படி மரணம் ஏற்ப டும். உம்முடைய அபிப்பிராயப்படி-தான்கருமம் உண்மைதான். ஆனல் மானுட சுகத்திற்காக வேண்டிய பழமாய் இருந்தேன் இப் போது காயாகி வந்தேன் காயிக்குரிய தொழில்யாவும் சரிவரச் செய்து விட்டு மறுபடியும் பழயபடி பழமாய்விட்டேன்- கருத் தைக்கண்டீரா. என்று நமது நாயகமவர்கள் தங்கள் உஜூதின் வல்லமையைக்கொண்டு ஹலரத் உமறின் மனவின் புர்தாவைச் சற்று நீக்கிக்கொண்டு உமறே! பாரும் காரியமெப்படி இருக்கின் றது! என்றார்கள். உள்ள மக்ஸதைக்கண்ட உமறு அப் படியே திகிலுடைந்து நாயகமே ஹக்குதான் என்று உடனே ஒப் புக் கொண்டு வாயை அசையாமல் மௌனமாக இருந்தார்கள்.

எந்தன் மாமனு ரேயுமறே-யின்னம் செய்தியான் சொல்லக் கேளும், அந்த மவுத்தொன்று மில்லாவிட்டா-லவனி போதுமோ எல்லாத்திற்குங், கந்தக் கிபாமத்து நாளாகினிங்-கருணை மஹ்ஷறு நாளாகினும்,சொந்தசிறாத்துப்பாலங் கடந்து-சுவர்க்கந்தனிலுற்று வாழலாமே. (15)

(ஞா-பொ-ரை):—இன்னும் உமறே கேட்பீராக. அந்தமர ணத்தை அல்லாகுத்தஆலா. ஏவாவிட்டால் இந்தபூலோகமானது. ஜனங்கள் இருக்கஇடங்காணுமா? அந்தமரணம்ஒன்று ஏற்பட்டால் தான் மஹ்ஷர் வெளிகளையும், முஸ்தக்கீன் பாலத்தையுங்கடந்து சுவர்க்கம்போய் அங்குள்ள அளவற்ற சுகானுபவங்களைப்பெற்றுக் கொள்ளமுடியும், அன்றிநாம் இந்தபூலோகத்தில் ஜீவித்திருந் தோமேயானல் சுவர்க்கலோகத்தின் இன்பங்களை எப்படி அனுப விக்கக்கூடும்? என்றார்கள். எ-று

எனக்கு மவுத்துத்தா னில்லாவிட்டா-லெவர்க்கு மவுத்தில்லை யுமீறர்சே,எனக்குத்தனதான காரியத்தை-யெவரும்மறியார்களிறை

யொழிய,எனக்கு நாயன் செய் நன்றிதன்னையெவருந் தெரியார்கள் மூமினீனே, எனக்கு மவுத்தெனு மக்காமதனி-லேற்றபணி விடைசெய்யச்சொன்னான். (16)

(ஞா-பொ-ரை):—ஆகையால் உமறே! இன்னொரு ரகசியம் சொலகிறேன் எனக்கு மவுத்தென்கிற மரணமான மாத்திரம இல்லாதிருக்கும் பட்சத்தில் இந்தபூலோகத்தில் ஒருவஸ்த்துவும் மரணத்தையநுபவியாது. நிட்சயம் அன்றியும் எனக்குச் சொந்தமான சில அஸ்ஸங்கள் உண்டு அவைகளை. நீங்கள்யாரும் அறிந்து கொள்ளமுடியாது. அல்லா ஒருவனையன்றி. மேலும் அல்லா எனக்குஅதிகமான நல்லகாரியமான சிலநன்றிகளைச் செய்திருக்கின்றான். அதையும் நீங்கள்யாரும் அறிந்ததே கிடையாது. எ-று.

மலுஹறாகினான் வெளியாகினேன்-மஃஷூகாகினான் ஆஷிக்கானேன்மலுஹறானதில் இஷ்க்காகினேன்-மஃஷூக்காயுஜூத் மவுஜூதானேன், மலுஹறானதால் அரூபமானேன்-மகுபியிலே ரூபமானேன, மலுஹறாகியே சுரூபமானேன்-மஹ்பூபாகியே மவுத்தாகினேன் (17)

(ஞா-பொ-ரை):— இன்ன ஒருசூட்சமம் சொல்கிறேன் நல்ல அறிவைக்கூர்ந்து அறிந்துபாரும்-அல்லாஇந்தபூலோகமாகவெளியாகினான், நான்வெளியாகினேன். அந்தவெளியாகுதலில் நான் ஆசையென்னுங் கொழுக்கில் கொழுகிக் கொண்டிருந்தேன். அப்போது. அந்த ஒன்று இரண்டாகிவிட்டது. அவைஇரண்டிற்கும் மஉஷூக்கென்றும் இஷ்க்கென்றும் பெயர் உண்டாயிற்று, அந்த மஉஷூக்குஎன்பது. ஜம்இல் அதாவது. உண்மையில் தாத்தாகவும். இஷ்க்கானது மவுஜூதாகவும்இருந்தது அந்தஉஜூதின்முதலக்காத்தினால் நான்ஆரூபஸ்தான மானஆசையில் கொழுவிக் கொண்டேன் அப்பால் ஆசையின் ஏணியின் உதவியைக் கொண்டேஇந்த ஆலம் இன்ஸானில் இறங்கிவந்தேன். அவ்விதம் வந்தால்ஸ்ரூபத்தை அடைந்துகொண்டேன். இப்போது. அந்த ஏணி மறுபடி ஏறி என்மகுபூபில்ஒன்று சேர்ந்தேன். அதுதான் மரணம் என்பதாக உங்களுக்குக் காட்டிவிட்டேன். இதற்கேன்விசனம் என்றார்கள். எ-று

இன்ன மொருசெய்தி சொல்லக்கேளு-மெனக்கு மவுத்தில்லை றூஹூ தாத்தை,மின்னும் றாஹூக்குமவுத்தில்லையே·பிசுமில்லகுலம நானுனைதி,துன்னு மிதன் பொருளாருங்காணு,ருமக்குத்தெரிவதோ தெரியவென்று லென்னைப் பூவினிலடைக்கப,பின்னரென்னைக்கேளும் நான் சொல்லுகிறேன். (18)

(ஞா-பொ-ரை):—உமறே! இன்னொரு செய்திகேளும், எனக்குமவுத்தானது. அசலான உஜீதாக இருக்கும் இந்தசரீரத்திற்கு. மரணமென்பதுதந்தையாகஇருக்கும் ஆனதினுல் றூஹூ என்பது மரணத்தைப் பெறப் போகிறதில்லை. நானேபிஸ்மில் அஉலமாக இருக்கின்றேன்.இந்த்ரகசியம் எந்தமனிதர்களும் காணகப் போகிறதேஇல்லை உமக்குநான் அதைத்தெரிவிக்க வேண்டுமோனல் என்னைஇத்தாதிஜனங்கள் பார்க்கும் படியாகஎடுத்து நல்லடக்கஞ்செய்துவிட்டு அப்பாலே கேளும் அப்போது நான் உமக்குஇந்தமகாமம்வெளிப்படுத்துகிறேன். என்றுதிருவாய் உதயம செய்தார்கள். எ-று.

றூஹூ ஜிசுமானி மண்ணிற்சேரும் றூஹூ சுபுஹானி நீரிற்சேரும்,றூஹூசுல்தானிநெருப்பிற்சேரும்-றூஹூறாஹானிவாயிற்சேரும்,றூஹூல்லா தாத்திற் சேரும்- றூஹின் வரவான வாறிஃதே.றூஹூ தனக்கொருமவுத்தில்லையே-றூஹூ இன்சானி தானேதுஞ்சும். (19)

(ஞா-பொ-ரை):—உமறே! இந்தசரீரத்தில். றூஹின் வகையில் ஏழுஇருக்கின்றன. இந்தஏழும ஏழுநப்ஸூகளைக் கொழுவிக்கொண்டிருக்கின்றன. அவைகளின் ஒன்றுவது. றூஹூஜிஸ்மானி. என்பது. நப்ஸ் அம்மாறுவாக இருக்கும் இந்தரூஹ்மண்ணிற்சேர்ந்துகொள்ளும். அதாவதுநாவில் அடைந்துவிடும். அப்பால்றூஹூ சுபுஹானியாக இருக்கும். இதாகிறது. நீரில்சேர்ந்து விடும். கண்ணில் அடைந்துகொள்ளும். அப்பால் றூஹூசுல்தானி என்பது இருக்கின்றது. இதானது. நெருப்புடைய மகாமாகிய. காதில்சேர்ந்து கொள்ளும் அப்பால் றூஹ்றாஹானி. என்பதானது. காற்றுடைய மகாமாகிய. நாசியில் போய் அடைந்துகொள்ளும். றூஹ் றூஹூல்லா தாத்தில் முதல்க்காத்து. அதாவது, இருதய ஊசா

ட்ட ஆட்ட ஓட்ட. நாட்டம் இந்தஸ்பாவங்களின் கருவியாகிய. நினைவில்போய் ஒடுங்கிஅடங்கிவிடும், இந்தறூஹுகள் ஆறும்ஆரு தாரம் என்ற. ஸ்தம்பங்களாக. இருக்கின்றபடியாலே. இவைகள் ஆறும்மரணத்தைப் பெருகிறதற்கில்லை. ஆனல்றூஹுஇன்ஸானி- என்பது மாத்திரம் ஒன்றுபிரத்தியேக ஸ்ருபமாக இருக்கின்றது அதாவது, தன்னுட்டம். என்றால் என்ன, அதுதான் ஆசாபாசம். இன்னமும் அஃதென்ன? அதுதான் நான்என்றஇருவினை அது தான் மரணத்தை அநுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. எ-று.

நபுசு அம்மாறத் தானதிலே-நடுங்கித் தான் சேர்ந்தால் ஜப றாததாகும்,நபுசுலவ்வாமத் தானதிலேநலக்கண் கலங்கில்நாசூத்தி லவர்,நபுசுமுல்ஹிமா வானதிலே-நாஞவிதமானல் மலக்கூத்தா கும்நபுசு முத்மஇன்னதிலேலே-லாகூத்துஹைபுலகையூமாவர்.(20)

(ஞா-பொ-ரை):— நப்ஸ் அம்மாறத்திலே நடுக்கங்கொண் டால் அதுஜபறாத்திலே சேர்ந்துவிடும், இன்னும் நப்ஸ்லவ் வாமாவில் றூஹுகண்ணீர் விட்டுபோகும் அப்படியானல் அதுநாசூத்தாகும், இன்னும் நப்ஸ் முல்ஹிமா. வானது. நாலா விதமான எண்ணத்துடன் றூஹுவிஷயமானல் அதுமலக்கூத்தில் போய்ச்சேரும். இன்னும் நப்ஸ் முத்மஇன்னவில் ஒரேநினைவில் அடங்கிய றூஹாகியமஹான்கள் லாஹுத்தென்னும் எந்நாளும் தாயும்மானஜடலம் அழியாதசிபத்தில்போய் தங்குவார்கள் எ-று,

அருளும் ஜெம்கூத்து நாமாகிஞே-மானல் மவுத்துண்டோ மவுத்தாகினல், வெருளைத் திருப்பிஞனஹயாத்தாகுவேன் வேந் தர் நபுசுதாத் துல்லாநபி,பொளையிவ்விதந் தாஞேதவே-போதும் போதுமென்றே யுமறங்-கிருளையறுத்தனர் விழித்து வந்தே-யெம் கோன் மாமனேசெங்கோலென்ருர். (21)

இப்படிச்சொலி பினுமுமறே-பியமபிக் கேண்மெண இறசூல் சொன்னுர், துப்புரவான மனமயங்குங்- துடராய் நபிசதுந்தான் மயங்கு,மப்படியாய் நாட்கணு சிறென்றே-யன்றுநான்சொன்ன படிபா குமே,பொப்பு முறமைய மில்லாதவ- ஞெதிஞன்குறு ஆஞநிலே. (22)

(ஞா-பொ-ரை):—இன்னும் ஜெம்ஹூத்தென்றது நமது நாட்டத்தின் ஊசாட்டங்களாக இருக்கிறது. அதை நாளாவட்டத்தில் பழகிக்கொண்டுவந்து ஒன்று படுத்தினவர்களுக்கு. மரண நேரத்தில் வெருட்சியே இருக்காது. ஆனதினாலே அந்த ஜடலம் மரணத்தின் சில துர்விகி யோகங்களை விட்டும் விலக்கப்பட்டதாக எந்நாளும் ஆத்மம் ஹயாத்தாகவே இருக்கும் அந்த ஜடலமானது இந்த வுலகத்தின் எவ்விதமர்ம ஸ்தனங்களை விட்டும் கண்விழித்த தாகவே சர்வத்ரங்களையும் எதிரே. இருக்கும் வஸ்துக்களைக்காண்பது போல வைத்துப்பார்க்கும் சக்தியைப்பெற்றுக் கொள்கின்றது. ஆகையாலே உமறே கேட்பீராக, மரணநேரத்தில் ஒருவன் தன் மனஸை மயங்கவிடுவானாகில் உடனே அவன் நப்ஸும் நடுக்கங்கொண்டுவிடும். ஆனதினால்தான் ஒவ்வொருவனும் நப்ஸானதை நடுக்கத்தில் ஆக்கிவிடப்படாது. கூடியவரையிலும் தீரத்தில்நிறுத்தி ஒரு நிலையான தத்துவத்தில் அமர்ந்தால் அவன் கதிமோட்சம் பெற்றுக்கொள்வான். எ-று

தொலிக்கு மவுத்துண்டு மவுத்தாகினற்-றுடர்ந்தமமாறத்து
நபுசொளிக்கும பலிக்கு சதைரத்தமவுத்தானகிற்-பகர் லெவவா
மத்து நபுசொளிக்குஞ,சலித்துத தான்மூளை மவுத்தாகினறறுஙகு
முல்ஹிமா நபி சொளிக்கு, மொலிதமெதான்றிக் கொனறுவலிதத
தானலொக்க மவுத்தாகுவும் நபுசானதே. (23)

(ஞா-பொ-ரை):—ஜடலத்தில் தொலிக்கு மரணம் வருகிற பொழுது.நப்ஸ் அம்மாறத்தானது மறைந்துவிடும்,அப்பால் சதையும் ரத்தமும் மரணத்தைப் பெற்றுக்கொண்டபொழுது. உடனே லவ்வாமத்தென்கின்ற நப்ஸானது. மறைந்துவிடும் அப்பால் மூளையானது மவுத்தாகிவிடும்போது. முல்ஹிமா என்ற. நப்ஸானது மறைந்துபோகும் அப்பால் ஜடலஉறுப்புகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு நரம்புஸ்தானங்கள் வலித்துக்கொண்டதானால் உடனே எல்லாநப்ஸுகளும் மரணித்துப்போகும். எ-று.

நபுசு முதமஇன்னத்தானது-நாறுதனில்வேகாநீறதாக, தவசு
தனிலிருந்தாகி-னாமந்தானே முழங்குமா மவஜூதிலே, பவுசு நபு
சதை மணதினனது- பகரு மிகுஷாதுக கித்தாபின்படி,கபுசோ
டறுஷெறும்நபியிறசூல்-காபுஹேறஎஜஸாதிற்பாருமென்றூர் (24)

(ஞா-பொ-ரை):—இன்னும் மீதமிருக்கின்ற நப்ஸாகிய முத்ம இன்னவானது ஒன்றிலும். கலக்காத நினைவாக இருக்கின்றீபடியாலே அதுவே தபோதனர்களின் நிஷ்டைக்குப் போதுமானதாக இருக்கின்றது. ஒருக்காலும் அதுமரணத்தைப் பெறாது. அதை நிறுத்திக்கொண்ட ஜடலத்தையும் மண்ணனது. எப்போதுந் தீண்டாது. அதுவே இன்ஸானின் மவுஜூதது. அதாவது. தானென்கின்ற தத்வஸாக்ஷியாக இருக்கின்றது. இதுவிபரத்தைப் பற்றி இருஷாதென்னும் கிதாபில் அதன்கிரந்தக்கர்த்தா கூறுகிறார்-இந்த நப்ஸின் தத்துவத்தை. காப்-ஹே. ஐன். ஸாது. என்ற உயிர் அட்சரங்களை வாசலாத்தாக்கிப் பார்த்தால் உடனேதெரிந்துகொள்ளக்கூடும். என்றுநமதுநபிகள் நாயகம் வற்புறுத்துகிறார்கள். எ-று,

தொலிக்குமவுத் துண்டுமவுத்தாக்கினற்.றூடரும்நபுசுறாஹி னையெழுப்பு, மெலிக்கும்சதைரத்தமவுத்தாகினல்-மெல்லெழுப்பிடும நபுசு றாவைஹக்கலிக்குமெலும்புதான மவுத்தாகினர் கருனை நபுசுறாஹினை யெழுப்பும், பொலிப்பின் மூளைதான் மவுததாக்கினர்-புகலும் நபுசுறாஹினை யெழுப்பும், (25)

ஒன்றை யொன்றுதான் மறைத்துக்கொண்டா-லொக்க மவுத்தாகும் நபுசாமஃ,தொன்றுதாத்தொடு நபுசுதானு-முற்றூர்சாகாது போய்விடாது, தொண்ட ரானோர்க்குத் தான்றெரியுந். தோஷியானோர்க்குத்தெரிந்திடாது, பண்டுபயஹாம்பர்நபியிறசூல்-படைத்தோ னேதினனென வோதினர். (26)

(ஞா-பொ-ரை):—.தொலிஎன்ற நப்ஸ் அம்மாரு மரணிக்கும் சமயம் நப்ஸ் றாஹானி அதன்மகாமில் வந்து உதயஞ்செய்யும் அப்போது மரணிக்கிற வனுடைய சப்தம் அதிகரிக்கவும் சதையும்ரத்தமும் மரணிக்கிற சமயம்.நப்ஸ் றாஹ்றஎன்பது தன்ஸ்தானமாகிய தாமரைக்காயில் வந்துநின்று மேலே உள் நாவுக்கும்கபாலத்திற்கு மிடைவெளியில் கொழுவியிருக்கிற. வெள்ளைநிறமான குழாய் வழியாக வந்து. அறிவையழிக்கும். அப்போது,கண்கள் பஞ்சடையும். இன்னும் நரம்பு. எலும்பு. மூளை. இவைகளை மரணிக்குந்தருணம் நப்ஸ் றாஹறல்லாவானது. தன்மகரம் ஆகிய் செவி

யில் வந்துசிக்கலாடும். அப்போது மரணிக்கிறவனுடைய நாவு விழுந்து. ஸ்வாசத் தடங்கலில்லாமல் ஸ்லேற்பன ஆடைபடர்ந்து சங்காங் குழியில் பலகை போடும் அப்பால் காதடைத்துவிடும் கைகால் முதலானஸமஸ்தஅவயவாதிகளும் ஊசாட்ட ஒட்டஆட்டம்யாவும் அசைவின்றி ஒடுங்கிக்கொள்ளும். அதுதான் ஸகறுத்தென்று ஜனங்களுக்கிடையில் பேசப்படுகிறது, ஆனால் இந்தறாஹுகள் எல்லாவற்றிற்கும் அசலானதொன்று இருக்கின்றது அதுதான் றாஹுல்குதுஸிஎன்று சொல்வது அதுஎப்போதும்மற்றநப்ஸுகளுக்கு வெளிச்சங்கொடுக்காமல் ஒளித்து விடுகிறதோ! அப்போதே மற்றஎல்லா நப்ஸுகளும் மரணித்து விடுகின்றன அதுமாத்திரம்சர்வதத்வாதிகளையும் பொதிந்து அக்னிக்கும். காற்றுக்கும்இடையிலுள்ள ஒளிமயமாக இருப்பதினலே காற்றுநார்ந்தவுடன் அக்னிஅமரும் அக்னிஅமர்ந்தவுடன் ஒளிமறையும் அதுபோல சூரியசந்திர நப்ஸுகளெல்லாம் தன்னிலேதடமாடியவுடன் ஒளியாகிய நப்ஸ்றாஹுல் குதுஸியானது சற்று ஒதிங்கிமறையும் மறைந்தஸ்தலம் நினைவாக இருக்கும் ஆனதால்தான் அதுமரனிக்கஇடங்கிடைக்கவில்லை இதில் பூராவும் மனஸைக்கிரயம் செய்ததத்வத்தொண்டர்கள் தான் இதையுணர்ந்து கொள்வார்களே அல்லாமல்மற்றப்படி உலகமாய இருளில் தலையிட்டுத் திரிகின்றதெண்டராமன்கள் யாரும் இதையறிந்துகொள்ளசக்திகிடையாது இதைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவே நான் மிஃறாஜிக்குச்சென்றேன் அறிந்தேன் அறிவித்தேன் என்று நமதுநாயக சிரோமணி யவர்கள் திருவாயுதயமானார்கள் எ-று

மூர்க்கையுனக்குத்தா னுண்டாகினல்-மூர்க்கை குலையப்பெண்டனக்காகியே, ஆக்கை யழிந்திடும் நபுசைவிட்டே-ஆகாசம்போகு மலக்குடனே, ஊர்க்கை குலைந்திடு மேலிருந்தா-லுயிர்தானணிந்து கீழ்மேலாய்விடும், பார்க்குந் திசையெல்லாம் நபுசுதானும்-பதறிப் பதறியே பணிந்தசாகும். (27)

(ஞா-பொ-ரை):—இன்னும் சொன்னதாவது யாதொருவன் தன்றாஹு பிரயாணமாகும் போதுஸ்வாச நிலையைமூர்ச்சையாகி விடும்படிச்செய்வாளுகில் உடனே அந்த நப்ஸ்பெண்ஸ்ரூபமாகிவி

டும்அதைக்கண்ட நினைவானது மோகத்திற்குள்ளாய்விடும் அந்தவு டனே அவன் ஆக்கையும் அழிந்து போகும் நப்ஸூம் பதறிப்பறி பட்டுப்போகும்- றாஹூம்மலக்கல் மவுத்திடம்சிக்கிவிடும் எ-று

எப்போ தினுந்தூக்கம் வெளியில்வந்தங்-கிருந்தே இருசெவி வாயைமுடித், தப்பில் லாமறை தனுக்குள்வந்து-சாடி மனமதைத் திருப்பிவிட்டே, அப்போ திருகாலில் நின்றேறியே-யதபாய்த் தாமரை தனிற்புகுந்தே, யெப்போதும் நினைவானதுவே யேகன் தெரிசனமானதுவே. (28)

(ஞா-பொ-ரை):— ஆனதினால் தான் மனிதன்எப்பொழுதும் தன்னித்திரையை நினவாக்கிக்கொண்டுசூரியகலையில்ஸ்வாசத்தை யடக்கஞ்செய்துகொண்டுவரப்பழக்கம் பண்ணவேண்டியது அத்து டன்நினைவில்மற்றப்புலன்களையும்அடக்கம்செய்ய வேண்டியது அப் போதுதான் அந்தஇரண்டு கலைகளும் உந்திக்கமலத்தில் நின்று உறாஜாகி தாமரையில் வந்து அடங்கியெழும்பும் அத்துடன் எந் நேரமும் நினைவைஏகமாகஒன்றுக்கிக் கொள்கிறதானது எப்போ தும் ஆதியின் தரிசனமாக இருக்கும் அதாவது நினைவைத்தன் ஞட்டத்துடன் சேர்த்துப் பொருத்துகிறதானது தன்னைஎப்போ துமறிந்து கொண்டதாக இருக்கின்றது எ-று

சொர்க்க லோகத்தி லங்கரைநாட்சொலுமிங் கறுபதாயிரவரு டம், நிற்கும்போது முப்பது நாழிகை-நிசமா யாநந்தம் சிரசுக்கு ள்ளே, வர்க்கமா யங்கேசுபுஹூநேரம், வணங்கும் றாஹூத்தான் விட்டானல்லா, நற்கால் நடந்துபோய்ப் பொழுதடைந்தால்-நாடி த்துனியாவைமுடிக்கச்சொன்னுன், (29)

(ஞா-பொ-ரை):—இன்னும்சுவர்க்கலோகத்திற்கு அரைநாள் நேரமானது இந்தபூலோகத்தில்அறுபதாயிரம் வருஷங்களாக இரு க்கும் ஸுபுஹநேரம் என்றஒக்தில் வணங்கும் றாஹானது தன் னடையில்கலைகளுடன் முப்பது நாழிகையும் சரிவர செல்பிடியா கும் பட்சத்தில் சூரியன் அஸ்மித்துவிடும் அப்போது கியாமநாள் முடியும் என்று அல்லாபெரி தானரகசியத்தில் வெளியாக்கினுன் இதைத்தெரியாமல் ஜனங்கள் என்னென்னமோ வாய் வந்ததெல்

லாம் கியாமநாளின்கணக்கென்று பிதற்றுகிறார்கள் மேலே சொல் லியகணக் கைப்பார்த்தால் சீக்கிரம் ரகசியமின்னதென்று விளங் கிக்கொள்ளமுடியும் எ-று

கிருமன்காத்திபு வரைந்தெழுதுங்-கணக்கை முன்கறி னிடத் திற்சேர்ந்தே, யிருதத் துடனிசுறாயில் முன்போ-யிலந்தை யிலையெ ழுத் தழியக்கண்டு, முருதா யிரணமிங் கில்லையென்பார்-முதலோன் கற்பனை யதுபோலவே, நருத மூாகவே யிவருயிரை-நாடிப்பிடித்தி ழுத் தழைத்துக்கொள்வார். (30)

(ஞா-பொ-ரை):— மலக்கல் மவுத்து உயிர்வாங்குந்தன்மை எப்படி யென்றால். கிராமன் காத்திப் என்ற மலக்குகள் ஒருவனு டைய நாள்வழிக்குறிப்பை எழுதிமுடித்து. முன்கர்என்கிற மலக் கிடம் ஒப்பித்துவிடுவார். அவர்கண்டுபிடித்து. சிதுறத்துல்முன் தஹா என்னும் இலந்தைமரத்தின் இவன்பெயருள்ள இலையை வீழ்த்தி வர்அந்தஇலைஇஸ்றாயீல் மடியில் வந்து விழும் அப்போ து அதை இஸ்றாயீல் எடுத்துப்பார்த்து இரணநாள் இல்லை என்று கண்டுஇருப்பு ஊர்இவைகளைக் குறிப்பாககண்டு அதன்படிவந்து உயிரைப்பிடித்திழுப்பார் இதுதான் சூட்சயம் நோய் என்றது மல்க்கல் மவுத்துடைய தூதாட்களாக இருக்கும் அதன்உழவால் தான் மலக்கல்மவுத்தும் செ்ி கிராமன்களும ஒருவன் அந்தரங்க மானதைக்கண்டுபிடுத்துக் கொள்கிறார்கள் எல்லா வற்றிற்கும் காரணம் இந்திரியசில வுகளே! நாதத்தை பத்திரித்தானோஅவன் நாதனை இருப்பான். என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இது குறிப்பிடப் படத்தக்க தானநல்லறிவாக இருக்கும். எ-று

மலக்கல் மவுத்திரு காதிடையில்-வாழுங் கிணரதையடைத் துக்கொண்டே, இலக்கத்துடன் கேள்வி கல்க்குக்குள்ளே-இருகண் பார்வையா முனகர்நக்கீர், கலக்கும் வாசிதான் கிருமன் காததிப்- காணும் வெளியிலே கிறுத்திக்கொண்டு, துலக்க இன்சானை விளக் கஞ்செய்து-சுகமா யிருப்பார்கள் சுவர்கத்திலே. (31)

(ஞா-பொ-ரை):—இன்ஸானில் இரண்டு காதுகளுக்கு மிடை யில் ஒரு கிணறுபோல் இருக்கின்ற அக்கினி வீடானது. மலக்கல் மவுத்தின் தங்குஸ்தலமாக இருக்கும் இன்னும் அதுவே கேள்வி

ஸ்தலத்தின் உதயமென்றும் நாதாக்களின் அபிப்பிராயங்கள். இனிமுன்கர் நக்கீர் என்னும்மலக்குகளும் இரண்டுகண்களில் இருந்துதான் வெளியாகிவருவார்கள். அப்பால்சந்திர சூரிய வாசிகள். என்னும் ஸ்வாசங்கள்தம்ன் கிராமன் காத்திபுகளாக இருக்கும். ஆனதாலே மஹாத்மாக்களானவர்கள் இந்த சூட்சியத்தாலே ஷெ கருவிகளை. தன்வஸப்படுத்தி அவைகளின் கடவுகளையுங்கடந்து சுவர்க்கலோகத்தில் வீற்றிருப்பார்கள். ௪-று.

மூன்றுநாளைக்கு முன்னறிதாக-மவுத்து வாரதை யறியலாகும்; என்ற நாயகன் ருனேதினன்-இருத்த றபாவெனுஞ் ஜுஸுவி லேதான், பூண்ட அமுதுண்ணும் காலையிலே. பொருமி யெழுத் தொன்றை யுள்ளேவாங்கித், தாண்டி யுயர்ந்தேற்றி மூச்சைவிட் டாற்- சாகுவருங்கால மறியலாமே. (32)

(ஞா-பொ-ரை):— அல்லாகுர்ஆனில் இருத்தறபாஎன்ற. அத்தியாயத்தில்; மனிதனுக்கு மரணமவருகிறதற்கு மூன்றுநாளைக்குமுன்னமே அறியக்கூடியதத்துவத்தைநான் கொடுத்திருக்கின்றேன். என்றுஅருளிச்செய்திருக்கின்ருன். இன்ஸான்காமில்க்காரர் மனிதன்ஆகாரங்கொள்ளும்போது. உந்தியில் நின்றும் பிரிகின்ற சுவாசங்களைக் கணக்குஎடுத்து. அதில்கடைசி சுவாசத்தை இழுத்து உள்ளேவாங்கிப் பார்த்தால்ஷெ குர்ஆனில் நாயகன் சொன்னவிபரத்தை அறிந்து கணக்கைஎடுத்துக் கொள்ளமுடியும். என்று விதித்திருக்கின்ருர். ஷெய்குடைய சமுகத்திலும்பகுத்தறிந்து கொள்ளமுடியும். ஆனுல்காமிலான ஷெய்காக இருந்தால் தான். எ-று.

மாண்டுபோனவர் மீண்டும்வந்து- மன்னர் நபியிறசூலோதினர்.மூன்றும் ஜுஸுவிலே மூன்ருயத்தில்- முறையின் முறைவழி தனிலே சொன்னர், தாண்டி யேறின மிஃருஜிலே- தானமாகி தலங்களெல்லாம்,வாழ்ந்திருக்கின்றன முறையானதை- வாழ்ந்தோர் புவியில்வந்தோதினரே. (33)

(ஞா-பொ-ரை):— இப்பூலோகத்தை விட்டும் நிர்யாணதிசையடைந்தபிறகு நாயகமவர்கள் இத்தனைவிபரங்களையும் உமறவர்களுக் கட்டுரைத்தார்கள். இதன்உதாரணங்களாக குர்ஆனில்மூன்

ரும் அத்தியாயத்தில் மூன்றுசூத்ரங்களை எடுத்துக்காட்டினார்கள். இத்தனையும் தாம்மிஃறூஜி சந்திப்பில்நடந்ததிருஸம்பாஸனைகளை ன்று நாயகமவர்கள் குறிப்பிட்டது. யோசிக்கத்தகுந்தது. ரஹஸிய மொழிகள். தாம்உண்டாக்கிய ஷறகின்பிரகாரம் காரியம் நடை பெற்றுக்கொண்டிருக்கும்போது. ஸ்தூலசரீரியாகக்காட்டிவிடல் தங்களுக்குப் பொருந்தாதென்றுகண்டு அப்பால் சூக்கும சரீரியானதின் பின்னால்தெரிவித்தானது. தீர்க்கதரிசனத் தந்திரம். என்று இந்நூலாசிரியரான மஹாத்மா பெரியநூஹூலியவர்கள் உறுதிப் படுத்திக் கூறுகின்றார்கள். எ-று.

நல்ல காலாமுல்லா மஃனாவிலே- நாளும் நபுசதின்காரியங்கள் அல்லல் படாமலே நிற்பதுவு- மதிலே யுயிர்நின்று போறதுவும், சொல்லும்படி கேட்டு நடப்பதுவும்- சுகித்து வெகுநாளைக் கிருப்பதுவும, வெல்லும் குருனையத் தானதிலே மேலுஞ் சொன்னதைச் சொல்லக்கேளுமே. (34)

(ஞா-பொ-ரை):— இன்னும் மஹாஜனங்களே! அல்லாகுத்த ஆலா நாயன் அவனதுதிருக்குர்ஆன் வேதத்தில் ஹே! நம்மையும் நம்றசூலையும் நமது. வேதத்தையும் ஒப்புக்கொண்டமனிதர்களே! கேளுங்கள்.?. நீங்கள் உங்கள்பூதநப்ஸுகள்உங்கள்ஜடலத்தில் சிக்கலாட்டஞ்செய்து விடாமலும, அந்தநப்ஸுகளில்உங்கள் ஆத்மாவானது நின்றுகொண்டு அப்பால் அவைகளைவிட்டுப்பிரிகிற விதத்தையும், நாம்வேதத்தில் இட்டகட்டளைப்படி நீங்கள் நடக்கிறதும், இந்த பூலோகத்தில் நீங்கள் நீண்டகாலங்களாகஜீவித்திருக்கும் தத்வங்களையும், கீழ்வரு மாறுசொல்கிறோம் என்று ஆண்டவன் விதித்திருக்கின்றான் என்றார்கள். அதாவது:— எ-று.

தந்தன்ஷெய்குமா ரானவர்பாற்-றன்னை யறிவதெப்படித்தானென்றாற், சொந்தப் பலவிதஞ் சொல்லிடுவார்- சொன்னாலது போதாதென்று சொல்லு.மெந்தன்சொல்லதுந் தவருவதோ-வென் மூலெதிர் சொல்லும் ஆமெனவே, அந்தஹீமூல் காதிறுவை படித்துக் கண்டாக்காற் தெரியுமென்றே. (35)

(ஞா-பொ-ரை):— உங்கள் உபதேச ஷெய்குமார்களிடத்தில் தன்னையறிவதின் விதம்எப்படியென்று நீங்கள்கேட்டீர்களானால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக எடுத்துக்கூறுவார்

கள். ஆனால்கருமம்-அவ்விதமெல்லாமில்லை. அதுவானது. ஹர்மீம் என்றதில்அடங்கினதாக இருக்கின்றது. இதைத்தான் நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. இந்த ஹே. மீம்என்று திக்றில்தவத்தைசாதிக்கச் செய்கிறவர்களே காமிலான பீராகஇருக்கும். அந்ததிக்று பூரணநிலையாகிக் காட்சிதோற்றரவாகிற்றானால் அப்போதுமிக்ருஜியின் அந்தஸ் தைக்கண்டபாக்யவானே அனுபவித்துக் கொள்வான். அதைப்பற்றியாரும்சொல்லசம் மதிக்கவே மாட்டார்கள். எ-று.

எந்தன் றாஹதா னுமென்று- மெத்த னபுஸதா னுமென்றும், எந்தன் கல்புதா னுமென்று-மெந்தனுறக்கந்தா னுமென்றும்,எந்த னினைவுதா னுமென்ற-மெந்தன்மனதுதா னுமென்றும்,எந்தன் மவுத்தை நானறியவேணு-மென்று வியம்புவார் சாகிபுவே. (36)

(ஸீ-பொ-ரை):—இன்னும் நபியவர்கள்-உமறேகேளும். என் றாஹானது. ரஹஸியத்தில் ஆறுதத்வங்களை ஒட்டிநின்றது. என் நப்ஸானது. ஆறுபிரிவுகளைப் பொறுத்திருந்தது. என்கல்பானது. ஆறுசெயல்களை உபயோகித்துக் கொண்டிருந்தது. என்னுடைய. நித்திரையானது. ஆறுவித நோக்கத்தில் நடைபெற்றிருந்தது. என்நினைவானது. ஆறுவிதத்தில் ஆடிக்கொண்டிருந்தது இன்னும் என்இருதயமானது ஆறுவித ரஸ்தாவில் சென்றுகொண்டு இருந்தது. இவைகளின் விபரத்தையும். இன்னும் மனிதன்தன் மரணகாலத்தை யறியவேணும் அதுஎப்படி யென்று வினவும்போது. காமிலான ஆசானாகஇருக்கும் பட்சத்தில்அவன் வாய்மொழியின் விபரம் ஒருஆச்சறியகரமானதாக. வெளியாகும். அவன்தான் ஸாஹிபு. என்பவன். அப்படியல்லாதான் அதற்கல்லாதான் என்றறிய வேணும். என்றார்கள். எ-று.

மவுத்து வருமுன்னே பலகோலங்கள்- வந்து வந்துதானிவனைந் துவிடு, மவுத்துக்காகிய கோலமிது-வந்தங் கிசுருபில் சூறாதினுற், றெருகுத்த மாங்கிச மெலும்புரோமஞ்-சொல்லும் நரம்புகளானவைகள், அவஸ்தைப் படும்பெரு மூச்சானது-மாகவந்துதானெவ்விக் கொண்டே, (37)

தகுத்து மாருடிப் போனகாலந்-தன்னை யெவ்வித மறியக்கூ டும் ஒருத்து வந்ததங் குயிரைவிட-வுடலைவிட்டதே யுயிரானது, பவுத்துவம் போச்சுக் சவுத்துவமாய்-பாழை பலவிதீ மானதுவே, சவுத்தி மவுத்தாய்ப்போய்த் தானம்விட்டுத் தாங்கும் பேர்களு, மொழிந்ததுவே, (38)

(ஞா-பொ-ரை):—ஒருமனிதன் தன் துடக்கான அருகையை க்கழுவிதுப்புழவு பெற்றான்என்பதற்கு அடையாளம் என்னவென்றாள். அவன்மரணிக்கு நாளை எதிர்காலக் குறிகளால் கண்டறிந்து கொண்ட ஆண்பிள்ளை தான் அப்புறல் தன்ஜடலம் சிதையாமல் நிற்கும்ஸாஸ்வத ஆஸ்பதங்களை அப்போதே செய்துமுடித்து அனைக்கட்டு போட்டுக்கொள்வான் அப்படிசெய்ய வல்லமையற்ற போது மரணம் விடுகிறதற்குச் சிலதினங்களின்முன்பாகவே அநேகவிதமான தடமாட்டங்கள் வந்துஸம்பவிக்கும் எமகண்டம் என்னும் மாயவலையானது படீரென்று இவன் பேரில் வீசிவளைந்து கொள்ளும் இஸ்ருயீல் என்னும் நாசியின் நாடியானது. அகோரித்துஷிநாசியின் துவாரம் என்ற சூர்குழலினால் ஊதும்படியான சுவாசம் சிக்கலாடும் போது தசை நரம்பு எலும்பு இரத்தஓட்டம் ஆகியசகலகருவி கரணங்களும்முடை தெரியாமல் அவதிப்பட்டு சிதறுண்டு நிலைகெட்டு அவதிப்பட்டுசர்வ நாசம் அடைகின்றதருணம் தத்வபூதமானஸ்வாச ஆரோஹணசத்து நசித்துப்போய் கறட்டு கறட்டு என்ற மோசக் கோளாறுகள் வந்துதிரமாக நின்று விட்ட அநாதிக்காலத்தில் இன்ஸான் தன்னை அறிய எவ்விதம் முடியும்? கைசேதம் நெடுநாளைக்குநம்பிவிட்டபாபம் இந்த பொய்யான ஏமாளி ஜடலத்தைமயக்கிக்கட்டையைப்போல் கிடத்திவிட்டு நாடகவேஷதாரி தன்வேஷத்தைமாறிவரும் வண்ணமாகமின்னல் வெட்டிமறைந்து போய்விடுமே அதிலும் சற்று தத்வம் அந்த ஹாமீம் திக்றைஉருபடுத்தியதாகஇருந்தால்அப்பால் அந்தஆத்மா போய்ப் புகுதுகிறதரணத்தையாவது அறிவிக்கும் அப்படியுமில்லாதமௌடீகர்களின் கதியோ அதோகதிதான். என்றார்கள். எ-று

கூம்புங் கழையுநற் கயிறும்போலு-காத்துக்கொண்டதுதானும் போச்சு இன்பசுகமான விந்தும்போச்சு-இயல்பாயுறங்கிறவுறக்கம்

போச்சுத், துன்பக்கிடையாகப் பேச்சு மூச்சுஞ்-சொல்லுங் கேள்வியானதுவும் போச்சு, அம்பு விழியானபார்வைபோச்சு-அப்பால் காதிறை யறிலாமே. (39)

இப்படிச்சொன்னான் சூபியத்து-இல்முபதினாலுங் தப்ஸீறிலும் சொற்படி சொன்னாலும்முல் குறான்- ஷரீற்றுப் பதினாறுயத்தினுமே, நற்படி சொன்னான் பிக்குஹதிலே- நாளும் றம்சிலும் லொமீறுவிலு, மெய்ப்படி சொன்னான்மேலுமேலு- மெய்யாமுஹபிதீனைப் பிடித்துக்கொள்ளே. (40)

(ஞா-பொ-ரை)—: இந்தஜடலத்தில் சுழையும் கயிற்றையும் போல பிணைத்துக்கொண்டிருந்த றாஹானத் தூர்ந்துபோனபோதே இந்தஜடலத்தில் இருந்து ஊறிஉதயஞ்செய்து உலகத்தின் பலகிருத்தியங் களுக்கும் காரணமாக இருந்து, அரசுசெலுத்தின இந்திரியதத்வாதிகளும் பாடுசாய்ந்து போயிற்று அப்பால் உல்லாசசுகாநுபவங்களுடன் நித்திரை செய்கின்ற இன்பங்சள் வலசை வாங்கிவிட்டது. அப்பால்கீழ்ராஜாங்க அதிகாரிகளான்பேச்சுமூச்சு கேள்வி. முதலான முக்கிய தத்வாதிகளும் தத்தம் உத்யோகத்துரிதம் இழந்து போய் ஒடுங்கிறது.இதற்கெல்லாம் மூலாதாரப்பொருளாய் இருந்து ஜடலத்தை நடத்திக்கொண்டு வந்த நேத்திராதிகளும் தமது பார்வைகளைக் கையிழந்து மழுங்கிற்று,இதற்குப்பிறகு தான் என்னை யறிய வேணும் என்று. சுத்தபேடித்தனமாக எண்ணியிருக்கின்றீர்களோ! என்று அல்லாகுர் ஆனில் நல்ல வெட்ட வெளிச்சமாக அருளிச்செய்திருக்கின்றான். அதைப்பதினான்குஇல் முகளையும் கரைகண்டு தேர்ந்த மஹான்களானவர்கள். தப்சீறுல் சூபியத்தில் விபரிக்கின்றார்கள் அறிவுடையவர்கள் கண்டறியலாம் என்று. மஹாத்மாவான இந்நூலாசிரியர் வற்புறுத்திக்கூறுகின்றார். நமது றசூல் நாயகத்திற்கு மேற்கூறிய விபரங்களை ப்பற்றி அல்லா உம்முல்குர்ஆன் என்னும் மிஃறாஜிரஹஸியம். என்றதில் அறிவித்தான். அதாவது பன்னீராயிரம் திருவசனங்களையும் பதினாறு ஆயத்துகளில் எடுத்து அவிழ்த்தான். அதுவே தத்வாதிகளையே பிக்ஹு என்றதிலேயும், அப்பால் றம்சிலேயும், பிறகு லுமீறு என்றதிலும் விவரப்படுத்திவிட்டான்.இன்னும் சில இரகஸியங்களும் மிஃறாஜியில் எடுத்துக் கையாடப்பட்டது. அதானது சொல்லவும்பட

து சொல்லிவிடவும் வேண்டும் சொல்லித்தான் விடுகிறேன் அதாவது முஹம்மதே உமக்கு நாமே குருவாக. இந்தக் கடலைத்திறந்து காட்டினோம் இனிஉமது உம்மத்துகளுக்கு என்மகுபூபு செல்வக் கண்மணியான ஸ்ரீவாலேமனோன்மணி ஜகத்சற்குரு மணிதத்வசிகாமணியான முஹிபித்தீன்தான் சகலஜனநாயக குருமணியாகஇருக்கும். ஆரிபீன்.கள் ஒவ்வொருத்தரும் தமது மிஃறாஜிபில்தெரிசனை செய்யும் ரஹஸியஸ்ரூபமானது அந்தஎன்முஹிபித்தீனாகஇருக்கும் ஆனதால்முஹியித்தீன்என்னும்தேவதாவிருட்சத்தைப்பிடித்தவர்களே குதுபுகளாவார்கள். அல்லாதார் எல்லாரும். கதியொன்றும் இல்லாத பொல்லாதாரே என்றான் என்றுநபிநாயகக்கடவுள் திருவாய் மதுரமழைமாரி சொரிந்தார்கள். உசிதக்கருத்து; இதில் முஹியித்தீனைப்பற்றியஆந்திரிகசங்கதி.யைப்பற்றிசிலதமிக்கத்தின் புண்யவான்கள். வாய்கொழுத்துக் குளறுவார்கள். அவர்களை. ஷை குருநாயகமவர்களால்அருளிச்செய்யப்பட்டுள்ளதுதுபிஹாணி என்னும் அறபியச் செய்யுளை ஆராய்ந்து பார்க்கும் படியாக. நான் அவர்களுக்கு ஒருவியாபகம் வருத்துகின்றேன். தயவுசெய்து அந்நண்பர்கள் அதைசற்று உற்று நோக்கவேண்டியது இங்கனம். உரை யாசிரியன். எ-று

காபு ஹே-எ-ஐன் சாதோடைந்து-ஹறுபேழரை தவுறாத்து மூசா,தோகை ஹேமீம் ஐன்சீன்காபோடைந்துந்-துலங்கவேழரை சபூறு தாவூத், மோக அலிபுலாம் மீம்றேய்நாலு-முறையாமேழரை யின்ஜீலீசா,எகும் அல்ஹம்தா மைந்தெழுத்து-மிறகூல் நபிபுறுகானேழரை. (41)

(ஞா-பொ-ரை):— காபு. ஹே. எ. ஐன், ஸாது. ஆகிய இந்த ஐந்து ஹறுபுகளாலும் வேதங்களின் அமைப்பு எழரைக்கணக்காலே-மூஸாநபிக்கிறங்கி தௌறாத்து வேதமாகச்சமைந்தது. அப்பால் ஹே. மீம், ஐன், ஸீன், காபு. ஆகிய இவ்வைந்து ஹறுபுகளுங்கூடி ஷை எழரையானகணக்கில்தாவூதுநபிக்கிறங்கிய ஸபூர் வேதமாகச்சமைந்தது. அப்பால். அலிபு. லாம், மீம், றேய், ஆகிய இந்நான்குஹறுபுகளைக்கொண்டும் ஷை எழரைக்கணக்கில் சரிபட்டு ஈஸாநபிக்கிறங்கிய இன்ஜீல் வேதமாகச்சமைந்தது. அப்பால். இந்த

மற்ற அட்சரங்களுக்கெல்லாம் வேதங்களுக்கெல்லாம் அடிப்படையாக அல்ஹம்துஎன்னும் ஐந்து ஹறுபுகளைக்கொண்டு அதே ஏழுரைக்கணக்கின்படி, நமது நாயகமவர்களுக்கிறங்கின. புறுக்கானுல் அலீம் என்னும் நாலாம் வேதமானது. சமைந்திற்று. எ-று.

இந்த ஹறுபுபத் தொன்பதையு-மிறசூல் இசுமில் லகுலமாக முந்த அர்றபீக் குல்லகுலா-முறையார் கலிமாவின் பொருளானது,சொந்த மாமுஹம்மது நபிக்கு-துலங்கும் றாஹூதான்டக் கும்நேரம், விந்தைநாயகன் சொன்னன் சொன்னேன்-மேலோன் புஹானல் லதீஜூ சுவில். (42)

(ஞா-பொ-ரை):— ஆகையாலே ஷ வேதங்களுக்குக்கருப் பொருளாய் எழுந்ததிருஅட்சரங்கள் பத்தொன்பதையும் ஒருசேரத்திரட்டி நாயன் ஒருஞானசூத்ரத்தை உண்டாக்கினன். அதுதான்-அர்றபீக்குல், அஉலா, என்றது. இது. தௌஹீதுக்கலிமாவின் அர்த்தத்தைப் பொதிந்ததாக இருக்கின்றது. நமதுவள்ளலாகிய கத்முல் முர்ஸலீன் அவர்களின் திவ்யாகரமான திருறாஹானது சுவர்னலோகம் நடக்கும்ஸமயம் அதைத்தான்ஜிபுரீல் கொண்டுவந்திறங்கி நாயகமே! ஆண்டவன் இந்ததிருசூத்திரத்தை இதுசமயம்தேவரீரை உச்சரிக்கும்படியாகக் கட்டளையருளினன் என்று கூறினர். அதேபிரகாரம் நாயகம். இந்தசூத்ரத்தை வாயில்மொழிந்தவர்களாய். றகுமானுடைய ஹலரத்தில்ஒன்றுபட்டுக்கலந்தார்கள். நாயகமவர்கள் இதைத்தான் இஸ்முல் அஃலம் என்றூர்கள். இதில்உள்ள அட்சரங்கள் எல்லாம் தத்வஅட்சரங்களாக இருப்பதாலே இதை எவனொருவன் அதன்சட்டப்படி தவறிடாமல் காமில்சமுகத்தில்வைத்து. உற்சாடணம்பண்ணிவருகின்றானே அவனுக்குப் பூலோகத்திலும் ஸமஸ்த செல்வாக்குகளும் உண்டு. இது திருக்குர்ஆன்ஷரீபில் சுபுஹானல்லதீ என்ற திருஅத்தியாயத்தில் நாயன்விட்டுக் காட்டியிருக்கின்றான். எ-று.

ஏகன் புறுக்கானி னடுவதுவா-மிறசூ லின்சான் காமிலாகச் சொன்னன்,மோகமுடன் சொன்ன சூபியத்தில் - முறையாரிமாம் கள்தம்முறை யஃதாம்,தோகை;பூயிலானநபிபேரிலே-தொலைவுயா

ருகங் கொண்டுணர்ந் தோர்தங்க,ளாக மகிழவே நமக்கவர்க்கு-மரி யவிதவிசெய் அல்லாஹூவே. (43)

(ஞா-பொ-ரை):— ஷெ திருசூத்ரமான இஸ்முல்அஉலமானது. குர்ஆனில் நடுமத்திபஸ்தானத்தில் வைத்தான். மனிதவர்க்கத்தார்களுக்கு இதைக். கையாடுவதால் காமிலாகிவிடும்படியாக சயிக்கினை செய்திருக்கின்றான். தப்சீர் ரூபியத்தில் அதன்பொருளாசிரியரான இமாம் ஆதியவர்களும் இந்தமுறைமையே உசிதப்படுத்தி இருக்கின்றார்கள். ஆகக்கூடிய இந்த இஸ்முல் அஉலதின் தவத்திற்கு அடிப்படையான ஜபமானது றசூல் நாயகமவர்களேயாதொரு குறைவுபாடின்றி மனவில் உருக்கமாகக் கொள்வதாக இருக்கும். எ-து.

போற்றும் நபுசுதான் மூமினாகும்-போற்று நபுச்தான் ஷைத்தானென்றார், ஆத்துமம்போற வேளையிலே-யீரா லாகிடுஞ் செறுத்துக்கொள்ளக், காற்றுங் கடலுமே கலங்குமாறு- கலங்கும் நபுசுக்குள் வினங்களெல்லாம், சாற்றுந் தக்குவாவி லிதுபாத்திலே- சாருங்கா ளென்று ரிறசூலுல்லா. (44)

(ஞா-பொ-ரை):—. ஆனபடியாலே நாயகமவர்கள் உள்ளும் புறமும் ஒத்ததாக எந்தநப்ஸூ உருக்கங் கொண்டு புகழ்கின்றதாம் அதெல்லாம் கடைசியில் மோட்சகதியடைந்து விடும் எங்கள் நாயகசிரோமணியவர்களைப்புகழாத பாமரமூடநப்ஸூகளெல்லாந்திட்டமாக நகரபாதனைக் குள்ளாகும் ஏனென்றால் நாயகமவர்களைப்புகழாதநப்ஸூகள் உயிருடன் வாழும் போதே அந்தகாரஇருட்பிழம்பால் மூடுண்டு அவைகள் பூமியில் செய்யப்படும் தவங்கள் அடங்கலும் ஈமானில் உறுதி இல்லாத ஒருபெரிய நோயால் பீடிக்கப்பட்டுக்கெட்டு மனிததத்வவல்லமைகளெல்லாம் உரிபட்டு இறுதியில் மரணிக்குந்தறுவாயில் அந்த நப்ஸானது இப்லீசுடைய பாதத்திற்கு சாஷ்டாங்கம் செய்வதால் அவனுடையகெட்ட சுரூபமே இவனுடைய நப்ஸின்சுரூபமாக மாறுபட்டு நகரவீடுபோய் ஒதுங்குகிறது. அந்தஆத்மாபோகிற சமயத்தில் எவராகிலும் அந்தமஹாவெள்ளத்தைச் செறுத்துக்கொள்ள முடியுமா?. எ-து

ஒன்று மறியாத மூடர்கட்கு-மொக்க அறிகின்ற வுலமாக்கூட்கும்,நின்று விளையாடு முயிர்போய்விட்டால்-நேர்மை யொடுமீவர் மனுமில்வந்த, கொண்டு வருகின்ற செய்திகளைக்-கூறுவே யதைநம்பிடாதே, என்றும் வெளியிலே நின்றுகொண்டே-இல்லல்லாஹு வென்றோதுவதே. (45)

(ஞா-பொ-ரை):— ஒருநப்சுக்கு மரணம்வந்தடுத்த சமயம் ஜடலநப்சுகள் ஒன்றுடன் ஒன்றுமுரண்பட்டு சண்டமாருதச் சூறுவளிப்புசலில் சிக்குண்ட கொந்தளிப்புடைய கடலும் அலையும் போல் கலங்கி பூதநப்சுகளெல்லாம் அதனதன் நிலைமைகள் தடமாறிவிடும் அதற்குமுன்னமே ஜனங்களே! நீங்கள் தக்வாவைஉறுதிப்படுத்தி இதுபாத்தில் அதாவதுநப்சுடன் ஒருநிலைகொண்டுவிடுங்கள் என்றுநாயகமவர்கள் விதித்தார்கள். அத்மாஎன்றது. யாதொன்றும் அறியாதமூடர்களும் எல்லாம்தெரிந்து அறிவில் தெளிவுபெற்றிருக்கின்ற நாதநாதாக்களுக்கும் ஒன்றுதத்தான்இருந்தபோதைக்கும் தக்வாவையுடைய நப்சுகளின் ஹவாவினுலே அவைகள்அடிக்கடி தமதுஇனபந்துக்களிடம் மனுமில்வந்து அதுவேண்டுமிதுவேண்டும் என்றுசொல்லிக்கொள்கின்றதாலேஅந்தநப்சுகள். திட்டமாக பூரணலோகம் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனதாலே கலிமாவின் இதுபாத்துகளான இல்லல்லா ஹுஎன்ற. திக்றை வெளிவாசலில் வைத்து மொழியாமல் இருதயத்தில்வைத்துப்பொதிந்துநினைவில் உறுதி செய்துகொள்ளவேண்டியது.எ-று,

புத்துபேருக்குக்கேள்வியில்லைப்-பயமுந்தானில்லையோரிடத்தும், உத்தம ரிறசூ லோதினு-ரொருவன் சாரிய மிவரறிவார், எற்றும்படி யிதுகுறுஆனிலே-யெங்கோன்சொன்னதையியம்பக்கேளுமத்தியிற் கால அலம் அஃகுல்லக்கஜ ுசுவிலிவை யெல்லாம்வகுத்திட்டானே. (46)

(ஞா-பொ-ரை):—. அல்லாவின் திவ்யகலாமைக் கொண்டும் பத்துப்பேர்களுக்கு மஹ்ஷரில் கேள்வி இல்லை யென்று. நாயகமவர்கள் சொன்னார்கள். அல்லாகுர்ஆனில் காலஅலம்என்றதிருஅத்தியாயத்தில் சொல்லப்பட்டபடி இருக்கிறது. எ-று

தெரியாத சின்னஞ் சிறுபிள்ளைக்குந்-தெரிந்த பெரியோர்க்கு மொருபாத்திஹா, கெதியே கொடுக்குமென் றிவரோதினர்-கேவல மானகவலையில்லைச், சுரியானிப்பாஷை தன்னைக் கொண்டு-சொன்ன னீரைந்து ஐ ூசுவானதே,விரிவாயுறிவான இல்லாமைப்பாரு-வேந் தன்ருன் சொன்னன் குறு ஆனிலே. (47)

(ஞா-பொ-ரை)—ஃ. அறிவு தெரியாத சிறுவர்களுக்கும் எல் லாம் தெரிந்தஉலமாக்களுக்கும் ஒரேபாத்திஹா போதும் என்று சொல்பவர்கள் கேவலமான அறிவீனர்கள். அதாவது. சுரியானி ப்பாஷையால் அறிவிக்கப்பட்டபத்து அத்தியாயங்களை குர்ஆனில் வைத்திருக்கின்ற பாகங்களில் ஆண்டவன் படுத்திருக்கின்ருன் பா ருங்கள்.என்று. ஆண்டவர்கள் அருளிச்செய்திருக்கின்ருர்கள் எ-று

உபாத்துப் படலம்

பூரணம் பெற்றது

ஆ படலம் 12ஃ திருப்பாடல்கள். 271

---

# மஹ்ஷர் கேள்விப் படலம்.

## தொங்கல்.

நாளை மகுஷறில் நபியுல்லாவும்-நபியினும் மத்தோரனைவோர்க ளும். வேளை மூஸ்தகீம் கடக்கும்போது-வேண்டாமெனவென்றே இபுலீசுதான், ஆளு முமது சொற் கேட்டபேர்க-ளாகத் தெரிந்து தான் கூட்டிப்போகும்,ஏழை யென் சொல்லைக் கேட்டபேரை-யிங் கேகூப்பிட ஞாயமுண்டோ. (1)

(ஞா-பொ-ரை)— பின்னல் வரும் மஹ்ஷருடைய ஸ்தானத் தில் நாயகமவர்களும் அவர்களின் உம்மத்துகளான வர்களும், சிருத்துல் முஸ்தக்கீன் பாலத்தின் மஹாகடவுளைக் கடக்க இருக் கும் வோது இப்லீஸ் நபியவர்களின் சமூகம் வந்து. நபியே இதென்ன எல்லோரையுஞ் சேர்த்துக் கூட்டிக் கொண்டு போகின் றீரே. அதெப்படி. துனியாவில் இருக்கு போது. உம்முடைய கட் டளைபோல் நடந்தவர்களை மாத்திரம் நீர்கூட்டிச் செல்லலாம். அப்படியல்லாமல் துனியாவில்இருக்கும்போது நான்வழிகாட்டின

இடமெல்லாம் கழுதைகள் போல் அலைந்து செய்து வந்த என்செல்லமக்களை என்வசம கூட்டியனுப்பிவிடும்இதோஇப்படிக் கூடிக்கூட்டிக்கொண்டு போகிறேன் நரகத்தின்வீரகுக்குத்தகைக் காரன்நான் என்பது உமக்குத் தெரியுமே. என்று மல்லுப் போடுவான். எ-று

திருவா யென்சொல்லைக் கேட்டபேரைச்-சேர்த்துக் கொள்
ளுவே னெனவே குருவே யுமக்குநான் சொன்னபடி - கூட்டிக்
கொண்டு போமென்றான்பின்னர், மருவார்நபியுமும்மத்தோர்களும்
வருகையில் வழிமறித்தா னப்போ' தருமசொரூபமில் லாதவொரு
அல்லாதனைநோக்கிநபிசொல்லுவார். (2)

(ஞா-பொ-ரை):— அதற்கு நபியவர்கள் இப்லீஸை மறுத்தார்கள். மறுபடியும் இப்லிஸானவன்ஓ! குருவான நபியே! இதென்ன ஞாயம் உமது உம்மத்துகளை நீர்சேர்த்துக் கொள்ளும் எனது உம்மத்துகளை நான் சேர்த்துக் கொள்வதுதானே ஞாயகம். சரி நான் கேட்பது நியாயந்தானா அல்லது அநியாயமா? நீரே சொல்லும் என்று விதண்டாவாதம் பண்ணி வழிமறியல் செய்தான் அப்போது நாயகமவர்கள் அல்லாவைநோக்கி சொல்கிறார்கள். என்னவென்றால்; எ-று

அல்லாவேயிவன் மறித்துக் கொண்ட,தாலே யெப்படி நான்
வருவேன்-ஒல்லா முன் சொன்ன வல்லவன்று,னும்மைக்கொண்டு
நீர் வருவீரென்றான்- எல்லாம் படைத்தாளு நாயனே,நானெனைக்
கொண் டெவ்விதம வருவே னெனச்,சொல்லா னஃதொன்றுந்
தெரியே!னெனத்-துய்யநபி சொலஅவன் சொல்லுவான். (3)

(ஞா-பொ-ரை):— நாயனே ! இந்தக்கொடியவன் நடுவழி மறிக்கின்றானே. இனிநானும் என்உம்மத்தாகளும்எவ்விதம்அப்பால் போகமுடியும் என்றதற்கு அல்லாகுத்தஆலா ஹே! என் ஹபீபே! உம்மைக்கொண்டே நீர் வருவீராக. என்றுத்திரவிட்டான். அதற்குஎன்னைக்கொண்டென்றால்எனக்குஅர்த்தம் புரியவில்லை. நீதான் அதை அருளிச்செய்யவேணும் என்றுகேட்டார்கள். அதற்காண்டவன் சொல்வான். எ-று

ஆர்க்கு முடையோரே ஹபீபேநீதி,யான ஹிம்மத்திங் குமக்
கில்லையோ-ஊக்கமுடையவ ரும்மைக்காண, வுண்டோவுலகிலும்

வானதிலும்- தாக்கமுட ஞென்றுஞ் சொல்லமாட்டேன், தன்மூ
லும்முளப் பலம்போலவே, ஏர்க்கும்படியிபுலீசை த்தள்ளி,யிங்கே
வாரு மென்றிறை யோதினுன். (4)

(ஞா-பொ-பொ):—ஹே! எல்லா ஜீவராசிகளுக்கும் முதற்
காரண கருவிகளாக இந்து வந்த என் ஹபீபே! சேளும். உம்
முடையபலத்தைப்பார்க்கிலும் நான் உலகத்தில் எந்த ஒரு வஸ்த்
தையும் படைக்கவே இல்லை. அதுபோலவே வானத்திலும் கிடை
யாது. இதற்கு மேல் நான் என்ன தான் சொல்வேன் ஆனதாலே
நீர் உம்முடைய பலகட்டியத்தால் அந்தல அத்துல்லாவைத்தள்ளி
விட்டு இப்பால்வந்து சேரும் என்றுன். எ-று.

சதியனிபுலீ சுபழிக்காரன்மா; சாதனையுள்ளகள்ளபயல் விதி
யை யறியாமல் விட்டமூடன்,வீணில் மறித்துக்கொண்டானதனுற்
பதியிலெப்படி வருவேனெனப்,பயஹாம்பர்நபிகூறவிறை-யதிகார
முண்டாயிருக்கில்வாரு, மல்லாதிருக்கிற்போமென்றுரைத்தான்(5)

(ஞா-பொ-ரை):—அதற்கு நாயகமவர்கள். சதிகாரனான
அந்த பாவி இப்லீசு விதியுடன் எதிர்த்து முரண்பட்ட பாவியல்
லவா? மேலும் அநேக விதமான கள்ளத்தனமும் வஞ்சனை குபா
டங்களும் உடைய மகாசண்டாளன் ஆயிற்றே. அந்த கொடியவ
னுடன் நான் எந்த விதத்தில் பலஞ்செய்து கடப்பேன். என்றார்
கள். அதற்கு நாயன் ஹபீபே! அவனையடக்கும் சகலவல்லமையும்
உமக்கு இருக்கின்றது. ஆனதால் அந்த அதிகார வல்லமையைக்
கொண்டு நீர் அவனை மிகைக்க ஏலுமானல் கடந்து வாரும் இல்லை
யானல் திரும்பிப் போகும். என்று நாயன் உத்தாரம் செய்தருளி
ஞன். எ-.று

மண்ணின் மஃறஷறு நிலையானது,மண்டல மூன்றிற், கப்பால்
நின்றே-யெண்ணும் நாயகத் தனமாவை னிருந்தான்சம்குல்குலா
வைவிட்டே- அண்ணும் பார்வைகண் ணுச்சியிலே, யன்றி பாரும்
நீரின்று பாரும் நின்று விளையாடுங் கண்ணை மூடி, நீண்ட அலி
போடே நின்றஹூவே. (6)

(ஞா-பொ-ரை):— இந்தபூமி தொடுத்து. மூன்றுமண்டலங்
களுக்கு மிடைநடுவே. மஃறஷரின் வெளியானது தோன்றிவிடும்.
மாளிக்குல் முல்க்காகியநாயகன்ஜம்உலலாவைவிட்டு அங்குஅபுருப

தோற்றவடிவில் ஹக்தஆலா வெளியாகுவான். அதன்விபரம் மஹான்களான ஞானவான்கள். இருகண்பார்வைகளையும் உச்சிக்கு நேரேவைத்துநோக்கிய நோக்கத்துடன் வாசியும் இடவலம் சாயாமல் கதிர்முனைபோல் பார்த்தால் பூரணத்தின் அதிகாரக் கொலுமஹாமண்டப மேடையானது தோன்றும். அப்போது ஹக்குஜோதிமயமாக நடனமாடிக்கொண்டிருக்கின்ற. கோலந் தெரியவரும் ஹஷ்றுடைய் மைதானமுந்தெரியும் சிறாத்தும் தெரியும் இபுலீசுசெய்கின்ற வழக்கும்தெரியும். இருகண்களையும்மூடி விட்டுப்பிரியாத. அன்புடன் நினைவை ஹூ என்ற திவ்ய அட்சத்தைப் பொதிந்து ஜபிக்கும்படியாக அந்ததபோதனர்களைநான்வற் புறுத்துகின்றேன். எ-று

நிற்கும்நிலஞ் செம்புத் தரைபோலுமங்,நிலத்தைசூழ்ந்ததுநரகானது-கைக்குமேல் நிற்குங் கதிர் சூரியன், கதிரு முகமெட்டாய் எரி வீசுமே-ஒக்கும் நாயக ரதின்மேலிருந்தொவ்வென்ருய்க்கேள் விகேட்பானவை-னெற்குமிது கொப்புத் தவ்ஹீதான ,இல்லல்லா சொன்னன் குறுஆனிலே-பக்கம்பாராமலில்மைப்பாரும்,பார்த்தாலறியலாம் ஹேமீமிலே. (7)

(ஞா-பொ-ரை):— மஹ்ஷருடைய வெளியின் நிலங்களெல்லாம் செம்புத்தரையாக இருக்கும். அதைச்சூழ்ந்திருக்கும் படியானது. நரகநிரயங்களாக இருக்கும்-மனிதரின் கையுடைய உயரத்திற்கு மேலாலே சூரியன்வந்து நிற்கும். அவ்விதம்வந்துநிற்கும் படியான சூரியனும்-எண்கோணமுகமாக நின்று கிரணங்களைவாரி வீசும். அல்லாவானவன் அதன்மேல் விற்றிருந்துதான் கேள்வி கணக்குகேட்பான் அது. ஒவ்வொருகல்குகளையும் தனித்தனியாகவே விட்டுக்கேட்கப்படும். இதுவானது குர்ஆனில் தப்சீருடைய உலமாக்களின் கருத்தானது இப்படித்தான். இது நுனிப்பார்வையாகப்பார்த்தால் சப்பரம் பரியாது. உள்நுழைந்துபார்த்தால் அதாவது ஹே. மீம். என்றதின் திரையைத் திறந்துபார்த்தால் அப்போது அறிந்துகொள்ளலாம். எ-று.

மூலம் கருமூன்று முண்டகத்தில், முழுதும் நிலையாக நிற்கும் ஹா ஹூ-பாலே யதுசூழ்ந்து பசியானது,பார்கும் நரகதுபரியான

தே- யேல அதற்குமே லிருகண்ணுன,திருசெவிரண்டு மாடிநிற்குங் கோலமான ஹக்கானவன்ருன், குல்லாவானதையிட்டனனே (8)

(ஞா-பொ-ரை):— மூலக்கருவானது. உந்திதாமரை. முண்டகம். என்றமூன்றுமண்டலத்திலும் ஊன்றிய நிலையாக இருக்கின்றது. அதுதான்றாஹூடை காந்தியாகஇருக்கும். அதற்கு யேலேசூழவளைவான நிற்கும்குழாய்தான் சிருத்துல் முஸ்தகீன். பாலம். அதன்கீழே. தான்பித்திருக்கின்றது. அதுதான்பசி என்கின்ற அக்னி உதயஞ்செய்கின்ற நகரமாகஇருக்கும் அதற்கு மேலேதான் செவிரண்டும் சூரியமண்டலம் அதில்தான்காந்தியின் அசலியத்தாகிய கேள்விப்புலன்கள்தான் ஜலாலியத்தின் தீரமான கேள்விகளை வாஸ்தவமாகவே எதிர்ப்பில் விட்டுக்கேட்டும். அப்படிக்கேட்கும் சக்திஎதர்க்குடையதோ அதுதான்கருமம். அறிவுடையவன் அறியட்டும். அதற்குசமீபமாக இருக்கின்ற ! இருகண்களுந்தான் சுவர்க்கலோகம் என்பதாம். அந்தமகாமை எத்திக்கொண்டபோதுதான் அதன்இன்பசுகானுபவங்கள் தெரியும எ-று

இந்த நிலையாகுமஹ்ஷருன,தில்மைப்பாருங்காள்மூமின்களே அந்த லாஇலாஹ இல்லல்லாஹு,அலிபுடன் லாம்மீம்ஹேயானது முந்தச்சொன்னதில் அலிபும் லாமு,மூர்க்கமாகவேயுயர்ந்து சோரிச்-சிந்தைந் வெளியான மத்லூயிலே, செய்தி யறியுங்கள் நபியும் மத்தே. (9)

(ஞா-பொ-ரை):—ஓமூமின்களான ஜனங்களே ! இப்படித்தான் இருக்கின்றது மஹ்ஷருடைய உண்மையான சங்கதி. லாஇலாஹஇல்லல்லா ஹு. என்றது. அலிபு. லாம்-மீம். ஹே. என்ற சூட்சமம்தான். இதுஇதயந்திறந்தவுடன் இதன் மதுலூபு. வெளியாகும் அப்போதுதான் நபியும் மத்துகளுக்கு நாம்சொல்கிற செய்தி இன்னதென்று தெரிந்துவிடும். எ-று.

நல்லீ நபியும்மத் தானதரே,நடக்குங் தௌஹீதுபெலமானது. சொல்ல தொலையாதுசிர்ருனது சூட்சமாமுஸ்தகீம்பாலமே-எல்லை நேரான நடப்பாதங் கியல்பாமுஸ்கீம் ;பால்குமா-வல்லமையுள்ள நூயகன்ருன்,வழூத்தினன்குருனயத்தில். (10)

(ஞா-பொ-ரை):—நன்மையான நபியவர்களின் உம்மத்துக ளானஉடன்பிறந்தார்களே! தவ்ஹீதுகளில்பெலமானதும்,சொல்ல முடியாத மஹாசிர்ருனதும். சிருத்தல் முஸ்தகீம் என்னும் பா லத்தின்ம ஆரிபாவாகஇருக்கும்ஸ்வாசவாசியின்கூர்மையான வை யாளியானது சிருத்துல் முஸ்தகீன்பாலத்தின் எதிர்ப்பில்பாய்கின் றது இதை மிஃறுஜியில் நபிவர்களுக்கு அல்லா அறிவித்தான். குர்ஆனிலும் சொல்லப்படுகிறது. எ-று

நேரே நடப்பது முஸ்தகீமே,நேருகெட்டதங் கொயிலே டையே- ஊரே தீனுன ஹூரானதே,யூரி லிருந்துபின் னேடிவந்தே சேறுபோடாமற்தவரிடாமற் செய்யும் பணிவிடை பிசகிடாமற்பா ருங்காளிருவிழி நடுவிற்,பார்த்தாலறியலாம்ஹூவல்லாஹூவே.()

(ஞா-பொ-ரை):— வீசியூானது நேராக நடந்திட்டதானல் அந்த நிஷ்டையாளன் கதிமோட்சவீடுபோய்ச் சேருவான். அல் லது. அக்கர்மக்ர் பண்ணும் பட்சததில் அதுவிழுகின்றஸ்தானம் வைலுன்என்கிற அக்னிஓடையே. நீங்கள் தீனுனவர்களாக இரு க்கின்றதாலே உங்களுக்கு நபியவர்களின் கிருபாகடாட்சத்தைக் கொண்டு அநேக மஆரிபாவின் சுருக்கமான வழியை நன் கொடையாகக்கொடுத்திருக்கின்றது ஆனதினல்நீங்கள் செய்யுந் வத்தில்தீட்டுப்பட்டுவிடாமல்நினைவானது தவறிவிடாமலும்’அதில் செய்யும்பணிவிடையானபுடங்கள் குலேந்து போகாமல் இரண்டு நேத்திரங்களுக்குமத்தியில் பாருங்கள். அல்லாஹூ என்ற ஸக ஜோதிதீபம் தெரியும். எ-று.

மின்னி யெரிகின்ற விளக்கைப் போலுூ மிளிருஞ் சூரியன் றன்னைப்போலும்-உன்னி விளையாடுங் கமறுபோலு, மொருமித் திருக்கின்ற தங்கம்போலும் - நின்று விளையாடு மறையாமலே, நேராய்க்கதிர்வீசும் நூறுனதே-அன்ன முஹம்மது நபியோதின, ரருள்ஹூ ஜல்ஜலால் பொருள் ஹூவென்றே, (12)

(ஞா-பொ-ரை):—அந்தகற்பூரஜோதியானது எப்படிதெரியும் மென்றல் மின்னல் போன்ற விளக்கைப் போலும், ஆயிரங்கிரணங் களையுடையசூரியனைப் போலும்’இன்னும் வானவுலகத்தில் குளிர்

நதஜோதிகளுடன் திருவிளையாடல் செய்யும் சந்திரனைப்போலும் இன்னும் பதினாயிரம் மாற்றுள்ள ஒருதங்கமிருந்தால் அதுவெப்படி விளங்குமோ அதுபோலும், ஒரேநிலையாக நின்று விளையாடும், உன க்குளெதிர் முகமாக தன்கமலக் கதிரைப் பரப்பிக் கொண்டிருக்கின் றது. ஆனால் அதுபார்க்கும் போது ஒருபோதுமறைந்து தெரியா மல்பளீரென்றே தெரியும், அதுதான் மஸிக்குல் குத்தூஸாகிய ஜல் லஜலாலஹூ வாக இருக்கும் என்று நபியவர்கள் விளக்கிக்காட்டி னார்கள். என்று

முந்த நாயகன் தானேந்தினன், முழுஆதமும் ஹூஹூஹூ வென-அந்த நாளையில் நபியிறசூல், அல்ஹம்து லில்லாஹி யென வே-சொந்த மாகவே நபியும்மத்தோர், துல்லிய மாக வதிலிருந் தால்-விந்தை பெறுவார்கள் நிஃமத்தாலே-வேண்டும் பறக்கத் துண்டாகுமென்றார். (13)

(கா-பொ-ரை):—அல்லாகுர்ஆனில்திருவுளம்பற்றினன். மனி தன் தன் முழுஸ்ரூபமும் மூன்று ஹூவால்உண்டுபட்டிருக்கின்றான் மக்குலூக்காத்துகள் உண்டாகுமுன் நபியவர்கள் அல்ஹம்துலில் லாஹியென்னும் சிபத்தில் அமர்ந்திருந்தார்கள். இதைவிளங்கியறிவ தற்கு முஸ்லிம் களுக்கு எவ்வளவோ சுதந்தர மிருந்தும் கவனி யாமல்வெறிநாய்கள் வயிறுவளர்ப்பது போல்வளர்த்துக் கொண் டலைகிறார்கள் சற்றுமனதைத்திருத்திதன்னிலையில்தரிபடுவார்களா கில் எவ்வளவோ வல்லமையும் பறக்கத்தும் உடையவர்களாக. ஆவார்கள் என்று நாயகமவர்கள் சொல்லினார்கள். என்று

மஹ்ஷர் கேள்விப் படலம்

பூரணம் மாயிற்று

ஆகபடலம் 13இ திருப்பாடல் 284.

# மூலாதாரப் படலம்.

## தொங்கல்.

லாஇலாஹா வென்றுன நாலாரு மெழுத்துமூலம்
ஒவ்வில்லா இல்லல்லாஹு உயர்ந்திடு சுவாதிஷ்டான
வாயில்லா வோசைநின்ற முஹம்மது பெயரைக் கே
நாவில்லாக் கமலமுனையில் நாயகனுரைத்த தன்றே.

(ஞா-பொ-ரை):—லாஇலாஹ இல்லல் லாஹு என்
இருபத்து நாலு அட்சரங்களும் ஆதமியுடைய ஜடலத்
மூலாதாரமாக இருக்கின்றன. அவைகளில் (இல்லல் லாஹ
என்றதிக்ருனது அவசரநிலையாக இருக்கின்றது. ஆதமியும்
மியின் வாயுமில்லாத காலத்தில் தானுகவே முகம்மதென்று
ரிய வகையில் ஒசித்துக் கொண்டிருந்ததிருமணி ஒளிவான திரு
மத்தைப்பற்றி சொல்கிறேன் கேளுங்கள்.?.நாவு இல்லாத கம
அதாவது கமலம் என்றது. கண்கள் முனை என்றது சுழிமுனை அ
லேநாயன் வைத்துப்பாராட்டிக் கொண்டு வந்தான். அதாவது
கினைவாகிய இஷ்க்கானது. அழகைப்பற்றி மோகித்தது. என்பது
கருத்து. எ-று

உன்னிய மணிபூ ரகந்தா னுறுதித் தாமரையே யாகு
மன்னிய தொண்டைக்குழியதா மகிழ்ந்திடும் விஷித்தியாகுங்
கண்ணிரு நடுவிற் கனியதான கருணை மண்டலங்கள் மூன்று
முன்சொன்ன மூலாதார வினமென மொழிந்திட்டாரே: (2)

(ஞா-பொ-ரை):—இனி திருமணியான பூரகம் என்பதானது.
தாமரைக் காயாக இருக்கும் அப்பால் தொண்டைக் குழியான
கடாக்னி என்றவிஷத்தியாக இருக்கும் அப்பால் இரண்டுகண்களுக்
கும் நடுவே புருவஸ்தான முக்கோணங்கள் மூன்றும் முதலேநான்
சொன்ன மூலாதரங்களாக இருக்கும் என்று நபிநாயக சிரோமணி
யவர்கள் திட்டவட்டமாகக் கூறினர்கள். எ-று

சூரிய மண்டலந்தான் சொலும்வல தாகுமென்றும்
நேரிய சந்திரன்தா னிலையுறு மிடது பக்கம்
பாரியவக் கினிநடுவிற் பகர்ந்திடு மிவைக ளெல்லாம்
சோதிக்குங் காலன்வேளை சொல்லுமே கலிமாத்தானே. (3)

பொ-ரை):— இனிறாஹ்றஎன்ற பதினன்கு அட்சரங்க
ஜடலத்தில்ஆத்மாவாக நடைபெறுகினறது. றாஹ்றஎன்
ாகுஅட்சரங்களின் விபரம்ஷத்து. ஸாக்கூன், சவர். புள்
ா. இனிமற்றஅட்சரங்களில் உற்ற சேர்சவர் முதலியனயா
ன்றுசேர்ந்து. ஜாயிஸானமுத்லக்கு மாகஇருக்கும். எ-று.

## விருத்தம்.

இப்படிக் கிசையும் றாஹி னீவுமுன் ஆதமுக்கு
மப்படிக் கவனும் ஆத வழங்கைமுன் ஹைந்ததாமே
செப்படித் திறவுஞ் சீவன் றிருமலர்ச் சிரசினூடே
மெய்ப்படிக்கெவையுமீந்துமெய்யுரைவிடுக்கலுற்றுன் (9)

(ஞா-பொ-ரை):— மேற்கூறியதிவ்ய அட்சரங்களைப் பூட்டின
லே ஆதம்படைப்புகளில் வஜீகரத்தையுடையதாக சுவர்க்கத்
ன்வெளியில் காணப்பட்டார்அதன்படி தன்கருவிகள் அனைத்தும்
ஸரியென்று சம்மதப்பட்டதிஞலே அல்லா மேலே சொல்லப்
பட்டுள்ள பதினன்கு ரஹஸியஅட்சர வர்க்கங்களாக கொண்டு
றாஹைநுழைத்து அதில்தானும்புகுந்து. வெளியாகினன்.எ-று.

மாவொன்று மாமொன்றுகி வருமலர் பேச்சுமூச்சாய்
ஆவென்ற அறிவை நாட்டி யருமல ரூடுபூந்தே
யீயென்றே யிறைஞ்சி யேங்கி யினிதருள் ராகமீந்தே
ஊவென்று முரைத்தே யோங்கி யெடுங்குத்தலத்திலம்மா. ()

(ஞா-பொ-ரை):—மா. என்ற கலிமாவுடன் ஒன்றுபட்டு
அதாவது. மீமுடன் மற்றொருமீம் சேர்ந்தவுடன் சரீரஇயந்திரம்
பேசக்கூடிய தத்வமும் சுவாச ஓட்டஞ்செய்யும் தத்வத்தையும்
தானேபெற்றது. அப்படிஇயற்றப்பட்டஇந்த இயந்திரம்கூர்மை
பார்த்து ஓடக்கூடியத் தத்வமானது. அறிவாக. ஹ என்ற
அட்சரத்தில்நிலைபெற்றது. ஷேமலராகியஅந்தஅறிவானது.மேலே
அறுஸுவரையிலும பூத்துவாசனை செய்திற்று. அவ்விதமான
அந்தஸுவானது இந்தசரீரத்தில் உந்தியின் கீழ்இருந்து வெளி
யாகக்கூடிய. சுவாசத்துடன் கலந்து கொண்டு பூதநப்ஸுக
ளுக்குச் சகல அபேட்சை யதிகாரங்களுங் கொடுத்து நடத்தாட்டி
ஷெஉந்திக்குமலத்திலேயே அடங்கிக்கொள்ளும். என்று இதனல்

## மூலாதாரப் படலம்.

காலிரு மொளியைச் சேர்க்க கலந்திடும்தேயு லே
மேலிரு கைகள் ரண்டும் விளங்கிய ஐனும்கொய்னு
பாலிரு பிரமத் தோங்கப் பாங்குறு பேயுங் காபும்
கோலியம் சுமந்தகாபைக் குறுக்குடல்தண்டுசேர்த்த

(ஞா-பொ-ரை):— இன்னும்பாதத்தில் உண்டானமெ இரண்டும் தேய் லோய் என்றஅட்சரங்களால் பூட்டப்பட் ன்றன. இரண்டுகரங்களும் ஐன். கொய்ன் என்றஅட்சரங் நீண்டன. அவைகளின் இராஜகருவி நரம்புஸ்தானங்கள் மட நீட்டல்என்றவைகள் அனைத்தும். அல்லதுஇரண்டும். பே. என்ற அட்சரங்களால் பிணைக்கப்பட்டன. கூபடி காபுக்கு தபடியான காபுஎன்றஅட்சர சூட்சமத்தால் பிரடிஅம்ஸநரம்பு ஆகிய முதுகந்தண்டை உண்டாக்கப்பட்டது. எ-

பாவிய முழங்கால் ரண்டும் பாவிய லாமிலூட்டித்
தாவியே மீமுமூளை தருமக்கா னூனைமூட்டிக்
கூவிய வாவுதொப்பூழ் கூண்டஹே கல்பினூடே
ஏவுலாம் அலிபு சுல்பி லிசையும் ஏறாஹே யென்றான் (7)

(ஞா-பொ-ரை):— இன்னும் பாதங்களின் முழங்கால் ஸ்தானங்களை லாம் என்றஅட்சரத்தால் பூட்டப்பட்டது. இன்னும்சிரசின் மூளைஸ்தானத்திலுண்டான நுனிஇவைகளை மீம்என்றஅட்சரத்தால் ஸ்திரப்படுத்தி யாயிற்று. இன்னும் தொப்பூழ்என்ற வாயலை. வாவ்என்ற அட்சரத்தால் இயற்றிவிட்டுஅப்பால் கல்பு. என்னும் இருதயத்தையும் அதன்ஸம்பந்தா ஸம்பந்தமானமற்றய புதியநப்ஸுகளையும் ஹே. ஏ. லாம். அலிபு. ஹே. என்றமஹா வல்லப அட்சரங்களால் ரஹஸியத்தில் உண்டுபண்ணப்பட்டது எ-று

## தொங்கள்.

றாஹாகிய பதினு லெழுத்து முடலமதி லுற்றவுயிரதாகுங் கூறு வேன்மத்தும்ஷத்தும் சுக்கூன்,குறித்திடும்புள்ளியதனைக்கூட் டி-வாவுமேல்சவரதுவுஞ் சேரும்வரும்டேசிசவரதுவுஞ் சேரும் சுறில்லான துப்பேசா யத்துவ, மிலங்கு மூத்தலக் ஜாயிசுமே (8)

# மூலாதாரப் படலம்.

பொ-ரை):— இனிஹாஹ்ஹஎன்ற பதினன்கு அட்சரங்க ஜடலத்தில்ஆத்மாவாக நடைபெறுகினறது. ஹாஹ்ஹஎன் ாகுஅட்சரங்களின் விபரம்ஷத்து. ஸூக்ஷன், சவர். புள் ன. இனிமற்றஅட்சரங்களில் உற்ற சேர்சவர் முதலியனயா ன்றுசேர்ந்து. ஜாயிஸானமுதலக்கு மாகஇருக்கும். எ-று.

## விருத்தம்.

இப்படிக் கிசையும் ஹாஹி னீவுமுன் ஆதமுக்கு
மப்படிக் கவனும் ஆத வழிகைமுன் னுய்ந்ததாலே
செப்படித் திறவுஞ் சீவன் றிருமலர்ச் சிரசினூடே
மெய்ப்படிக்கெவையுமீந்துமெய்யுரைவிடுக்கலுற்றுன் (9)

(ஞா-பொ-ரை):— மேற்கூறியதிவ்ய அட்சரங்களைப் பூட்டின -லே ஆதம்பசைப்புகளில் வஜீகரத்தையுடையதாக சுவர்க்கத் ன்வெளியில் காணப்பட்டார்அதன்படி தன்கருவிகள்அனைத்தும் லரியென்று சம்மதப்பட்டதினலே அல்லா மேலே சொல்லப் பட்டுள்ள பதினன்கு ரஹஸியஅட்சர வர்க்கங்களாக கொண்டு றாஹைநுழைத்து அதில்தானும்புகுந்து. வெளியாகினன்.எ-று.

மாவொன்று மாமொன்ருகி வருமலர் பேச்சுமூச்சாய்
ஆவென்ற அறிவை நாட்டி யருமல ரூடுபூந்தே
யீயென்றே யிறைஞ்சி யேங்கி யினிதருள் ராகமீந்தே
ஊவென்று முரைத்தே யோங்கி யெடுங்குத்தலத்திலம்மா. ()

(ஞா-பொ-ரை):—மா. என்ற கலிமாவுடன் ஒன்றுபட்டு அதாவது. மீமுடன் மற்ருருமீம் சேர்ந்தவுடன் சரீரஇயந்திரம் பேசக்கூடிய தத்வமும் சுவாச ஓட்டஞ்செய்யும் தத்வத்தையும் தானேபெற்றது. அப்படிஇயற்றப்பட்டஇந்த இயந்திரம்கூர்மை பார்த்து ஓடக்கூடியத் தத்வமானது. அறிவாக. ஹஎன்ற அட்சரத்தில்நிலைபெற்றது. ஷிமலராகியஅந்தஅறிவானது.மேலே அறுஸூவரையிலும பூத்துவாசனை செய்திற்று. அவ்விதமான அந்தஸூவானது இந்தசரீரத்தில் உந்தியின் கீழ்இருந்து வெளி யாகக்கூடிய. சுவாசத்துடன் கலந்து கொண்டு பூதநப்ஸூக ளுக்குச்சகல அபேட்சை யதிகாரங்களுங் கொடுத்து நடத்தாட்டி ஷஉந்திக்கமலத்திலேயே அடங்கிக்கொள்ளும். என்று இதனல்

ஐடலம்வீழ்ந்து விட்டதின் பின்னால் ஆத்மாஎங்கே போய்விடுகிறது, என்றகேள்வியான அந்ததேஹத்திற்கு விடுதலையாக உணர்ச்சிகாட்டப் பட்டிருக் கின்றது. காண்க. எ-று

ஒடுங்குமத் தலத்தி லாய்ந்த வோம்புத லொசிக்கமாகக்
கடுங்குமவ்வொளியைநோக்கிக்காதல்கொண்டிறைஞ்சிநேபம்
நடுங்குமே நாதனென்று நானுன்னை நாட நாட
அடுங்கணை யந்தேயோங்கி அருஷினி லானதம்மா. (11)

(ஞா-பொ-ரை):—மேற்படி ஆத்மாவானது ஒடுங்கிய ஸ்தலத்தை ஆராய்ந்து அதிலிருந்து. அங்கே ஏகமயமாக எழும்புகின்ற பிரமாண்டமான ஒளிவைக்கண்டு மனசில் அதிமோகங் கொண்டு தியானதானம் செய்து ஒட்டியஸ்நேகபாவஞ் செய்துகொண்டால் இன்ஸானின் முக்யகரு வியாகியசினேவானது. அந்தஒளியுடன் விரவிக் கொண்டு உன்னதஸ் தானத்தையடைந்து கொள்ளும், எ-று.

அருஷினி லாகிவிம்ம அறிவெனு மாய்ந்தபார்வை
குருசினி லேறி நிற்கும் குதுறத்து மஹுஹறென்னும்
மிருசதச் சுவாசமேந்தி யிருபதம் லெளஹி லோங்க
நருசத நாட்ட நாவல் நாட்டுமக்கலமுமம்மா. (12)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் அருஷா கியஸ்தலத்தில் வந்துவிட்ட அறிவானதத்வமானது. தனதுபார்வை சேள்கவிள் துனியாவின் மாயையைவிட்டும் விலகிநீங்கிய வுடன் உடனே குரிசியில் வந்து ஏறிக்கொள்ளும். அவ்விதம் ஏற்றஞ்செய்தவுடன் சகலமான உயிர்ப்பிராணிகளின் உற்பத்தி களெல்லாம் அவர்களின் தோற்றமாகவே தோற்றிவிடும். அப்போது லெளஹு அவர்களின் சிரசாகவே ஆய்விடும். அந்தசமயம் அவர்களின் சூரிய சந்திரன் என்ற இரண்டு வகையாய் வாசங்களும் கலமும், லெளஹுமாகத்தோன்றும். அப்போது பழயகற்பனைகள் மாறி புதுப்பிக்கப்படும் எ-று.

கல மென்னும் அண்ணு விண்ணுக்ககனமாம் பலகைதன்னிற்
றலைமுத லாதி சத்தம் தானவ னுறைத்தபோது
நிலைபெற வெழுதும் போது நிச்சய வசன மெல்லா
மலைவில்லாமுஹம்மதென்னவரிசைநாவுரைகருமென்றும் (13)

(ஞா-பொ-ரை):—ஆதியில் ஆதத்தைக் கீழ்வருமாதிரிதான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது, அதாவது—ஆதத்தின் உண்ணுக் கென்பதுதான் கலம்; கபாலமானது. லௌஹென்னும் பலகை; அதில் உள்நுழைக்கப்பட்ட ரஹஸிய அட்சரங்களின் தத்துவத்தால் இலாஹியானவன் சப்தத்தை உதயஞ்செய்தான், அந்நேரம் கலத்திற்கு கட்டளை. அந்த சப்தத்தை எழுதும் படியாக உண்டாயிற்று அதன்படி கலம் எழுதினது, அந்த வசனங்கள் எல்லாம்ஆதமுடையநாவில்முகம்மது என்றே வெளிவந்தது. எ-று

உரைதிருக்கலிமா வென்று மூவந்தநல் லிருஷாதுற்ற
கரையில்லாக் காட்சியான காரணவொளியைநோக்கி
நிரை நிரை யமரர் கூண்டு நீதியாய்ந் திணக்கஞ்செய்வார்
துரையினிற்புகழுக் கெல்லாந் தானிருஷா தாமென்றும்' (14)

(ஞா-பொ-ரை):—அப்போது அல்லாகுத்ஆலா அந்த முகம்மதென்ற திருநாமமே சகல தத்வாதிகளையும் அடக்கிக்கொண்டிருக்கின்றகலிமாவாக இருக்கும் என்று அங்கு கூடிக்கொண்டிருக்கின்ற மலக்குகளுக்கெல்லாம் அறிவித்தான், அந்த இருஷாதின் படியுள்ள அந்த முகம்மதென்ற பெயர் ஆதத்தின் தலையில் ஒளிஸ்ரூபமாக. இருந்திலங்குவதைக்கண்டு கூடி அமரர்கள் கூட்டங் கூட்டமாக நின்று ஸுஜூது செய்தனர். இந்த முகம்மதே எல்லா உலகங்களுக்கும் அஸ்திபாரமான தத்வஜோதியான இருஷாதாக இருக்கும் என்று சொல்லினர். எ-று.

சுந்தர மலர்பூங் காவிற் சுகமனு பவிக்கும் ஆதம்
அந்தரந்தனிலே வட்டம் அல்ஹம்து சூறத்தினுர்
சந்திரன் கதிரோன் மற்றுந் தானவ னமைத்ததெ ல்லா
மந்தக முடலாம் ஹேமீம் ஐன் சீனும் காபுமாகும். (15)

(ஞா-பொ-ரை):—அந்த சுவர்க்கத்தின் அழகிய சுவர்ணமயமான பூங்காவனத்தில் இன்பகரமான மஹாசுகங்களை யெல்லாம் அநுபவிக்கும் ஆதம் என்பவர் அறுஷேமுஅல்லாவில் சூழவட்டமாயிருந்த ஹவ்வா என்பதற்குள் அடங்கிவிட்ட அல்ஹம்திடைய சூறத்தில் உதயமானர். அன்றி சந்திரன் சூரியன் நட்சத்திராதி

கள் முதலிய எல்லா இருஷ்டி அதாவது மக்லூக்காத்துகள் அடங்க லும் அல்லா உற்பத்தி செய்யக் காரண கருவியாக இருந்த ஜடலங் கள் யாவும். ஹே. மீம். அதாவது ஹாமீம். என்ற ஸ்ரூபத்தில் அமைந்து ஐன். சீன். காபு என்றதில் உருக்கொண்டு—பூலோகத் தில் வெளியாயிற்று. எ-று.

அம்மா றத்து நபுசு ஹேமீம் ஐன்சீன் காபுகோலம்
நிம்மா சு செய்லெவ் வாமத்து நிறைந்த அல்ஹம்தாய் நீண்ட
ஐமா லென்னுங் காபுஹே ஏ ஐன்சாது முல்ஹிமத்தாம்
கம்மா லென்னுமுத்மஇன்னகாபுஎல்க்குறு ஆனேதும் (16)

(ஞா-பொ-ரை):—ஜடலத்தில் சுரு சுருப்பைக் கொடுத்து நடத்தக்கூடிய நப்ஸ் அம்மாறு வானது. மேற்படி ஹாமீம் என்ற தத்வத்தில் தான்வடிவெடுத்தது மற்றவைகள் எல்லாம் ஐன் சீன் காபு என்ற கோலத்தில் கோலங்கொண்டது, தொழுகை முதலிய தவங்களானது, நப்ஸ் லவ்வாமாவுடையதாகவும், அல்ஹம்தாய் நீண்டிருக்கும் இன்ஸானியா என்ற மரமானது, கருமத்தில் காப். ஹே. ஏ. ஐன் ஸாது, என்ற பஞ்சாட்சரங்களின் கோலத்தில் தரி பட்டதின் சம்பந்தமாக முல்ஹிமா என்ற நப்ஸாக பிரண்டு கொண்டு விட்டதுஇனி இந்த நப்ஸ்களுக்குள் வெகுகமாலியத் தான நப்ஸ்முத்ம இன்னவானது காப் என்ற அட்சரத்தில் சம் பந்தமானதாலேஅதுவேகுர்ஆனுடையவடிவமாக இருக்கும்.எ-று

கொடியிடை கர்ப்பந் தன்னைக் குணனவனுதமநாட்
பெடையது முட்டை தன்னைப் பேணியே யணைத்து வெப்புத்
துடியுட னிருபத் தொன்றும் நாளதிற் றுலங்குங் குஞ்சு
நொடியதுபோலாமென்றுமுஹம்மதர் நுவன்றிட்டாரால் (17)

(ஞா-பொ-ரை):— ஆத்மி அந்தமுத்மஇன்னவில் தரிபடுகிற தானது. பெட்டைக்கோழியானது- தான்இட்டமுட்டைகளை ஆசையுடன்அணைத்து நினைவின் உஷ்டணத்தால் இருபத்தொன் றும் நாளையில் எப்படிதன்சொரூபமான குஞ்சுகளைப்பொரித்தெடு க்கின்றதோ அதுபோல அந்தமுத்மஇன்னவின் குணத்தில்தரிப ட்டு அதன்படிநினைவைக் கொளுவிவிடும பக்ஷத்தில் அந்தாங்ஸா

வைது தன்ஸ்ரூபமாகிய றப்பானியாவின் சூறத்தில் ஆதமியையுதா மர்திரிதிருப்பிக் கொள்ளும்- என்றுநமதாண்டவர்கள் கற்பித்தார்கள். எ-று.

வேட்டுவன் மண்ணெடுத்து விரைவியே கூடுண்டாக்கி
யாட்டியே புழுவை வைத்தங் கதனைப்போ லுதவுமல்லாற்
சூட்டிய துகிலில் வேர்ப்பிற் றுலங்கு பேன்வந்தநேரம்
நாட்டமும்போராதென் றுநறைமறையுரையைப்பார்ப்பீர் (18)

(ஞா-பொ-ரை):— இன்னும் அல்லாகுத்தஆலா. மிஃறுஜியில் நபியவர்களுக்கு உபதேசஞ்செய்யும்போது. அந்தமுத்மஇன்னு வானது. யாதொருவன் தன்படி நடைபழகின்றுனே. அவனையதன் படிசெய்கின்றவிதம் எப்படியென்றால் கருவண்டானது தூக்கிச் சென்ற கிரிமியை மரத்துளையில் வைத்துதன் மோகமான கீத இசையைப அதற்குப்புகட்டியவுடன் அந்தப்புழுவு அந்தவண்டை நோக்கியவண்ணமாக ராகத்தைக்கவனித்து தியானித்தபோது அதுவேமந்திரமாக ஷை வண்டின் சுருபத்தில்மாறிவிடுகிறதே அது போல இன்ஸான்தன் இயற்கைகுணங்களான நப்ஸ் அம்மாறவை விட்டு ஒருமைக்குணமாகிய நப்ஸ்முத்மஇன்னுவில் பராக்குண்டானே யாகில்உடனே றப்புடையசூறத்தில் மீள்கின்றான். அது போலவே வேர்வையின் பொருட்டால் பேன்ஈறு முதலிய உயிர் வர்க்கங்கள் உண்டாகுகின்றதும் இதுபோலதான் என்றும் றப்பு உம்முல் குர்ஆனில் அருளிச் செய்தான். எ-று.

பாருநீ சனுவஹிறென்னும் பகரணுவாய்ந்தவாறும்
சீரிய சம்சு தாத்து சிபாத்துமாய் மயங்கு வாறும்
ஆருங் கண்டறியா மைதான் அல்ஹம்ததெனும்சூறத்தார்
கூர்மையாம் லியீ.லாபி குறைஷினை யோதிப்பாரே. (19)

(ஞா-பொ-ரை):—இதுபோலதான் அல்லாகுத்தஆலா ஆதமை உண்டாக்கினதும். மண்ணால் ஆதத்தைஉண்டாக்கினான். அதற்குள்சிலஉயிர்அட்சரங்களை நுழைக்கப்பட்டது. ஷை அட்சரங்களை மலக்குகள் தஸ்பீஹ்என்கிறஉருப்போட்டார்கள் அட்சரங்களுக்கு தாந்திஉண்டாகி மண்உருவம் தெளியத்துடங்கிற்று. இதுவேதான்

உலகத்தில் பலபல ஜந்துக்களும் உற்பத்தியாகின்ற விதம்.ஷம்சு தாத்து என்கின்ற ஜாதிகளின் அசல்கருக்களானவைகள். அந்தந்த நினைவுகளில் திட்டந்தரிபட்டவுடனே சிபாத்தான கோலங்களில் எழும்பிநிற்கும் விதங்களும் இதுதான். அல்ஹம்து என்னும் சூறத்தில் இன்ஸான் அமைந்திருக்கின்ற சூட்சம உலகத்தில் யார்கண்டறியமுடியும். கண்டவர்க்குத் தொண்டுபுரிந்தால் தான் அறிய முடியும். இதைகுர் ஆனில் லியீலா பிருதறைஷின் என்றதில்உற்றுப் பார்த்தெரியும். எ-று.

நானல்ல நீயுமல்ல நடுவல்ல முடிவுமல்ல
வானல்லப் புவியுமல்ல பதுறல்லப் பொழுதுமல்ல
மீனல்ல மின்னுமல்ல விசைலெபி லாவுமல்ல
ஊனல்லி வுயிருமல்ல வுறுமலர் தானுமல்ல. (20)

(ஞா-பொ-ரை):—அந்த அல்ஹம்தின் சூறத்தானது எதுவென்று கேட்கும்போது. அதானது. நான் நீ என்றதுமல்ல. நடு முடி என்றதுமல்ல. ஆகாயமும் அல்ல. பூமியுமல்ல. மின்னல்களுமல்ல அல்லது நிசிகளான இருட்பிழம்புகளுமல்ல. இரத்ததிரட்சிகளுமல்ல. அல்லது. உயிர் என்று சொல்லக்கூடிய வைகளுமல்ல. (இன்னும்.) எ-று.

அந்தர மறுஷுமல்ல அண்டம்கற் குறுசுமல்லப்
புந்தியின் மனமுமல்லப் புகழ்ந்திடும் நினைவுமலல
நந்தியும் நமனுமல்ல நாட்டமுந் தேட்டமல்லச்
சுந்தர இறசூலுல்லா சுருதிகண் டோதினார்கள். (21)

(ஞா-பொ-ரை):—பரவெளியான 'அறுஷுஸ்தலங்களுமல்ல அகண்டிதங்களான குர்ஸும் அல்ல இருதயத்தில் உதயமாகின்ற மனஸ்களுமல்ல. அல்லது, நினைவுமல்ல நந்தியாகிய வாசியுமல்ல. அல்லது நமனாகிய பித்துடையஸ்தானமும்அல்ல. நாட்டதேட்டங்களுமல்ல அதானது. பிரத்தியேகவடிவமாக நின்றுடுகிற தென்று நமதாண்டவர்கள் கூறியிருக்கின்றார்கள். எ-று.

காணுமே பதுறு ஷம்சும்கருமின்னும்மீன் வெளியும்
தோணும்லெய்லத்துல் கதிருந் தியப்பமுச் சுடருமொன்றாய்ப்

பேணியே யொன்ருய்க்கூடிப் பெருஞ்சுழி யெறியும் போதே
யாணியாய்க்கற்பனையினல்லா ஆரணமியல்பல்கேண்மோ (22)

(ஞா-பொ-ரை):—அதானது. லைலத்துல் கத்றென்னும் துப் புறவான் முச்சுடர் வட்டத்திற்குள்ளே. சூரியனும் சந்திரனும் போல ஆடிநிற்கும் அந்த மகாமில் கருநீலவட்டமானதில் இரண்டு விடிவெள்ளி உதயஞ்செய்த மாதிரியாகத் தோன்றும். அதானது பரிசுத்த ஸகஜோதியாக தகதக வென்றிலங்கும். என்று, அல்லா ரமது சர்வரட்சகரான நபியவர்களுக்கு இறக்கிய குர்ஆன் வேதத்தில் சயிக்கினை செய்தான். எ-று.

வேறு.

பொரன்னுசை விட்டுவிந்தான, மணியோசைபேரான பூரண மதாங்கண்ணும் சக்கூன் வட்ட மத்தியானத்தி லொருகனகமணி மேலாசையா.லெண்ணுத பாவிகட்கென்பாடுண்டென்று,மறியாத விழி குருடராம்-உண்ணுத வூணுன் டௌாரணியின் மடை,திறந்த முதருந் தும்மனமே. (23)

(ஞா-பொ-ரை):—அந்த பரஞ்ஜோதி வடிவானது,உலகத்தில் பெண்ணுசையைவிட்டு திரண்ட இந்திரியத்தில்விளைந்த நாதத்தின் நாதாந்த ஜோதியானது- மணியோசையைப்போல் பரிபூரணமாக இரண்டு கண்களுக்கு நடுவிலே ஸாக்கூன் வட்டம் என்ற நீலவட்டத்தின் நடுவிலே ஒரு கசகசாவின் பிரமாணம் தங்கசன்னம் போல இலங்கும் அதுதான் குதுவியாக இருக்கும் அதையறியாத பாவியிலும்பாவிகளுக்கு என்னதான் மோட்சகதி இருக்கின்றது. ஒரு கடைமபிருங் கூடகிடையாது. அந்தப் பரமசண்டாளர்கள் இறுதியில் விழி கண் குருடர்களாகவே சாவார்கள். அதைக் கண்டறிந்த மன்னவர்களுக்கு அதுவே தானுகவே கிபாயத்தின் மடைதிறந்து அமிர்தங்களை ,வாரிக்கொட்டும் அப்போது மனமென்ற நிலைவானது அதை அருந்த கற்பமாகி தவஞ்சித்தியாகிவிடும். எ-று.

மிஃறாஜாக்கேகு மப்போதொரு மலக்கு-வேதாம்பர்க்கோது வசனம்,தகுசீ றமக்கு மும்மத் தான பேர்க்குந்-தானவ னுரைத் தமொழியாம், மகுறுன பேருக்குமெட்டாதவான் பொருளைப்பே

றுனவும்மத்தோர்க் குரைப்பீர்-பகுறுன சிரசமு தருந்தவே வர்ன வர் ஜுஜூ துசெய்துகேளும் மலக்கே. (24)

ஸுஜூ தானமீமென்னுந் துடர்ஹேறுக்,கூஹர்ன துய்ய அலிபு நிலையர்கியே-தையிபான இறுஷா துதாளுகவொன்றுகிச், சபீஆதந் தமை வணங்கப்-பயிரான தாலொன்றிற் பறுல்ான, இருப்பாக்கிப் பகலிரவுமற்ற வீதியில் மைதான மெனநம்பிமகுலூக்கெனுங்கோல மறக்காமற் றெழுது வருமே. (25)

(ஞா-பொ-ரை):—நமது சர்வரட்சகர்மிஃறுஜிக்குப்போகும் போது. ஒரு மலக்கு நபியவர்களின் சந்நிதானத்தில் சொன்ன வசனத்தின் சாராம்சமானது—வள்ளலானமுகம்மதே.உமது திரு நாமம் ஒளியின் வடிவில் ஆதத்தின்நெற்றியில் அதாவது:—புருவ மத்தியில் தோன்றிய தன் காரணமாக நாங்களெல்லாம் அந்த மண் பாண்ட சுரூபத்திற்கு ஸஜதா செய்யும்படியாக நேரிட்டது.அதே வணக்கம் உமது உம்மத்துகளுக்கும் நெற்றியினிடம் சஜுது செய்ய ஏற்பட்டிருக்கின்றதே அந்தவான் பொருளின் காரிய காரணங்களைப்பற்றி இப்போது உமதிடம் விபரங்கேட்கவிரும் புகிறேம் அதன் திவ்யரகசியம் சொல்வீராக. என்றதற்கு. நமது ரட்சகரவர்கள். அதாவது. அந்தஆதத்தின் சிரமானது. வே யும்மீமும் கூட்டிசெய்யும்போதே ஜடலத்தின் அந்த சங்கஸ்தல மான உந்திக்கமலத்தில் இருந்தும் உயிரட்சரங்களைக் கொண்டும் அலிபு இன்ஸானின் நிலையாக. நாட்டி.தால் என்றதால் இருப்பு ஆசனத்தையும் வைத்து இயற்றி. அதன் ஊடவே குதுஸாநுழை ந்து கொண்டு புருவமத்தியில்தன்ஜலாலியத்தைவெளி தோன்றச் செய்திற்று ஆனதினுலே மக்லூக்காத்துகள் சமைத்துங் கொண்டு வெளியான அஸலியத்தான அந்தபரமஒளிவை இரவு பகலில்லாத மகாம் ஆகிய புருவத்தில் நினைவுகூர நெற்றியை சாய்த்து சாஷ் டாங்கஞ் செய்வதற்கு. ஜடலத்தின்பேரில் கடமையாய்விட்டது. என்றூர்கள், எ-று

கவனிப்பு

ஆனல் மக்ஹூக்குச் செய்யவேண்டிய கடமையானது. அது காலிக்கலீவில் திரும்பினல் நின்றுஸமதாகிவிடும். என்பது நபியவர்களின் கருத்து. என்பதாம்

மூலாதாரப் படலம்.

பூரண மாயிற்று.

ஆக படலம் 14இ திருப்பாடல் 309.

---

# வேதவுதிப்புப் படலம்.

## தொங்கல்.

பாலும் நீருமொன் றுய்க்கலந்து, பருகு மன்னம்பா லுண் பதுபோற்-கலாங்கலிமாவிற்பனைவைநீக்கிக். கனிந்தஅமிர்தத்தைப் பெருகவுண்டு-மேலோன் பதத்திலே பரஞ்சாட்டியே, விதை வீந்தி யுள்ள பலனைபோல்-ஆலம் அஹதான கனியானதை, யருந்த இசைந்ததல் ஹம்துலில்லா. (1)

(ஞா-பொ-ரை):—அன்னப் பக்ஷியானது எப்படி தண்ணீர் வேறே பாலைவேறேயாக்கி உண்ணுகின்றதோ! அதைப்போல. ஞானவான் என்பவன் கலிமாவுக்குள்ளிருக்கும் குபிர் முதலிய இருவினைகளை நீக்கி அதில் தனியே கனிந்திருக்காநின்ற அமிர்தத்தைமாத்திரம் நினைவில் வைத்து உண்ண வேண்டியது அதாவது நாட்டத்தை நம்பிக்கையில் பரஞ்சாட்ட வேண்டியது அப்போது நிலத்தில் போட்டுவிடுகிற விதையானது எப்படி முளைவந்து எழும்பிவிடுகிறதோ அப்படி நப்ஸானது அஹதானியென்கின்றகனியை அருந்து வதுதான் அல்ஹம்தின் சூறத்தாக மாறிவிடும். எ. று

கரும்பூறல்வந்த வாறதுபோற், கனிந்த கலிமாவின்பொருளானது, துரும்பு கடலிலே, தங்காமலே, துரிதத் தினிற்கரைசேர்வது போ, லிரும்பு சொன்னமா யாக வேதா னிசைந்த குருவேண்டுமுபதேசிக்க-குறும்பு முறுதிலே கதளிலாகிடிற், குல் லடங்லும் அஹதாகுமே. (2)

(ஞா-பொ-ரை):—அப்போது ஆலேயில் கரும்பைப் போட்டு ஆட்டும்போது ரசங்கள் கிளம்பினமாதிரியாக கலிமாவின் பொருட்சுவைகள் தானாகவே கடலில் போட்ட துரும்பு அலேகளில் இருந்து கரைதோன்றி விடுவது போல இருதயத்தில் இருந்துபளீரென்று மிதந்து வெளிதோன்றிவிடும் இதன்நிலேகளே சரியானகாமிலானகுருவிடத்தில் அறிந்து கொள்ளலாம் அதானது இரும்பைப் பொன்னுகச் செய்ய எப்படிப் பழகின ஆசான்சுட்டிக்காட்டவேண்டுமோ அப்படி அதையும் தக்கன ஆசான். அதாவது அந்தநிலேயில் தரிபட்ட ஆசான் சுட்டிக்காட்ட வேண்டும் இல்லாவிட்டால் அதுபாடிப்பேச்சாகு முடியும். எ-று.

இசுலாமானது மைந்துக்கப்பா, லிறைஞ்சும்ஜம்ஆறில்ஈமான் வகை-அசுலாம் தம்கூசு மன்கூசவும், அருள்சேர்மகுக்கூசும் ஜம்கூசவும்,வசுலாக் குன்கூசு மன்பூசவும், வகைசே ரிவையாறுங் குறு ஆனிலே-எசிலா யாறப்பில் ஆலமீன்சொல், ரேலர்ந்தங் கறிந்தவர் சூபியாவார். (3)

(ஞா-பொ-ரை):— நினேவில்அக்மல்ஷஹாது சரியானபடி பிடித்துக்கொண்டால் ஆலம் குல்லடங்கலும் ஒன்றானகூறத்தில் காணப்படும். இஸ்லாமுடைய பறுலுகள்ஐந்து. காரியத்துக் கப்பாலேதான் அல்லாவை. வணங்குகிற, தவமானது ஆறுகாரியங்களேக்கொண்டு அறிந்துகொள்ளவேண்டியது. அதுவேஜம்உ ஆறுகஇருக்கும். அதுஈமானுடைய பறுலேக்கொண்டாகஇருக்கும். அதானது. கம்கூஸ், மன்கூஸ், மஃகூஸ். ஐம்கூஸ், மன்பூஸ் இந்தஆறுமாகஇருக்கும். குர்ஆனில் இந்தஆறுடைய விபரங்களே ப்பற்றி நாயன்திருவருள் செய்திருப்பதையறிந்து வணங்குறவர்கள். சூபியாக்களாக இருக்கும். எ-று.

இசுலாமானதுலாஇலாஹ இல்லல்லாஹொருநூறுமட்டம், அசுலா மன்னுக்குத் தவாபுசெய்தே அதிலே இல்லல்லா ஜலத்தில் நூறு-ஒசுலாய் அல்லாவை நெருப்பில் நூறு, உயர்ந்தஅல்லாஹு வாயில் நூறு-வாசிலா கூவெளி ஐந்நூருக்கி, வணங்கும் சிம்கிலே ஆசைவைக்கும். (4

(ஞா-பொ-ரை):— இஸ்லாத்தின் தவமானது. முதலாவது. லாஇலாஹஇல்லல்லாஹ். என்று நூறுதடவைமொழிந்து. ஜடலத்தின் அசலானமண்ணுக்கு தவாபுசெய்துகொள்ள வேண்டியது. அப்பால்அந்த மூலமந்திரத்தில் நின்றும்இல்லல்லாஹ் என்பதை நூறுதடவைஜெபித்து, தண்ணீருக்குத் தவாபுசெய்யவேண்டியது அப்பால்அல்லா. என்று நூறுதடவைஜெபித்து நெருப்புக்கு தவாபுசெய்யவேண்டியது. அப்பால் அல்லாஹு என்ற மந்திரத்தை நூறுதடவைஜெபித்து. காற்றுக்கு தவாப்செய்து அப்பால் ஆகாயத்துக்கு ஐஞ்ஞூறு விடுத்தம் ஹு என்றமந்திரத்தை ஜெபஞ்செய்து, பிரதக்ஷணஞ் செய்துவந்தால் உடனேஜம்ஹானது சற்றுதிரை திறந்துவெளியாகி. உன்பேரில் நினைப்பை வைத்துவிடும். எ-று.

தன்கூசு பதிவாசியேறித் தாமேன் சத்தத்தோடுடுருவி-மன்கூசுக் கோட்டைமேற்றாண்டியே, வளரு மகுகூசு கணக்குப்பூந்து குன் கூசும் ஜம்கூசுமொன்றாகவே, கூவுமாதியு மனாதியுமாய்-எங்கு மன்பூசல் காரிஅத்து, மல்கா ரிஅத்தி லிறையோதினான். (5)

(ஞா-பொ-ரை):— எப்படியென்றால் தன்கூஸாகிய மண்ணில் இருந்துகடந்து மனஸைமேலேற்றி. அதாவது. வாசியின்ஏற்றத்தால் ஏறிக்கொண்டு பார்த்தால்அங்கே அல்லாகுத்த ஆலாவின்சந்நிதானத்தின் வலம்புரி முழக்கமானது. கேட்கும்அதை-ஊடுருவிப்போய். அப்பால்வருகிற. மன்கூஸ்என்கிற நீர்க்கோட்டையைத்தாண்டி அதற்கப்பாலேற்றங் கொண்டுஅப்பால் வருகின்ற மஉக்கூஸ் ஆகியநெருப்பின் உடையகணக்குகளை சரிவரஇறுத்து. அப்பால்கூன்கூஸ் என்றரேசகமும் ஜம்கூஸ் என்றகும்பகமும் ஒன்றுபடநிரவி ஆதியும் அநாதியும்ஒன்றுபடச்செய்து விட்டால் எங்குபார்த்தாலும் மன்பூஸ்-என்றதன்சொரூபமாக ஆய்விடும்,என்று அல்லாஅலிகாரிஅத்து மல்காரிஆ என்ற. சூறத்தில் திருவுளம் செய்திருக்கின்றான். எ-று.

தம்நூகூசு சேர்வை அலிபும் நூனுந், தாறு மன்கூசில்ஜனுமீமும் நம்மா மகுத்கூசு ஜம்கூசில்,கும்மாம்நாடும்குன்கூசில் நூனும்காபும்.

அம்மா மன்பூசில் அலிபும்ஷத்தும், அதின்பேர் அஹுஇல்லா அஹு அல்லா. ராகுல்ஹக்கு உம்மாலிதையறிந்தீமான் கொள்ள,வுரைத்தானுல் முல்க்குருனேதிலே. (6)

(ஞா-பொ-ரை):—இனி அவைகளின் விபரம் சொல்லப்படும் தம்கூஸின் அட்சரங்கள் அலிபும் நூனுமாக இருக்கும் இனி. மன்கூஸ் உடைய அட்சரங்களாவது- ஐனும் மீமுமாக இருக்கும் இனிமஉக்கூஸ், ஜெம்கூஸாம் ஹாம் என்ற அட்சரங்களாக இருக்கின்றது குன்கூஸ் உடைய அட்சரங்கள் நூனும் காபுமாக இருக்கும். மன்பூஸானது அலிபும் ஷத்துமாக இருக்கும் அதின் திருநாமங்கள் அஹுஅல்லா. அஹுஇல்லா. ராஹறில்ஹக்கு என்றதாக இருக்கும். அவைகளை நல்லஅறிந்து ஈமான் கொள்ள வேண்டியதென்று அல்லா உம்முல் குர்ஆனில் சொல்லி இருக்கின்ருன் எ-று.

எழுதமுன்னமே யெழுத்தானது, மிசைந்துபேசுமுன் பேச்சானது, மொழிதாய் தந்தைமுன் மகவானது. முட்டை பொரிக்குமுன் குஞ்சானதும்-தளிர்க்க முன்னமே பூவானதுங், தம்பிக்கு முனணன் பிறந்தவாறும்-ஒழுக்கமுடனுறுமசலாவையு,மோர்மையொடுசொன்னோர் ஷெய்காகுமே. (7)

(ஞா-பொ-ரை):—இனி மனிதர் களுக்கிடையில் வேஷதாரிகளாகத்திரிந்து முரீதுகளை கடைவைத்துவிற்றுமுதல் செய்துகொண்டலையும் ஷேக்மார்களுக்குநடுவே கேட்கவேண்டிய கேள்வியானது எழுத்தானது உண்டாவதற்கு முன்எழுதிய சங்கதியும், வாயிலிருந்து பேச்சு வெளியாகுவதற்கு முன்பேச்சு வெளிவந்துப், தகப்பன் வெளியாகுவதற்கு முன்மகன்வெளிவந்ததையும், ஒருகோழி அந்தக் கோழி முட்டை இடுகிறதற்கு முன்குஞ்சுகள் பொரிபட்டு வெளியானதையும்,மரமானதுவிதையில்இருந்து முளைகாண்பதற்கு முன் அதன் பூவுங்காயுங் கண்டு விட்டதும், தம்பி அண்ணனுக்கு முன்னே பிறந்து விட்டதும் இந்த ஆறு திவ்யமஸஅலாக்களையும் அவர்களிடம் கேளுங்கள் அவர்கள் உங்கள்மனசிற்கு ஏற்கும் படியாகச் சொல்லிவிட்டார் களானல் அவர்கள் கள்ளகுருமார்களல்ல உள்ளபடியே நல்லகுருவாக இருக்கும் எ-று.

சிந்தைத் தெளிவினி லொளியானது, சிறக்குங் கால்ரண்டு மொன்ருனபின்-வந்தவாசகங் கேட்டுமேலோன்,வரிசை ஹலறத் துக் குதரத்தான-சேரந்தக் கலிமாவின் பொருளாவது, சொல்லி லொருசத்த மங்கொரு சொல்-எந்நேரமு மாருமலே,யிறைஞ்சும் அல்ஹையுல்க் கையூமிலே. (8)

(ஞா-பொ-ரை):—சிந்தையான துயாதொருகபடுசூதுகளையும் விட்டுதறித் தெளிவடைந்த பிறகுஇடகலைபின்கலை இரண்டும் ஒன் ருய்விடும்பிறகுதஜல்லியாத்தின் ஒளிவானது பளீரென்றுதயமாகித் தோன்றும் அதுகலிமாவின் நுட்பசாரமான ஹூவாகஇருக்கும் அப்போது அறுஷில் இருந்து ஒருசப்தம் ஹய்யுல் கய்யூம் என்று தொனிக்கும் அந்த தொனியின் தாற் பரியந் தான் தவத்தின் அடிப்படையாக இருக்கின்றது. எ-று

கையூமானது நினவுக்குள்ளே, கால்ரண்டு மொரு சொல்லிற் கட்டித்-தைவிபு மரம் வளர்ந்துபூத்துத், தழும்பில்லாக்கனிபழுத்த தானல், மெய்யா யருந்துவார் மரம்வைத்தவர்:வேதத்தில்ஆலம் இம்ருனிற் சொன்னன்-ஐயா ஆதமுக்குபகாரஞ்செய், யல்லாதனக் கெல்லாப் புகழுமாமே. (9)

(ஞா-பொ-ரை):—நினைவு ஒருநிலையில் வந்து நின்றபிறகு சூரி யசந்திர கலைகள் இரண்டும் ஒன்ருய் விடும் அதுதான் கையூம் என் றதிருசப்தம். அந்தசப்தத்தை இன்ஸான் கேட்டுவிட்டானுகில் உடனே தையூபு என்ற விருட்சமான இந்த ஜடலமானது: தன் சுயேச்சை தத்வங்களை யெல்லாம் அதனிடத்தில் பெற்று கடைத் தேறி மோட்சகதி யடைந்துவிடும் அப்போது. ஆலம் எல்லாம் அந்தஜடலத்தின் சொந்த அதிகாரத்தின் கீழ் அடங்கிக்கிடக்கும் என்று அல்லா. குர்ஆனில்ஆலம் இம்ரன் என்றசூருவில்சொல்லியி ருக்கின்ருன் ஆதமுக்கு இவ்வளவு மகிமையைக்கொடுத்து உபகா ரஞ்செய்த. நாயனுக்கே சகல புகழும் உண்டாவதாக. எ-று.

மடைத்தலைக் கொக்குக் காத்திருந்த, ளருமம் மச்சத்தைப் புசிப்பதுபோற்-கடைத்தலை வீட்டிலிருந்து தானே, காலடிக்கிடை நடுவிலேகிப்-புடையின் மேலிலே புகுந்துலாவிப், பூட்டியிருக்கின்ற

தைத் திறந்தே-புயைடவனுன கலிமாத்தன்னை, யுவந்து யாறப்பில் ஆலமீனே. (10)

(ஞா-பொ-ரை):—நீர்க்கரையின் மடைத்தலையின்மேல் கொக்கானது. பதிவுவைத்துக் காத்திருந்து—விநயமாக. மீன்களைப் பிடித்துத்தின்னுகின்ற சூட்சியைப்போல் கடைசிவீடாகிய உந்திக் கமலத்தில் இருந்துவெளியாய் வருகிற வாசியைக்கலிமா மந்திரத்தைக்கொண்டுபிடித்து வசப்படுத்திக் கொண்டுபோய் புடையாகிய இருதயக்கமலத்தின் நடுவே வைத்து ஊன்றி. யெழுப்பியேற்றி, அங்கே பூட்டியிருக்கின்ற கபால மண்டலத்தின் கோட்டைகளைத்திறந்து. உட்சென்று அர ஈட்சி புரிந்து றப்புடைய ஹலரத்தில் அமைந்து கொள்கின்றவன் அவனுகத்தெரிவான்.எ-று.

இல்லை வீட்டினிற் சேர்த்திருந்தே, பெழும்பு மண்கதிப் புரவியேறிச்-சொல்லை விடிற்செல்லும் சுவர்க்கத்திலே, சேர்பன மான மணவறையிற்-குல்லென வந்த குமரிப் பெண்ணைக், கூட்டிக் கலியாண மணமுடித்தே-அல்லும் பகலற்ற வெளிச்சத்திலே,யாம்பையுடன் வீடு கூடலாமே. (11)

(ஞா-பொ-ரை):—இன்னும் அந்தக் கோட்டைகளைக் கடந்து அப்பால் அங்கே எவ்விப்பாய்கின்ற புருக் என்னும் குதிரைமேல் வாசி ஏறி. அப்பால் வரும் முஸ்தக்கீம் என்ற கூரிய பாலத்தை வெகுகூர்மையாகவும் மஹாதந்திரமாகவும் கடந்து. அப்பால் சுவர்க்கலோகப் பூங்காவனத்தில் சென்று. அங்கே அலங்கரித்து வைத்திருக்கின்ற உல்லாசமான மணவரைச்சிங்காசன கொலு பீடப் பந்தரில்வைத்து. அடங்கலும் நான்தான் வேறல்ல. என்ற சொல்லுடன் வந்து வீற்றிருந்த மஹாரூபலாவர்ணிய சௌந்தரியவதியான பத்து வயது முகவரை கீறுகுமரிப் பெண்மணியான வாலைமகுஹூ புரஞ் சிதகின்ன் ரஸ்தீரீயை சோபன மணஞ்செய்து. இரவு பகலில்லாத ஒரு புதுமையான வெளிச்சத்தினிடையில் இருவரும் ஆலிங்கன அநுராகபோகதாபனஞ்செய்யலாம். எ-று.

வள்ளல் சிறந்திடும் தௌஹீதது,வாழுங் கமலத்தில் நடுவதற்குள்-உள்ளமையான கலிமாவிலே,புவந்து தொழுதுதான் ஸுஜூது செய்யப்-பொள்ளல் வாராமற் காப்பாற்றுநீ, புகழ்ந்தே யடியே

றுவந்துகேட்பேன்-எள்ளளவேனும் கருத்தில் வைத்தே, யிரங்கு நீனோர்க் குதவியாக. (12)

(ஞா-பொ-ரை):— வள்ளலாகிய நமதுரட்சகா அவர்கள் சிறந்தருளிய தவ்ஹீதாகிறது. இருதயமுதலிய கமலங்களில்வைத்து, உள்ளமையான கலிமாஆகிய உறுதியினைவை மேற்படி கமலப் பையில்வைத்து முடிந்து. சஜுதுசெய்து அந்த இருப்பிலே இருந்து. கொண்டு. அல்லாவின்திவ்ய ஹலரத்தைநோக்கி, யா அல்லாஃ இந்தநவத்தில் யாதொருசூனியமும் வந்துவிடாமல் சதாவும் நீகாப்பாற்றியருள். உன்னைவழிபடுகின்ற நீனைவர்களுக்கு. இரக்கம்வைத்தருள். உதவிசெய்தருள் வாயாக. எ-று.

உதவி யானவா வுறுதிகொண்டே, யுலகமெவையையும் படைத்தான்பவர்-பதவியாகிய நன்மை தீமை,பகிர்ந்தேயவரவர்க் கீபவனே-சிதைவு வாராமலுனை யெரட்டியென்.சிந்தை கலங்கியே கேட்டது ஆப்-புதைவு வாராமற் பூரணமாய்ப்,புகழ்தாயாற்ப்பல் ஆலமீனே, (13)

(ஞா-பொ-ரை):—சமஸ்த சிருஷ்டிகளுக்கும் உதவிசெய்யப் பட்டவனே!—சராசரங்களை நிர்மித்து அவைகளுக்கு இரணம ரணதிகளைவிதிக்கின்றவனே! நன்மை தீமைகளைப்பகுந்து பார்த்துத் தராதரம்போல் வைத்து விட்டவனே! உன்ரஹஸியத்தை யறிந்து உன் என் சிந்தையின் கமலபூரணத்தின் நடுவே கான்கிற தற்கு வந்திருக்கின்ற இந்த அடியனுக்கு என் பிரார்த்தனைப்பிர காரம் கபூல் செய்தருள். றப்பு என்ற. வல்லபத்திற்கு உரிய றகுமானியே. என்றும். இன்னும். ஞா-று.

கிருபை வைக்கின்ற அடியார்கட்குக், கிருபை மிகச் செய்யும் பெரியவனே-பொருதலாகவே புறக்கானிலே,பொருள்சேர் பதக் குறுனி யாயத்திலே-தரும மாகவே கலிமாப்பொருட், டன்னை யருளென்றன் ஸக்குருத்திலே-சிறுமை வாராமல் ஈமானுடன்,சேர வுதவிசெய் யிணையில்லானே. (14)

(ஞா-பொ-ரை):—எவன் ஒருவன் உன்மீது கிருபைவைத்து விட்டானோ அவன் மீது அன்புவைத்து அவனை ஈடேற்றம்பெறச் செய்பவனே! திருக் குர்ஆனில் பதக்குறுனி என்னும் ஆயத்தில்

சொல்லிய பிரகாரம் என்னுடைய சக்ருத்துடைய ஒக்தில் கலிமா வின் பொருளை நல்லருள்புரிந்து ரட்சிக்கவேண்டியது. எ-று.

கவ்வையா யுன்மேலாசைகொண்டு, காரணமான கமலத்தி னுள் செவ்வியிருக்கின்ற திருவடியைச், செப்ப வரிதான மகரா ஜனே, பவ்வக் கடலென்னை மூடாமலே, பகரு மடியனு னிரந்து கேட்கும்-அவ்வல் லாஇலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுர் றசூ லுல்லாஹியே. (15)

(ஞா-பொ-ரை):—ஆண்டவனே யுன்பேரில் ஆசைவைக்கு தலை சதாகாலமும் இந்த சரீரத்திற்கு காரண கருவியாக இருக் கின்ற தாமரைக்காயில் குடிகொண்டிருக்கின்ற, பரம ஒளிவாகிய றாஹை நடத்துகின்ற மஹாவடிவானனே! பாவமென்ற சமுத்திர மானது என்னை வந்து மூடிவிடாமல் அடியேன் கேட்கும்படி நீ உதவிபுரிந்து அருளவேண்டியது, லாஇலாஹ இல்லல்லாஹு என் றதும் கலிமாவில் நிறைந்து முகம்மதுர்றசூலுல்லாஹி, என்று வெளியானவனே.

நல்லோர் புகழ்து ஆக்கையேற்றுநீ, நலமிலார் நாட்ட முடிப்ப வனே-பொல்லாச்செயலுக்கு முதவிசெய்து புகழாற் பெரியோர்க் குங் கிருபைசெய்வாய்- நில்லா மஹ்ஷறில் நிலைநிறுத்தி, நிமைக் கண்டவரவர் பேரிற்சாட்டும்-அல்லா புறுக்கான் அர்றஹ்மானேநீ யார்க்கு மிரங்கி தீதாறருள்வாய். (16).

(ஞா-பொ-ரை):—இன்னும் நல்லவர்களான ஞானவான்க ளின் புகழையும் அவர்களது துஆவையும் கையேற்று, அதன்படி கிருபை செய்கின்றவனே! இன்னும் பொல்லாதவர்களான மௌடீ கர்களின் பாபச்செயலுக்கும் உதவிசெய்கின்றவனே! அப்பால் யுகமுடிவில் அவைகளின் பலர்பலன்படி ஞாயதீர்ப்பும் செய்ப வனே! அர்றகுமான் என்னும் குர்ஆன்வாக்யப்படி யாருக்கும் கிர்பை செய்கின்றவனே. எ-று.

அல்குற் கேணிமே லாசைவைத்தே, யலர்ந்த கலவடை நாயதுபோல்-வெல்லும் புலனைந்தும் வெல்லுமுன்னே, வெறியாய் நாங்கள் செய்பவும் பொறுத்துச்-சொல்லும்கலிமாவா மவ்வலிலே

சொன்னசொல்லெற்கும் ஹபிபுமார்க்கும்-பொல்லாக் குபிர்வந்து மூடாமலே, புகழ்தா யாறப்புல் ஆலமீனே. (17)

(ஞா-பொ-ரை),—ஸ்திரீ ஜனங்களின் அல்குல் என்ற ஆழமான கிணற்றின் பேரில் ஆசைவைத்து! முகர்ந்துகொண்டு திரியும் கடா நாய்போல் நாங்கள் புலன்களில் காமாவிகாரத்தை நாங்கள் வெற்றியடைவ தற்குள்ளாக அந்தப்புலன்கள் எங்களை வெற்றியடைந்து விடாமல் நாங்கள் செய்த பாவங்களை யெக்காலம் பொறுத்து நீ வேதத்தில் சொல்லியபடி கலிமாவின் அவ்வல் எழுத்தை எனக்கும் என்னைத் துயர்ந்தவர்களுக்கும் குபிரியத்து அறவெளியாக்கியருள்வாயாக. எ-று.

பெரியோர் கருணைதான் பிறந்தபிறை; பெருகு மதுபோலே பேரறி வாம்-சிறியோர் சினேகம பூரணமதிதான். தேய்ந்து நூர்வ போலாகிவிடும். சுரிக்குள் ளிருக்கும்பெண் சூம்ட்சங்காணச்சொல் லீற் சுகங்காட்டுங்குரு வொன்றவர். தரிக்கும் ஜம்கிலே காலைக்கட் ருனே காணலாம் கல்புல்லாவை. (18)

(ஞா-பொ-ரை):—பெரியோர்களின் கிருபையானது, பிறையானது நாளாவட்டத்தில் வளர்ந்து வருவதைப்போல சிறிதுசிறிதாக வளர்ந்து கொண்டேவரும். அதாவது, விநோத விநோதமாக அறிவு வுதையம் பண்ணிக்கொண்டேவரும். பூரண சந்திரனிடத்தில் ஸ்நேகம் வைக்கவேண்டியது. சந்திரனுடைய ஒடுக்கத்தில் அது ஒரு வொளிவுபோல் வந்து தன்னைக்காட்டும், இன்னும் சூரியனுகிறது, வலம்புரியாக இருக்கும் அதற்குள்ளிருந்து ஒரு வாலிப வயதுள்ள பெண் சுரூபபம் வெளிதோன்றும் அதுவுடன் ஒரு எழுத்தாகிய ஹீ என்ற சொல்லும் வெளிவந்து சுகங்காட்டும் அதுவே சற்குருவாக இருக்கும் அதனுடைய பாதாரவிந்தமானது. ஹம்ஹில் வந்து தெரிசன வுதயஞ்செய்யும் அப்போது. தான்இன்சான் தன் இருதயவடிவைக்காண்கின்றான். எ-று.

வன்னி மலரிலே யளிமுகந்து, வாகாய்ச் சுழன்றதில்வீழ்வது போற்-கன்னி யோனிமே லாசை வைத்துக்,கலவி செய்துதான் கரைந்துபாவி-யுன்னி யறிவுக்கொண் டுனைத்தேடுநா,ளுஸ்தாதெனக்குவந் துபதேசித்து-முன்னி முதலவன் கற்பனையால், முடுகும் நீடுபலர் கஃபத்துல்லா. (19)

(ஞா-பொ-ரை):— வாசனையுடனே அதிகாலையில்பூத்த புது மலரின் கண்ணே வண்டு பறந்துவந்து விழுந்துஅதன் நறியதேன் துளிகளை கிரஹித்து வெறிகொண்டு உருண்டு கிடக்குந்தன்மை போலே. இந்தப்பூலோகத்தில் மானிடர்கள் அழகியகன்னியர் களின் யோனிக்குழியிலே காமவிகாரமீறிய விரகத்தாலே மன முருகி வாடிபலதுன்பத்திற்கு ஆளாகிறார்கள். அந்தப்பாவிகள் அறிவுடைய துணையாலே மனதில் உன்னிநினைத்து உன். ஜலாலி யத்தளவில் ஆசைவைத்து. ஈடேற்றம் பெறும் பொருட்டு காமிலி யத்தான உஸ்தாது எந்தநாள் உபதேசஞ்செய்வார். அவ்விதம் செய்தவுடன் நடுஸ்தானம் கஃபத்துல்லாவாகஇருக்கும். எ-று.

அண்டர் முனிவரும சதுமறையு,மனேக சாஸ்திர மூயிரனைத தும்-விண்டு தெரியாம லுன்னைத்தேடி,வெறியா லுறலிலோங்கெதி யுங் காணேங்-கொண்டல் குடைமேவும் நபியிறசூல்; குவா மவர் கள்தம் பொருட்டினாலே-துண்டு பிடித்தாமலென்கிளையும்,யானும் நின்ச்சேரத் துணைசெய் யாஹூ. (20)

(ஞா-பொ-ரை):— யாஹூவென்ற திருநாமத்துடையறப்பே உன்வடிவைக்காண்கிறதற்கு இப்பூலோகத்தில் வானவர்களும். மலைகெபிகள் தோறும் வைராக்யத்துடன் இருந்துவாசினிலை களைப் பிடித்து சாதித்தமகாரிஷிகளும் அநேகஒளலியாக்களான பெரி யோர்களும் உன்வடிவைத்தேடி எத்தனையோ வேதசாஸ்திரங் களிலும் நுழைந்துபார்த்தும் அகப்படாமல் தட்டழிந்துபோனார் களே அன்றிஒருகதிமோட்சமும் காண்கவேஇல்லை. எங்கள் நாய கம் றசூலுல்லா அவர்கள்உலகத்தில் அவதரித்த காலந்தொடுத்து. மெய்ஞ்ஞான சூரியன் உதயமானார்கள். எ-று.

அன்பு வைத்துன்மே லாசைகொண்டே,யடிமைத்தனஞ்செய் தேயருகிருந்து-துன்பந்தோன்றுமற்குணக்கந்தீர்த்தாற், றுலங்கும் ஞானக்ககண் கருணைகொண்டே-யின்பம்வைக்கவே யருள்பெருகு, மிளம்பிறை நாளும் பெருகுமாம்போல்-முன்பி லுபதேச மீந்த ஷெய்கை, முடிகப் பேரின்ப வெள்ளமாமே. (21)

(ஞா-பொ-ரை):— ஆண்டவனே! நான் உன்திருவருள்மீது அன்பைச் செலுத்தி உன் ஏவல்கட்டளைகளை எடுத்து நடந்து உன்

அருகில் லயீபிக்க இடம்பாடுபடைத்து இந்த மாயவுலகத்தின் துன்பங்கள் யாதொன்றும் மனசில் வந்து தோன்ற இடங்கொடுக்காமல் வாசல்களையடைத்து நப்ஸுகளுடைய குணக் கேடுகளையும் தீர்த்துக்கொண்டு விட்டால் அக்ஷணமே ஞானமென்ற திருக்கண்ணானது திறந்து உன் மகிமை என்கிற திவ்யகாட்சிகள் பளீரென்று தோன்றிவிடும் அத்துடன் கட்டையும் வளர்பிறைபோல் மினுமினுப்புக் கொண்டு கடைத்தேறும் இன்னும் ஆதியில் வந்து உபதேசஞ்செய்து வழிகாட்டி சற்குருவை அடுத்துக்கொண்டால் எங்குபார்த்தாலும் ஒரே பேரின்ப வெள்ளமாகத்தான் கண்ணானது காண்கும். எ-று.

உதிரமெலும்புதோல்தசைநரம்பு, முதிக்கும்ரோமமு மபயங்களு-மதர மூளதகத்துப் கிபாத்துமாக; வைத்த தத்துவந் தொண்ணூற்றாறும்-சரீரத் தனில்வைத்தே யெனையமைத்தே, தரணிதனில் விட்ட தம்பிரானே-முதிரும் நபியுல்லா ஷபாஅத்திலே, மூடுகளென்து ஆகபூல்யாக்கரீப். (22)

(ஞா-பொ-பொ):—ஹே! எவர்களுக்கும் பொதுவாக் கரீம் என்ற சிபத்தில் அமைந்து வெளியான ஆண்டவனே! இன்னும் அந்த ஆசையின் துறையில் தரிப்பட்டவர்களுக்கு. உதிரம் நரம்பு. தோல், என்பு. சதை, உரோமம், அவயவங்கள் முதலிய தாதுசிபத்து வகையராக்களான தொண்ணூற்றியாறு தத்துவங்களையும் சரீர தோரணையில் வைத்து அமைத்து உண்டாக்கிய குணகுணங்களும் சரீரத்தில் அடக்கிவைத்து என்னை உலகத்தின் கண்ணே விட்டநாயனே. அவர்களுக்கு உன் ஹபீபாகிய எங்கள் நரியகமவர்களின் திருஷபா அத்து உதவியும் நீ கட்டளை யருள்வாயாக. எ-று.

ஆவின் பால்வருந் தீன்தின்றபின், அன்பா லாசரித் துபசரித்தாற்-கேரவுங் குறுவானகடாட்சமதுங், குணங்காதிருக்கவேகுண்டதுகாண்-நாவு மேல்மூலத் தூடுருவி, நாலா றுதலங்கடந்தப்பாற்போய்-மேவும் அறுஷிலே யாதிநாயன், விளம்புமமிர்தத்தையருள்யாறஹும், (23)

(ஞா-பொ-ரை):— சந்திரகலையில் இன்ஸான் காமிலியத்தான வுடன் அந்தசந்திரனே. ஒருகாமதேனுவு ஆகவந்து பாலாமிர்த மூட்டும் அந்த அமிர்தபானத்தை யருந்தியபின்னல் இவ்வளவு வென்றுமட்டிடமுடியாத உபசாரங்கள் நடைபெற்றவுடன் சற்குரு உத்யபீடம் வெளியாகும் அப்பால்குண்டலியான றாஹூல்குது ஸியின் சிங்காசனமேலைவந்து இருபத்துநான்கு வீதிகள்பொரு ந்திய அறுஷேமுஅல்லா இல்ஹாமாகும் அதிலே சர்வதத்துவகட வுளான. நகுமானியானது கொஞ்சிக்குலாவிவந்து ரகசிகபராசிய ஸம்பாஷணைகளுடன் அநந்தம் தத்துவமும்-அருள்புரியும். அது வேறஹீம் என்பதாக இருக்கும். எ-று.

தோகை மயில்வெளி யாடும்போது, தூவுங்கருவிந்தைமுழுங் குமது-மோகமுடனந்தி சமுக்ங்காத்து முந்தி லவர்தருமமுதமுண் டு-போகஞ் செலுத்தாமற் றிருஒளிவு, பூத்துக் காய்த்துச் செங் கனி பழுத்தே-யேகமைதானி லிலங்குங்கனி, யெனக்கு முதனி செய்யா அல்லாஹூ. (24)

(ஞா-பொ-ரை):—ஆண் மயிலானது தனது தோகைகளை விரித்து ஆடும்போது, அதன் சுந்தர வஜீகரங்களை கண்ட பெண் மயிலானது அருகில் வந்து மையலுற ஆண்மயில் ஸ்கலிதமாக்கின விந்தைப்பெண்மயிலானது வாயால் எடுத்துண்டு கருக்கொள்வது போல நந்தியாகிய காமிலான பீருடைய தலைவாசலில் காத்துக் கிடந்து அவர் உகப்புடன் தருகின்ற பியாலாவை அருந்தி சர்வ போகாதாபத்திய முடனே சிற்றின்பத்துறையை நீக்கி திருவ ருட் பிரகாசமென்னும் றாஹல் குதுஸியின் திருஒளிவைக்கலந்து உறவாடி சச்சிதாநந்த மென்னும் ஏகபர வெளியில் தோற்றரவா கிய சுவர்க்க மைதானத்தில் ஓங்கிநிற்கின்றமஉஷ-ஒக்கென்கின்ற விருட்சமானது பூத்துக்காய்த்து பழுத்து ஒழுகுகின்றதேனமிர்த சஞ்சபீலை எனக்கு ஊட்டி ரட்சித்தருள்வாய் நகுமானே. எ-று.

தில்லை வனமாளும் புரவிமீதிற், றிருமன் ராவுத்தன் மெதுவி லேறிச்-சொல்லுங் கலிமாவாங் கலினம்பூட்டித், துலங்கும்பாதையி லுறநடத்திப்-பொல்லாக் காபிறைக் கருவறுத்துப், புந்தி யொரு

மித்து ஈமான்கொண்டே-அல்லும்பகலற்ற மைதானிலே,யடியேன் றனைச்சேர அல்ஹம்துலில்லா. (25)

(ஞா-பொ-ரை):—தில்லைவனம் என்கின்ற இந்த ஸ்தூலசரீரத்தின் கண்ணே! ஆட்சிசெய்கின்ற புரவியின்மேலே. திருமன் ராவுத்தன் என்கின்ற நினைவானது, மெள்ளப்பதனமாக ஏறிக்கொண்டு ஒருசொல்லாகிற,ஹூ ஹூ என்கின்ற கலிமாவின் நிலையால் கடிவாளம் பூட்டி, ஒளிவு விளங்கும் புருவமத்தியின்ரஸ்தாவைநோக்கி அதை நடத்தி பொல்லாத காபிரான இருவினைப் பிணக்குகளையெல்லாம் ஓட்டியடித்து, ஒரு மையாகிய இஸ்லாமை மனதில் வைராக்யமாகப்பிடித்து, இரவு பகலில்லாத மைதானமாகிய அக்மல் ஷா ஹூதில் இந்த அடியான் நின்று சாதிக்கும்படியாக நாயனே நீ கிருபை புரிவாயாக. எ-று.

பிறந்த பிறைத்தாயை மறக்காமலே, பெருகும் நாள்தோறும் பதினாலிலே-நிறைந்த மகிழ்ச்சியில் மறந்தசோம, னிர்ணயங்கெட்டுத்தேய்ந்து போகும்-துறந்த நந்தியை வெறுத்தசீஷன், துன்பந்தொடர்ந்துதான் குன்றிப்போவான்-சிறந்த குருவிட மென்னைச் சேர்த்துச், சித்த மருளாம லருளல்லாஹூ. (26)

(ஞா-பொ-ரை):—எவனொருவன் தன் அருமையான சற்குருவை மறந்து விடுவானோ அந்தசீஷன் நாளாவட்டத்தில் நொந்த குடியாகி வாடிப்போவான், எதுபோல யானால் பூரணம் நிறைந்த சந்திரனானது தான் இளம்பிறை ஒளிவில்வைத்த ஆசையை வர வர மறந்த தோற்றத்தாலே வர வர ஒளிகுறைந்து அமாவாசியில் அற்றுப்போகுவது போல ஆகையால் நாயனே. என் சற்குருவின் பேரில் என் ஆசையை மிகுதமாக்கிவைத்து ஈடேற்றம் புரிவாயாக. எ-று.

உன்னுள் நின்றதைநா னெட்டிப்பார்த்த, துறுதி யென்னுள் நீ யெட்டிப்பார்த்து-முன்னோன் முஹம்மதைத் தான்கண்டது, மூத்துள் வித்து, மூடித்திறந்த-தன்னுட் பிரான்தாயை முடித்ததுவும், தாய்வீட்டு மச்சா னொளித்ததுவும், பொன்னடி நந்தி பொருட்காட்டினார், பூவா யிரத்தெட்டுப் பூவிதளில். (27)

(ஞா-பொ-ரை):— முத்தில் ஒளிவாய் இருந்த நூறு. ஆலத்தார்களுக்கு மாதாவாக இருக்கின்றது. அந்தவித்திலிருந்து ஆதம்

வெளிவந்தது. அந்தசிபத்தில் நான்தரிபட்டு உன்னுள்ளேநான் எட்டிப்பார்த்தேன் அப்போதுநீஎன்னுள்ளேஎப்படிப்பார்த்தாய். தாயைமணந்த கோலத்தில் நீமச்சான்முறையில் வெளிவந்தாய் இந்தஅர்த்தம சொல்லப்பட்ட சற்குருவைத்தான் குருவேன்று. ஒப்புக்கொள்ளவேண்டும் இவ்வளவும் ஆயிரத்தெட்டிதழ்தாமரை யில் ஆகவேண்டும். எ-று.

## வேதவுதிப்புப் படலம்.

பூரண மாயிற்று.

ஆ படலம் 15க்கு திருப்பாடல் 336.

---

# பூரணப்படலம்.

## தொங்கல்-வாகுட ராகம்,

பூரணத்தி னடியங்கே முடிதானெங்கே, பூண்டுநின்ற நடுவெங்கே முப்பாழெங்கே-காரணத்தி னலமெங்கே வட்டஞ்சேர்ந்து, கருத்தைந்துமொன்ருன தலந்தானெங்கே-வாரணத்தி லேறுதற்கு வசைந்ததெங்கே, வன்னிமலர் தனில்வண்டு முகந்ததெங்கே-தாரணியி லிதையறிந்தில் லாதபேர்கள், தாயிலாப் பிள்ளைகள் போற் றயங்குவாரே. (1)

(ஞா-பொ-ரை):— ஓ! ஞானமென்ற வல்லமைப் பொருளை யறியவந்தமாநுடர்களே! ஞாஹால்குதுவலியின் பூரணம்பொருந் திய ஒளிவானது. ஜடலத்தில் அடிப்படைகொண்டிருக்கின்ற ஸ்தலாமானது. எது? இன்னும்அதுமுடிவு பெற்றிருக்கின்ற. மகாமானதுஎது? இன்னும் அதுநடுஸ்தானத்தின் நடனஞ்செய்துகொண்டிருக்கின்ற மகாம்எது? கடைசியாகஅந்தமூன்றும் பாழடைந்து பஞவாய்ப்போகும் ஸ்தலமானது. எது? அப்பால்அதுஒருகாரணத்தால்சரீரத்தைநடத்துகின்றது. அதுஎது? இன்னும்அஞுசிறுகள் ஐந்துங்கூடிஒருவட்டவளையமான கோட்டையில் வாழ்கின்றது. அதுஎது? இன்னும்வாசியில் ஏருகிறதற்கு வசதியான ஸ்தலமானது. எது? வன்னியாகிய அக்னிஅல்லது சூரியகலைஎன்கின்ற மலரில் நினைவுஎன்றவண்டானது முகந்துகொள்ளுவது. எந்தஸ்த

லம்? இந்தமஹாப்பெரிய பூமண்டலத்தின்கண்ணே இவைகளை உணர்ந்து கொள்ளாத மாந்தர்களெல்லாம் தாயை இழந்துவிட்ட குழந்தைகள்போல அறிவை யிழந்து தட்டழிந்து திரிவார்கள். எ-று.

தய்ங்காம லென்மகனே சொல்கிறேன்கேள், தானென்ஹ வெழுத்தைக் கருணைகொண்டு-மய்ங்காமல் மனந்தனிலே வைத்துச் சேர்த்து, வாசியென்ற புரவிகடிவாளம்பூட்டிக்-கறங்காம லதிலேறிக் கமலத்துள்ளே, காரணத்திற் கண்டபூரணமாதானாற்-பயமேது மில்லையப்பா காலன்வந்தாற், பீயப்படுவா னம்முயிரைப் பிடிக்க மாட்டான், (2)

(ஞா-பொ-ரை):—யாரப்பா, ஞானத்தை ஆராய்ச்சி செய்யவந்தமகனே! இதோ உனக்கு வேண்டிய தவத்தை விரையறுத்துச் சொல்லிவிடுகிறேன் பத்திரப்படுத்திக் காரியஞ் செய்துகொள்வாயாக. தான்என்ற ஹ எழுத்தை உன்மனவில் வைத்துப்பொதிந்துப் வாசிஎன்றஸ்வாசக் குதிரையை பழக்கிப்பிடித்து அதன் வாயில் கடிவாளத்தைப் பூட்டிஉன் ஈமான் உறுதி யென்ற ஏற்றத்துடன் அதன்மேல் சவார் செய்து இருதயக் கமலத்தில் நடத்தி அதற்குள்ளாலே நீயும் உன் நினைவும்தரிசனைசெய்து பூரணம்பெற்றுக்கொண்டபோது, இனி ஒருபோதும் அச்சமென்பதுகிடையாதப்பா. காலனாகிய மலக்கல்மவுத்து வந்தாலும் பணிந்து போவாரே, அன்றி உன் உயிரைப்பிடிக்க அவர்க்கு நியாயவழியே கிடையாது. எ-று.

மாட்டான்காணாரணத்திலல்லாசொன்னான், மனமல்லாலொன்றுமில்லைத் தனக்குள்நின்ற-காட்டாத காரணத்தி னுடம்புபூத்துக், கனன்மூட்டிப் பாதாள முருவியெங்கும்-பூட்டாத நினைவுபூரணமதானாற், பூவுலகம்வானுலக முயிர்கள்யாவு-மாட்டுமப்பா செக்கூவட்ட முதற்குள் நெய்போ, லாயிரத்தெட் டிதழ்பூவி லடங்கும் ஹக்கில், (3)

(ஞா-பொ-ரை):—இந்த சங்கதியைப்பற்றி நீ யாதொரு சந்தேஹமுங்கொள்ளவேண்டாம் வேதத்தில் ஆண்டவனே. திருஷ்டாந்தமாகக்கூறியிருக்கின்றான். ஆனதாலே காரியமானது. உன் மனமே என்கிற நினைவே யல்லாமல் வேறு வஸ்து ஒன்றும் இல்லை,

அந்த நினைவே இந்த ஜடலத்திற்கு அடிமூலமாக. சூத்திரக்கயிறு கட்டி ஒரு கருப்பு லட்டத்தில் நின்று பூத்து ஜொலிக்கின்றதைப் பார் அதை நீ ஒன்றுபடுத்தி ஷமதியத்தாலுவுடன் பதினாலு உலகங்களும் செக்குக்குள் கொட்டிய பல கோடிக்கணக்கான எள்ளுகளின் நின்றும் ஒரே வஸ்துவாகிய எண்ணெ வருவது போலவே உன்னில் எல்லா மக்லூக்காத்துகளும் சமத்துவங்கொண்டு ஒன்றாய் விடும், அப்போது சரீரத்தில் ஆயிரத்தெட்டி தழ் கமலதாமரையான்து வெளிப்பட்டு அதில் பாதாளம் வரையும் ஊடுருவி நிற்கின்ற ஹக்கு உதயமாவதை நீ கண்டு அதி ஜயிப்பாய். எ-று

ஹூவ்வதனிற்பார்க்கச்சொன்ன குருவையையா, குண்டலிக்குட் போகநினை வதிற்புக்காமற்-சப்பானபாதையிற் சத்துருக்களாலே, தாயைவிட்ட கன்றாய்த்தட் டழிந்தேனப்பா-பவ்வபலகையையறுக்க வகைதான்சொல்லும், பதமாக என்மகனே வாசி வளும்பூவில்-மூவ்வர்க்கால் ரண்டுமொருநினைவிற்கட்டி முத்திதருங் கலிமாவி லீமான் கொள்ளே (4)

(ஞா-பொ·ரை)—ஹூ என்ற திக்றில் உன்னைக் காணும்படிகுருசொன்னபடி குண்டலியாகிய நேத்திரஒளியில் நினைவை தியானகோலமாகப் பொருத்தி, விடாமல் நப்ஸ்ஏவின மார்க்கங்களெல்லாம் போய்தாயைஇழந்த குழந்தையானது தவிப்பது போலதட்டழிந்தேன். அப்படிஇருக்குங்காலத்தில் தகுதியான சற்குருவானவர் அகப்பட்டு அவர்என்னைசீர்திருத்திவாசியை ஷிவன்னமலரான தியானத்தோடும் நினைவைக்கூட்டி சந்திரசூரிய இரண்டுகலைகளையும் ஒரேகலையாக வாசியில்சேர்த்து மோட்சகதி தரா நின்ற கலிமா ஆகிய வைராக்யத்தில் ஈமானைப்பிணைத்தார் ஆனதினாலே நீயும் அப்படித்தான் செய்துகொளவாயாக. எ-று.

கொள்ளடா அறிந்தீமான் கலிமாவிற்றான், கோமான்தான் படைத்தவுயிரெல்லாந்தூங்கும்-விள்ளடா அதுவேளை தானுயிருந்து வேதகலி மாவுரைக்கு மொலியைக்கேட்டு-நள்ளடா கல்புதனில் நானென்ற-சத்தம் நாதம்வருகாரணத்தி னீமான்கொண்டே,யுள்ளடாஎங்கும்பூரணமதான-வுண்மைமுஹம்மதுபாலுத்தாரங்கேளே.

(ஞா-பொ-ரை):—அடேமகனே! நீ ஈமான்கொண்டவுடனே அந்தக்கலிமாவில் ஜெபபண்ணுகின்ற மாதிரி யெப்படியானல் அந்த சமயம் ஆண்டவானல் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்த்துகள் யாவும் சித்திரையில் இருக்கும் அந்த தருணம் நீ தனித்திருந்து உன் வலம் புரிச்சங்காகிய கலிமாவின் திக்றை அந்த வலம் புரி முழக்கம் பண்ணுகின்ற வகையான தொனியைக் கேட்டு ஆநந்தங் கொள்ளுவயாக அந்த தொனிக்குப் பரமாக கல்பானது. நான் அது என்ற திக்றை முழக்கஞ் செய்ய ஆரம்பிக்கும் அதை நீகேட்டவுடனே மறுபடியும் உன்ஈமானை அதில் சேர்த்துக் கலிமாவைச் சொல்லவேண்டியது அப்படி சொல்லி ஈமான் கொண்டவுடனே. எங்கெங்கு பார்த்தாலும் பரிபூரண கோலத்தில் படர்ந்து பூத்திருக்கின்ற, சர்வமுகம்மதியா என்றது உன்னிலெ நிலையாகும் அப்போது நீ அதனிடம வேண்டிய ரகசியங்களைப்பற்றி உத்திரவு கேள் அது உனக்கு அறிவிக்கும். ஈ-மு.

உத்தாரீந்தருநபியுல் லாவுவந்தே, யுமிழ்நீர்வாய்க்குள்ளளித்த வுபதேசந்தான்-பெற்ருல்நீ செய்பவங்க ளெல்லாம்போக்கும்,பேதமில்லை யொருவருக்கும் பேசிடாதே-சித்தானதெல் லாமுனக்கு வருகுமப்பா, சிந்தைதனில் மாசுமறெல் லாமொதுங்குங்-கத்தாவினருள்கடாட்ச முணக்குண்டாகுங்,காரணமதானவுபதேசமிதே.()

(ஞா-பொ-ரை):—முகம்மதியாவை நீ சரியானபடி கண்டு உத்திரவு கேட்டபோது நாயகமவர்கள் தங்கள் திருவால் அமிர்த உமிழ்நீர் அருள் தந்து உன்னை ஆதரிக்கும் அப்போது நீ செய்த கருமவினைகளெல்லாம் உன்னைவிட்டு விரண்டோடும் இதில்ஐமில்லை. இந்த உபதேச ரகசியத்தைப்பற்றி நீ ஒருவனுக்கும் அறிவித்து விடாதே. மஹாதோஷம். ஆனல் (கிர்க்கா) என்னும் தத்வம்பெற்றவனுக இருந்தால் அறிவிப்பதில் தோஷம் சேராது. ஷெ உமிழ்நீர்உபதேசாஸ்வதம்பெற்ற வனுக்கு ரசவாதமுதலான அட்டமாசித்துகள் யாவற்றும் அவனிடம்தானே பொலிந்துவிளங்கும். இன்னும்அவன்இருதயத்தில் நின்றுபரவக்கூடிய துர்விநியோக பூஷணங்கள்யாவும் அகலவோடும். தெரிய தூரத்திய இர்லாயசங்கதிகளும், கர்த்தாவாகிய அல்லாவின் சிபத்தில்அந்தரங்கங் கொண்டகமாலியத்தான விஷயங்களும அந்தமுகம்மதியாவானது தெரி

யப்படுத்தும். இன்னும்பூலோக வான்லோகங்களைப்பற்றிய அநேக செல்வாக்குகளும் வந்துபாதத்தில் காத்துக்கிடக்கும். இதுவே ஞானத்தில் கண்டசித்தீர்மானமான உபதேசமாகஇருக்கும். எ-று.

உபதேசந் தந்தீர்க ளெங்களுக்கிங், குன்மையுள்ளபிரேயான் செய்யுகின்ற, அபத்தங்களெல்லாம்போகுமருட் கடைகண்டிறந் தாலந்தோ,கவனத்திலிருண்-கங்குல்டல்குதனில்விடியச்சொல்லும் தவஞ்செய்து பிறந்த ஷெய்கை சகலசற் குருவாய்க்கானே. (7)

(ஞா-பொ-ரை):— யாரப்பாசாதுநிலையில் பூரணிக்கும்புண்ய வானே! அப்போது அந்த உண்மை யானபீராகிய காமிலையடுத்து உன்மன ஐக்கியங்களை யெல்லாம் நீ அப்போ தைக்கப்போது. பேசிமுடிவுசெய்து கொண்டு அதனிடம் உன் அபத்தவர்த்தமான ங்களை வேரறுத்துக் கொள். அதிலிருந்து உன்பேரில் மூடப்பட்டி ருந்த இருளானதுபோய் ஒளிதெரிதல் என்னும்சூரியன் வெளிப் பட்டுபொழுதுவிடிந்துபிரகாசிக்கும். ஆனபோது இவ்வளவுக்குங் காரணகருவியாக இருந்தகாமிலான ஷெய்கை நீசகலத்திற்கும் உயர்வான வஸ்தாகக்கண்டு கொள்ளவேண்டியது. எ-று.

காண்பாயே யென்மகனே கல்புல்லா தன்னைநோக்கி
ஊண்டுதலாய்நினைவுவைத்தேயொருமலர்தன்னில்வாசி
பேனியேரண்டுமொன்றுப் பிரியமா யுருக்கங் கொண்டாற்
றேனுமே நபியுல்லாவைச் சோபனமாகக் காண்பாய். (8)

(ஞா-பொ-ரை):—அடமேலான என்மகனே! தவத்தில் மற் றொரு முறையிருக்கின்றது-அதாவது. நீஇருதய மென்றதை கார ணவஸ்துவாக. நிதானப்படுத்தியவுடன். உன்நினைவை வாசியுடன் புணர்த்தி. இரண்டுவிதமான வாசிசரங்களையும் ஒரேசரமாகமாற் றிப்பிடித்துக்கொண்டுஇஷ்க்கில் மூங்கிவிடுவாயாகில் உடனேமுகம் மதியா புனீரென்று தோற்றரவாகிவரும். திட மாகநீயதைக்கண்டு ஆச்சரியப்படுவாய். எ-று.

வேறு.

வாசியென்றகுதிரையின்பனிரெண்டுகால்,வசமாகநடுக்காலைத் தழைந்துக்கட்டி-மூசிநின்ற புரவியுதைமுனையடக்கி, மூற்றிலாமலி புகடி வாள்ப்பூட்டி-மாசியற்றமுதுகத்தின்மே லேறிக்கொண்டால்

மகத்தானமுஹம்மதுர் றசூல்முன்னேகும்-ஆசைமிகப் பெருகுமவ ரழகைக்கண்டா, லதற்குமேடு லுபதேசமில்லையப்பா. (9)

(ஞா-பொ-ரை):— ஜடலத்தில் ஸ்தம்பித்து ஒடிவருகின்ற சுவாசக்குதிரைக்குப் பன்னிரண்டு கால்கள் இருக்கின்றன. அதில் நடுக்காலாகிய இல்லல்லாஹு என்றதை அதில்உரிமையான சம்ப ந்தப்படுத்தி. உடனேபார்வையை சுழிமுனையில் சாத்திஅடக்கம் பண்ணிக்கொண்டு. அலிபு. என்னும் ஒரேநிலையான கடிவாளத்தை அந்தைக்குதிரைக்குப் போட்டு.நடுவாகிய ஹூவைப்பிடித்து ஏறி நடத்தினல் அது தானுகவே. மகத்வம் பொருந்தியநமது றசூல் நாயகத்தின் சமுகம். அதாவது. மக்காமன் மகுமூறுஸ்தலத்திற்கு நேரே செல்லும். அந்த முகம்மதியாவின் சொரூபசவுந்திரீக இல ட்சணங்களை நீ கண்டமாத்திரத்தில் உனக்கு அடங்காத மோக வெள்ளம் கரை பெருகித்ததும்பும் அதுவே ஒன்றுபடுவதற்கு க்காரணமாக முடிந்துபோகும் இதற்குமேல் உபதேசமென்ன தான் இருக்கின்றது. இல்லையப்பா இல்லை. எ-று.

வேறு

ஒயாத இசுலாம் வாசி யுயர்மதி தனக்குள் நின்றே
தேயாத ஈமான்கொண்டு சிந்தையிற் கலக்கமற்றுற்
பாயாமற் கொம்புரண்டும் பரிவுடனிணக்கமாகு
லாயானு மவனேயாகு மல்லாவு மவனுமென்றான். (10)

(ஞா-பொ-ரை):—மனம் இஸ்லாமாகி வாசியை ஒயாதபடி தியானநிலையில் நடத்தப்பழகி சந்திரவட்டத்திற்குள். ஹேராவுறிக் கச் செய்துகொண்டால் அப்போது ஈமான் உறுதியான. அஸ்தி வாரமாயிற்று. அதிலிருந்து கலவரமானபயம் ஒழிந்துபோயிற்று. சரங்களும் இரண்டுபடாமல் ஒன்றுசேர்ந்துகொள்ளும், அப்படியா யிற்றுனுக்கல்கு என்ற பேரெடுத்துத்திரிந்தவனே அல்லா என்னும் காலிக்கென்ற நாமத்தையெடுத்துத்தத் துவ ஸாலியானுன், எ-று.

முன்னே தந்தைதன் விந்துமதங்கொண்டு, முடுகு மன்னை யுதரத்திலே-பின்னே ரண்டைந்து திங்கள், பிரசமுடன் முன்னுங் காத்தவா-யென்னையுன் னுபதேசந் தந்துகண்,திறக்க விட்டாய்

பூவுலகிற்-றன்னை தான் சுஜுதெறிந் தனைத்துந்-தந்தநவி ஹத்தஃது தன்னைத்தான். (11)

(ஞா-பொ-ரை):—ஆதியில் தகப்பனுடைய இந்திரியமான சுக்கிலம் மதாமஸ்துக் கொண்டெழுந்த மோகமே உஷ்ணமாக ஒடிவந்து மாதாவின் இரத்தபீடத்தில் தங்கி பத்துமாத காலமாக விளைந்துவரும்போதே நுழைந்து அதையறிந்தான் உபதேச குருமார்களைத்தேடி யலைய இன்ஸான் என்பவனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று,குருவென்சொன்ன அந்த வஸ்தும் அதுதான் மூடு மந்திரமாக இருந்து உல்மெல்லாம் தலைமயங்கச்செய்து நிற்கின்ற பூர்வீக வஸ்தும்தாம் என்றதுதான். எ-று.

வேறு.

பூதலங்களும் சுவனம் நரகமும் புழுகு மமர ரரம்பையும்
நாதனும்மறுஷோடுகுறு சும்மலைகடநதியும்ராட்சதர்ஜின்களும்
ஓதுமனு மிருகங்களும்பறவை மூநுமிபிருடல் யாவுமே
வேதமறு சமயங்கள் கருணையும்மேவும் புகழுறும் யாறஹீம.

(ஞா-பொ-ரை):—ஆனதினலே இந்த மண் உலகங்களும், சுவர்க்கலோகங்களும் கும்பியாகிய நரகக் குழிகளும், வானவர் குழங்களும், சூராமகளிர்களான ஹூறுல் ஈன்களும் இன்னும் சூரிய சந்திரர்களும் அறுஷு குருஸ் ஸ்தலங்களும் சப்தசாஹரங் களும்இன்னும் பிரஹஸ்பதிகளான. ராக்ஷஸர் கூட்டங்களையும் அரக்கரானஜின்களையும், மாநுடவர்க்கங்களையும் மிருக ஜாதி பறவைகளையும்இன்னும் வேத பாராயணங்களிற் சொல்லப்பட்டுள்ள அநேக ரகசிய நூதனஜனனங்களையும் உற்பத்திசெய்து பராமரிக்கின்ற கிருபையாளனே, எ-று,

சிந்தைவைத்து மனமுவந்தே யைந்துபஞ்சபூதமுஞ்,சிகரமைந்துபெரிருள்களைந்து புவனங்கடந்துபோய்ச்-சொங்வைங்தெழுத்து முருவிச்சிங்குவங்கு மேலதாய்த்-தோரணங்கடந்துபந்தினைை யிற்கடந்துபோய்க்கந்தவாரியேழுந்தாண்டிக்ககனமண்டபத்துவே காரணங் கடந்திருளகண்டமாம்வெளியிலே,மாதுவானவல்லிமீதில் வந்துவிந்து பாய்ந்ததே. (13)

(ஞா-பொ-ரை):—இருதயத்தில் தூண்டிக்கொண்டிருக்கின்ற ஆசையானது ஐந்து பூதநப்சுகளிடத்தும் கொழுவிழுளை மண்டலத்தின் கபால தோரணைகள் ஐந்திலும் வந்து வந்தி ஊசாட்டஞ் செய்து. அப்பால் கீழ் உலகமாகிய பிண்டத்தில் உச்சி, முண்டகம் தாமரை, பித்து, மூலாதாரம். என்ற ஐந்து வாசல்களிலும் வந்து மேவி. சிங்கு. வங்கு. என்ற இடவலம், வாசிகளுடன் பின்னப் பட்டு ஏழு நப்சுகளுடன் சிநேக ஸம்பந்தமாய் நேத்ர சிங்காசன மேடையின் மேல் அகண்டவெளியாய்த் தோற்ற நின்ற நீலவட்டத்தில் வந்து தஜல்லியில் விரக்கலந்து அப்பால் மீதாவின் அந்த ரங்கவாசலிற்குள்ளே ஓடிப்பாய்ந்தது. எ-று.

வேறு.

விந்தானது வுந்தே விளைந்தன்னை புதரத்தினிற்
பந்தாடுதல் போலேமலர் தன்னிற் பரிந்தங்கே
முந்தானமதாக முஹம்மதுதந்துபதேசம்
சந்தாபத் மந்திபகலற்றநலங்காணும் (14)

(ஞா-பொ-ரை):—அந்த விந்து நாதமானதுஷ அன்னையின் உதிரத்தில்வந்துரப்பர்பந்தானது குதிக்குந் தன்மைபோல நின்று மலராணகற்பத்தில் ஒரு வித அமைதியுடன் தங்கி தரித்து. முகம்மதியாவின் உபதேசமாகிய கலிமாவின் உயிராகிய ஹாவில் ஒடுங்கி இரவு பகலற்ற ஸ்தலத்தில் அதாவது புருவமத்தியில் ஆசனங் கொண்டு அமர்ந்தது எ-று.

வேறு.

கூறுந்திகிர்ஜல்லியாலொருகுறியாமொருஹறுபைத்
தேறுந் தினம் நீவ்விநாவினிற் றெளிவா மதையுண்டா
லூறுங் கருவுருவாம் நபுசொளிவா மெனவந்தார்
வீறும்மரைபுறுக்கானதில்வேதாம்பர்சொல்விதித்தார் (15)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் தரித்தநாத மேதஜல்லியத்தாக இருக்கும், அதனுடைய திக்றுதான் ஹாவாகஇருக்கும்அதுதான் இன்ஸானின் நாவினில் நின்றும் வேதமாகிய சொல்லுச்சரிப்பை வெளிபடுத்திற்று. அதைத்தான் தவசிகள் ஒருதேமாங்கனியாக எடுத்துண்டு சதாஇன்பத்தை அடையவேண்டும். அப்போது. மற்றவேற்றுமையான நப்சுகளெல்லாம்ஒன்றன்பின் ஒன்றாய்ப்பணு

வாகி. நப்சு றகுமானியாவின் விடாகிய. நப்ஸ்முத்ம இன்னுவில் தரிபட்டு இந்த இன்ஸான் உருவானது மாறிகருவாகிய. றப்பானி யின் அசல்உரிவாகிய நினைவின் பூரணத்தில் ஒன்றுபட்டு உலக கோடிகளும் இவன்சொரூபத்திலேயே வந்து நிரவிகொண்டிலங் கும் என்றுகுறுஆனில் சொல்லியதைத் தெரித்துப் பகுத்து. நம தாண்டவர்கள் திருவுளம் பற்றினர்கள். எ-று.

பூரணப்படலம் முற்றிற்று.
ஆகப் படலம் 16-க்குத் திருக்கவிதை 351.

# வேதப்புகழ்ச்சிப் படலம்.

## விருத்தம்.

எந்த நேரமுந் தொழுதி றைஞ்சிடும்பெரியோர்க்கும்
விந்தையாகவேயுதவிசெய் தருளுமேலிவனே
சொந்தமாகவே யடியேன் யான் கேட்டதுஆவை
யுந்தன் கல்புகொண் டிரங்கிநீ யுதவிசெய் யாஹூ (1)

(ஞா-பொ-ரை):—எந்த சமயங்களிலும் உன்னை தியானத்து டன் தொழுதுவரக்கூடிய பெரியோர்களுக்கும் யாரும் வினோதப் படும்படி உதவிசெய்து காப்பாற்றுகின்ற மேலானவனே. இப் போது நான் உன்சமுகத்தில் சொந்தமாக சலுகைபாராட்டிதுஆக் கேட்கின்ற நாட்டத்தை உன்னுடைய திருஇருதயபூரணமாக இரக் கம் வைத்து, நீ உதவி புரிந்தருளல்வேண்டும். ஹூ என்ற வல்லப அட்சரத்தில் அமைந்து கொண்டிருப்பவனே. எ-று.

முன்னர்நீ யுனக்குளீந்த முஹம்மதுநபிபொருட்டா
லென்னைநீ கைவிடாத யேகனே யழிவில்லானே
தன்னைமுன் சுஜூதுசெய்த தங்களோடெனையுஞ்சேர்த்துச்
சொன்னமுன்கலிமாச்சொல்லச்சுபுஹானல்லாவுதவிசெய்யாஹூ

(ஞா-பொ-ரை):—ஆதியில் நீ உன்னில் நின்றும் சிர்ருய் வெளியாக்கிவிட்ட எங்கள் நாயகமவர்களின் செல்வாக்கின் பொ ருட்டினலே, என்னை நீ எந்த விதத்திலும் கைவிடாதே, ஒருவ னும், அழிவில்லாத வனுமானவனே! அர்வாஹில் வரிசைபட

நின்று உன்னை ஸாஷ்டாங்கம் செய்த அந்த நல்ல கூட்டத்தார்க ளில் என்னையுஞ் சேர்த்து அவர்கள் உன் சமுகத்தில் மொழிந்து ஒப்புக்கொண்டார்களே. அந்த கலிமாவை நான் சொல்லகூடியவ ரையினும் எனக்கு நீ நல்லுதவிக்கட்டளை யருள்வாயாக, சுபு ஹானல்லாஹு என்னும் தஸ்ஜாத்தையுடையவனே ! எ-று.

அன்பொடு கருணைமேவு மருளதாங்கிருபைதந்து
துன்பமு மணுகாவண்ணந் துய்மையாந்தௌஹீதென்பா
லின்பமா யிரங்கிச் சிந்தையிதிமுடன் பெருகக்காட்சி
தம்பமாயெனக்கு நீதான் தரச்சகலமுஞ்செய்தயாஹூ (3)

(ஞா-பொ-ரை):—நாயனே. இந்த அடிமையாகிய எனக்கு. உன் அன்பும், மாருதகருணையும், உன் அருளாகிய நற்கிருபையும், தந்து, இனி யெவ்விதத்துன்பமும் என்னைத்துடராத வண்ணம் உன்னுடைய துப்புறவாகிய தவ்ஹீதென்னும் மெய்ஞ்ஞானப் பெரும்பாக்கியத்தைக் கொடுத்துதவிசெய்து என் மனக்கண்ணால் உன் பெருமையான அதிக மகத்தான காட்சியை நான் கண்டு களிகொள்ள எனக்கு. சொந்தமாக சகலமும் தந்த ஹூவே. எ-று

காதலா யுன்றன் கருத்தில் வைத் தடியனுக் கிரங்கி
நீதமா யறிக நின்றிருவடி நிச்சயந்தருவாயே
சேதமா யறிந்தறியாமற் செய்பவம் பொருத்துநல்ல
வேதமே வியஷபாஅத் தருளுமே லவனே யாகி. (4)

(ஞா-பொ-ரை):—ஆதியான நாயனே ! நீ யென்மீது ஆசை வைத்து, உன் கருத்தில் சொந்தமாக நினைத்து அடியனாகிய என க்கு உன் திரு உபயபதங்களைக் காட்டியருள் செய்யவேண்டியது. அன்றியும் நான் அறியாமை யென்னும் அந்தகார இருளில் நின் றும் செய்துவிட்ட பாவ அழுக்கையும் நின் பொறுப்பு என்ற சுத்த ஜலங்களால் கழுவித்துடைத்து பரிசுத்தம் செய்யவேண்டி யது அத்துடன் உன்ஹபீபாகிய எங்கள் நாயகமவர்களின் திவ்ய ஷபாஅத்தும் எனக்குகிடைக்கும்படி உதவிசெய்துரட்சிக்கவேண் டியது. எ-று.

பலபடைப் புயிர்கட் கெல்லாம் பகிர்ந்துநீ யிரணமிட்டுத்
தலைமைசெய் தருளுங் கோனே தனக்கொரு நிகரில்லானே

நிலைமையி னீயே யெங்கும நிட்சய ராஜவாழ்க்கை
குலத்தினி லுயர்ந்து குன்றுகக் குறத்தி லுயர்ந்தகோனே. (5)

(ஞா-பொ-ரை):—எறும்புகடை எண்பத்துநான்கு நூறாயிரங்கோடி ஜீவஜந்துகளுக்கும் தகுதிபோல் பகிர்ந்து இரணங்கொடுத்து வருகின்ற மஹாவள்ளல் நீ எல்லாவஸ்துக்களுக்கும் தலையான கோமானாகிய நீ. இன்னும் உனக்கு யாதொருவஸ்தும் நிகரில்லாதவனே! கருமத்தில் நீயே நித்திய ராஜாங்கமான வாழ்வையும், குன்றாத பெருமையின் குதுறத்தையும் உடைய மஹாஉயர்த்தியுள்ள வனாக இருக்கும். எ-று.

பாதகம் செய்யும் கன்னாஸ் பகைஞன்வந் தென்னையடாமற்
பேதகம் வாரா வண்ணம் பிரியமாய்நின் றிருவுள்மீந்தே
ஆதரவானஈமா னைந்தி லென்னைச் சேர்த்துப்
போதர வானயாற சூலுடன் பொருத்துயாஹூ. (6)

(ஞா-பொ-ரை):—மஹாபாதக துரோகியாகியகன்னாஸ்என்ற இபுலீசானவன் வந்து என்னைக்கெடுத்து விடாமல்அதனால் என் இருதயத்தில் பேதகம்வந்துவிடாமல் உன்திருவுளப் பொருத்தமான ஞானத்தை எனக்குநன் கொடைதந்து. ஆதாரமாகியஈமான் உறுதிதந்து. றசூல்நாயகத்தின் உபதேச காமியத்தில் என்னையாக்கியருள்வையாக. எ-று.

அந்தமு முடிவில்லானே யண்டமும் பிண்டமெங்கும்
விந்தையாய்ப் படைத்தகோவே மேற்றர மானமுத்தே
சொந்தமா யடியேன் றேடும் சுக்குனுக்குட் சுஜூதாய்வந்து
சிந்தையிற் சுஜூது செய்யத் திறமருள் தம்பிரானே. (7)

(ஞா-பொ-ரை):—ஆண்டவனே நீயாகிறவன் ஆதிகடைசி யொடுக்கமென்பது யாதொன்றும் திட்டப்படுத்திச் சொல்வதற்கில்லாதவனாகி. ஆகாயத்தையும் மண்ணுலகத்தையும் உற்பத்திசெய்தவனே! எந்தவஸ்துக்கு மேலான தலைமைத்தனத்தில்வந்துநிற்குகின்ற மகத்தானபொருளே! இந்தஅடியான் தேடியலைகின்ற பொருளாகிய சுக்குனுக்குள்ளே சுஜூதாகவந்து பூரணத்தைக் காட்டியப்பால் என்இருதயத்திடத்தில் நான்சுஜூதுசெய்யும் பொருட்டு நல்லபலமாக நீ அருள்செய்யவேண்டியது. எ-று.

வசன மாருத ஐயூப் நபிமன மறக்கவிட்டு
நசலினு லடையும்போது நன்னயச் சரணம்போற்றி
அசனமொன் றருந்தா நாளி லருந்துயர் தீர்த்தகோவே
நிசமுட னுலகி லுன்னை நிகழ்விரோ நெறியுள்ளோர்கள். (8)

(ஞா-பொ-ரை):—வாயால்சொன்ன வார்த்தைப்படி மாரு தவராகிய நபிஐயூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களை மனமறதியினுல்- கடுமையான நசலைஉண்டாக்கி அன்னவர் யாதொருபுகலுமற்ற அருங்கானகத்தில் கிடக்கும்போது அவர்க்குவேளைமாறுமல் நல் லுணவு கொடுத்துதவிசெய்து கடைசியில்உன்கிருபையைக்கொண் டும் அவருடைய கொடிய நசலை லேசாக்கியருள் புரிந்தவனே! வாஸ்தவமான உன்னைநம்பின மஹான்களே! கரையேறுவார்கள். எ-று

மருளற்ற நபியூனூசை மகரவாய் தனிலிருத்தி
யுருள்கட லெங்குஞ் சுற்றி யவனியிற் சேர்த்தகோவே
யிருளறுத் துன்னை நோக்கி யிறைஞ்சுகண் மணியாய்நின்ற
பொருளதை யறிவார் நல்லோர் புகழ்வரே
புகழ்ந்தோர் மேலோர். (9)

(ஞா-பொ-ரை):—இன்னும் யாதொரு குறைகுற்றங்களுமில் லாத தீரபுருஷராகிய நபியூனுசு அலைஹிஸ்ஸலா மவர்களை. ஒரு மீன் தூக்கிவிழுங்கச் செய்து அதன் வயிற்றில் அழியாவரத்துடன் இருப்பாட்டிவைத்து சப்த சமுத்திராதிகளையுஞ் சுற்றி வரச்செய் து, கடைசியாக அவரை பூலோகத்தில் கொண்டுவரச்செய்து ரட் சித்த குதுறத்துள்ளவல்லவனே! இனையென்ற இருளைபோக்கி ஐனெனும் நேத்திரமாளிகைக்குள் உன் உண்மையான ஒளிவைத் தெரிசித்து அதை முற்றிலும் நீ யென்றே சந்தேகமற உணர்ந்து கொண்டவர்களே நல்லார் என்பவர்கள். அவர்களைப் புகழ்ந்து அவர்கள் மூலமாக உபதேசத் தெளிவைப்பெற்றுக் கொண்டவர் களே. மேலானவர்கள். எ-று.

கழல்மிகும் நபியூசுபைக் கானிற்பாழ்ங் கிணற்றிற் றள்ளிச்
சளஞ்செய்துக்கல்லெ த்தூக்கித்தமையன்மார்கிணற்றிற்றள்ளப்
பனழமையி லுதியந்தப்பயஹாம்பர் தம்மைக்காத்தோனென்
றுனமதி லிருத்தியென்று மூவந்துவர் சுவர்க்கத்தோரே. (10)

(ஞா-பொ-ரை):—இன்னும் வதனசவுந்தரிகத்தில் மிகவும் பேர்போனவராகிய நபியூசுபு அலைஹிஸ்ஸலாமவர்களை. அவர்கள் தமயன்மார்களால் கானகத்திலுள்ளதோர் பாழ்ங்கிணற்றில் தள்ளப்பட்டு. அவர்கள்மீது கல்லைத்தூக்கிவைத்தபோது. அவர்களை அக்கிணற்றைவிட்டும் ஸலாமத்தாக. வெளிவரச்செய்து அரசவாழ்வைக்கொடுத்துதவின வனும் றப்புல்ஆலமீனாகிய நீஎன்றேஉறுதிகொண்டவர்கள்தான் சுவர்க்கவாழ்வுக் குரியவர்கள். எ-று.

மவுத்தறிந்திடவேண்டுமென்றுமலக்கல்மவுத் தழைத்துச்சொல்லக்
கவுத்துவ மிஃதென்றோரா தவரிது ரீசுறாஹை
நவத்தொடும் வாங்கிச் சொர்க்க நகரினில் வைத்தகோனே
சிபத்தொடு முனைமறக்காக் கிருபைசெய் தருளுவாயே. (11)

(ஞா-பொ-ரை):—இன்னும் மலக்கல் மவுத்து வந்துநபி இதுரீஸ் அலைஹிஸ் ஸலாமவர்களை மவுத்துக்குநீர் ஒப்புக்கொள்ளுமென்றறிவிக்க. ஷை இதுரீஸ் மலக்கல்மவுத்தை. ஏமாற்றிசுவர்க்கத்தைப் பார்வையிடவேண்டும் அப்பால்றாஹை ஒப்புக்கொடுக்கின்றேன் என்று சொல்ல. அதற்கவர்சம் மதித்து இதுரீஸை சுவர்க்கத்திற் கழைத்துச் செல்ல. இதுரீஸ்நபி சுவர்க்கத்தில்வந்தபோது, நல்லபட்டரைபோட்டிருந்து கொண்டு சுவர்க்கவாதி மரணமாகமாட்டான்.,, நீர்போய்வாரும் என்று சொன்னதும் மலக்கல்மவுத்து ஏமாற்றமடைந்தவராக. போகவும் இதுரீஸ்நபி நித்தியசுவர்க்க வாழ்வில் ஆநந்தபரவசத்துடன் இருக்கவும் செய்தறகுமானே! இந்தஅடிமை யெப்போதும் உன்னைமரக்காமல் தியானத்துடன் இருந்துவர நீசொந்தசலுகையான கிருபைசெய்ய வேண்டியது. எ-று.

நரகினன் பிருஊன் செய்யும் நடுக்கத்தால் நபிமூசாதங்
கரமதி லசாவைப் பாம்பாய்க் காட்டவேபடையையெல்லாம்
நிரைநிரை யெடுத்துட் கொண்டு நிமிஷத்திற் சேனையாள
வருமவர்க் குதவிசெய்த வல்லவா துணைசெய்வாயே. (12)

(ஞா-பொ-ரை):—இன்னும் நரகத்திற் கிரையாளனாகியபிர்ஊன்சக்ரவர்த்தி செய்துவந்த கொடுமைத் தாங்காமல் நபிமூசா அலைஹிஸ்ஸலாம் தமது கையிற்பிடித்திருந்த ஆசா, என்னும்

தடிக்கொம்பை படம்விரித்தாடாநின்ற பாம்புபோல் வரச்செய்தும். அப்பால் அந்த மாபாவியாகிய பிர்ஊன்உடைய சேனவெள்ளங்கள்யாவற்றையும் அகஸ்மத்தாய்க்கொண்டுபோய் செங்கடலின் கழிக்கரை முகத் துவாரத்தை நீர்பிழந்து மூடச்செய்து சுத்தநாசஞ்செய்துவிட்டவனே! நீயே இனியெங்களுக்கும் ரட்சிப்பருளிக் காப்பாற்றவேண்டியது. எ-று.

வஞ்சனம் ஆதுசெய்யும் வன்னியின் பொருளதற்கூட்
டுஞ்சிடா வண்ண மன்னுட் சுடுதழ லழலை யூற்றித்
தஞ்சமென் றிபுருஹீம்நன் னபியினைக் காத்தோன் றன்னை
நெஞ்சினிலைந்து மொன்ருய் நினைப்பவர் சுவர்க்கத்தோரே.()

(ஞா-பொ-ரை):—இன்னும் நபிஇபுருஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை கொடியவஞ்சகனாகிய நம்றூதுராஜன் தூக்கிகொண்டுபோய்போட்டமஹா கோரதுபரமான அக்கினிக்குண்டத்தில் வைத்துவெந்துவிடச்செய்யாமல் ரட்சித்துக்காப்பாற்றி அந்நெருப்பு நிரயத்தை ஒருஅழகிய பூங்காவனம்போல் மாற்றிவிட்டு.காபிரீன்களான அவரதுசத்துருக்கள் நடுக்கங்கொள்ளும் படியாகச் செய்தஹக்கனை தஞ்சமென்று நெஞ்சில்நினைத்து ஐந்து அனசிறுகளுங்கூடி மொத்தத்தில்அவனே யென்றுநல்லுணர்ச்சிகொண்டவர்கள் தடையன்றி சுவர்க்கத்தில் இருப்பார்கள். எ-று.

இருதலைப் பிறையில் லாநா ளிருளைவிட் டிரைஞ்சலாகி
வருந்தியே யிருக்கு மந்நாள் மதியனைத் திருபிளப்பாய்ப்
பொருந்தியே யீமான்கொள்ளப் புகழ்முஹம்மது நபிக்குக்
கருமங்க ளுதவிசெய்த கல்புல்லா துணைச் செய்வாயே. (14)

(ஞா-பொ-ரை)—சந்திரனின் பூரணம்அத்தனையும் சரிவரக் குறைந்துபோய் ஒருசிறிதுசந்திர ஒளிஎன்றநாமமும் முழுதும் அற்றுப்போய்விட்ட பவர்ணிஅமாவாசை மையிருட்டில் மறுபடி ஒருபுதியதோன்றியது இரண்டுபிளப்பாக எழுவான்படுவான் கோணங்களில் உயர்ந்துவரச்செய்து அப்பால் மீண்டும் ஒருவட்ட மதியாகப் பொருந்திவிடக்கூடிய அளவற்றஅற்புத அரசாங்கியமாம் பெருமானர் நபிமுகம்மது முஸ்தபாறசூல்நாயகம் அவர்களுக்கு

காபிரீன்கள் வழிபட்டுக்கலிமாவை ஒப்புக்கொள்ளும்படியாகசெய்த. இருதயத்தின் நாட்டமென்ற அல்லாவே நீயே யெங்களுக்கு துணை செய்தருள் வாயாக. எ-று.

தேனலர் கமழுஞ் சோதிச் சிறுபிறை நுதலும்மைப்பிற்
பானொளிர் கதிர்கள் வீசும் பரிந்தெங்குந் தானந்தங்கு
மானுடன் பேச்சுரைத்த முஹம்மதர் பொருட்டினாலே
யீனக தகற்றி யென்னீமானைத் துணைச்செய் யாஹூ. (16)

(ஞா-பொ-ரை):—குளிர்ந்த தேன்கலையை ஒத்த. ஒளிக்கலைகளையுடைய குழவிப்பிறையைப் போன்று வளர்ந்த நுதலழகினையும் சூரியவொளிவட்டமிட்டன போன்றபுள்ளிகளையுமுடையஒரு மானுடன் ஸம்பாஷித்து அதன்மனக்கிலே சத்தைதீர்த்துவிட்ட எங்கள்நாயகம்நபியினுமுகம்மதுர்றசூ லவர்களின்தாட்சண்ணியத்தின் பொருட்டாலே என்னுடைய பெரியசிரியபாவங்களை நிராகரணித்து ஈமானின்நிலையிஉறுதியான தவசாலியாக என்னையாக்கியருள் யாஹூ. என்றநாயகனே. எ-று.

அண்டமு மவனியெங்கு மருமறையுயிர்கள் யாவுந்
தொண்டர்க ளிதயந் தன்னிற் சுகமுட னிருந்து வாழ்ந்து
விண்டுரைக் கெதிர்நின் றோதும் வேந்தராம் நபிபொருட்டா
லென்றுமுள்ளவனேயென்னீமான்றனைத்துணை செய்யாஹூ.

(ஞா-பொ-ரை):—அண்டர் நாட்டவர்களுக்கும். பூமியின்முகத்திலுள்ள மாநிடகோடிகளுக்கும். அருமையானறப்பாகிய உன்ரசியப் பொருளைப்பற்றி விஸ்தரித்துக்கூறி. மற்றஎல்லாஉயிர்ப் பிராணிகளுடனும் எதிர்மொழிபேசிய எங்கள்நபிகள் பெருமானார் அவர்களின் பொருட்டாலே. என்ஈமான் நல்லுறுதி செய்தருள் வாயாக. எ-று.

முன்னர்நீ முத்தாய் வைத்து முடுகவே நோக்கிப் பார்க்கத்
தன்னைத்தான் றஹ்மத்தான தாத்தொளிக் கடலில் வைத்தே
யுன்னைத்தான் ஸுஜூது செய்தங் குரிமையிற் றுணைநாலாக
அன்னமுஹம் மதுபொருட்டாலடியனுக் கிரங்குயாஹூ (17)

(ஞா-பொ-ரை):—யாறப்பே! ஆதியில் நீ ஒருவெண்முத்தின் ஸ்ரூபத்தில் அமைத்து வைத்து உன் அருகில் வைத்து உறுக்கிப் பார்த்தவுடன் அந்த திருநோக்கமானது றகுமத்தென்ற ஒரு கடலாகப் பொங்கி அதில் அந்த முத்து ஒதுங்க. அது வேதாத்தின் திவ்ய ஒளிவாக அக்கடலில் உறைந்து உன்னை சுஜூது செய்து அப்பால் அன்னத்துடன் மற்ற நான்கு கோலங்களாகப் பிரிந்த. எங்கள் முகம்மதரின் பொருட்டாலே, இந்த அடிமைக்கு நீதயை செய்ய வேண்டியது. எ-று.

மன்னனே யுனது மறைக்கனி பழுத்தமண்ணுலகி
லென்னைநீ கைவிடாம லின்பொடு மென்றுமேற்று
முன்னருள் குதறத்தாலார் முஹியித்தீன் பொருட்டினாலே
யின்னுமென் மேலிரங்கிக் கிருபைசெய் திடுவாயாஹூ. (18)

(ஞா-பொ-ரை):—ஐ! சர்வாதிகார சுதந்திரங்களை முடைய அரசனே! உனது திவ்யஞானப் பொக்கிஷமான குர்ஆன் என்னும் உள்ளபடியே சத்தியவேதமானது தன் பணர்களைக் கிளை கிளையாகக் கிளைத்துப்படர்ந்து போயிருக்கின்ற. இந்த பூலோகத்தின் கண்ணே என்னை நீ கை தவறிவிட்டிடாமல் ஷேவேத விருட்சத்தின் சத்கார நவரசம் பொருந்தியதேன் கனிகளின் சுவைகளை நான் சுகிக்கசெய்து என்னை எக்காலத்தும் கையேற்று. ஆதியில் உன்குதுறத்தைச் சொந்தமாகக்கொண்டு வெளியான என் குருநாத் சீமானாகிய குருமுகியத்தீனின் திருவருட் ப்ரகாசப்பொருட்டினாலேயும். இன்னமும் ஒருமுறை உன் கிருபையை அருள்புரிவாயாக யாஹூவே. எ-று.

பெருமைதான் பலத்தைக் கொண்டும் பேசலி பாத்திமாபாற்
றரும மாகியநங் நபியுல்லா சமுகத்தி லிருந்தே
கருமமானநற் புலியதின்றோலைக் கக்கத்தினிலிழுத்தலி [ஹூ
யுருமையானமுஹியித்தீன்பொருட்டெனக்குதவிசெய்யா

(ஞா-பொ-ரை):—பூலோகமாதாவாகிய பாத்திமா நாயகம் அவர்களிடம் அறுஷைப்புலியாகி நாயகம்அலியவர்களை தமதுஇணையற்ற வீரபராகரமத்தைப்பற்றிப் பெருமை பேசினதின்பேரில் அவர்களை சோதனை செய்யும் பொருட்டு ஒருபுலித்தோலை கம்கட்

டில் இடிக்கிக்கொண்டு சாதுவேடந் தரித்துத் தோன்றி அதாவது நபியவர்களின் சமுகத்தின் எதிரே சூக்கும சரீரத்தோற்றத்தில் வெளியாகி ஷைகு அலியை மனம் வெட்கச்செய்த மஹா அற்புதா நந்தவாரியான யெங்கள் சகல லோக சற்குருவான் குருமுஹியித் தீன் ஆண்டவர்களின் பொருட்டாலே எனக்கு சர்வ உதவியும் செய்து காப்பாற்றியருள் யாஹூவானவனே! எ-று.

அஞ்ச லாய்நபி மிகு ரூஜாக் கேகு மந்நா
ளின்சொ லான்மறை யிறைய்வ னிசைத்திடும் வசனம்
தஞ்ச மான்தொட்டியிற் சயனித்த தஸ்தக்கீர் வள்ளல்
வஞ்சி நீளொளி முஹியித்தீன் வரிசைதா யாஹூ. (20)

(ஞா-பொ-ரை):—வள்ளலாகிய நபிகள் பெருமான் அவர்கள் எழுவான் திருயாத்திரை செய்த மிஃறாஜிராத்திரியில் அல்லாஉடைய அறுஷியில் கொழுகித் தொங்காநின்ற ஒருஅழகிய செம்மாணிக் கத்தொட்டிலின்கண்ணே. முகவரைகீறுத ஒருஇளவாலிபசௌந்தி ரக்கன்னிவடிவத்தில் சாய்ந்துசயனித்திருந்த மகுபூபுல்லாவாகிய எங்கள்சற்குருநாயகம்முஹியித்தீன் அப்துல்காதிருல்ஜீலானியின் சொந்தமான காதிரியாத் தரீக்கத்தின் சிறந்ததவநிலையை எனக்கு த்தந்தருள் யாஹூ. எ-று.

வறுமையால் நசாறு கௌது மனையினிற் புகுந்து மிக்கச்
சிறுமையா னவனோர்கூசைத் திருடுதல்
கண்டன னவ்வோர்மேற்
பிரியமாய்க் கையைப் பற்றிப் பிடித்தொலிப் பட்டமீந்த
தருமமார் முஹியித்தீனின் தறஜாத்தருள்குவையாறஹீமே ()

(ஞா-பொ-ரை):—இன்னமும் திருபகுதாதுநகரத்தில்கௌது நாயகத்தின் திருமனையில் ஒருதண்ணீர் கூஜாவைத்திருடினகிறிஸ்த வனைக்கை மெய்யாக ஆண்டவர்கள் அவன்கையை நல்லதயையுட ன்பிடித்து. "ஹே. அற்பனே. இன்றுமுதல் நீ. ஒலிஎன்னும்மஹா னனைய், என்றுதிருவாய் மலர்ந்து கூற, உடனே தான்இருந்தமதத் திலும், செய்துவந்ததொழில் நடவடிக்கையிலும் நிர்பாக்கியனயி ருந்த அந்தக்கள்ள கிறிஸ்தவன் பெரியபாக்கியவந்தனனஒலியாகி விட்ட திருவாய்மொழி அற்புதஅரசரான் நாயகம் முஹியித்தீனு

டையமுகதாட் சண்ணியத்திற்காகவும் ஆண்டவனே நீயென்குற்ற ங்களை மன்னித்து அந்தநாயகத்தின் காதிரியாவழியின் மெய்ஞ் ஞான அமிர்தத்தை நான்யள்ளியுண்டு மேன்மையடையும்படி யருள் யாஹூ: என்-று.

வேதப்புகழ்ச்சி படலம்.
பூரணம் பெற்றது
ஆடபடலம் 17இ திருப்பாட்ல்கள். 372

---

## முச்சுடர்ப் படலம்.

### தொங்கல்.

சொல்லுந் திருவறையி லோர்மரவுபற்றி, அம்மய ஜுஸுவி னிற்றுய்யோன்மொழிந்த-அலம்தரக்கைபலொற பல்லாகுவெனும் ஆயத்ததின் பொருள் தனையாய்ந்து-நலந்தரு முசிலிமானவ ரனைத் தும், லாஇலாஹ இல்லல்லாஹு வெனும்-பலன்றரும் படிக்குப பொருளினிற் சிறிது, பண்புட னெடுத் திசைத்திடுவாம், (1)

(ஞான-பொ-ரை):—வல்லமைப் பொருளானறப்புல் ஆலமீன் தன்திருவேதமாகிய மெய்ஞ்ஞான நாலாம் வேதத்தில்கருமங்களை சற்றுமறைவாகவுறைத்தான். அதில்ஒன்றும் அத்தியாயமாகிய அம் மயத்யென்னும் அதிகாரத்தில் அலம்தரக்கை பலறபல்லாஹு என்னும்சுவர்ன சூத்திரத்தில் விட்டுரைத்தஅகமியதாற்பரியங்களை நமது சகோதரர்களான சர்வமுஸ்லீம்களும் லாயிலா இலாஹ என்னும் கலிமாவில் பார்த்து அறியும்படியாக அதன் ரகசியங்க ளில் ஒரு சிறிதளவு நாம் இங்கே எடுத்து உபதேசிப்போமாக. இது ஆலீம்களாக இருந்தாலும் சரியே அறிவு தெளிந்தவர்களுக் கன்றி மற்றவர்க்கு கல்பு கண் குருடாக இருப்பதால் பிரயோச னஞ் செய்யாது. என்-று.

வே று.

வெளிய தெங்கும் நிறைந்திட வுயர்ந்தொரு விருட்சம்
தெளிவ தாக்வே யுண்டாக்கி முக்கோணமாய்ச் சிறந்த
எழில்கொ ளுங்கனி மரத்தினில் முட்டினின் றெழுந்து
ஒளியமுக் கோணிடை மூவ்வெனி கிடந்ததினிறைந்தே.(2)

(ஞா-பொ-ரை):—பரவெளியெல்லாம் பூரணமாய் நிறைந்திட ஒரு விருட்சம் அதாவது இன்ஸான் என்ற ஜடலம், உற்புத்தி செய்து அதில் அஸலான தன்னுடைய சிம்மாசனத்தை. முக்கோணவடிவாய்ச் சிறக்கச்செய்து அந்த விருட்சத்தில் நின்றும் ஒரு க்னியானது, அண்டபுவனங்களெல்லாம் முட்டி நின்று எழுந்து, ஷெ முக்கோணமும் மூன்றுப்ரவெளியாகத் துலங்கிடும் விதத்தைக் கீழே சொல்கின்றோம். எ-று

கனியில் ரண்டுமும் மூன்றிதிழ் வொன்பது கவராய்க்
குனிய நான்குமுக் கோணசந் திடக்கனி யடத்தின்
இனிய அம்மாறத்த கத்தின் முட்டமூக் கோணுள்
பனிபருப்புள விதைரண்டு விதையொன்று பதரே. (3)

(ஞா-பொ-ரை):—அந்தக் கனி ஒன்றானது, அகஸ்மாத்தாய் இரண்டு கனியாகப் பிரிந்து கொண்டது. அதில் ஒவ்வொன்றிலும் ஒன்பது கவர்கள் உண்டுபட்டது. ஷெ இரண்டு கனிகளுக்குள்ளும் நாற்கோண சந்துகள் தோன்றின. அதில் ஒன்று நப்ஸ் அம்மாறு. அது இரண்டு விதக்கனியிலும் இரண்டு வித வித்துக்கள் உண்டாயிற்று, அதிலொன்று விதையாகவும், மற்றொன்று சத்தில்லாத பதராகவும் தோன்றிவிட்டன, கருத்து. விதை யென்றது. ஆண். பதரென்றது, பெண், இரண்டு கனியென்றது தனியே, ஒரு கனி, சுவர்க்கத்தில் ஆதத்தை. தனிமையாகப்படைத்தது அப்பால் ஆதத்துடன் ஹவ்வா உற்பத்தியானது என்று உணர்க.எ-று.

இந்த மாமச லாமஃ ஞவினை யியம்பில்
அந்த மாகமுன் மொழிந்திடும் ஆலம்
சொந்தமாமர மென்றது தானுமுச் சுடராம்
கந்த மாங்கிளி தானுமூன் றாகியஹ்றுபே. (4)

(ஞா-பொ-ரை):—இந்த மஹாபார தூரமாகிய மூஸ்லாவை இன்னதென்று விடுத்து, சொன்னவர்கள் முச்சுடர் என்பதை யறிந்தவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியது. நான் மேலே வந்த 3-வது பாடலின் வுரைத்ததில் கருத்துரையில் நல்ல பரீட்சிகாரமாக, அவிழ்த்து விட்டிருக்கின்றேன் அறிவுள்ள கனவான்கள்

கண்டுகொள்ளவேண்டியது மேற்சொன்ன மூன்று சுடரும்மூன்று அட்சரமாக இருக்கின்றது, அதைக்கீழே விபரிக்கின்றேன். எ-று

ஒன்று முப்பது மைந்தெனும் லெக்கமேயுடைய
தென்று கூறிய கருப்பொருள் மூன்றினி லிருந்து
துன்று மொன்பது ஹறுபொன் ருகியசூட்சம்
நன்று லெக்கமும் நூறென நவின்றனர்நல்லோர் (5)

(ஞா-பொ-ரை):—ஆகக்கூடி கருப்பொருளான வஸ்துவானது முப்பத்தாறு இலக்கமுடைய அட்சரங்களாக இருக்க. அந்த வஸ்து முச்சுடர் அவதாரத்தை யெடுத்ததின் ஸம்பந்தத்தினாலே அது ஒன்பது ஹறுபாகி அப்பால் ஆலம் இன்ஸானின் முந்நூறு கணக்கான அட்சர சூட்சியம் ஆனதுஎன்று நல்லறிவுடைய மஹாத்மாக்கள்உறுதிகூறிவிட்டார்கள். எ-று.

இலக்க மான நூற்று முப்பத்தாறுகுமே எழுத்துப்
பிலக்கும் பனிரண் டாகுமென உரைத்தனர்பெரியோர்
கலக்கும் லாயிலாஹ இல்லல்லாஹு வாங்கலிமாத்
துலக்கும்லெக்கமும்ஹறுபையும்வகைவகைசொல்லுதாம் (6)

(ஞா-பொ-ரை):— ஷை முந்நூறு இலக்கத்தில் அட்சரக்களுக்கு நூற்றி. முப்பத்தாறு என்றும், இன்னும் சிலமஹான்கள். பனிரண்டு அட்சரந்தானென்றும் பலபிடியாகக் கூறிவருகின்றார்கள், இனிமேல் லாஇலாஹ. என்னும்கலிமாவின் இலக்கத்தையும். அவைகளுக்குறிய அட்சரங்களையும் விபரித்துச் சொல்கிறேன். எ-று.

லாமுமுப்பது அலிபொன்று அலிபொன்றாய் நல்கும்
லாமு முப்பது அலிபொன்று ஹேயைந்தாய் நவின்றார்
லாமு முப்பது முன்னலி பின்னலிபுண்டாம்
லாமு முப்பது அலிபோன்று ஹேயைந்தாய் நடக்கும் (7)

(ஞா-பொ-ரை):—கலிமாவில் உள்ள நான்கு லாம்களில். ஒன்றொன்றும்முப்பது முப்பது இலக்கமாக. இருக்கும். அலிபுக்கு. ஒன்றாகவும். ஹே. யானது. ஐந்துஇலக்கமாகவும். வீதாச்சாரம் போல் கணக்கெடுத்துக் கொள்ளவேண்டியது. எ-று.

வேறு

தோன்று மீராரும் வெளி முஹம்மதர், றசூலுல்லாஹி யென்று தடராய்-ஈன்றுமீரா றெழுத்து முன் னெழுந்தே, யிருப் பது நாலுங் கொண்டிசைந்து-மீண்டுமீமா னிசுலாம் நிரைவாக வேண்டும் லாஇலாஹி-என்ற ஹறுப்பா றுக்கும் லெக்கம், அறுபத் தெட்டாமென உரைத்தார். (8)

(ஞா-பொ-ரை):—முகம்மதுர்றசூலுல்லாஹி. என்றதில் பன் னிரண்டுஅட்சரங்களும் அதற்கு முன்னதாக. லாஇலாஹ இல்லல் லாஹு என்பதற்கு பன்னிரண்டுஅட்சரங்களும். ஆகஇருபத்து நான்கு அட்சரங்களுங்கூடி. இன்ஸான் என்கின்ற மேற்கூறிய விரு ட்சம் உண்டாய்விட்டது. இன்னும் ஆதியான லாஇலாஹ. என்ற ஹர்பு ஆறுக்கும் இலக்கம் அறுபத்தெட்டு என்று பெரியோர்கள் பகுந்து விட்டார்கள். எ-று.

இல்லல்லாஹுவென் றுரைத்திடும்ஹறுபாறுக்கும், லெக்கம் அறுபத்தெட்டு-சொல்லல்லா முன்னுறெழுத்துக் கொண்டே, இசு லாந் தோன்றிய புறப்பறுலாரும்-வெல்லல்லாம்பின்னுறெழுத்தும் ஆமந்துபில்லாஹி யாகப்பறுலாரும்-நல்லலாப மெனவுண்டாகித் தன்வீஹும், நவில்த் தசுபீஹுமாயிருக்கும் (9)

(ஞா-பொ-ரை):—மேற்சொன்ன ஆறுஹர்புக்கு. அறுபத் தெட்டு இலக்கத்திற்கும் ஷெ முச்சுடரான மூன்றுஅட்சரமுங்கூடி- இஸ்லாம்மார்க்கமானது வெளியாய்விட்டது. அதானது புறப்பறு லாக இருக்கும். மற்றஆறு ஹர்புகளும்கூடி. ஈமான்கொள்ளுதல் என்னும் ஆமந்து பில்லாஹி யென்னும் உள்பறுலாக இருக்கும். இந்தஇரண்டும்தன்வீஹு என்றும். தஸ்பீஹ என்னும் இரண்டாக இருக்கும். எ-று.

பன்னிரண்டெழுத்தை மூன்றதாய்ப் பிரித்துபார்க்கில், முப் பங் கதனிலெக்கம்-தன்னிடும் அறுபத்திரண்டாகத், தோன்றும் ரண்டாம்பங்கினி லெக்கம்-முன்னிடு முப்பத்தேழு மூன்றும், பங்கு டைய லெக்கமுப்பத்தேழா-முன்னிதைக் கூட்டில் நூற்றுமுப்பத் தாறும், லெக்கமென் றுரைத்தனர் பெரியோர் (10)

(ஞா-பொ-ரை):— மேற்கூறிய பன்னிரண்டு அட்சரத்தை மூன்றுபங்காப்பிரித்துப்பார்த்தாக்கால்அது. அறுபத்திரண்டாக ஆகிவிளங்கும். இரண்டாம் பங்கில் வைத்துப்பார்த்தால் அதுமுப் பத்தேழாக இருக்கும். மூன்றும் பங்கில்பிரித்துப்பார்த்தால் அது உம்முப்பத்தேழாக இருக்கும். இம்மூன்று இந்தவீதாவிதம்போல் ஒன்றும் சேர்த்து விட்டால் நூற்றுமுப்பத்தாறு இலக்கமாயிற் றென்று மஹான்கள் கூறினர். எ-று.

நாடியேமுப்பங் கிரண்டையுங்கூட்டில், லாஇலாஹ இல்லென் றெழுத்துக் கூடிய பிற்பங்கானது, அல்லாஹுவென அறியவும் வேணும்-மூடியதாத்து சிபாத்துடன் அசுமா, மூன்றல்லால் இலா ஹுல் பாத்தினென்னும்-சாடிய இலாஹுல் முத்தலக்கு மூன் றென் றுரைத்தன்ரே. (11)

(ஞா-பொ-ரை):—மேற்படி மூன்று பங்கில் இரண்டுபங்கைக் கூட்டினுல் லாஇலாஹஇல்லென்ற மந்திரமாக உண்டாகிவிடும் அதில் மீதப்பட்ட மற்ற ஒரு பங்கைக் கூட்டினுல் அல்லாஹு என்ற மந்திரம் பூரணமாக ஆய்விடும். அந்த மூன்று பங்குங்கூடி தாத்து ஸிபாத்து, அஸ்மா, இந்த மூன்றுமாக இருப்பதுடன் ஆக் மொத்தமும் இலாஹுல் ஹக்கென்றும் இலாஹுல் பாத்தி னென்றும் இலாஹுல் முத்தலக்கு கென்றும் ஆய்விடும் என்று மகான்கள் தெளிவாய் அறிவித்தார்கள். எ-று.

உற்றுள்ள ஈமானுட னிசுலாமு, முரைத்த தெளஹீதென மூன்றும்-முத்துடன் பச்சைபவளமு மூன்று, மொழிந்தவீராறெழு த்தினையும்-தத்துநாலாகப் பிரித்துப் பார்க்கில், முப்பங்கிற் றரித்தி டும் லெக்க மெண்ணுண்காம்-பத்திரண்டாம பங்கினி லெழுக்கமும், நபிலொன்பது வெனபெரியோர் பகர்ந்தார். (12)

(ஞா-பொ-ரை):—இன்னும் அந்த மூன்று மானது ஈமான், இஸ்லாம், தவ்ஹீது, ஆக மூன்றுமாக இருக்கும் இன்னும் முத்து பவளம் மரகதம் ஆக மூன்றுமாக இருக்கும் இன்னும் மேலே கூறிக்கொண்டு வந்த பனிரண்டு ஹர்புகளையும், நாலாகப்பிரித்துப் பார்த்தால் மூன்று பங்கில் உள்ள இலக்கமானது, முப்பத்திரண்டு

ஆக இருக்கும், இரண்டாம் பங்கில் சேர்த்துப்பார்த்தால் ஒன்பது றக்க அத்துடன் தவநிலைகாண்கும்படியான ரகசியவணக்கமான நபிதாழுகை இருக்கும் என்றுமஹாநுபவராகிய நபிகள் சிரோமணியவர்கள் கூறினர்கள். எ-று.

மொழிந்திடு மூன்றும்பங்கொருலெக்கமு, முப்பத்தி ரண்டென மொழிவார்-தெளிந்தநாலாம் பங்கினிலெக்கமு,நாலொன்பதென்றார் சேரவேகூட்டி-வழியாயீந்திடும் நூற்றுமுப்பத், தாறிலெக்கமென்றதின் வழியாகும்நெளிந்திடா துரைப்பேன், மூமினானவர் நிலைதரும் நல்வழிபெறவே. (13)

(ஞா-பொ-ரை):—மேற்சொன்ன மூன்றும்பங்கின் இலக்கமானது முப்பத்திரண்டென்று, நாதாக்கள்வுரையறுத்துக் கூறிவிட்டார்கள். இனிநாலாம்பங்குடைய இலக்கமானது. முப்பத்தாறு ஆகஇருக்கும். ஆகஎல்லாம்ஒருவழியாகச் சேர்த்துப்பார்த்தால் மொத்தம் நூற்று முப்பத்தாறு இலக்கமாகின்றது இந்தக்கணக்கைக் கண்டுபிடித்து அதாவது. பீர்மார்களின் மூலமாகத்தெரிந்து கொண்டு தவநிலையில் நிற்பவர்கள். தகுதியான ஞானவான்களாவார்கள். எ-று.

உரைஷரீ அத்துமண் சபூர்நபி,தாவூது அஹுபக்கராஞ்சிபூரில் அறியும வாய்நாவு ஆலம்-இன்சானும் இல்முல் எக்கீன் எழுத்தலிபு நறைதரீக் கத்துப்புனல்தெளருத்துநபிமூசாவுமறுமீக்காயில் சறுக்குமாலம் அஜ-சானும் ஐனுல் எக்கீன் தரித்திடு மெழுத்து ஹேயே

(ஞா-பொ-ரை):—மேற்கூறிய நாலுபங்கும் ஒவ்வொன்றும் ஒவ்வொருகருமங்களைக் கொண்டதாகஇருக்கின்றது. அதாவது. ஒன்றும்பங்கு. ஷரீஅத்து. அது. மண்என்னும்பூதம். அதுவேசபுர் மென்னத்தின் தாவூதுநபியாக இருக்கும். அதுயார்களில். அபூபக்கராகவும; மலக்கில் ஜிபுரீலாகவும் இருக்கின்றது, ஐடலவுறுப்புகளில் அதுவாய்நாவு. அதுவானது ஆலம் இன்ஸானகவும். இல்முல்யகீனகவும் அலிவு என்ற அட்சரமாகவும் இருக்கும். இரண்டாவது பங்கானது. தரீக்கத்து. அதாவது' தண்ணீர் அதவது மூசாநபியும் தெளருத்து வேதமும், இன்னும், உமது, இன்னும், மீக்

காயில், இன்னும் ஆலம் அஜீஸாம். அதுவேஜனுல் யகீன் அட்ச ர்ம் ஹேய். ஆகஇருக்கும். எ-று.

நன்னநபிஹக்கீக்கத்துக்காற்றுஇஞ்ஜீலாம்நபியும்ஈசாவுடனுஅ மான்- கண்ணி சுரூபீல்நாசி ஆலமிதால், ஹக்குல்எக்கீன்ஹறுபது மீம்- முன்னில்வரும் மஃரிபத்துநல் புறுக்கான், மூலமது அலிபி சுரூயில்-இன்செவிஆலம் அறுவாஹூக்காமலுல்,எக்கீனுமெழுத்து நாலே. (15)

(ஞா-பொ-ரை):—இன்னும் மூன்றுவது பங்கின்விபரமாவது. துறை. ஹக்கீக்கத்து, பூதம்காற்று. வேதம் இஞ்ஜீல்-நபி. ஈஸா யார்உதுமான். மலக்கு இஸ்ரூபீல், உறுப்பு நாசி, ஸ்தலம். ஆலமி தால், இல்மு. ஹக்குல்யகீன் அட்சரம். மீம், இன்னும் மேன்மை பெற்ற நலாம்பங்கானது. துறை. மஃரிபத்து, பூதம் அக்னி, வேதம் குர்ஆனுல் மஜீது, நபி. சாலோக ரட்சகர் நபிமுகம்மது யார். அலி. புலன், செவி, மலக்கு. இஸ்ரூயீல், ஸ்தலம். ஆலம்அர் வாஹ். இல்மு. கமாலுல் எகீன். எழுத்து. தால்என்று இவ்விதம் அந்நான்குபங்கையும் அறியவேண்டியது "இதில்ஒருரகசியம் நான் உடைத்துவிடுகிறேன் அக்லுள்ளவர்கள். கண்டுபிடியுங்கள்பார்க்க லாம். இந்த நான்கு பங்கில் நாலாவதுபங்கு. மஃரிபத்தென்னும் ஞானவேதத்தின்நபிமுகம்மது. இப்போது நடக்கும் யுகமானது ஸமஸ்கிருதசாஸ்திரி நிபுணரான கருத்தின்படி நாலாம்யுகமானகலி யுகம்முகம்மதுடையபங்கில்கடைசித்தீர்மானம் காமாலுல் எகீனுக இருக்கிறது. இப்போது ஞானஜோஸியம் சொல்லட்டுமா? முச்சு டரின் நாலாம் பங்காகிய நாலாம்வேதத்தின் நாலாம் நபியாகிய முகம்மதின் நாலாவது. பதவியாகிய ஞானமார்க்கமானது. நாலா ம்யுகமாகிய கலியுகத்தின் நாலாம்படியாகிய ஹிஜ்ஜிரிஆண்டு. ஆயி ரத்து முந்நூற்றி நாலாம்பத்தில் நாலாவிதமான அரசர்களாலும் பங்கிடப்பட்டு அவஸ்தையும், நெருக்கடியும்படும்போது. மெய்ஞ் ஞானத்தின் நாலாவது துறையான காமாலுல் எகீன் ஆனது எகீ னில்தரிபட்டு வந்து. அந்தஞானமார்க்கத்தை கைதூக்கி யெடுத்து. அதன்சத்துருக்களை முனைமுரியச்செய்து தனக்குள்ளக்கியப் படு த்தியரசாட்சி புரியும். வேதத்தின்பக்தியில் முஸ்தபாவும். அதன்

அந்தத்தில் கமாலும் வருவதாலே இரண்டையும்கூட்டினல். பால் குடிமதனையும் முஸ்தபா கமால் என்று சொல்லுமே. அந்தமுஸ்த பாகமால் கதிஎன்னகும். ஆகவே அந்த முஸ்தபாகமாலை யுதயஞ் செய்தலைப்பற்றி அர்வாஹிலே றகுமான் முகம்மதுடைய ஸபை யில் முடிவுகட்டி விட்டதாக. இதனல் முஸ்லீம்கள் தீர்க்கமாக. ஒப்புக் கொள்வீர்களாக. இதை மூன்றும்யுஹத்தில் மஹா ஆசிரிய னகிய. வாலி. முன்னுரைத்ததானது. அவனை ஒருமஹாகனதிமான் என்று அறிவித்து விட்டது’’ சோஷியன் உரையாசிரியன். எ-று.

இந்துநே றஹ்மதெனு மெழுத்ததினு, லிசைந்தொரு சோலங் கொண்டெழுந்து-வந்திடு முஹம்மதெனும்பயிர், தம்மைவணங்குவ தென நன்ருய் மதித்துச்-சிந்தையி லறிந்து வணங்குவததுவே,சிர் று சலாத் தெனற் சட்டதிற்-சந்தவாய்த் தன்னை தான் வணங்கு வதே,தென்றனர் பக்கீறதின் மஃனு (16)

(ஞா-பொருரை):—பூரணசந்திரப்பிதவி யிலுள்ள அஹ்மதென்ற அட்சரங்களானவைகள் பின்யுஹத்தில்முகம்மதென்கிறஒருதிவ்ய ஜடலத்தையெடுத்தது. அதானது ஆதிஸிபத்தை. வெளியாக்கும் பொருட்டு மிஃருஜி ராத்ரியில் தன் அசலுடன் ஸம்பாஷனை புரிந்து. தன் அசலைத்தனக்குள்ளே தன்னைவணங்குவதே சிர்றுஸலாத்து. என்றுதன் அருகர் களுக்கு ஸயிக்கினை செய்தார்கள். பகீறு. என்றதன் தாற்பரியமும். தன்னைத்தனக்குள்ளே தானய் வணங்கிறவன். என்பதாம். எ-று.

பதிவுடன் முன்மே சொல்லும், வித்தாவதுதான் பனுபக்கா நபியிதுபாத்துக்-கதியிந்த நாலும்நல்வழிகாட்டுங்,காமிலாங்குருவிடந் தனிற்போய்த்-துதிசெய்தவர் கைபிடித்து முரீதுத், துறைதனில் நேசமாய்த் துணிந்து-மதியுட னிருக்கி லவர்சொல்லும் வழியில் மணக்கண் கண்டறியலாமாதோ. (17)

(ஞா-பொ-ரை):—நாம்பதிவுடன் மேலே சொல்லிய வித்தானது. பனுபக்கா நபீ. இதுபாத்து. ஆகஇந்தநாலும், ஒருவன்தெரிந்துகொள்ள வேண்டுமானல் நேர்வழியை யுடைய அதாவது பிந்தினகாலத்தில் இப்லீசு லஅனத்துல்லாவும் பெரிய ஷெய்கைப் போல் தலைப்பாகை தடிக்கொம்பு பெரியஜெப்பாக்களைப்போட்டு

க்கொண்டு நீளதாடியும் வளர்த்துத் தொங்கவிட்டுக்கொண்டு என் உம்மத்தில் உண்டான பெரிய மவுல் விகளைப் போலவந்து ஜனங்களை வழிகெடுப்பான் என்று நபியவர்கள் வற்புறுத்திக்கூறியிருப்பதினாலே அவ்வித்தள்ளப்பயல்களை அவன்களது கெட்டச்செயல்களால் கண்டறிந்து விரட்டிவிட்டு தன்னைக்கொண்டும் அடங்கி ஒடுங்கின காமிலான ஷெய்கைப்பார்த்து அவர்பாதத்திற்கு ஊழியஞ் செய்து ஞானஉபதேசம் பெற்று. அவர்சொல்லும் தவத்தைசாதிக்கும்பட்சத்தில் உடனே உன்இருதயத்தைப் பிடித்திருந்த அந்தகார இருள்திரையற்று. பரஞ்ஜோதி மணித்தீபம் உன்மனஸ் என்ற கண்ணுக்கு எதிரே தெரியும் இதுவே சத்தியமானது. ஒரேசொல் என்று அறிந்துகொள்ளப்பா. மாதோ. என்பது இலக்கணஅடைமொழி சுற்றசை. எ-று.

குலங்கொளும்லாஇலாஹஇல்லல்லாஹு வென, வருமூன்னுன் கெழுத்தின்-னங்கொள மைந்தாய்ப் பிரித்தும் பார்க்கில்,முப்புறில் லாவென் இருக்கும் ரண்டாம்பங்கில் அங்கொளி இலாஹ வென்னுமூன்றும், பங்கில்இல்லல்லாவென இருக்கும்நான்காம்-பங்கில் அங்குள அல்லா வென்றிருக்கு, மைந்தாம் பங்கானது ஹு வென லாமால். (18)

(ஞா-பொ-ரை):—இன்னும் லாஇலாஹஇல்லல்லாஹு என்ற இருபத்நான்கு அட்சரத்தையும்ஐந்து பங்காகப்பிரித்துபார்த்தால் ஒன்றும்பங்கில் (லா) என்பது தோன்றும். இரண்டாம் பங்கில் இலாஹ வென்று கானப்படும். மூன்றும் பங்கில்இல்லல்லா எனதோன்றிவிடும். இனிநான் காம்பங்கில் அல்லா. என்றிருக்கும். ஐந்தாம் பங்கில் வல்லமையுடைய (ஹு) என்னும் தத்துவ அட்சரம் வெளியாகிநிற்கும். எ-று.

பூமியுமஞ்சட் புனல்நிறம் வெண்மை, பொருங்கனல் நிறமது சேகப்பு-நேமியில்வாய்கருநிறமவானம், நிறமதுபச்சையாம் நிகழ்த்தில்-லாமியிற் பூமிகைக்குணம்,நாலப்பினிலனவில் முக்குணமாம் ஒமிசை வாய்புக் கிருகுணம், தானுக் கொருகுண மென்றுரைத்தனரே. (19)

(ஞா-பொ-ரை):—இனி அஞசிறுகள் ஒன்றுடன்ஒன்றுகுணங் களில் பேதம் வரும்போது நிறங்கள் இப்படி மாறிவரும் அதாவது, பூமியாகிய மண் ஆனதுதான் வேற்றுமையடைந்த தனாலே மஞ்சள் நிறத்தைக்கொள்ளும் தண்ணீர்தான்து தன் மாற்றமான வெண்மை நிறததையடையும் இதுபோல அக்னியின் நிறம் சிகப்பாகும் இதுபோல காற்றின் ரெங்கும் கறுப்பாக மாறும். இதுபோல ஆகயத்தின்ரெங்கும் பச்சையாகமாறும் இன்னும் முடிவாகச்சொல்ல வேண்டுமென்றால்மண் ஐந்து குணத்தையும் எடுக்கும் தண்ணீர் நான்கு குணத்தையும் எடுக்கும் அக்னிமூன்றே குணத்தை யெடுக்கும். காற்றானது இரண்டுகுணத்தை யெடுக்கும் ஒளிவுக்கு எப்போதும் ஆகாயவல்லமையில் ஒரே குணமாக இருக்கும் இதனாலேதான் றப்பை ஒரே குணத்தில் இருளாகக்கண்டறிய வேண்டியதி. எ-று.

முன்னமே கெந்தமப்பதரசமா, முதிற்கனல் ரூபமும்வாய்வு பன்னுமே-பரிசமொண்டொளிசத்தம்பகுதரம், கெந்தமுமுக்சரம் உன்னும் நாவது தண்ணீர், தமதுவா முறுங்கனல் ரூபமும் வெளியாம்-என்னுமே வாய்வுப் பரிசமாஞ், சடலமிரைந்திடுஞ் சத்தவஞ் செவியே. (20)

(ஞா-பொ-ரை):—இனி அஞசிறுகளின் ரூபகும். வருவது இன்னும்மண்ணான துஅதன்சாரமானதுகெந்தகமாகும் தண்ணீரானது இரசம் ஆகும் அக்கியானதுஉருண்டமணியாகும் அதுவாய்வுடன் கலந்து ரஹித்தபோது. சப்தம் ஓசையுடன் தொனிக்கும். ஆகஎல்லா ப்பூதங்களின் தற்சொரூபங்களெல்லாம்ஒன்றுகூடிகடைசியாக, கபாலமண்டலத்தில் வந்துகூடிக்கொண்டு தொனித்தஓசையுடன் நாதஞ்செய்யும். அதன்சத்காரமுடைய வீடானது. செவியுமன்றி வேறொன்றுமல்ல. இந்தஅந்தரங்கத்தை இந்நூல் ஆசிரியரான மஹாமஹானாகிய மெஞ்ஞானதிவியவாரி நாயகம் பெரியதுஹானா ஆலிமுல் அல்லாமத்து ஒலியுல்லா அவர்களேயன்றிகழிலெந்த ஞானிகளும் உடைக்கவில்லை. முஷாஹிதாவின் தத்வஇருப்பில் யாதொரு சந்தேகி அம்மஹானைநாடிக் கேட்கும் எவ்விதவரமும் ஹாவிலாகும். என்பதை நான் சொல்லவேண்டியதில்லை எ-று.

கண்டாருங் காணுஹவர் வானதைக்,காரண மானகமலத்துள் ளே-விண்டா னின்சானின் கோலத்திலே,வேதம் புறக்கானினுயத் தெல்லா-மன்ருட்டமான நபியிறசூல்,மகிழ்ந்தேயவர்தங்கட்திறக்கி விட்ட-குன்றுதவன் சொன்னன்குறுஆனிலே, குன்துமு கைற வும்மத்தின் தும்முனிலே. (21)

(ஞா-பொ-ரை):—மேலே சொல்லிய ரகசியத்தை அறியவே ண்டுமானல் நப்ஸின் ஹவாவை விட்டாலன்றி முடியாது. அந்த ஹாவாவை ஒவ்வொருமனிதனும் தன்நப்சென்னும் இருதயகமல த்தில்நுழைந்து கைப்பிடியாகப்பிடித்தெரிந்துவிடவல்லமைபடை க்கவேண்டும். அந்தஹவா இருக்கிறபரியந்தம் ஒவ்வொரு இன்சா னும் நிச்சயமாக ஹைவான்களிலும் கேடுகெட்ட ஹைவானாகஇரு க்கின்ருன். இதன் உண்மை யெவனும் அறியவேண்டுமானல்நமது நாயகத்திற்கு ஆண்டவன் உதயமாக்கினகுர்ஆன் ஷரிபில்குன்தும் கைற உம்மத்தின்,, என்றதும் மனைப்பார்த்தால் விளங்கிக் கொள் ளலாம். எ-று.

தந்தை தாலல்லா ஆதந்தம்மைச்,சமைத்தனே கநாட் சென்ற பின்னர்-விந்தை தாத்துடன் சிபாத்துமாக, மேவுஞ்சிரசுக்குட்டா னிறக்கி-முந்தஅசுமாவுமுலுவத்தான, மூட்டவெளி யொளியிருளு மொன்ருய்-இந்த இன்சானிலல்லா சொன்னன், இன்னல் லாகலா எஸ்தகுய்யி தும்முனிலே. (22)

(ஞா-பொ-ரை):—இன்னும் குர்ஆனில் இன்னல்லாஹலா எஸ்தகுய்யா. என்றதும்மனில் றகுமான். சொல்லிஇருப்பதாவது, உணரத்தக்கது, அதாவது, தகப்பனும், தாயுமில்லாமல்ஆதத்தை ப்படைத்து அநேககோடிகாலம் வெறும்பிண்டமாக சாத்திவைத் திருந்து. அப்பால்தாத்தையும், சிபாத்தையும் அதன்சிரசுக்குள் நுழைவித்தோம் அதில் நின்றும் முட்டான் வெளியில் வொளியும் இருளும் வந்து பரவிற்று, என்றிருக்கின்றதை ஆராய்ச்சி செய்யும் போதுஇதில்தான் எல்லாம் வெளியாக வேண்டியதிருக்கிறது உங் கள் பீரிடத்தில் கேளுங்கள், சொல்கிருர்களா பார்க்கலாம். எ-று.

பொதுவானதிர்பூத்துக்கனிபழுத்துப், பொருளானஃதொன் று கலிமாரண்டிற்-சதுமாமறைபதினறு இல்முஞ், சமைந்தவுயிர்

றேயா வானதுவும்-மதுவாய்ஹலறத்துகுதறத்தாக, வள்ளல் நபி தங்கட்காகவே தான்-இதுபாத்தாகவே அல்லாசொன்னன் இலகி யுறத்திதனும் ஜூசுவுக்குள்ளே. (23)

(ஞா-பெர-ரை):—எல்லா சமயங்களுக்கும் பொதுவாகவும் எல்லர் சிருஷ்டி வஸ்துகளுக்கும் முடிவான நினைவாகவும் நின்று ஆலத்தனதளவில் பூரணமயமாகப் பூத்து அதில் நின்றும் வஸ்தை ஆராயும்போது மெய்யறிவு வெளியாகி ஆநந்தித்தல் என்ற மதுரித்த கனியானது பழத்து, பொருளானது ஒன்றே யன்றி இரண்டல்ல என்ற சந்தேகத்தைக்கலிமாவின் பொக்கிஷத்திலி ருந்தெடுத்து வைராக்கியம் பிடித்து. பதினறு இல்முகளும் கூடு ஒரே சொல்லில் வந்து நின்று தீர்மானமாய்றேய், என்ற நான்கு வேத சாரங்களும் ஷெ அட்சரத்திலேயே அடங்கிவிட்டது. ஹக்த ஆலாவின் கமாலியத்தான சூறத்தும் அதுதான் இதைப்பற்றி மிஃறாஜில் நமதாண்டவர்களுக்கு றகுமான் தெளிவாக சொல்லி விட்டான், குர்ஆனில் இலஹியுறத்தென்னும் ஜூஸ்வுக்குள்ளே பார்த்தறியுங்கள். எ-று.

ஒன்றுமில்லாமலிருக்கும்போதி,லுரைக்குமொருசஅத்தம் ம லுக்குள்ளே-விண்ட அலிபுஹே மீமுதானும், விந்தையன்ஃதொரு நுக்த்தாகவே-கண்ட அலிபொருவாவானது, காரணமான வாஹி தியத்தாகப்-பண்டா னவனென்றும் பேரெடுத்துப், பகர்ந்தான் ஒக்கா னல்லாஹு கொபூறுற் றஹீம். (24)

(ஞா-பொ-ரை):—ஏ! ஞானத்தை ஆராய வந்த மனிதனே! நீ ஒன்றும் துனியாவின் தேட்ட ஓட்டங்கள் அற்று, உன்னுக்குள் நீபார்வையை ஒட்டுங்காலத்தில் உனக்குள்ளே நின்றும் ஒரு அசரீரியான சப்தம் கேட்டும். அதானது. ஒருமுத்லக்கான நுக்தாவில் நின்றும் வெளியான அலிபு.ஹே, மீம் தானுமஆக இருக்கும், இன் னும் அந்த அலிபில் வாவானது கலந்துகொண்டதாலே சப்தம் வெளியாயிற்று. அதே காரணமாக, வஹதானீயத்தின் துறை யில் ஆலம் தன் ஹக்கைக்கொண்டும் பலபல கோலங் கோலங்க ளாக, வெளியாயிற்று. அதைப்பற்றி குர்ஆனில் ஒகானல்லாஹு கபூறுர்றஹீம் என்ற சூத்ரத்தில் கண்டறியவேண்டியது, இதன்

ரகசியங்களைப்பற்றி பப்ளிக்காய் வெளியாக்கப்படாது, அது ஏனென்றால் உங்கள் கையில் வசமிருந்து. பணமுடிப்புகளை அபகரித்துக்கொள்ளவேண்டுமென்று வேடந்தரித்து வருகின்ற குருமார்களின் வயிற்றுப்பிழைப்புக்கு ஊனமேற்படுமென்று. அவ்வளவாக வெளியாக்கிடாமல் நிறுத்தி யிருக்கின்றோம். எ-று.

எல்லா திக்றிலும் மேற்றுமாக, எல்லாப் புகழிலுமுயர்த்தியாக-எல்லா தவாபிலும் வரிசையாக. எல்லா வுயிரிலும் நிரப்பமாகச்-சொல்லால் றஹ்மத்துந் துஆவும்நிற்கத், துய்யமுகியத்தீன் ஹல்லா-ஜென்னக்கல்லா வுறாஜுஹுஜுலானதிற், காதிறென்ற சொல்லவர்க்குச் சொன்னான். (25)

(ஞா-பொ-ரை):—சகல உச்சரிப்பிலும், ஏற்றமுடையதாகவும், சகல புகழ்ச்சிக்கும் உயர்தர முடையதாகவும், சகல தருமத்திலும் வரிசை அதாவது. மீசுரம் உடையதாகவும், சகலமான ஜந்துக்களின் ஆத்மங் களிலும் பரிபூரணவடிவாக நிரம்பிப்போயிருக்கின்றதாகவும், உடைய அல்லா என்னும் இணை துணையற்ற வஸ்துவிடத்தில் துஆ இரந்து, துய்தான எங்கள் குரு நாயகம் முஹியத்தீன் திருவருட் பிரஸன்னமும். சற்குருவான ஹுஜரத் மன்சூர் ஹல்லாஜும் என் உறாஜ் றுஸூஹில் வந்து வெளியானதினலே அந்த நாதாக்களின் கிருபைக்கு அளவுகிடையாதென்றே நான் முடிப்பேன். எ-று.

முச்சுடர்ப் படலம்.

பூரண மாயிற்று.

ஆகப்படலம் 18-இ திருப்பாடல், 397.

# முஷாஹிதாப் படலம்.

## தொங்கள்.

விரைவா யெனக்கில்மில்மா திநாளில், வேஷமாறியோர்சன்னா
சிபோற்-றெருவில் வரக்கண்டேவூரி லுள்ளோர்,தெறிகள்பேசித்தா
னோட்டிவிட்டார்-அருமை யுடன்கண்டு சலாமுரைத்தே, னப்போ
முஹம்மதை யெங்கேயென்றார்-உரிமையுள நசீபில்லை யென்றே,
யுமிழ்நீ ரொன்வாயில் இலுநுமிந்தார். (1)

(ஞா-பொ-ரை):—ஹே. மனிதனே என்னில் நடந்த உண்மையை நான் உனக்கு அறிவிக்கின்றேன். காயல் பட்டணத்தில் நான் தாய்தகப்பனிடத்தில் சிறு பிள்ளையாக இருந்து இல்முபடிக்க போட்ட ஆசான்களிடத்திலும் எனக்கு இல்முவரா்த்தினாலே நான் ரெம்பவும் மனவியாகூல முடையவனாக திரிந்து கொண்டிருக்கும் காலத்தில் ஒரு நாள் தினத்தில் வேஷமாறிய அழுக்குக் கோலமுடைய ஒரு சன்னியாசியைப்போல ஒரு பெரியவர் தெருவழியே சில புலம்பலான வசனம் சப்தித்தவராகப்போனார். அப்போது, ஞானவான்களின் அருமை தெரியாதவர்களான ஊர் ஜனங்கள் அவரைக்கண்டு பரிகசித்து ஊரை விட்டும் ஓட்டிவிட்டார்கள், நான் மாத்திரம் அவர்கள் பின்னால் சென்றேன். அவர்கள் என்னைத் திரும்பிப்பார்த்துப் பார்த்து, குறுஞ்சிறிப்புக் கொண்டவர்களாகப் போனார்கள். உடனே நான் அவர்களின் சமுகத்தில் சீக்ரம் அடுத்து ஸலாம்சொல்லி நின்றேன் அப்போது அந்த மஹானவர்கள் என்னை நோக்கி நூஹே! உம் எதிரில் முகம்மது நின்றாரேகண்டீரா? என்றார். இல்லையே,யென்றேன், போகும் நசீபில்லை உமக்கு, என்று சொல்லி, என்வாயைப்பிடித்து, தங்கள் திருவாயின் உமிழ் நீர் அமிர்தத்தை உமிழ்ந்து, நான் தானே் நபியினுறு, ஞானவானுவீர்! என்று கூறிவிட்டு மறைந்தார்கள். எ-று.

உமிழ்ந்தார் வாயிலெற் குடனறிவு, மோசைப் பகுறுபோல்
விரிந்தகல்பும்-நவநீதமான நபியுல்லாவும், நாட்டமாமுஹியித்தீன்
குதுபும்-செவுன முடன்வந்து வாய்திறந்து. இருபை யுடனெனக்

கமுதளித்தார்-தவனமில்லாத முஷாஹிதாத்தா, னன்று மின்று மொன்றுனதுவே. (2)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் நாயகம் கிலுறு நபியவர்கள். திருவாயமிர்தம் உமிழ்ந்தமாத்திரத்தில் எனக்கு உடனே ஞான அறிவு உதயமாயிற்று. மற்றக்கல்விகளும் எழுசமுத்திரஜலம்போல உதித்தது. கல்பும் விஸ்தரிப்பாக விரிந்தது. நமதாண்டவர்களும் செய்யிதினு முகியித்தீன் அப்துல் காதிறுல் ஜீலானியும். மிகவும் அனுக்ரஹத்துடன். என்முசதாவில்வந்து தோற்றரவாகி. தரிசன அமுதளித்தார்கள். அன்றுமுதற்கொண்டு என்மகாம் என்றென்னும் உயர்ந்த நிலவரத்தில் வந்தது. அடங்காதகண் காட்சியான முஷாஹிதாவும் வெளியாய்விட்டது. எ-று.

முன்னமொரொருநாளில் நூஹுறும்நானு, முஷாஹிதாச்செய்யும் போதினிலே-அந்நேரம் அப்துல் கல்திறுவும், அருளும் கிலுறுநன்னபியும்வந்து-பன்னுளுனக்கருள்பலித்ததென்றும், பரிந்தென்வாயினி லமுதளித்தார்-கன்னுசு போனுன் கல்பைவிட்டுக், கடல்போல்விரிந்தது கல்பெனக்கே. (3)

(ஞா-பொ-ரை):—அப்படி இருக்கும் காலத்தில் நூஹு என்றநானும் என்நப்சும் சந்தித்து. முஷாஹிதாவில் இருக்கும் போதையில் நாயகம் அப்துல் காதிறுல் ஜீலானி ஆண்டவர்களும் நாயகம் கிலுறு நபியவர்களும் வந்து. ஹே! நூஹேஉன்முஷாஹிதாவானது எந்தக்காலும் பலித்தது. இதோ இன்னம் ஒருமுறை நீர் அமிர்தம் பெற்றுக்கொள்ளும் என்று என்வாயில் திருஞான அமிர்தத்தை வார்த்துச் சென்றார்கள். உடனே நப்ஸ்அம்மாறத்தென்ற. கன்னுசுஎன்னை விட்டும் அகன்றுபோனுன். அப்போதே ஞானத்தின் வாசலானது கடலைப்போல் திறபிடியாயிற்று. எ-று.

கல்புவிரிந்தது கடல்போலவே கருணை நபியிறசூலைக் கண்டேன்-அல்குல் மாயையை விட்டொழிந்தேன், அலிபுலா மீமும் ஆலம்இம்ருன்-குல்கு வல்லாஹு சூறத்தையும், கோமான்பாத்திஹா வானதையும்-நல்குங் கலிமாவில் அல்லாஹுவை, நாடினேனொருநாள் மறவேன். (4)

(ஞா-பொ-ரை):—அவ்விதம் கல்பானது. சமுத்திரம் போல விரிந்தபோது. அதுஒருபூங்காவனம்போல்வெளியானதின்நடுவே நமதாண்டவர்கள். நபிமுகம்மது முஸ்தபா அவர்களைநான் முக தெரிசனமாகக் கண்டேன். அப்பதான் ஸ்திரீகளின்யோனிமாயம் என்ற பசாசு என்னைக் கைவிட்டு அகன்றது. ஆலிம் இம்றுன்என்ற அலிபு லாம். மீம். என்றதும். குல்குவல்லா சூறுவும். பாத்திஹா சூறுவும். கலிமாவின் அஸ்திவாரமான அல்லாஹு என்றதையும் நான் கைவல்லியப் பொருளாகப் பற்றிப்பிடித்து உச்சரித்துக் கொண்டேயிருந்தேன் அதனலே அநேக நேகமான லாபங்களை நான் அடைந்தேன். எ-று.

தோற்றும்அல்மீறுடன் தம்வீலையும்,துதிக்கும்பிக்குஹுடன் பதினல் இல்மும்-ஏற்றமுளதபு சீறனது, மீதமாம் ஹிதாயத்துக் கணக்குடனே-ஆற்றும் அபுஜத்துநஜுமுடனே, யாகப்பதினெட்டு பாஷையுடன்-சாற்றும் பற்பல வகைவிபரங், தரித்தேன் கல்பிலே யிருத்திக்கொண்டேன். (5)

(ஞா-பொ-ரை):—இன்னும் இல்ஹாமுடைய புறத்தால் வெளியாகக்கூடிய அல்மீறு என்னும் பகுமுடன் தம்வீல் என்கிற மதுஹு செய்கிற இல்மும், இன்னும் பிக்ஹு என்கின்ற மார்க்க ஒழுங்குகளைப் பற்றிய ஷறஉஇல்மும் இன்னும்லெளகீக வைதீக விஷயங்கள் அடங்கிய பெரிய சமுத்திரம்போன்ற பதினன்கு இல்முகளும், இன்னும் திருக்குர்ஆன் ஷரீபின் உண்மை விளக்கமெனகிற. தப்சீரின் பாத்தின்ஸாஹிறு மஆனக்களின் பொழிப்பு விரித்தி. கருத்து முதலான அரத்தங்களும் இன்னும் ஹதாயத்தின் என் எழுத்து முதலிய நூஜூம் அப்ஜத்துகளுடைய அட்சர இன்னும் பரதகண்ட முதலான பலதீபகல்பங்களில் வழங்கப்படுகிற பதினென் பாஷைகளும் இன்னும் கீமியா றீமியா விஷயங்களான இரசவாதம் அஷ்டமஹா சித்து சம்பிரதாயங்களும் அந்த க்ஷணமே. எனக்கு உதயமாகி இருதயம் திறந்துவிட்டது. எ-று.

ஏற்றும் பறக்கத்தா லிதனையெல்லாங், இம்மை தனிர்சொல்லத் துணிந்துகொண்டேன்-போற்றும் பொன்னணி மகுதாமுக்கும்-பொருந்தும் ஸதகத்துல் லாதமக்கும் ஆற்றும் பணிவிடை

செய்துகொண்டே-யல்லல் அஸிபைமுன் னிறுத்திக்கொண்டு-காற்றுக் கடல்போலே யெழுப்பிக்கொண்டு, கருணைநாயனை யோர்பிடியாய், (6)

(ஞா-பொ-ரை):—ஆனதால்மேலே சொன்னமஹான்களின் ஏற்றமான அநுக்ர ஹத்தினலே மேற்கூறிய மோட்சஸாதனங்களெல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு உள்ளா உள்ளபடிநான் அறிவித்தேன். அதுவுமன்றி. அகாயிதுடைய இல்மிலும். அஹ்க்காமுடைய. இல்மிலும் மலையாளம் பொன்னுணி மகுதூம்நாயகம் அவர்களிடத்திலும், காயற்பட்டணம் ஷெய்குல் இஸ்லாம்நாயகம் ஸதகத்துல்லா அப்பா அவர்களிடத்திலும் நாட்டம் பெற்றேன்கல் புனிடமாக ஒரே ஸாதனைவைராக்ய் யோகத்தைக் கைவிடாமலே யேகொண்டேன். அந்தநாளையில் என்மனவாசியானது சண்டமாருதச் சூறவளியால் அடியுண்ட சமுத்ரக்கொந்தளிப்பைப் போல் அடங்காமல் படிபடியாய் ஒருமுடிவான நிலைக்குவந்தது. அப்பால் அஸிபூல்லானவ நினைவுடன் பிணைத்து இறுகக்கட்டி ஒரேபிடிவாதியாய் சஞ்சாரஞ்செய்தேன். எ-று.

சாற்று நீயிந்தத் தௌஹீதிலுந், தனியோன் புராணத்தைக் குருனுயத்தைப்-பார்த்துத்தான்கண்ணுமிகவும்பூத்துப், பயிர்ச்சையாகிய நினைவுண்டதாய்-மூர்த்தியாகிய அல்லா சொன்னுன், முழுதும் பன்னிரண் டாயிரமாய்ச்-சாற்று நீயிதைச் சாற்றினோர்க்குத் தானை றஹ்மத்த துண்டாகுமே. (7)

(ஞா-பொ-ரை):—நமதாண்டவர்களான தாஹா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு ஆதிநாயனுனவன் மிஃறாஜின் இரவையில் ரகசிய ஸாதனமாய் உரைத்தருளிய பன்னிரண்டாயிரம் திருமொழிகளைத்தான் நான் வேதபுராணம் என்றருளிச்செயதிருக்கின்றேன். ஆனதால் யாரப்பா இதை நோட்டமிடுகிறனவானே மஹாஜாக்கிரதையுடன் இந்த அர்த்தத்தில் நீ கண்ணுங் கருத்துமாக நின்று நிதானித்து. உன் ஆழ இருதயமானது படர்ந்து, பூத்து வீசக்கூடிய திவ்ய வாசனையுடைய ஒரு பூங்காவனமாகும்வரையிலும் நல்லுணர்ச்சி செய்து உனக்குள்ளேபதிய வைத்து அடங்கிக்கொள்வாயாக, அப்போது அல்லா உடைய பர

மாநந்தமென்கிற றகுமத்தானது சதாவும் உன்பேரில் சொரியப் பட்டதாக நீயே உன்மன சாட்சியாகக்கண்டு கொள்வாய். எ-று.

வெண்பா.

தனையறிய ஞானந் தானபடிப்போர்க் கெப்போதும்
வினையருக்கும் நல்ல மெய்ப்பொருளா-முனையறிய
வுற்றுறப் படுத்துநீத்த முத்தம்த்தி னுற்றசித்தன்
மெத்த வெற்றி தந்தருளுமே. (8)

(ஞா-பொ-ரை):—தன்னை மனிதன் அறியவேண்டிய இர்மி னுடைய துறையில்தன்மனஸ்ஸப்பூரணமாக நிலைநிறுத்தியவுடனே அவனது. முன்பின் உண்டான பாவதோஷவினைகள் எல்லாம் அக்ஷணமே பறந்தோடும். அதற்கப் பால் நீதமும், ஆழ்ந்த தெளி வுடைய நீள கயூமுமாகிய உண்மையான ஞானப்பொருள் தானே தனக்குள்ளே, உதயமாகி தினே தினே புதிதுபுதிதாக அறிவுன் னும் ஊறுணி ஊற்று ஊறிவழிந்து கொண்டே இருக்கும் அதுந் தவிர சுழி ஸ்தம்ப நிலையிலும் வைராக்கிய நிலையாற் கொண்டு போய் நிற்பாட்டும். அன்றியும் பூலோகஸாதன நடையிலும் மெய் வார்த்தையும், நீதநடையும், தயாள சிந்தையும் ஈவு இரக்கமும் பொறுமையும் அஞ்சாத தீரமும் தானகவே கொடுக்கும் இந்த நல் நடையில் சூதுவாதற்ற பரமாத்தமான செயலும் சில போது வரும் அதனால் உலகவாசிகளான சில பல பரமதடியர்கள் வீன் அபத்த மொழிகளால் தூஷணிக்கத் துணிவார்கள். என்றாலும் முடிவில் அது மேற்படி சூதற்றுத்திரிந்த ஞானவானுக்கே வெற் றிச்சிறப்பைக் கொடுத்துவிடும், எ-று.

கலிவிருத்தம்,

கல்லு முருகு மரா வியபஞ்சிற் கனற்பொறித் தீயதுபோ
லெல்லை யறிந்தவர் வாயுவை யியங்கிடத் தேகமு மப்படியாம்
வல்லவனின்று முறைந்து விளைந்த மவுனச் சுழிமுனையில்
சொல்லது சொல்லா வண்ண முருகிடத் தோத்திர மாய்விடுமே(9)

(ஞா-பொ-ரை):—ஆதியில் பஞ்சியில் பற்றுகின்ற நெருப்பா னது, சக்கி முக்கிக்கல்லை எப்படி உருகச் செய்து வெளிதோன் றிற்றோ, அதுபோல மனிதன் தன் மனஸ் என்ற கல்லில் நாட்ட

மென்கின்ற பஞ்சை ஸ்வாச எல்கையை நிதானக்கணக்குடன் தெளிந்துணர்ந்துவாசியை எற்ற இறக்க பழகிவந்தால் அந்த மன ஸேகாரணமாக புளீர் என்று பரஞ்ஜோதிமின்னல் வெட்டிமறைய் காண்பான் அப்போது உடனே அந்த மனம் இஷ்க்கென்கின்ற அன்பில் பூரணங்கொண்டு மேலே மறைந்து விட்டமஹாமனப் பொருளான் சுழிமுனையில் நின்று ஹையுல்கையூம் என்று தோனித்து வீரமணி யோசைபோல ஒருதோனி கேட்கும், அந்த நீதத்தில் இஷ்கு மீறிவிட்டால் உடனே இந்த சுக்கிசரீரமும் அதன் நபசுகளும், தன்னை மறந்துவிட்டு. பூரணம் என்ற சமுத்திரத்தின் அலைகள் எழுந்து மோதும்படியாகி நின்று சொக்கும் அப்போது ஹக்கும் கல்க்கும் ஒன்று பட்டு விர்வி அந்த அன. அதாவது:— நீயே நான் என்று கலந்து நின்று அனல் ஹக்கு என்று ஜொலிக்கும். எ-று.

ஆசிரியவிருத்தம்.

தோத்திரமாம்பவளமொடுபளிங்குபோலே,யுலங்கும்நீலமணி போலேசுழிமுனைக்குட் பாத்திரமாயிருக்கும்பெரியோர்கட்காகப் பரமநபி குருவாக வுலகில்வந்து-நேத்தியுடன் குபிரறுத்தே யும்மத்தோக்ர்கு, நினைவுகலங்கா திருங்கலென்றே நன்றாய் தேற்றிமன துறைந்தஇருப்த்திநாலுஞ்,சிவயோக ஞானமெனச் செப்பினரே()

(ஞா-பொ-ரை),—ஒ ஷெய்குமாரிடத்தில் முரீதைப் பெற்று நல்ல உறுதியான இல்மை இரு பேருந் தெரியாமல் தட்டழிகின்ற மௌடீக ஜனங்களே! கேளுங்கள் சுழிமுனை என்றதை நீங்கள் மூக்கந்தண்டு என்று குறிக்கின்றீர்கள், அது அப்படியல்ல இரு கண்களின் பார்வையின் ஒழுங்கு எப்படி பாய்கின்றதோ? அது தான் அதிலே பவளம் போன்ற சிகப்புரங்கும், பளிங்கியைப் போன்ற வெண்மை ரங்கும் நீலரத்னம் போன்ற கரிய ரெங்கும் நன்றாக வட்டமிட்டுத் தெரியும், இதுதான் முச்சுடர் வட்டம் என்று உணர்ந்துகொள்கின்ற பெரியோர்களுக்கு வேண்டியே. நமது பரமசற்குருவாகிய தஹாநபியவர்கள் இந்த பூலோகத்தில் மனித அவதாரமெடுத்து வந்தார்கள். அத்துடன் குர்ஆன் என்ற ஞான வேதத்தையும் அத்தாட்சியுடன் கொண்டுவந்து குபிரியத் தென்னும் அஞ்ஞான இருளைக்களைந்து தமது உம்மத்துகளுக்கு

னினவை வேறுபடுத்தாமலும், கலங்கவிடாமலும் இருங்கள் என்று ஒருஇருபத்து நான்கு அட்சரத்தில் சூத்ரமொன்றுசெய்து அதை கலிமாமந்திரமாகக்கொடுத்தார்கள். மேற்படி அட்சரம் இருபத்து நான்கும் சிவயோக ஞானம் என்றும் பிரித்துச் சொல்லிவைத்துச் சென்றார்கள். எ-று.

செப்பினு ரிந்தவன்க ஷெய்குமார்குத், தேகமதி லீராறு கலை தன்னிலே மெப்புறவேபிருகுதிவியிலொன்றையாம், விரிவான அப் பதனிலொன்றேகாலாம்-செப்பமுடன்தேயுவுதனிலொன்றதாகும் திறமான வாய்வுதனிற் காலதாகும்-ஒப்பமுடன் ஆகாச மறவேயா ஹூ, மொன்றுபட விருந்துகுரு நிலையைப்பாரே. (11)

(ஞா-பொ-ரை):—நபியவர்கள் ஞான விஷயத்தில் உபதேசிக் கும்படியான குருமார்களுக்கெல்லாம் சொன்ன மகிமையான உப தேசமானது யாதெனில்:—நமது உடலத்தில் ஓடிக்கொண்டிருக் கும் பனிரண்டு சுவாசகலைகளிலும். முதலாவது மண் என்ற பூதத் திற்கு ஒன்றரைப்பங்குகலையும், தண்ணீருக்கு ஒன்னேகால் பங்கு கலையும், இனி அக்னியின் பங்குக்கு ஒரேயொருகலை பங்கும், காற்றுக்கு கால்பங்குகலையும். இனி ஆகாயபற்திற்கு. ஒன்றுங்கிடை யாது, சிவாய் யாஹூவாகவே நீ உன் சுவாசத்தில் இருத்தி ஒன்றுபட்டு இருந்து குருவுடைய நிலையை நோக்கி வரவேண்டி யது. எ-று

பாரப்பாபிருதிவிற்கவிழ்ந்தேயோடும், பரிவான அப்பதனில் வலத்தேயோடும்-சேரப்பாதேய்வுதனிலிடத்தேயோடும் திறமான வாயுதனில் நேரேயோடும்-ஓரப்பா அந்தரத்தில் மேலேயோடு மென்றெனுங் குறைவுபடா துற்றுநோக்கு-ஆரப்பா இந்நூலைப் பார்ப்பார் கேட்பா, ரறிவான மூமின்கட் கருள்செய்தாமே (12)

(ஞா-பொ-ரை):—அப்படி நீ இருந்து, குரு நிலையாற்றரி பட் டுப்பார்க்கும்போது. மண்ணுடைய பங்கில் உள்ள கலையானது கவிழ்ந்து கொண்டோடும் இன்னும் தண்ணீரில் ஓடக்கூடிய சரமா னது. வலதுபக்கத்தில் விழுந்தோடும்-இன்னும் அக்னியில் ஓடிக் கொண்டிருக்கின்ற கலையானது இடதுபக்கத்தில் விழுந்து ஓடிக் கொண்டிருக்கும் இனி காற்றின்மேல். எழுந்தோடக்கூடிய கலையா

னது. சுழிமுனை மண்டலத்தின் நேர் நேரே ஓடிக்கொண்டிருக்கும் இனி ஆகாயத்தில் வீசி யோடுகின்ற கலையானது கபாலத்தின் மேலே இடவலம் பிரியாமல் கதிரின் கூர்மையைப்போல் நிறைந்து ஒழுங்காகவோடும் ஆர்டா அருமை வாய்ந்த மாணாக்கனே இந்த நூலின் அருமை பெருமைகளை தன்னையும் தன் கலைகளையும் நல்ல தெள்ளத்தெளிந்த மூமீன்கள் என்ற மஹானுபவர்களே அறிவார்கள் ஆனதாலே நாமும் அந்த ஒரு சிலர்க்கு மாத்திரமே இது விபரம் அவிழ்த்துச்சொன்னமே ஒழிய மற்ற பலர்க்குமல்ல. எ-று.

அருள்செய்தோ மொன்றைக்கழூபக்காரணியணியாய், முஷாஹிதாவி லவரைக்காணும்-பொருள்செய்தோ மொன்றேகாலுமறதாகும், பூதத்தில் முறுக்கபாவி லவ்வரைக்காணு-இருளற்ற வுதுமாணு மொன்றுதன்னி,வியல்பாக இருத்தி லவரைக்காணும்-மறுளற்ற முறுக்கபாவி லலியைக்காணு, மவுனமுற்ற ஆகாசம் பாத்திமானே. (13)

(ஞா-பொ-ரை):—இன்னும் மேற்படி கலையில் ஒரு காட்சி அதாவது, ஒன்றரைக்கலை யென்று எந்த பூதத்தை சொன்னமோ அதில் அபூபக்கரை முஹிதாவில் காண்பீர்கள். இன்னும் ஒன்றே கால் என்று எந்த பூதத்தை யறிவித்தோமோ அதில் உமறை முறுக்கபாவில் காண்பீர்கள். இனி ஒருகலை யென்று எதை நாம் தெரியவைத்தோமே அதில் உதுமானை இருதயத்தில் காண்பீர்கள் இனி நாம் காற்கலை யென்று எதைச்சொல்லிவிட்டோமோ. அதில் அலியை முறுக்கபாவில் காண்பீர்கள். இனி ஆகாயத்தில் பாத்திமாவை மனவாசியில் தரிசிப்பீர்கள். எ-று

பாத்திமா ஷெய்குசிந்தா மாதறுக்கீந்த, பரிவான வுபதேசம் பகரகேண்மோ-ஆத்துமா இந்தநிலை நிற்கும்வேளை, அலிபுனிசானருள்நோக்கிப் பார்க்கும்போது-சிற்றமுடனெட்டுநால் கழியவுற்றுத்திறமாகக் கழியாமற் கட்டிவிட்டாற்காத்திருக்கும் இல்லல் லாஹு ஙின்னூறைக்,காணலாம் கண்டொன்றாய்க்கூடலாமே(14)

(ஞா-பொ-ரை):—எங்கள் பூலோக ஞானமாதாவாகிய பாத்திமா நாயகமவர்கள் ஷெய்கு ஷாஹு சிந்தாமதாறு அவர்களுக்கு உபதேசஞ்செய்ததாவது:—ஆத்மங்களான பூதங்கள் இந்த

விதமான கணக்கில் பாயும்போது, நீ அலிபில் அதாவது அக்மல் ஷஹூதை நிலையில் தரிபடுத்திப்பார்க்கும் தரத்தையடைந்தாயானால் மேற்படி யிரண்டு சுவாசக்கலைகளும் ஒன்றொன்றாய்க்கழிந்து ஆகாயத்தைப்பூரணம்பண்ணிக்கொண்டால் சிவாய்நினவொன்றே மீதமாய் இருந்து விளங்கும். அப்போது இல்லல்லாஹு என்றதில் உன் அசலியத்தான ஒளிவை நீ பளீரென்று மின்னக்காண்பாய். அப்போது அந்த ஹூவில் நீ ஒன்று கூடிக்கலந்துகொள்ளலாம் என்று நாயகியவர்கள் உபதேசித்தார்கள். எ-டு.

[இதனால் ஷாஹ்லிந்தாமதாறு அவர்கள் நாயகத்தின் காலத்திலும் இருந்ததாக இது விஷயத்தால் விளங்கிற்று.]

விருத்தம்

பிருதிவிக்கோடும்போதுபெலத்தஇல்லல்லாஹூவென்றுறுதி
யாய்நூறுவட்ட முரைக்கப்பொன்னொளிபோற்றோற்றும், பொரு
தித்தண்ணீர்க்கோடும்போதுபொருளலா நூறுவட்டம்,அறுதியா
யுரைத்துவந்தா லருட்பளிங் கியைப்போற்றோற்றும், (15)

தேய்வதுக்கோடும்போதுதிருவொளி ஹூவல்லா வென்றே
ஆயந்தொரு நூறுவட்டம் முறுக்கம்பூப்போலத்தோற்றுந்
தோய்வாய்வுக் கோடும்போது துலங்கியே நிலவு தோற்றும்
செய்வெளிக் கோடும்போதும் திருவொளிகாணுந்தானே (16)

(ஞா-பொ-ரை):—மண்ணுடைய பங்கில் கலையானது ஓடிக்கொண்டிருக்கும்போது இல்லல்லாஹூ என்று நூறு வட்டமிர்துவாக நினைவில் உரைக்க ஒளிவானது பசும்பொன்னில் உள்ள அழகு பிரகாசம்போல் வெளியாகும் இன்னும்கலையானது தண்ணீரில் விழுந்து ஓடும்போது அல்லாஹு என்று நூறுவிடுத்தம் நினைவில் உரைக்க. சுத்த பளிங்கியைப் போல் காட்டித்தோற்றும் இன்னும்அக்னியில் நின்றோடும்போது. நினவில் ஹூவல்லா. என்றேவைத்து நூறுவிடுத்தம் எடுத்தால் முருங்கைப் பூவைப்போல் ஒளிபூத்துத்தோற்றும். இன்னும் கலையானது. காற்றில் இருந்து ஓடும்போது. பூரணசந்திர கோலத்தில் வந்து வெளியாகும். கலை

யானது ஆகாய சம்பந்தத்தில் வந்திற்றே யாகில் இலாஹிமுத்ல க்காத்தென்னும் பூரணமகுமானுடைய திருவொளிவைத் திட்டமாகக்கண்டு கொள்ளலாம். எ-று.

வேறு.

செப்பினு நிந்தநூலைத் தேசத்தோர்க்குச்
சிரப்பாக இரவிதிங்கள் நிற்கும் நிலை
மெய்ப்புறவே பிருதிவியி லொன்ப தாகும்
விரிவான அப்பதனி லேழன்றஇயாம். (17)
செப்பமுடன் தேய்வுதனி லாறதாகும்
திறமான வாய்வுதனில் நாலன்றைஇயாம்
ஒப்பமுட னகாசமூன்றேயாகு
மௌடுங்குநிலை பெற்றோர்க்கிங் குரைத்ததாமே. (18)

(ஞா-பொ-ரை):—நபிநாயகமவர்கள் உம்மத்தோர்களுக்குச் சொன்னார்கள். ஏ! ஜனங்களே! உங்கள்வாசியானது நிற்கின்ற நிலையானது. சூரியகலையும்சந்திரகலையும் தனித்தனியாகமண்ணில் ஒன்பதுகலையாகப் பிரிந்தோடும். தண்ணீரில் ஏழுரைக்கலையாக வோடும். அக்னியில் ஆறுகலையோடும் காற்றில் நலரைக்கலை ஓடும் ஆகாயத்தில் கலையானது மூன்றுஓடும். இந்த அறிவை அகங்காரத்தை யொடுக்கி மௌனத்தில் அடங்கிய நல்லோர்களுக்கு நாம் சொன்னோம். என்று ஆண்டவர்கள் திருவாய் மதுரந் தூற்றினார்கள். ஞ-று.

## முஷாஹிதாப் படலம்.

பூரண மாயிற்று.

ஆ படலம் 19க்கு திருப்பாடல் 414.

# ஈரடிக் கொச்சகப்படலம்

## தொங்கல்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீமென்றேத்
தசுமனைத் தூராக்கித் துரத்துவது மெந்நாளோ. (1)

(ஞா-பொ-ரை):—நான் ஆதிவஸ்தாகிய பிஸ்மில் அஉலத்தை அந்தவேளையும் உச்சரித்து அதனால் துஷ்மனாகிய இப்லீசென்ற

நப்ஸ்அம்மாருவின் நடவடிக்கைகளை யெல்லாம் விலகியோடச் செய்வது எந்தநாள். எ-று

அல்ஹம்து லில்லாஹிறப்பில் ஆலமீ னென்றோதிச்
சல்ஹாயிருந்தே சுகம்பெறுவ தெந்நாளோ. (2)

(ஞா-பொ-ரை):—இன்னும் அல்ஹம்து என்கின்ற பஞ்சாட்சரத்தை மனதில் ஊசாட்டங் கொள்ளும்படியாக. நப்ஸு முத்ம இன்னுவில் நான்சமா தானம் பெரும்படியாக சுகத்தையடைவது எந்தநாள். எ-று.

அர்றஹ்மா னிர்றஹீ மதையனுதினம்மோதி
ஷர்று நம்மில் கைறவனிற் சாட்டுவது மெந்நாளோ. (3)

(ஞா-பொ-ரை):—அர்றகுமானிர்றகீம் என்றதிக்றை ஒப்புக் கொண்டு நம்மில் உள்ள நன்மை தீமைகளை நம்மில்நின்றும் அகற்றிஎல்லாம் அவன்செயலென்றே. உறுதிபடுத்தி. அப்பநிஞ்சாட்டுவதும் எந்தநாள். எ-று.

மாலிக்கி யுவுமித்தீனை மறக்கமா லேயோதிக்
கூலிக்காசை வைக்காமல் ஹப்புவைப்ப தெந்நாளோ. (4)

(ஞா-பொ-ரை)—மாலிக்கி எவ்மித்தீனுடைய பாத்தின்மஅனவை உண்மையாக அறிந்து வேலைசெய்துகூலிகிடைக்குமென்று கிற்கும்அடிமைப்பயலைப்போல்சுவர்க்கஇன்பமும். அதிலுண்டான அழகியசுந்தரமாதர்களும் கிடைக்கும்என்று பேராசைகொண்டு தொழாமல் உள்ளபடியானஈடேற்ற மோட்சத்தைபெறஅன்புடன் பாடுபடுவது. எந்தநாள். எ-று.

இய்யாக்க நஃபுது யிணையின்றி யோதிப்
பொய்யாம் பொறிவழியைப் போக்குவது மெந்நாளோ. (5)

(ஞா-பொ-ரை):—இய்யாக்கநஃபுது, என்று இணைவைக்காத ஒருமைநிலையில் மனசை. நிறுத்தி வீண்மயக்கமானநப்சுகளை அறப்போக்கி நப்சுமுத்மஇன்னு என்னும் தன்னரசு சுதந்தரம் பெறுகிறது எந்தநாள். எ-று.

நன்னயவ இய்யாக்க நஸ்தஹீ மென்றோதித்
தன்னைப்பனு வாக்கிநித்தந் ததும்பிநிற்ப தெந்நாளோ. (6)

(ஞா-பொ-ரை):—அப்பால் ஒஇய்யாக்க நஸ்தஈன் என்றுவாக்கால் மொழிந்து. அதன்பாத்தின்ம அனுவுக்கிணங்கதான் என்றதன்னை அதாவது. நப்சுஇன்சானி என்னும்ஆசைவகாமியங்களைப் பனுசெய்து, எக்காலமும்பரமாநந்தக் கடலில்கிடந்துமிதந்துததும்புகிறது. எந்தநாள். எ-று.

இஹ்திநஸ்ஸி ருத்தல் முஸ்தகீ மென்றோதி
மகுதியாக வேயிருந்து ம்வுத்தாவ மெதந்நாளோ. (7)

(ஞா-பொ-ரை):—இஹ்தி நஸ்ஸிருத்தல் முஸ்தகீனென்னும் சுவர்னசூத்ரத்தின் மெய்அர்த்தத்தின்படி உலகத்தில் சர்வஜனங்களுக்கும் பொதுவாகநின்று, நியாயம் சொல்லிவிடக்கூடிய ஞானந்தியென்னும் ஞாயாந்தியாக இருக்கக்கூடியது எந்தநாள். எ-று.

சிறுத்தல்ல தீனவுடன் அன்அம்த. அலேஹிம்மினித்க்
கருமத்துள்ள பேர்களைப்போற்காட்சிபெற லெந்நாளோ.(8)

(ஞா-பொ-ரை):—சிறுத்தல்லதீன அன்அம்த அலேஹிம் என்னும் பெரும்பதவி யடைந்தவனுக ரகசிய விஷயங்களை உணர்ந்துவிடக்கூடிய சங்கல்பவாளனுக ஆகுதல் எந்தநாள். எ-று.

கோய்ரில்மகு லூபி அலேஹிம் குல்பானதையோதிக்
கைரூனவ ரிற்சேர்ந்து கரைசேர லெந்நாளோ. (9)

(ஞா-பொ-ரை):—கொய்ரில் மகுலூபி அலேஹிம். என்றதை சரிவர உணர்ந்து. கொண்டு. அதன்படி நடந்து கரையேறினமஹான்களில் சேர்ந்து. கதிமோட்சம் பெருகிறது, எந்தநாள். எ-று.

ஒலல்லா அல்லீன் ஆமீனென் றுடுக்கமித னையோதிப்
பலன்கெட்டபூகையருடன்பகைத்திருப்பதெந்நாளோ (10)

(ஞா-பொ-ரை):—ஒலல்லாலீன் ஆமீன் என்று, கடைசிதீர்மானமான மதுரிபாவில் தரிபட்டு உலகமயக்கங்களில் கிடந்து மனசை நாயாக்கிக் கொண்டலைகின்ற. ஒருபயனும் பெருதபூலோ ஜனங்களின்கொடிய எல்லாநடத்தையும் விட்டும் ஒதுங்கியிருக்கின்றது. எந்தநாள். எ-று.

குல்ஹுவல்லா ஹூ அஹதைக் குற்றமில்லாதேயோதி
அல்லும் பகலுமதி லமையும்நா ளெந்நாளோ (11)

(ஞா-பொ-ரை):—குல்ஹூ வல்லாஹூ அதைநல்லதெளிந்த அறிவுடன் அறிந்து, அல்லும் பகலும் நினைப்பை அதில்அமைத்து விட்டிருப்பது எந்தநாள். எ-று.

அல்லா ஹூஸ்ஸமதென றனுதினமு மேயோதி
எல்லாத்தே வையுமவனென்றென்னுவதுமெந்நாளோ (12)

(ஞா-பொ-ரை):—அல்லாஹூஸ்ஸமதென்று.எந்தசமயமும் திக்றுசெய்து உலகத்திலுண்டான சர்வதேவையும் அவனதே என்று தீரமுடன் எண்ணிவிடுவது எந்தநாள். எ-று.

இன்னுமவன் லம்யலிதும் வலம்யூ லதுவென்ன
முன்னவன்றன்னடிமையென்றுமுறுதுவைப்பதெந்நாளோ (12)

(ஞா-பொ-ரை):—இன்னும் அந்த இணைதுணையற்ற வஸ்தானது. லம்யலிது. ஒலம் யூலது. என்று. எல்லாப்பூதியங்களையும் வல்லமையென்னும் பரஞ்சோதிக்குள் அடிமையாக ஆக்கிஆட்சி புரிகிறதாக. இருக்கும் என்று மனசுடன் ஒப்புக்கொள்வது எந்தநாள் ஏ-று.

பெண்ணாசை மண்ணாசைப் பொருந்தாச் செயல்களெல்லா
மெண்ணாசையால்வந்ததையிறைபொறுப்பதெந்நளோ (14)

(ஞா-பொ-ரை):—இன்னும். பெண். பொன். மண். என்றமூன்று ஆசாபாசங்களும். அதனால்இன்சானுக் கேர்ப்பட்டிருக்கின்ற பல அநீதச்செயல் கேடுகளையும். தான்என்ற அகங்கார இபுலீசினின் நப்சுஆகிய அம்மாருவின் கொடியதூண்டுதலின்பேரில் ஏற்பட்டதென்று. ஸமதிடத்தில் பிழைபொருக்கத் தேடுவது எந்தநாள் எ-று.

நன்மை தீமையெல்லாம் நாயன் பரமானாலும்
தின்மைநபு சின்கோட்டைத்திருத்துநாளெந்நாளோ. —(15)

(ஞா-பொ-ரை):—நன்மை தீமைகள் மேற்படி ஸமதின் புறத்தால் இருந்துவந்தது. என்று உண்மையில் இருந்தாலும் அந்ததீமைகளைச் செய்கின்ற நப்சின்கொடிய கோட்டைவாசலைத்திறந்து அதில்கூடிப்போய்கிடக்கின்ற கருமமூட்டைகளை வாரிவாரி. எடுத்தெரிகின்றநாள் எந்தநாள். எ-று.

கன்னுசு வைத்தான்கலையிலகப்பட்டதனை
லுன்னுசை யைமறந்தே னுதவிசெய்வதெந்நாளோ (16)

(ஞா-பொ-ரை):—இலாஹியானாயனே உன்னுடைய றகு மானியாவென்னும் கோட்டையில் நின்றும். நான் ஆலம்இன்ஸானு க்கு விஜயம் செய்தபோது. இடைவழித்தபீடனை இப்லீசின் மாயக்கலவிக்குள் அகப்பட்டு சொல்லரியமுஹாமேன்மைவாய்ந்து நிற்காநின்ற உன்மீது ஆசைவைக்குதலை மறந்துதட்டழிந்தேன் இப்போதுமறுபடியுந்திரும்ப நின்மஹாசமுகம்வந்துநிற்கின்றேன் முகத்தைநீ திருப்பிக்கொண்டால்எனக்குப் புகலிடமெது நாயனே உன்னுடைய அருளானகிருபையைச்செய்துத்தான் தீரவேண்டும். அதுஎந்தநாளில்சொல் எ-று.

அடிமைக் கிணக்க மாண்டவனே நீயறிவாய்
மிடிமைவரா மற்காத்து மீட்டுவது மெந்நாளோ. (17)

(ஞா-பொ-ரை):—கிருபையான ஆண்டவனே. இந்தஅடிமை யின்நிர்வாகம்யாவற்றும்அறிந்தவனாக. நீயிருக்கின்றாய். ஆனதால் உலகத்தில் தரித்திரியம் என்றது. என்கிட்டயும் அண்டிவிடாமல் நீகாப்பாற்றியருள்வாயாக. அப்படி நீ செய்து நல்லவர்களில் ஆக் கிவிடுவது எந்தநாள். எ - று.

உஜூதொன் றெனச்சொல்லி யுள்வணக்கந் தெரியாமல்
ஸுஜூதும் றுக்கூவுஞ்செய்துஷுக்கூறுசெய்வதெந்நாளோ

(ஞா-பொ-ரை):—உன்னுடைய உஜூதாகிய நேத்ர ஒளியை நான் சந்தித்து அதற்குஉள்வணக்க மென்கின்ற இஷ்குகொண்டு சுஜூது. றுக்உக்கள் செய்துகொண்டு. அதேகவலையாக நடமாடு கின்றது. எந்தநாள். எ-று.

ஷுஹூதுமூன்று வகையிற் றய்யவனைத் தெரிசனித்துச்
சுக்கூனை வேயிருந்து சுகம்பெறுவதெந்நாளோ. (19)

(ஞா-பொ-ரை):—மூன்று வகையான ஷுஹூதில் உன்னைத் தெரிசனை செய்து. எங்கும்பரிபூரணமாகின்ற ஏகவெளியில் ஆனந் தியாக அமர்ந்து. சுகத்தை யநுபவிப்பது. எந்தநாள். எ-று.

கலிமாப் பொருளறிந்து காஷிக்கைத் தெரிசனித்தே
யொலிமார்குணங்கள்கொண்டேபொசிலாவதெந்நாளோ (20)

(ஞா-பொ-ரை):—கலிமாவின் பொருளில் அசலியத்தான வஸ்துவைதெரிசனைசெய்து ஒலிமார்கள் வின்மேலானநற்குணத்தில் மனசுதரிபட்டு வெற்றிஅடைவது எந்தநாள். எ-று.

எல்லாச் செயலினிலு மிறையோனைத் தெரிசனித்துப்
பொல்லாக்குணத்தைவிட்டுப்பொருந்துவதுமெந்நாளோ (21)

(ஞா-பொ-ரை):—இன்ஸானுடைய துர்க்குணங்கள்ஒவ்வொன்றையும் ஒழித்துவிட்டு. நற்குணங்கள் ஒவ்வொன்றிலும் அல்லாவுடைய பூரணதரிசனங்காணப் பெற்றவனாக. அத்துடன்ஒன்றாய்ப் பொருந்திவிடுகிறது எந்தநாள். எ-று.

ஏழுசிபத்து மிறையோனுக் கென்றுகண்டே
யேழைகளைப்போ லிருப்பதுவு மெந்நாளோ. (22)

(ஞா-பொ-ரை):—சிபத்துகள் ஏழும் அல்லாவுக்கே சொந்தமென்று ஒப்புக்கொண்டு இன்ஸானியாவுக்கு யாதொரு தத்துவமும் கிடையாதென்று அநாதியாக இருப்பது எந்த நாள். எ-று.

உள்ளமை யுடையோ னொருவனென்று தெரிசனித்துக்
கள்ளமையாய்க் காணாமற் காட்சிபெற லெந்நாளோ. (23)

(ஞா-பொ-ரை):—உண்மையுடைய ஒரு வஸ்துவை உண்மையுடைய தெரிசனத்தில் வெளியாகும்படி உண்மையில் கண்டு அப்பால் கள்ளத்தனமான பொய் சொப்பனக்கிருத்தியங்களை யெல்லாம் நிறுத்தி மெய்நினைவான ஒரே கனவாகக் காண்கின்றது. எந்தக் காலம். எ-று.

அகமியத்திற் செய்கிறவனவ னென்று தெரிசனித்துப்
பகைமைத் தனத்தைவிட்டுப்பலன்பெறுவதெந்நாளோ. (24)

(ஞா-பொ-ரை):—மனிதர்களுக்கிடையில் நடை பெறுகின்ற சர்வகருமங்களும் தஜல்லியின் புறத்தால் நடைபெறக்கூடியது: உண்மையின்ரகசியம். என்று உறுதியாக அறிந்து தெளிவடைந்த பின்னர். மனிதர்கள் தங்கள் நப்சியானியத்தின் கோளாறுகளுக் கிணங்கி ஒருவருக்கொருவர் ஆணவங்கொண்டு பகைகள் கொள்ளும் நாய் சுபாவ துர்க்குணங்களை, விட்டு விட்டு நல்ல புலன்களைப் பெறுகின்றது. எந்தக்காலம். எ-று.

குல்லும்றசூலொளியிலென்றுங் குதாயையளியிலென்றுமதி
லல்லும்பகலு மமையுநா ளெந்நாளோ. (25)

(ஞா-பொ-ரை):—படைத்த உலகப்பொருள்கள் யாவற்றும். அல்லாவின் ஒளிவில் நின்றும் றசூல் உடைய ஒளிவில் நின்றும் வெளியாகிறதென்று அறிவிற்றானே உதயமாகி அதன்படி இரவு பகலாக அமைந்துகொள்கின்றது. எந்த நாள். எ-று.

துனியாவி லேயிருந்து தோஷங்கள் செய்யாம
லனியாயம் வாராம லகஞ்செய்வ தெந்நாளோ. (26)

(ஞா-பொ-ரை):—இந்த மாயாவினோதமான பூலோகத்தில் இருந்து, அறிவில்லாத பரமதடியார்களின் உடனிருந்து தோஷ வினைகளைச்செய்யாமலும், அநியாயமான நிலைவரங்களை தாமே வருத்திக்கொள்ளாமல் அப்படியே உலகப்பற்றைஅதாச்செய்கின்றது. எந்தக்காலம். எ-று.

ஆலத்தி லவ்வையல்லா லவனன்றி வேறுமுண்டோ
கோலமவன் கோலமென்று குறிக்கும்நாளெந்நாளோ. (27)

(ஞா-பொ-ரை):—உலகத்தின் படைப்பினம் என்றெழுந்திருப்பவைகள் அடங்கலும் அல்லாவின் ரகசிய உண்மையேன்றி வேறொன்றும் இல்லை என்னும் அவைகளின் அசலியத்தின் புறத்தால் அவையவைகள் எடுத்துக்கொண்ட கோலங்களான ஜடலங்களும் அவனது. சூறத்தே, என்று. ஒப்புக்கொண்டு விடும் நாளானது எந்த நாள். எ-று.

உஜூதுமுகிப்பு முடையோனுக் கென்றுகண்டு
சுஜூதில் ஷுக்கூறுசெய்து சுகம்பெருவ தெந்நாளோ. (28)

(ஞா-பொ-ரை):—உஜூதும் அத்துடன் தெளிவடைதலால் உண்டாகும் மனக்கட்சிகளின் இல்ஹாமுடைய உதிப்புகளும் அல்லாகுத்தஆலாவின் தஜல்லியாத்தின் புற்த்தால் நின்றும் வெளியாகுதல் என்று உறுதியாகக்கண்டு அந்தமகிழ்ச்சிக்காக அல்லாவை சுஜூதுசெய்து. சுக்றும் நல் மாராயமும் செய்து சுகமாக இருக்கின்ற நாளானது எந்த நாள். எ-று.

இணையென்றஷிறுக்கையு மெதிரியென்றவநியத்து
மணையவொட்டாமற்காத்தே யருள்பெறுவதெந்நாளோ. (29)

(ஞா-பொ-ரை):—இணை என்று சொல்லப்பட்ட குபிரியத்தையும். அத்துடன் கூடிய அகங்காரம் காமியம் மாயாவிகாரம். என்ற அநாதியந்துக்களையும் இருதயத்தில் வந்து கலக்க ஒட்டாமல் காத்து மனதை நல்ல பக்குத்தம் பண்ணிவைத்தல் என்னும் திருவருள் கடாட்சத்தைப் பெறுகிறது. எந்தக்காலம். எ-று.

பாகில் மவுனமூதுபகுபூப் பதுவகையும்,
நாபிசிவா கலிமாவில் நவிசெய்வ தெந்நாளோ. (30)

(ஞா-பொ-ரை):—மவுனமூதிதென்னும், யோக நிலையில் உள்ள எல்லா சாதனங்களையும் வகைக் வகையாகச்செய்து மூலாதாரத்தில் இருந்து நாபியந்தம் என்கின்ற உந்தியின் வழியாக இழுத்துவாங்கும் சுவாச அம்சங்களுடன் கலிமாவைப் பொருந்திவிடச்செய்து மற்ற கருவிகரணங்களை அந்த நாட்டத்துடன் பனுச்செய்து, ஒன்றுபடுத்தக்கூடிய காலம் எந்தக்காலம். எ-று.

கல்க்குசிய லில்லையென்று கல்குனுயாத் தில்லையென்றும்
கல்குத்தா னில்லையென்றுங் காணுநா ளெந்நாளோ. (31)

(ஞா-பொ-ரை):—கல்க்கு என்கிற, சிருஷ்டிப் பொருளாயுள்ளவைகளுக்கு ஒரு செயலும் சொந்தமில்லை என்றும் இன்னும் கல்க்கானது, ஆத்மத்தின் பூரணசக்திகளுக்குள் ஒன்றிலும் சம்பந்தப்பட்டதே இல்லை என்றும் இன்னும் கல்க்கானது, ஒரு சக்திகொண்டுதான் என்ற வாய்ப் பேச்சுகளைப்போல் உண்மையில் அது அப்படி இல்லையென்றும் உறுதியாக ஒப்புக்கொண்டு அதன் பின் காட்சி தோரணைக்களைக் கண்டிருக்கின்ற காலம் எந்தக்காலம். எ-று.

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணியெண்ணி ப்பாரமற்
கண்ணாடிக்குள்ளொளிபோற் கண்டுநிற்ப தெந்நாளோ. (32)

(ஞா-பொ-ரை):—பல்பல தோரணையாகப்பிரிபட்டுப்போய்க் கிடக்கின்ற பல விதசாஸ்திரங்கள் வெளிப்படையாக எழுதி ஆபிக்கின்றதைப் போல் மனசை ஆடவிட்டு அவைகளின்படி எண்ணத்தையும் சாடவிட்டு வீணுக்குழைத்துப் பயன் அடையாமற்போய் விடாமல் ஒரே சொல்லான மெய்சாதனத்தின் படியான நேத்ரக்

தில் ஆடிநிற்கும் பரஞ்ஜோதியாக ஒருசிறு ஒளிவையே ஹக்கி கத்துறைப்பாணியாக ஒப்புக்கொண்டு நடத்தைகளை திருத்திக் கொண்டு விடுகிறது, எந்தக்காலம். எ-று.

வாசித்துக் காணாமல் வீழ்ந்துவிட்டுப் பேசாமற்
பூசித்துப் பேணாதபொருள்காண்ப தெந்நாளோ. (33)

(ஞா-பொ-ரை):—வாசித்து அறிவிதனால்கண்டு பிடிக்கமுடி யாததும். வாயால்பேசிக்கொண்டலைகின்ற வீணர்களான கள்ளகு ருமார்களுக்கு அகப்படாததும்; விக்ரகங்களால் நிறைத்துவைத்து ஆசுதனைபுரிகின்றபூசாரிகளாலுந் திட்டப்படுத்தமுடியாததுமான பரப்பிர்மமான ஒருவல்லபொருளை இன்னதென்று நிராலம்பமாய்க்கண்டு களித்திருவது எந்தக்காலம். எ-று.

கடத்துகின்ற தோணிதன்னைக் கழைகுற்றி விட்டாற்போல்
கடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெந்நாளோ. (34)

(ஞா-பொ-ரை):—நிறைந்த:—வெள்ளப்பெருக்குடைய சுழி யாற்றில். தோணியானது. கழைகுற்றிவிட்டவுடன் எப்படி யக்கரையில் கொண்டுபோய்க் கடத்திவிடுகிறதோ! அப்படியே மனவாசியென்கின்றஊன்றுகோலால் இந்தப்பிரபஞ்சமென்கின்ற உலகப்பற்றாகியசுழியாற்றில் நின்றும்வைராக்ய மென்கின்றதோ ணியைக்கொண்டு ஒருமைஎன்ற அக்கரையில் சேர்கின்ற சித்ரஸ் ரூபத்தை நான்அறிகிறது. எந்தக்காலம். எ-று.

அத்தனிருப்பிடத்தை யாராய்ந்து பாராமற்
செத்த சவம்போலே திரிவதினி யெந்நாளோ. (35)

(ஞா-பொ-ரை):—எல்லாவற்றிலும் ஸமதாகியபரிபூரணத்தை ஒருமுடிவுகட்டிக்கொண்டு உணர்ந்ததின்பிறகு மறுபடியும் வேண் டியதெல்லாம் வீணுக்குப் பிரட்டிப்பிரட்டிப்பார்த்து ஆராய்ச் செய்து காலத்தை வீணுக்குக்கழித்து ஒழிந்துபோகாமல் இந்த அற்ப சுகானுபவமாகிய பூலோகப்பற்றற்ற செத்த பிணத்தைப் போல்யாதொருஆடல் ஓடல் அற்று. திரிகிறதற்கு, சமிக்கைவாய்ப்பது, எந்தக்காலம். எ-று

ஆத்திக்கம் பலர்சொல் லகமியத்தின் சொற்படிக்குச்
சாதிவரம் பில்லாமற் சஞ்சரிப்ப தெந்நாளோ. (36)

(ஞா-பொ-ரை):—பல பல நாதாக்களும் ஆதிக்கமாக வற்புறுத்திச் சொன்ன உபதேசவாக்யங்களின் பிரகாரம் தீர்மான வஸ்த்தைத் தெரிந்துவிட்டதின் பின்னால், உலகத்தில் ஜாதி வேற்றுமை. வித்யாசம் உயர்த்திதாழ்த்தி பர்ரபட்சம். இல்லாமல் வஸ்த்தடங்கலையும். ஒரே சமத்துவமாகப் பார்வித்துக் கொண்டு அவைகளில் நானுமொருவனாக அலைவது எந்தக்காலம்? எ-று.

நின்றநிலைபாராமல் நினைவிலொன்றுஞ் சாராமற்
சென்றநிலை முத்தியென்று தெரிந்தறிவதெந்நாளோ. (37)

(ஞா-பொ-ரை):—வைராக்யத்தின் அதிமோகத்தில் மனஸானது, எந்நிலையில் கொளுகி நிற்கின்றதென்றும் தனக்கே தெரியாத தோரணையில்மனஸை செலுத்தி அத்துடன் தன் யாதென்கின்ற நினைவில் யாதொரு வினை. பயம், சந்தேஹம். ஆணவம். முதலான உலகத்து சுக்குப்பைகள் ஒன்றும் வந்து கலந்து பருதாவைப்பித்துவிடாமல் நல்லதிடத்து நின்றுதான் சென்ற நோக்கமெல்லாம் ஜெய நோக்கமென்றே அதிலும் சிறிதேனும்மயக்கம் கொள்ளாமல் அறக்கழுவி பரிசுத்தம் செய்து, தன் நப்சுக்கே. தன்னடத்தை முத்தி சாதனமென்பதாகத்தெரிய நடந்துகொள்ளும் காலம் எந்தக்காலம் எ-று,

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
நினைவையொரு அம்பாக்கி நினை வேவ லெந்நாளோ. (38)

(ஞா-பொ-ரை):—ஞானத்தில் சரிவரத்தெளிவடைந்த மனஸை ஒரு வில்லாகவளைத்துப் பிடித்து, அதில் பொறி புலன்களை நாணாக இழுத்துத் தொடுத்து, நினவு என்றதை ஒரு அம்பாயுதமாகப் பூட்டிப் பிரயோகஞ்செய்து காரியம் சித்தியாக்கிக் கொள்ளும் காலம் எந்த காலம். எ-று.

பொல்லாத காயமிதைப் போட்டுவிட்டு முன்னேதான்
கல்லாவின் பால்கறக்கக் கற்பதினி யெந்நாளோ. (39)

(ஞா-பொ-ரை):—உலகத்தில் அநீதமான கொலை களவு. பஞ்சமாபாதகம் ஆகியவைகளுக்கெல்லாம் காரணமாயுள்ளகாம விகாரத்தை உடலத்தில் நின்றும் உதறியெறிந்து விட்டு கருங்கல்லான அறிவானது பளிங்கு போலத்தெளிவடைந்து, சுவர்க்கத்தின் காம

தேனுவென்ற பசுவின்பால் போல அமிர்தம் பொழிந்துவடிவடிய அள்ளி யுண்டு ஆவிக்காகும் கற்பனையை கற்றுக்கொள்ளும் தெய் வீக சாஸ்திரத்தைஅடைவது எந்தக்காலம். எ-று.

ஆங்காரம் மும்மடக்கி ஐம்புலனைத் தானடக்கித்
தூங்காத தூக்கம்வந்து சுகம்பெறுவ தெந்நாளோ. (40)

(ஞா-பொ-ரை):—இருதயத்தின் மீற்போக்குகளான ஆணவ உபாதிகளையெல்லாம் தலைகாட்டவொட்டாமல்ஒடுக்கி, அத்துடன் ஐந்துயாதுகளான புலன்களையும் தன்னிலைதெரியாவண்ணம்அடங் கும்படியாக்கி, தூங்காததூக்கம் என்கிற முஷாஹிதாவின் நிஷ் டைஸாதனத்தில் அமர்ந்து, சதாசுகம்பெருகிறகாலம் எந்தக்கா லம். எ-று.

சேய்போலே வேநடந்து செவிடூமை போற்றெரிந்து
பேய்போலவே திரிந்து பெலன்பெருவ தெந்நாளோ. (41)

(ஞா-பொ-ரை):—ஞானமென்கின்ற, மேலான உள்ளுநிலை உணர்ந்து கொண்டபிறகு குழந்தைகளின் சுபாவத்தைப் போல, சூதுவாதற்று, இருந்து, உலகத்தார்கள் பேசுகின்ற வினையமான பேச்சுகளுக்கு காதுகொடாமலும், பதில்மொழிகூறாமலும் செவிடு ஊமையைப்போலவும்இருந்து, பார்ப்பவர்களுக்குஇவன்பேயோ அல்லது பித்தனோ என்றுசொல்லும்படியாகநடந்துஆண்டவனது தத்துவாதிகளை சுயேச்சை பெறுகின்றகாலம் எந்தக்காலம். எ-று

வீட்டிடத்தி லேபாய்ந்து வெளியில் வருவார்போலக்
கூட்டை விட்டுப் பாய்ந்து குறிப்பறிவ தெந்நாளோ. (42)

(ஞா-பொ-ரை):—மனிதர்கள் தாங்கள் வசிக்கின்ற வீட்டை விட்டு வெளியில்வந்து, சகலகருமங்களையும் பார்வையிடுகிற விதம் போல, உடலம் என்கின்ற கூட்டில் இருந்து நினவானது, வெளிப் பட்டு தான்என்கின்ற குறிப்பை எத்திக்கொளும் காலமானது. எந்தக்காலம். எ-று.

ஒழிந்த கருத்துலைத்தே யுள்ளொளும்பும் வெள்ளெலும்பாய்க்
கழிந்த பிணம்போலே கண்டிருப்ப தெந்நாளோ. (43)

(ஞா-பொ-ரை):—உடலத்தின் ஊசாட்டக்கருவியாகிய கருத் தானது, பணிவாகி, ஆனந்தபரவசத்தில் கிடந்து நினவானது மித

ந்து உள்ளுறைந்த எலும்புதசையெல்லாம் வெறுத்து, அப்பால் செத்தபிணம்போல் இருந்து, தன்னைக் காண்கின்ற நாள்'' எந்த நாள், எ-று.

பல்லா யிரங்கோடிப் பார்ப் படைப்பு மவ
னல்லாது வேறிலையென் றறிவ தினி யெந்நாளோ. (44)

(ஞா-பொ-ரை):—உலகத்தில் பல்லாயிரங்கோடிக்கணக்கானசிருஷ்டிப்பொருள்களும் அவனதுமீனுஹரென்கிறதோற்றரவென்று தீர்மானநினைத்து, ஒன்றுபடுத்துகிறது, இனியெந்தக்காலம், எ-று.

கூட்டி லடைபட்ட குழவியுருப் பட்டதுபோற்
பாட்டி லடைபட்ட யென்னறிவ தெந்நாளோ. (45)

(ஞா-பொ-ரை):—வண்டானது எடுத்துக் கொண்டுபோய்த் தனது துவாரத்துளையென்னும் கூட்டில்வைத்திருக்கும் இலந்தைப்புழுவானது, அவ் வண்டின் ரூபத்தில் மாறிவருவதுபோல் இந்த அநாதியத்தென்னும் அந்தகார வேற்றுமையில் நின்றும்இன்ஸான் ஹக்கின் சுரூபம் சிறிது சிறிதாக மாறி அப்பால் ஹக்கின் ரூபத்தின் அம்ஸத்தில் திரும்புவதானது. எந்தக்காலம், எ-று

எல்லாருங் கூடியிருக்குங் களரியிலே
வல்லானைக்கண்டு மகிழ்ந்திருப்ப தெந்நாளோ. (46)

(ஞா-பொ-ரை):—எல்லா உலகங்களும் அவைகளிலுள்ளஜீவஜந்துக்களும், அவைகளின் ஜடலங்களும் ஒருமிக்க அடங்கிப் போய்க்கிடக்கின்ற களரியாகிய மஹாவிசாலித்த லாமகான் என்னும் லிகா. அல்லது, றாஹூல்குதுஸி என்ற ஓர் அணுத்தனையாகிய ஒளிவுக்குள் அல்லாவை நான் தெரிசித்து, சதாஆநந்தியாக இருப்பது எந்த நாள். எ-று.

சொல்லாற் பொருளாற் றுய்யவறி வாற்கணக்கால்
வெல்லாம வுன்னை விரும்பிநிற்ப தெந்நாளோ. (47)

(ஞா-பொ-ரை):—இன்ஸான் ஞானமென்ற மெய்யை அறிந்துணர்ந்துகொண்ட பிறகு. வாயால்மொழிகின்ற வசனங்கள் சுத்த மெய்யாகவும். தேடும்பொருள் ஹக்கான அறிவாகவும், சூதற்ற பரமாத்தமான நடையாகவும். ஆகி. மற்றஎவ்விதமான கணக்கு

காரியங்களாலும் வெற்றி யடையமுடியாத தோரணையில் ஆண்டவனே. உன்னைவிருப்பத்துடன் அறிகின்றகாலம்எந்தக்காலம். எ-று.

மல்லான போரும் விளையாட்டுமான்மயக்க
மெல்லாந் தவிர்ந்தே யிரைஞ்சுவது மெந்நாளோ. (48)

ஞா-பொ-ரை):—இந்தம்ஹா அல்பசொல்பமான விருதா உலகத்தில் இன்ஸான்களானவர்கள். ஹைவான்களைப்போல். ஒருவருக்கொருவர் பெருமையும், போரும் வினையும்செய்துகெட்டுவிடுகிற வழக்கம்போல நானும் ஆகாமல். அத்துடன் ஸ்திரிஜந்திகளின் காமாவிகார மயக்கத்திலும் விழுந்து ஆழ்ந்திடாமலும், ஆண்டகா உன்னையறியுந்துறையில்நின்றுமறிந்து. வணங்குந்தலத்தில்இருந்து வணக்கஞ்செய்துகடைத்தேறுவது எந்தக்காலம். எ-று.

கல்லா வறிவுதன்னைக் கற்றுணர்ந்து கற்பனைக்குள்
நில்லாது நேர்மையினால் நினைப்பதுவு மெந்நாளோ. (49)

(ஞா-பொ-ரை):—ஒருபள்ளிக்கூடத்தில் இருந்து உபாத்தியாயரைக்கொண்டுக் கற்றறியாத தானே உதித்துவரக்கூடிய வித்தையாகிய மெய்ஞ்ஞானத்தை உணர்ந்துதெளிந்து, ஆதிகற்பனைக்குள் அடங்காமல் கற்பனை உற்பனத்தின் மகத்தான தவத்தால், அதையுங்கடந்து நிற்கும் மஹாநேர்மையான யோகஸாதனத்தில் நிலைத்துச்சாதித்து விடுகிறகாலம் எந்தக்காலம். எ-று.

பல்லுயிரு மேபடைத்துப் பரவெளியி லிவையுடனே
சொல்லும் பொருளாற் சுகூறுசெய்வ தெந்நாளோ. (50)

(ஞா-பொ-ரை):—ஒரேஒரு இந்திரிய காந்தியாந்தியானது. எல்லாசிருஷ்டிப் பொருட்களையும்உண்டாக்கி. அவ்வச்சிருஷ்டிகள் தோறும்ரகசிய ஐடலம்படைத்து. அத அதற்குள் பீடங்கொண்டு நடத்தாட்டுகின்ற ஹக்கை, வாயால்மொழியும் சொற்புகழாலும், செயலால் நடத்தும்.கிரியைகளாலும். நான்வணங்குகின்றகாலம்எந்தக்காலம். எ-று.

வல்லமையால் வானும் வாழுமைம் பூதம்மனைத்து
மெல்லையிலுண் டாகுமுன்னே யெதிரேற்பதெந்நாளோ. (51)

(ஞான-பொ-ரை):—இன்ஸான்தன் ஐயறிவென்கின்ற வல்லமையால் ஆகாயமுதலானமற்ற. நான்கு அனுசிறுகளையும். அதன

தன்எல்லைகள்கடந்து.சரீரத்தை வீழ்த்திவிடுவதற்குள்ளாக. அதற்கு எதிர்ப்பிரசாரஞ்செய்து.நிலைநாட்டிக்கொள்வது.எந்தநாள். எ-று.

காற்றை யடைத்திருக்குங் காயமதி லுன்னொளியைப்
பார்த்து மகிழ்ந்து பரவுவது மெந்நாளோ. (52)

(ஞா-பொ-ரை):—சுவாச மென்கிற காற்றைப்பிடித்து அடைத்திருக்கின்ற. இந்தமனித ஜடலத்திலேயே ஆண்டவனே உன்பரிசுத்தமானபேரொளிவைக்கண்டு ஆனந்த மடைந்துநான் ஷுஹூது செய்து. வணங்குகின்றகாலம் எந்தக்காலம். எ-று.

வைத்தபொரு டன்னை வகையறிந்து விபரமதாய்
எத்த எருது தன்னை யெழுப்புவது மெந்நாளோ. (53)

(ஞா-பொ-ரை):—ஆதியே நீஎன்ஜடலத்துள் அமானிதமாக வைத்தரகசிய பொருளாகிய ஞானப்பெரும் திரவியத்தை நல்ல விபரமானவகையுடன் உணர்ச்சிசெய்து. சேற்றில்படுத்த எருமைபோல் நல்லுணர்ச்சி செய்யவொட்டாமல் தடுக்கின்ற காபிரீகார்க்குரங்கை தட்டிவிட்டு மந்தமாய்க்கிடக்கு மட்டியறிவைத்தட்டியெழுப்பி சாதனையில் இரங்குகின்றகாலம் எந்தக்காலம். எ-று.

உன்றனொளியி லுருண்டு திரண்டார் மணியை
யென்றனித யாசனத்தி லேர்ப்பதுவு மெந்நாளோ. (54)

(ஞா-பொ-ரை):—நாயனே! உன்னுடை சிர்ருகிய ஒளியில் நின்றும் உருண்டு திரண்ட திருமணியாகிய றூஹுல் குதுஸியை என்னுடைய இருதயக்கமலம் நிறைய ஏர்ந்து கொள்ளுவது எந்தக்காலம். எ-று.

மூந்தமூக் கூரிருளில் மூன்றுமொன்றாய்த் தானிருந்த
விந்தையாம் வஸ்ததனை விரும்புவது மெந்நாளோ, (55)

(ஞா-பொ-ரை):—ஆதியில் மூன்றுவகையான. இருட்டில்மூச்சுடரும் ஒன்றாகசமத்துவப்பட்டிருந்த.மஹா ஆச்சரியகரமானவஸ்தாகிய. தஜல்லியை இஷ்க்கில் நிரப்பிவிடுகிறது எந்தக்காலம்.எ-று.

நாதாந்த வொளியதனில் நந்திரூப மாயெழுந்த
பாதார விந்தமதைப் பணிவதுவு மெந்நாளோ. (56)

(ஞா-பொ-ரை):—இந்திரியத்தின் மோகஎழுச்சியில் சம்பந்தப்பட்டிருந்த உதிராக்கினியின் பேரில் ஸ்வர்கரூபத்தில் கலந்து

எழுந்து திடியாடிவரும். வாலைமஹாரூபு என்னும் ஆதிமுகம்மதியா வின் பாதம் என்கின்ற மெல்லிய தாமரையைப் பணிந்து. மோட்சம் பெறுவது. எந்தநாள். எ-று.

ஆதம் குண்கயதனி லடங்கிநின்ற அட்சரத்தை
வேத முடிவீதனில் விளங்குவது மெந்நாளோ. (57)

(ஞா-பொ-ரை):—இன்ஸான் உடலமென்ற ஆதத்தின் மண் கூட்டில் அடங்கிநின்று நடத்தாட்டிவருகிற. ஹூ என்றதிருஅட்சரத்தை. வேதத்தின் முடிவாகிய. ஐனுல் எகீன். அதாவது. அறந்த வாஸ்தாகிய நினவே. என்று அறிந்துவிடுகிறது. எந்தநாள். எ-று

பஞ்ச புலன்கள்செய்யும் பல்தொழிலு மோர்தொழிலாய்
நெஞ்சகத்தில் நின்று நிரம்புவது மெந்நாளோ. (58)

(ஞா-பொ-ரை):—ஐந்து அணுசிறுகள் செய்யும். ஐந்துவிதத் தொழில் செயல்முதலான தெல்லாம் ஒரேநடத்தையாக மனவில் ஸ்தாபிதஞ்செய்து. அதுமேவகருமமாக, நிரப்பிக்கொள்கின்றநாள் எந்தநாள். எ-று.

விஞ்சந் தனையறுத்து வான்பொருளைக் கண்டிறைஞ்சி
யஞ்சிலொன்றேடேயிணங்கி யாள்வதுவுமெந்நாளோ. (59)

(ஞா-பொ-ரை):—மனஸைத்திருத்தி தீட்டி அந்தப்பளிங்கு போல் தீட்டி. சூதுவாதுகளையறுத்தொதுக்கி. தன்னை ஒருகசகசாப்பிரமாணமான ஒளிவட்டமாக நேத்ரத்தின் கண்ணே. தரிசித்து. ஷுஹூது செய்து. பூதங்கள் ஐந்திலும் ஒன்றாகிய ஆகாயம் அதாவது நினவுடன் கலந்து விரவிக்கொள்வது எந்தக்காலம், எ-று.

மிஞ்சு குபீரறவே மெஞ்ஞானத் தின்னளவாம்
கஞ்சமலர்ப் பதத்தைக் காண்பதுவு மெந்நாளோ. (60)

(ஞா-பொ-ரை):—ஐட்லநடவடிக்கைகளில் மிதமிஞ்சி கலந்து நிரம்பிநிற்கின்ற குபிரியத்தென்னும் இருவினைகள். சிறிதேனும்ஊசாடாத வண்ணம்ஒதுக்கிவிட்டு. உண்மையானஞானத்தின்மகிமையான உணர்ச்சிநீதிநடத்தைகளில் வெளியாகும் தன்வடிவாகிய றப்பானியாவின் வாலஸ்ரூபத்தின் திருப்பாதங்களை காட்சியாகக் கண்டுகொள்கிறகாலம் எந்தக்காலம். எ-று.

பார்க்கப் பலவிதமாய்ப் பலவண்ண மாய்ச்சமைந்து
மூர்க்கமா மொளிவுதனை முத்திசெய்வ தெந்நாளோ. (61)

(ஞா-பொ-ரை):—பார்ப்பதற்கு பல பல ரூபா ரூபங்களாய் பல பல வித ரெங்குகளாகவும் சமைந்து, அவை களின்தோற்றங் களதோறு ஒளிவாகவும் நினவாகவும் நின்றுஆடக்கூடிய, ஹங்கை முத்தியாக காண்பது எந்த நாள். எ-று.

நாற்றிசையு மொன்றாய் நடம்புரிந்து நன்னூக
மேற்றிசையில் வந்துவீற்றிருப்ப தெந்நாளோ. (62)

(ஞா-பொ.ஸர):—நாலு பூதங்களின் திசைகளான நாற்கோணங்களிலும் நடனஞ்செய்து மேற்றிசையான மகரமன் மகுடூதில் வந்து நல்லசமிக்கையாக வீற்றிருப்பது. எந்தநாள். எ-று.

செங்கமலத் துள்ளூரைந்த சித்தனைப் பத்தியதாய்
வங்கம் போலேயுருகி வணங்குவதுமெந்நாளோ. (63)

(ஞா-பொ-ரை):—செவந்த தாமரையானபாங்காயில்நின்றும் ஜடல உலகமெல்லாவற்றிலும் உண்மை வெளியாக்கா நின்ற ஒளிவாக நிறைந்திருக்கின்ற தத்துவ சித்தை ஏரேமனப்பத்தியாகதியானித்து, ஈயம்போல் உருகி இஷ்க்கில் தரிபடுவது எந்தக்காலம். எ-று.

பங்குபங்காய்க் காய்ந்ததனைப் பலபிரிவா யாக்கிவைத்தே
எங்கும் நிரம்பொளிவா யேற்றிருப்ப தெந்நாளோ. (64)

(ஞா-பொ-ரை):—ஆதம் என்ற விருட்சத்தில் விதமாக காய்த்துவிட்ட கருவிகளையெல்லாம்அப்படியே பலபிரிவாகவே ஆக்கிக்கொண்டு. அந்தமனுஹரையே எங்கு எங்கு பார்த்தாலும் தன்வடிவுபோல் தெரியக்கூடிய ஒளிவாகக்காண்பது. எந்தக்காலம். எ-று

ஊனிலொளி வாய்த்தெளிவா யுட்கலந்த சோதியது
வானில்நிரம் பும்பொருளை வாழ்த்துவது மெந்நாளோ. (65)
தேனிலின்பம் போற்கலந்து தித்திக்கும் வஸ்துவதைக்
கானில்மா னுங்கலைபோற் கலந்திருப்ப தெந்நாளோ. (66)

(ஞா-பொ-ரை):—ஆதியில் தீனியில்கலந்து. அப்பால் ஊனில் அதர்வது. உதிரத்தில்கலந்து. அப்பால் இந்திரியத்தில் கலந்து. அப்பால்ஜடலத்திற்கு அடிப்படையாய் உள்ளொளிவாக இருந்து ஆட்சிசெய்கின்ற மஹா மதுரதேஜகிய வஸ்த்துவை கானகத்தின் கண்ணே வாழ்கின்ற கலையும் மானும் எப்படி கலந்துஅணைத்துக்கொண்டு நிற்குமோ. அவ்விதம் கலந்து உறவாடிக்கொள்வது: எந்தக்காலம், ஏ-று,

பஞ்சரிபோற் பதறிநித்தம் பயுந்துள மெலியாமற்
பஞ்சவர்னமாமொளியைப்பார்த்திருப்பதெந்நாளோ. (67)

(ஞா-பொ-ரை):—பஞ்சரியைப்போல பதற்றங்கொண்டு பயங்கொள்ளித் தனத்தால் நித்தமும் அடிமைத்தனத்தில் இருந்து இருதய வலுவகுன்றிவிடாமல், பஞ்சவர்ணமான ஐந்து பூதங்களும் ஒன்றாய்க் கலந்து நேத்ரத்தில் ஜொலிக்கின்ற பேரொளிக் கதிரைக்கண்டு ஆநந்தித்திருப்பது, எந்தக்காலம், எ-று

வஞ்சைத்தை நீக்கி வான்பொருளையென்றுமொரு
தஞ்சமெனக் கண்டிறஞ்சித் தழுவுவது மெந்நாளோ (68)

(ஞா-பொ-ரை):—இன்ஸான்களுக்குரிய சூதுவாது, ஆணவம் முதலிய பாதகச் செயல்களை மனஸை விட்டும் எடுத்து எறிந்துவிட்டு வான் பொருளான றாஹல் குதுஸியைச் சந்தித்து, அதுவே ஹக்கென்னும், அதுவே தஞ்சமென்றும் உறுதியுடன் வணக்கஞ் செய்கிறது, எந்தக் காலம், எ-று

வேதபுராணம் மூலமும் உரையும்.

முதல்பாகம்.

முற்றிட்டு.

# பிழை திருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 8 | 12 | நாயகமர்களுக்கு | நாயகமவர்களுக்கு |
| ஷை | 14 | லறிந்தெய் [லக்கறுனைன் | வறிந்தெப் |
| 9 | 23 | புகழ்சேருப்கா னுன்மசு | புகழ்சேருமுவை சுல்க்க |
| 11 | 5 | திருக்ருர்களிள் | திருக்கிருர்கள் [ருனைன் |
| ஷை | 26 | வரைக்கும் | மறைக்கும் |
| ஷை | ஷை | காப்பாலேநான் | சப்பாலேதான் |
| 12 | 18 | மக்த்தானது | மத்தானது |
| ஷை | 22 | மபிர்த | அமர்த |
| ஷை | 30 | திறைஞ்கி | திரைஞ்சி |
| 13 | 7 | சற்றினான் | பற்றினான் |
| ஷை | 18 | காயம் | காயற் |
| ஷை | 22 | அவனடலங்களும் | அவனடங்கலும் |
| 15 | 10 | ஷிபத்தாசி | ஸ்பத்தாகிறது |
| ஷை | 17 | ஹாக்கனாகை | ஹக்கனாகை |
| 17 | 12 | ஞா·பொ-கை | ஞா-பொ-ரை |
| 18 | 1 | பலன்கண்டிடும் | பலன் கொண்டிடும் |
| 19 | 25 | போற்றிசிபிமில் | போற்றிபிசிமில் |
| 22 | 26 | கொன்யல்லா து | கொண்றல்லாது |
| 25 | 21 | ஒருவனிபா | பொருவனிபா |
| 26 | 14 | அச்சரஙாளை | அட்சரங்களை |
| 28 | 21 | மறக்காமலல | மறக்காமலே |
| 29 | 29 | உண தார்ந் | உணர்ந்து |
| 31 | 20 | சுறுஷேமு | அறுஷேமு |
| 32 | 23 | கஞ்சிய | களஞ்சிய |
| ஷை | 24 | விசுவதித்தும் | வாசித்தம் |
| 33 | 11 | சூதறத்து | குதறத்து |
| 34 | 5 | பந்தகங்ளை | பந்தங்களை |
| 35 | 16 | தன்னில்லையை | தன்னிலேயை |
| | | தானுஙகாத் | தானுங்காத்தே |
| ஷை | 17 | தக்கமரை | யோக்கமறை |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | 18 | மஃஞவரன. | மஃஞவான |
| | ௸ | சொற்குவு | சொற்குலவு, |
| 36 | 3 | வெவன்று. | வென்று. |
| | 19 | யுறைஞ்சுவது | யிறைஞ்சுவது |
| | | நச்காலம் | நற்காலம் |
| 37 | 16 | அவர்முலபுாய் | அவர்முலமாய் |
| 38 | 10 | னெப்பமுடன் | ஞெப்பமுடன் |
| | 16 | ஹானுல்ஈன்களை | ஹாயுல்ஈன்களை |
| 39 | 18 | வலசறிக் கொண்டால் | வெற்றிக்கொண்டால் |
| | | நஞகாலம் | நற்காலம் |
| | 19 | ஜன்ங்கே | ஜனங்களே |
| 40 | 5 | என்சின்ற | என்கின்ற |
| | 9 | ஜீஸானி | ஜீலானி |
| 44 | 18 | அறபி[illegible]ஷையிலும் | அறபிபாஷையிலும் |
| | 21 | ஆனதிலே | ஆனதினுலே |
| 45 | 4 | பாம் | லாம் |
| 46 | 9 | என்ற் | என்ற |
| | 13 | அந்தரஙகத்தை | அந்தரங்கத்தை |
| | 25 | திவ்வியவிணற்றின் | திவ்ய கிணற்றில் |
| 47 | 2 | நல்வாழ்வகாலம் | நல்ல வாழ்வானகாலம் |
| | 9 | அஷறப்த்துல் | அஷறபத்துல் |
| 48 | 1 | தன்ளை | தன்னை |
| | 3 | குனரத்தின் | குனத்தின் |
| | 4 | நிதமாவிய | கிதமாகிய |
| | 22 | அவர்கனின் | அவர்களின் |
| 48 | 26 | வபால்லாத | பொல்லாத |
| | 26 | அம்மாஞ | அம்மாறு |
| 50 | 9 | முசிபத்தையம் | முசிபத்தையும் |
| 54 | 27 | பேர்கனில் | பேர்களில் |
| 56 | 23 | திரேகவாக்கர்களும் | வாக்குள்ளவர்களும் |
| 58 | 26 | அரிபத்தாக | மஅரிபத்தா |
| 59 | 6 | குர்-பொ-ரை | ஞா-பொ-ரை, |
| ௸ | 18 | ஞேதீனுவ. | ஞேதவேனு. |
| 60 | 1 | பிறவிகள. | பிறவிகள். |
| ௸ | 4 | பெதனின் | பேயதனின் |
| ௸ | 18 | யுரைத்திட்டாகலும் | வுரைத்திட்டாலும் |

# பிழை திருத்த அட்டவணை

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 61 | 10 | வல்ல சல்ல முல்லா | வல்லசலாமுல்லா |
| | 21 | பெய்பாகி | மெய்ப்பாகிய |
| 62 | 3-4 | வாங்கிச் சொல்லவச்செந்தச் | வாங்கிச் சொல்லச் சொந்தச் |
| | 16 | யுல்மாகேள | உலமாகளே |
| | | சாட்ம்டு | சாட்டும் |
| 63 | 24 | அதலே | அதுவே. |
| | 27 | ஷறுத்தத்வே | ஷறுத்தெனவே |
| | 11 | துற்றும் யின் | தூற்றும்பின் |
| | 13 | ஷறுத்துதள் | ஷறுத்துகள் |
| 64 | 24 | கபுஹூறுக்கு | சுபுஹூறுக்கு |
| 65 | 23 | ஷறஜப்பற்றிய. | ஷறஜைபற்றிய |
| 67 | 3 | ஆயர்கதில் | ஆயத்தில் |
| | 28 | இனி இந்த வேறு. | இனிஇதைவிடவேறு |
| | 30 | கோலமால் | கோலமாய் |
| 69 | 22 | தங்ககும்வைஸீ | தங்கும்நவீஹத்து |
| 71 | 12 | பஹீறு | பசீறு |
| 72 | 24 | துனிடதை | துண்டதை |
| ஷை | 25 | அறுமஹில் | அறுவாஹில் |
| | ஷை | குக்கும் | சூக்கும |
| 74 | 2 | புகுந்தறியும் | பகுந்தறியும் |
| 82 | 31 | அத்தப்பொய் | சுத்தபொய் |
| 83 | 8 | கருதுய்ஷரீ | கருதும்ஷரீ |
| | 9 | பியத்காய் | பிரியத்தம் |
| | 10 | யாரின் | பூரின் |
| | 30 | மேகவும் | மேவும் |
| 89 | 20 | வருப்பார்கேள | யிருப்பார்களே |
| 91 | 2 | கெட்டிலாத | மெட்டிலாத |
| ஷை | 18 | காசம் | கானகம் |

15485/R4



# பிழை திருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 102 | 13 | காமில் | மகாமில் |
| 103 | 6 | இந்தில | இந்தில |
| 104 | 9 | கேண்டார்தினரே | கண்டோதினரே |
| 109 | 24 | வூர் | ஓர் |
| | 27 | பாத. கமகங்களை | பாதகமலங்களை |
| 121 | 22 | இனி சிக்கிரம் | சீக்கிறம |
| 125 | 1 | பிரம்பியு | நிரம்பிய |
| | 24 | குதுஆனிலே | குருஆனிலே |
| 145 | 9 | புஹானல் | சுபுஹானில் |
| 148 | 30 | இருக்கு | இருக்கும் |
| 152 | 28 | தான தமே | தானவரே |
| | 31 | கியல்பா. ஏஸ்கீன் | முஸ்தகீன் |
| | | பாலகும் | பாலமாகும் |
| 153 | 6 | நபி. வர்களுக்கு. | நபியவர்களுக்கு |
| 156 | 22 | செவிலற்சேர்த்தான | செவியிற்சேர்தான் |
| 158 | 27 | ஸுவானது | ஹுவானது |
| 159 | 2 | அந்த தேஹத்திற்கு | சந்தேகத்திற்கு |
| 159 | 26 | வகையாய்வாசங்களும் | வகைசுவாசங்களும் |
| 160 | 2 | உண்ணைக் | அண்ணைக் |
| 160 | 23 | சூறத்தினர் | சூரத்தாணர் |
| 163 | 3 | திட்ட | நாட்ட |
| 166 | 31 | கதளிவாடிற் | தெளிவாகிடீர் |
| 171 | 1 | யுயைட | யுடைய |
| 172 | 12 | படைத்தான்பவா | படைத்தாள்பவர் |
| 175 | 13 | குவா | குருவா |

பிழைதிருத்த அட்டவணை:

முற்றுப்பெற்றது:

68488